

நேசரின் பாதத்தில்
நாள்தோறும்
4 நிமிட நன்றி பலி

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

முன்னுரை

நம் தேவன் துதிக்குப் பாத்திரர். அந்த பரிசுத்தமுள்ள தேவனைத் துதிப்பது
மக்குக் கிடைத்திருக்கிற பெரிய பாக்கியம். "நீ தேவனுக்கு ஸ்தோத்திர பலியிட்டு
ஆபத்துக் காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு நான் உன்னை விடுவிப்பேன்"
(சங் 50:14) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

தேவாதி தேவனுக்கு தோத்திரம் செலுத்தவேண்டுமென்ற வாஞ்சை நமக்குள் இருந்தாலும் இந்த அவசர உலகில் நம்மில் பலருக்கு இது சாத்தியமில்லாமல் போய்விடுகிறது. எனவே நெருக்கடியான சூழ்நிலைகளிலும் தினமும் அதிகாலை வேளையில் மிகக் குறைந்த பட்சம் 4 நிமிடங்களாவது ஆண்டவரின் பாதத்தில் அமர்ந்து நன்றிபலி ஏறெடுக்கும் வகையில் கைக்கடக்கமான இந்த சிறு புத்தகம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதனை அவரவர் வசதிக்கேற்ப எத்தனை முறை வேண்டுமானாலும் சொல்லி, உள்ளத்தின் ஆழத்திலிருந்து உன்னதரைத் துதிக்கலாம். அப்போது கிட்டத்தட்ட 3000 நன்றி பலி வசனங்கள் மனப்பாடமாக நம் உள்ளத்தில் பதிகிறதோடு அல்லாமல், அவைகள் தேவ ஆவியானவரால் அந்தந்த நாளில் நம்மை (1) அறிவுறுத்துபவைகளாகவோ அல்லது (2) ஆலோசனை கொடுக்கக்கூடிய வைகளாகவோ அல்லது (3) வாக்குத்தத்தங்களாகவோ அல்லது (4) ஆறுதல் தருபவைகளாகவோ அல்லது அவர் அருளும் (5) ஆசீர்வாதங்களாகவோ அமையும் என்பதில் ஐயமில்லை

எனவே இந்தச் சிறிய கையேடு வாழ்நாள் முழுவதும் நம் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு நாளும் மிகுந்த பயனுள்ளதாக அமையும் என்று விசுவாசிக்கிறேன் வாழ்க்கைப் பாதையில் பல கண்ணீர்க்கடல்களைக் கடந்து வந்த நான், நன்றி பலி மூலம் ருசித்த தெய்வீக ஆறுதலை அனைவரும் பெறவேண்டும் என்ற வாஞ்சையோடு இந்தச் சிறு புத்தகத்தை என் தேவாதி தேவனுக்குக் காணிக்கையாக சமர்ப்பிக்கிறேன். இந்த 4 நிமிட நன்றி பலி நம்மில் நன்றியுணர்வோடு வெளிப்படுமாயின், நிச்சயமாகவே நம் நேசர் நல்லவராகவே இருந்து நம்மை சகலவித நன்மைகளினாலும் நிரப்புவார் ஆமென்.

திருமதி. ரஜினி தயாகரன்

மதுரை. போன்: 0452- 6561030 / செல்: 97869 92331

ஜனவரி - 1

1. யேகோவா - சர்வ வல்லமையுள்ள தேவனே தோத்திரம். யாத் 6:3
2. யேகோவாயீரே - கர்த்தர் பார்த்து கொள்வீரே தோத்திரம். ஆதி 22:14
3. யேகோவா ஷாலோம் - சமாதானமளிப்பவரே தோத்திரம். நியா 6:24
4. யேகோவா ஷம்மா - என்னோடு இருப்பவரே தோத்திரம். எசே 48:35
5. யேகோவா ரோஹி - என் மேய்ப்பரானவரே தோத்திரம். சங் 23:1
6. யேகோவா ஈலியோன் - உன்னதமானவரே தோத்திரம். சங் 7:17
7. யேகோவா ஸிட்கேனு - நீதியாயிருப்பவரே தோததிரம். எரே 23:16
8. யேகோவா மெக்காதீஸ் - பரிசுத்தமாக்குபவரே தோத்திரம். லேவி 20:8
9. யேகோவா ஏலோஹே - என் தேவனே தோத்திரம். சக 14:5
10. எல்ஷடாய் - சர்வவல்லவரே தோத்திரம். ஆதி 17:1
11. யேகோவா ரொபேகா - சுகம் கொடுப்பவரே தோத்திரம். யாத் 15:26
12. யேகோவா ஏலாஹிம் - எங்கும் நிறைந்தவரே தோத்திரம். ஆதி 1:1
13. இம்மானுவேல் - நம்மோடிருக்கும் தேவனே தோத்திரம். மத் 1:23
14. யேகோவா நிசி - என் ஜெயக் கொடியானவரே தோத்திரம். யாத் 17:15
15. எல்லா நாமத்துக்கும் மேலான உமது நாமத்திற்கு தோத்திரம். பிலி 2:11

ஜெபம் : கிருபை நிறைந்த பிதாவே. நீர் அருளிய சொல்லி முடியாத ஈவுகளுக்காக உம்மைத்துதிக்க நீர் ஏற்படுத்திக் கொடுத்த இந்த வேளைக்காக தோத்திரம். துதித்தலே இன்பமும் ஏற்றதுமாயிருக்கிறது என்பதை உணர்ந்தவளாய், உம் நாமத்தைச் சொல்லிச் சொல்லி என் நெஞ்சம் மகிழுதையா என்று பாடி உம்மைப் போற்றுகிறேன். ஜீவனுள்ள நாள் மட்டும் உம்மைத்துதிக்க என்னை ஏவியருளும் தகபபனே. இயேசுவின் மூலம் பிதாவே ஆமென்.

ஜனவரி - 2

1 கர்த்தரைத் தெய்வமாகக் கொண்ட ஜாதியும் அவர்தமக்குத் சுதந்திரமா தெரிந்து கொண்ட ஜனமும் பாக்கியமுள்ளது. சங் 33:12

2 என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன் என்றீரே தோத்திரம். யோவா 14:14

3 நான் உங்களைத் திக்கற்றவர்களாக விடேன் என்றபடியால் தோத்திரம் யோவா 14:18

4. நீங்கள் எதிர்பார்த்திருக்கும் முடிவை உங்களுக்குக் கொடுக்கும்படிக்கு நான் உங்கள் பேரில் நினைத்திருக்கிற நினைவுகளை அறிவேன் என்றீரே தோத்திரம். எரே 29:11

5. உம்முடைய வார்த்தைகள் எனக்குச் சந்தோஷமும் என் இருதயத்துக்கு மகிழ்ச்சியுமாயிருப்பதற்காக தோத்திரம். எரே 15:16

6. உன்னை நித்திய மாட்சிமையாகவும் தலைமுறை தலை முறையாயிருக்கும் மகிழ்ச்சியாகவும் வைப்பேன என்றீரே தோத்திரம். ஏசா 60:15

7. நீதிமான் விரும்புகிற காரியம் அவனுக்குக் கொடுக்கப்படும். ஆகவே தோத்திரம். நீதி 10:24

8. நீ நாடோறும் கர்த்தரைப் பற்றும் பயத்தோடிரு. நிச்சயமாகவே முடிவு உண்டு. உன் நம்பிக்கை வீண்போகாது என்ற படியால் தோத்திரம். நீதி 23:17

9. இதிலும் பெரிதானவைகளைக் காண்பாய் என்றீரே தோத்திரம் யோவா 1:50

ஜெபம்: கிருபை நிறைந்த கர்த்தாவே, நாங்கள் உம்முடைய ஜனமாக இருப்பதே எங்களுக்குக் கிடைத்த மாபெரும் சிலாக்கியம். ஒவ்வொரு நாளும் விசுவாசத்தோடு நாங்கள் கேட்கும ஆசிர்வாதங்களையும் பிற நன்மைகளையும் தேவரீர் நிச்சயமாகவே எங்களுக்கு அருளிச்செய்வேன் என்று சொன்ன வாக்கை நம்பி, உமது பாதத்தில் வந்து விசுவாசத்தோடு காத்திருக்கிறோம். நினையாத, எட்டாத ஆசீர்வாதங்களைத்தந்து வழிநடத்துமையா. இயேசுவின் மூலம் பிதாவே, ஆமென்.

னவரி - 3

"இதோ, நான் சகலத்தையும் புதிதாக்குகிறேன்" என்றவரே உமக்கு தோத்திரம்

வெளி 21:5

என் தேவனே நான் வீணையைக் கொண்டு உம்மையும் உம்முடைய சத்தியத்தையும் துதிப்பேன். இஸ்ரவேலின் பரிசுத்தரே சுரமண்டலத்தைக் கொண்டு உம்மைப்பாடுவேன். அல்லேலூயா. சங் 71:22

3 உன் வழியைக் கர்த்தருக்கு ஒப்புவித்து அவர் மேல் நம்பிக்கையாயிரு, அவரே காரியத்தை வாய்க்கப்பண்ணுவார் என்றீரே தோத்திரம். சங் 37:5

4 நான் சந்தோஷமும் மகிழ்ச்சியும் கேட்கும்படி செய்யும். அப்பொழுது நீர் நொறுக்கின எலும்புகள் களிகூரும். ஆகவே தோத்திரம். சங் 51:8

5 தேவரீர் என் விளக்கை ஏற்றுவீர். என் தேவனாகிய கர்த்தர் என் இருளை வெளிச்சமாக்குவார். ஆகவே தோத்திரம். சங் 18:2

6 கர்த்தருக்குள் மனமகிழ்ச்சியாயிருப்பதே எங்களுடைய பெலன், ஆகவே கர்த்தருக்கு தோத்திரம். நெகே 8:10

7 யாபேஸைப் போல தேவரீர் என்னை ஆசீர்வதித்து என் எல்லையைப் பெரிதாக்கி, உமது கரம் என்னோடிருந்து, தீங்கு என்னைத் துக்கப்படுத்தாதபடிக்கு அதற்கு என்னை விலக்கிக் காக்கப் போவதற்காக தோத்திரம். நாளா 4:10

8 "உன்னை அதிசயங்களைக்காணப் பண்ணுவேன்" என்றதற்காக தேவனே உமக்கு தோத்திரம். மீகா 7:15

ஜெபம்: அன்புள்ள ஆண்டவரே, வருடத்தின் துவக்க நாட்களில் என்னையும் எங்களையும தாழ்த்தி உமது கரங்களில் ஒப்புவிக்கிறேன். உம்மைத்துதிக்கும் துதி இந்த ஆண்டு முழுவதும் எங்கள் நாவில் இருப்பதாக, ஒவ்வொரு நாளும் பரிபூரண ஆனந்தத்தையும் நித்திய பேரின்பத்தையும், மெய் சமாதானத்தையும் தாரும். இயேசுவின் நாமத்தில் பிதாவே! ஆமென்.

ஜனவரி - 4

1. ஆதியிலே வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்த தேவனே உமக்
தோத்திரம். ஆதி 1:1
2. வெளிச்சம் உண்டாகக் கடவது என்று வெளிச்சத்தை உண்டாக்கின தேவனே
உமக்கு தோத்திரம். ஆதி 1:3
3. வெளிச்சத்தையும் இருளையும் வெவ்வேறாகப் பிரித்த தேவனே உமக்
தோத்திரம். ஆதி 1:4
4. ஆகாய விரிவை உண்டுபண்ணி, ஆகாயவிரிவுக்கு வானம் என்று பேரிட்
தேவனே தோத்திரம். ஆதி 1:8
5. ஆகாய விரிவிற்கு கீழே இருக்கிற ஜலம் ஓரிடத்தில் சேரவும் வெட்டாந்தரை
காணப்படவும் செய்து, சமுத்திரத்தையும் பூமியையும் உருவாக்கின தேவனே
உமக்கு தோத்திரம். ஆதி 1:10
6. புல்லையும், பூண்டுகளையும், கனி விருட்சங்களையும் முளைப்பித்
தேவனே உமக்கு தோத்திரம். ஆதி 1:12
7. காலங்களையும் நாட்களையும் வருடங்களையும் குறிக்க ஆகாய விரிவிலே
சுடர்களை உண்டாக்கிய தேவனே உமக்கு தோத்திரம். ஆதி 1:14
8. பகலை ஆள பெரிய சுடரையும் இரவை ஆள சிறிய சுடரையு
நட்சத்திரங்களையும் உண்டாக்கின தேவனே உமக்கு தோத்திரம். ஆதி 1:16

ஜெபம் : அன்பின் தெய்வமே! சிருஷ்கரே! உம்மை நன்றியோடு துதிக்கிறேன்
வானத்தையும் பூமியையும் உண்டாக்கிய சர்வ உல்லமையுள்ள தேவனே, உம
பிரசன்னத்தை ஒவ்வொரு நேரமும் உணர்ந்து, உம்மையே முற்றிலும்
சார்ந்திருக்கச்செய்யும். இயேசுவின் நாமத்தில் பிதாவே. ஆமென்

ஜனவரி - 5

மனுஷனை பூமியின் மண்ணினாலே உருவாக்கி ஜீவ சுவாசத்தை அவன் நாசியிலே ஊதி மனுஷனை ஜீவாத்துமாவாக்கின தேவனே உமக்கு தோத்திரம். ஆதி 2:7

கிழக்கே ஏதேன் என்னும் தோட்டத்தை உண்டாக்கி, அதில் மனுஷனை வைத்த தேவனே உமக்கு தோத்திரம் ஆதி 2:8

3. பார்வைக்கு அழகும் புசிப்புக்கு நலமுமான சகலவித விருட்சங்களையும் தோட்டத்தின் நடுவில் ஜீவ விருட்சத்தையும் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தையும் பூமியிலிருந்து முளைக்கப்பண்ணின தேவனே உமக்கு தோத்திரம். ஆதி 2:9

4. மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல என்று ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்கிய தேவனே உமக்கு தோத்திரம். ஆதி 2:18

5. மனுஷனில் எடுத்த விலா எலும்பைக்கொண்டு மனுஷியாக உருவாக்கி மனுஷனுக்குக் கொடுத்த தேவனே உமக்கு தோத்திரம். ஆதி 2:22

6. மனுஷனை இப்படியாக ஆணும் பெண்ணுமாக சிருஷ்டித்து அவர்களுக்கு மனுஷர் என்று பேரிட்டு அவர்களை ஆசீர்வதித்தவரே உமக்கு தோத்திரம் ஆதி 3:2

7 கர்த்தாவே நீர் மனுஷனை தேவதூதரிலும் சற்று சிறியவனாக்கினீர் மகிமையினாலும் கனத்தினாலும் அவனை முடிசூட்டினீர் ஆகவே தோத்திரம் சங் 8:5

ஜெபம்: மண்ணிலிருந்து மனுஷனை உருவாக்கிய எங்கள் சிருஷ்டி கர்த்தாவே, எங்களை தேவதூதரிலும் சற்று சிறியவனாக்கி மகிமையினாலும் கனத்தினாலும் எங்களை முடி சூட்டியதற்காக உமக்கு தோத்திரம். இந்த சிலாக்கியத்திற்கு நாங்கள் என்றும் தகுதியுடையவர்களாக வாழ கிருபை புரியும். இயேசுவின் நாமத்தில் பிதாவே ஆமென்

ஜனவரி - 6

1. நீந்தும் ஜீவஜந்துகளையும், ஆகாயவிரிவிலே பறக்கும் பறவைகளைய ஜதிப்பிக்கப்பண்ணின தேவனே உமக்கு தோத்திரம் ஆதி 1:20
2. மகா மச்சங்களையும் சகலவித நீர்வாழும் ஜந்துக்களையும் சிறகுள்ள ஜா ஜாதியான சகலவித பட்சிகளையும் சிருஷ்டித்த தேவனே உமக்கு தோத்திர ஆதி 1:21
3. நீங்கள் பலுகிப் பெருகி சமுத்திரத்தையும் பூமியையும் நிரப்புங்கள் என் தேவனே உமக்கு தோத்திரம் ஆதி 1:22
4. ஜாதிஜாதியான நாட்டு மிருகங்களையும் வளரும் பிராணிகளையும் காட் மிருகங்களையும் பிறப்பித்த தேவனே உமக்கு தோத்திரம் ஆதி 1:24
5. பூமியை ஆள தம்முடைய சாயலாக மனிதனை ஆணும் பெண்ணுமா சிருஷ்டித்த தேவனே உமக்கு தோத்திரம். ஆதி 1:27
6. சகலவித பூண்டுகளையும் சகலவித விருட்சங்களையும் மனுஷனுக் ஆகாரமாகக் கொடுத்த தேவனே உமக்கு தோத்திரம் ஆதி 1:29
7. சகல மிருக ஜீவன்களுக்கும் பறவைகளுக்கும் பூமியின் மேல வளரு பிராணிகள் எல்லாவற்றிற்கும் பசுமையான சகல பூண்டுகளையு ஆகாரமாகக் கொடுத்த தேவனே உமக்கு தோத்திரம் ஆதி 1:30
8. ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்து, .ஏழாம் நாளை ஆசீர்வதித்து ஏழாம் நாளை பரிசுத்தமாக்கின தேவனே உமக்கு தோத்திரம் ஆதி 2:2

ஜெபம் : வானத்தையும் பூமியையயும் படைத்த சர்வவல்லமையுள்ள தேவனே இந்த நாளில் உம்மைத் துதிக்கிறேன். சிருஷ்டி கர்த்தாவே நீர் எல்ஷடாய் என்று சொல்லி உம்மை மகிமைப்படுத்துகிறேன். உமது வல்லமையின் மாட்சிமையை இந்த நாளில் நினைவு கூர்ந்து உம்மைக்கனப்படுத்த எங்களுக்கு கிருபை புரியும். இயேசுவின் மூலம் பிதாவே, ஆமென்.

னவரி - 7

பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும் என்று ஆபிரகாமை ஆசீர்வதித்த தேவன் என்னையும் ஆசீர்வதிக்கப்போவதற்காய் உமக்கு தோத்திரம். ஆதி 12:3

2. நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி உன்னை ஆசீர்வதித்து உன் பேரைப் பெருமைப்படுத்துவேன், நீ ஆசீர்வாதமாய் இருப்பாய் என்றவரே உமக்கு தோத்திரம். ஆதி 12:2

3. உன் சந்ததியை பூமியின் துளைப்போல பெருக்கப்பண்ணுவேன் என்று சொன்ன தேவனே, உமக்கு தோத்திரம். ஆதி 13:16

4. ஆபிரகாமும் சாராளும் வயது முதிர்ந்தவர்களாயிருந்த வேளையில், தேவன் குறித்த காலத்திலே ஈசாக்கைப் பெற்றெடுக்கப்பண்ணின தேவனே அந்த உமது வல்லமைக்காக உமக்கு தோத்திரம். ஆதி 18:11

5. ஆபிரகாமின் விசுவாசத்தை மேன்மைப்படுத்தி அவனை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து அவன் சந்ததியை வானத்து நட்சத்திரங்களைப் போலவும் கடற்கரை மணலைப்போலவும் பெருகவே பெருகப்பண்ணின தேவன் எங்களையும் வர்த்திக்கப்பண்ணப் போகிறபடியால் உமக்கு தோத்திரம். ஆதி 22:17

6. நீ பார்க்கிற இந்த பூமி முழுவதையும் நான் உனக்கும் உன் சந்ததிக்கும் என்றைக்கும் இருக்கும்படி கொடுத்து, உன் சந்ததியை பூமியின் தூளைப்போலப் பெருகப்பண்ணுவேன் என்று சொன்ன கர்த்தாவே உமக்கு தோத்திரம். ஆதி 13:15

ஜெபம் : ஆபிரகாமை ஆசீர்வதித்த எங்கள் பரலோக பிதாவே எங்களையும் வர்த்திக்கப்பண்ணி ஆசீர்வதித்தருளும் ஆபிரகாமைப்போல நாங்கள் விசுவாசத்திலே விருத்தியடையவும் மற்றவர்களுக்கு முன்பாக ஆசீர்வாதமாக இருக்கவும் கிருபை புரியும் தகப்பனே. இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்.

ஜனவரி - 8

1. பூமி சீர் கெட்டதாயிருந்தபோது கர்த்தர் மனஸ்தாபப்பட்டு பூமியை அழித்
போட நினைக்கையில் நீதிமானாகக் கண்ட நோவாவோடுகூட அவ
குமாரரும், அவன் மனைவியும், குமாரரின் மனைவிகளும் பேழைய
மூலம் காக்கப்பட நோவாவுக்குக் கர்த்தர் கண்களில் கிருபை கிடைக்கச் செ
தேவன் எங்களையும் காக்கிறதற்காக உமக்கு தோத்திரம். **ஆதி 6:6**
2. சகலவித மாம்சமான ஜீவன்களிலும் ஆணும் பெண்ணுமாக வகை ஒன்றுக்
ஒவ்வொரு ஜோடு நோவாவுடன் உயிரோடே காக்கப்பட கட்டளையி
தேவனே, உமக்கு தோத்திரம். **ஆதி 6:19**
3. சகல ஜீவன்களையும் இப்பொழுது செய்ததுபோல இனி சங்கரிப்பதில்ல
என்றவரே உமக்கு தோத்திரம். **ஆதி 8:21**
4. பூமியிலுள்ள நாளளவும் விதைப்பும் அறுப்பும் சீதளமும் உஷ்ணமு
கோடைகாலமும் மாரி காலமும், பகலும் இரவும் ஒழிவதில்லை என்றவ
உமக்கு தோத்திரம். **ஆதி 8:22**
5. நோவாவையும் அவன் குமாரரையும் ஆசீர்வதித்து, நீங்கள் பலுகிப்பெரு
பூமியை நிரப்புங்கள் என்றவரே எங்களையும் அப்படியே
ஆசீர்வதிக்கிறபடியால உமக்கு தோத்திரம். **ஆதி 9:1**
6. பூமியை அழிக்க இனி ஜலப்பிரளயம் உண்டாவதில்லை என்று
உடன்படிக்கையை ஏற்படுத்தி அதற்கு அடையாளமாகத் தமது வில்லை
மேகத்தின் மேல் வைத்த தேவனே உமக்கு தோத்திரம். **ஆதி 9:13**

<u>ஜெபம் :</u> நோவாவுக்கு கர்த்தர் கண்களில் கிருபை கிடைக்கும்படி செய்த எங்கள்
பரலோக தேவனே, இந்த நாளில் எங்களுக்கும் உமது கிருபையைத்தந்து
ஆசீர்வதியும். அதற்கேற்றபடி நாங்களும் வாழ எங்களுக்கு உதவி செய்யும்
தகப்பனே. இயேசுவின் நாமத்தில் பிதாவே ஆமென்.

இஸ்ரவேல் புத்திரரை அடிமைத்தன வீடாகிய எகிப்திலிருந்து புறப்படப்பண்ணி பகலில் மேக ஸ்தம்பத்தினாலும், இரவில் அக்கினி ஸ்தம்பத்தினாலும் அவர்களை வழி நடத்தியவரே, எங்களையும் வழிநடத்துகிறதற்காய் உமக்கு தோத்திரம் யாத் 13:22

சமுத்திரத்தை வறண்டு போகப்பண்ணி ஜலம் பிரிந்து பிலிந்து போகப் பண்ணின தேவனே உமக்கு தோத்திரம். யாத் 14:21

எகிப்தியருக்கு வரப்பண்ணின வியாதிகளில் ஒன்றையும் உனக்கு வரப்பண்ணேன். நானே உன் பரிகாரியாகிற கர்த்தர் என்ற தேவனே உமக்கு தோத்திரம். யாத் 15:26

என் சமூகம் உனக்கு முன்பாகச் செல்லும் நான் உனக்கு இளைப்பாறுதல் தருவேன் என்ற தேவனே உமக்கு தோத்திரம். யாத் 33:14

நான் உன்னைக் கன்மலையின் வெடிப்பிலே வைத்து, என் கரத்தினால் உன்னை மூடுவேன் என்ற தேவனே உமக்கு தோத்திரம். யாத் 33:22

என் தயையை நான் உனக்கு முன்பாகக் கடந்து போகப்பண்ணுவேன் என்ற தேவனே உமக்கு தோத்திரம். யாத் 33:19

எவன் மேல் கிருபையாயிருக்கச் சித்தமாயிருப்பேனோ, அவன்மேல் கிருபையாயிருப்பேன். எவன் மேல் இரக்கமாயிருக்கச் சித்தமாயிருப்பேனோ அவன் மேல் இரக்கமாயிருப்பேன் என்ற தேவனே உமக்கு தோத்திரம். யாத் 33:19

ஜெபம் : எங்கள் மேல் கிருபையாயிருக்க சித்தம் கொண்ட தேவனே உம்மைத்துதிக்கிறோம். உமது சமூகம் எங்கள் முன்பாக எப்பொழுதும் இருந்து எங்களைக் காக்கும்படி கிருபை செய்யும். கன்மலையின் வெடிப்பில் வைத்து, எப்போதும் எங்களை உமது கரத்தால் மூடி வழிநடத்தும் தகப்பனே இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்

ஜனவரி - 10

1. தேசத்தில் சமாதானம் கட்டளையிடுவேன். பட்டயம் உங்கள் தேசத்
உலாவுவதில்லை என்ற தேவனே உமக்கு தோத்திரம். லேவி 26:
2. நீங்கள் உங்கள் அப்பத்தைத் திருப்தியாகச் சாப்பிட்டு. உங்கள் தேசத்
சுகமாய்க் குடியிருப்பீர்கள் என்ற தேவனே உமக்கு தோத்திரம். லேவி 26:
3. பூமியெங்கும் எந்த ஜாதிகளிடத்திலும் செய்யப்படாத அதிசயங்களை ஜனாங்க
எல்லாருக்கும் முன்பாக செய்கிறவரே உமக்கு தோத்திரம். யாத் 34:10
4. நான் ஏற்ற காலத்தில் உங்களுக்கு மழை பெய்யப்பண்ணுவேன், பூமி த
பலனையும் வெளியிலுள்ள மரங்கள் தங்கள் கனியையும், கொடுக்கும் என்
தேவனே உமக்கு தோத்திரம். லேவி 26:4
5. உங்கள் நடுவில் என் வாசஸ்தலத்தை ஸ்தாபிப்பேன். என் ஆத்தும
உங்களை அரோசிப்பதில்லை என்ற தேவனே உமக்கு தோத்திர
லேவி 26:11
6. நான் உங்கள் நடுவிலே உலாவி உங்கள் தேவனாயிருப்பேன். நீங்கள் எ
ஜனமாயிருப்பீரகள் என்றவரே உமக்கு தோத்திரம். லேவி 26:12
7. நான் உங்கள் மேல் கண்ணோக்கமாயிருந்து உங்களைப்பலுகவு
பெருகவும் பண்ணி உங்கனோடே என் உடன்படிக்கையை திடப்படுத்துவேன்
என்ற தேவனே உமக்கு தோத்திரம். லேவி 26:9

ஜெபம் : தேசத்தில் சமாதானம் கட்டளையிடுவேன் என்ற தேவனே இந்த நாளிலும் எங்கள் தேசத்தை உமது கரங்களில் ஒப்புக்கொடுக்கிறோம். நாங்கள் உமது ஜனமாயிருக்க எங்களைத் தகுதிப்படுத்தியருளும் ஆண்டவரே. நாங்கள் எங்கள் தேசத்தில் சுகமாய்குடியிருக்க கிருபைபுரியும். இயேசுவின் நாமத்தில் பிதாவே ஆமென்

நீதிமான்களின் சந்ததி ஆசீர்வதிக்கப்படும் என்ற தேவனே உமக்கு தோத்திரம். சங் 37:26

செம்மையானவர்களின் வம்சத்தை ஆசீர்வதிப்பவரே தோத்திரம். சங் 112:2

நீதிமானுடைய சிரசின்மேல் ஆசீர்வாதங்களைத் தங்கச் செய்பவரே தோத்திரம். நீதி 10:6

4. யோபுவின் கைகளின் கிரியையை ஆசீர்வதித்து அவனுடைய சம்பத்து தேசத்தில் பெருகும்படி செய்ததைப்போல என்னையும் ஆசீர்வதிக்கப் போகிறதற்காக தோத்திரம். யோபு 1:10

5. காத்தருக்குப் பயப்படுதிற மனுஷனை ஆசீர்வதிப்பவரே தோத்திரம். சங் 128:4

6. கருணைக் கண்ணனை ஆசீர்வதிப்பரே தோத்திரம். நீதி 22:9

7. உண்மையுள்ள மனுஷன் பரிபூரண ஆசீர்வாதங்களைப் பெறும்படி செய்கிறவரே தோத்திரம். நீதி 28:20

8. ஏற்ற காலத்திலே ஆசீர்வாதமான மழையைப் பெய்யப்பண்ணுகிறவரே உமக்கு தோத்திரம். எசே 34:26

9. நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் ஒருவனும் உனக்கு முன்பாக எதிர்த்து நிற்பதில்லை என்றீரே தோத்திரம். யோசு 1:5

ஜெபம் : கிருபை நிறைந்த கர்த்தாவே, நான் எப்போதும் உண்மையாய், உமக்குப்பயப்படுகிற பயத்தோடு கூட வாழ்ந்து உமது ஆசீர்வாதங்களுக்குத் தகுதியாயய் வாழ அருள் புரியும். நீதியின் களின் சந்ததியையும், செம்மையானவர்களின் வம்சத்தையும் ஆசீர்வதிக்கும் தேவன் தாமே, என் அபாத்திரதன்மைகளைப்பொறுத்து என்னையும் ஆசீர்வதியுமையா. நான் உயிரோடிருக்கும் நாளெல்லாம் சர்வவல்லவரின் நிழலில் வாழ கிருபை புரியும் தகப்பனே. இயேசுவின் மூலம் பிதாவே, ஆமென்.

ஜனவரி - 12

1. என் வாசல்களின் தாழ்ப்பாள்களைப் பலப்படுத்தி என்னிடத்திலுள்ள பிள்ளைகளை ஆசீர்வதிக்கும் தேவனே தோத்திரம். சங் 147:13
2. கர்த்தரின் ஆசீர்வாதமே ஐசுவரியத்தைத்தரும் அதனோடே அ வேதனையைக் கூட்டார். ஆகவே தோத்திரம். நீதி 10:22
3. உன் சந்ததியின் மேல் என் ஆவியையும், உன் சந்தானத்தின் மேல் ஆசீர்வாதத்தையும் ஊற்றுவேன் என்றீரே தோத்திரம். ஏசா44:3
4. அவர்களும் அவர்களோடே கூட அவர்கள் சந்தானமும் கர்த்தரா ஆசீர்வதிக்கப்பட்ட சந்ததியாயிருப்பார்கள் என்ற படியால் தோத்திர ஏசா 65:23
5. நீங்கள் ஜாதிகளுக்குள்ளே ஆசீர்வாதமாயிருக்கும்படி நான் உங்க இரட்சிப்பேன். பயப்படாதேயுங்கள். உங்கள் கைகள் திடப்படக்கட என்றீரே தோத்திரம். சக 8:13
6. கர்த்தர் சீயோனிலிருந்து என்னை ஆசீர்வதிப்பார். நான் ஜீவனு நாளேல்லாம் எருசலேமின் வாழ்வைக் காண்பேன். ஆகவே தோத்திர சங் 128:5
7. உமது அயோனின் வீடு என்றேன்றைக்கும் உமக்கு முன்பாக இருக்கும்படி அதை ஆசீர்வதித்தருளினீர். கர்த்தராகிய தேவரீர் அ ஆசீர்வதித்தபடியினால் அது என்றேன்றைக்கும் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கு ஆகவே தோத்திரம். நாளா 17:27

ஜெபம் : இரக்கமுள்ள பிதாவே, நீர் என்னையும் என் பிள்ளைகளைய ஆசீாவதிக்க ஆயத்தமாயிருக்கிறீா என்று நான் விசுவாசிக்கிறேன். அதன நிறைவாய்யப் பெற்றுக் கொள்ள ஒவ்வொரு நாளும் என்னை தகுதிப்படுத்தியருளும். என்னுடைய பாவங்களும் அக்கிரமச் செய்கைகள இதற்கு தடையாயில்லாதபடிக்குக் கிருபையாய் என்னைக் காத்துக் கொள்ளு உமது இரக்கமுள்ள கரம் எப்போதும் என்னோடிருப்பதாக தகப்பனே இயேசுவின்மூலம் பிதாவே ஆமென்.

னவரி - 13

நீர் எங்கள் தேவனாகவும் நாங்கள் உம் ஜனமாகவும் இருக்கிறபடியால் உமக்கு தோத்திரம். எரே 31:33

என் ஜனங்கள் நான் அளிக்கும் நன்மையினால் திருப்திபாவார்கள் என்றவரே உமக்கு தோத்திரம். எரே 31:14

நீர் எங்கள் துக்கத்தை சந்தோஷமாக மாற்றி, எங்களைத் தேற்றி எங்கள் சஞ்சலம் நீங்க எங்களைச் சந்தோஷப்படுத்துகிறதற்காக உமக்கு தோத்திரம் எரே 31:13

சேனைகளின் கர்த்தர் மகத்துவமும் வல்லமையுமுள்ளவர் உம்மாலே செய்யக்கூடாத அதிசயமான காரியம் ஒன்றுமில்லை. ஆகவே தோத்திரம். எரே 31:17

என்னை நோக்கிக் கூப்பிடு. அப்பொழுது நான் உனக்கு உத்தரவு கொடுத்து நீ அறியாததும் உனக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை உனக்கு அறிவிப்பேன் என்றவரே உமக்கு தோத்திரம். எரே 33:3

நீர் எங்களுக்கு சவுக்கியமும் ஆரோக்கியமும் வரப்பண்ணி எங்களை குணமாக்கி, எங்களுக்கு பாபூரண சமாதானத்தையும் சத்தியத்தையும் வெளிப்படுத்துகிறதற்காக உமக்கு தோத்திரம். ஏரே 3:32

சஞ்சலப்படுத்தினாலும் உமது மிகுந்த கிருபையின்படி இரங்கிறவரே உமக்கு தோத்திரம். புலம்பல் 33:2

ஜெபம் : என் தேவனே, உம்மை நோக்கி என் சத்தத்தை உயர்த்திக் கெஞ்சுகிறேன். ன் துக்கத்தை சந்தோஷமாக மாற்றித்தாரும் கர்த்தாவே. உமது மிகுந்த ருபையின்படி எனக்கு இரங்கி பூரண சமாதானத்தோடு இருக்கக் கிருபை புரியும் கப்பனே. இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்.

ஜனவரி - 14

1. எங்களுடைய ஆத்துமா நீர்ப்பாய்ச்சலான தோட்டத்தைப்போல இருப்பதற்கா கர்த்தாவே உமக்கு தோத்திரம். எரே 31:12
2. உன்னை நித்திய மாட்சிமையாகவும் தலைமுறை தலைமுறையாயிருக்கு மகிழ்ச்சியாகவும் வைப்பேன் என்றவரே உமக்கு தோத்திரம். ஏசா 60:15
3. நீங்கள் இனித் தொய்ந்து போவதில்லை என்று தேற்றுகிறவரே உமக் தோத்திரம். எரே 31:12
4. உமக்குக் காத்திருக்கிறவர்களுக்கும் உம்மைத் தேடுகிற ஆத்துமாவுக்கு கர்த்தர் நல்லவராகவே இருக்கிறபடியால் உமக்கு தோத்திரம். புல 3:25
5. கர்த்தர் நல்லவர். அவர் கிருபை என்றுமுள்ளது. ஆகவே தோத்திர எரே 33:11
6. நான் உம்மை நோக்கிக் கூப்பிட்ட நாளிலே நீர் அணுகி பயப்படாதே என் சொல்லி என்னைப் பலப்படுத்துகிறவரே உமக்கு தோத்திரம். புல 3:57
7. கோணலானவைகளை நேர்மையாக்குகிறவரே உமக்கு தோத்திரம். பிர 7:1
8. கர்த்தரில் மனமகிழ்ச்சியாயிருப்பாய். பூமியின் உயர்ந்த இடங்களி உன்னை ஏறியிருக்கும்படி பண்ணுவேன் என்று சொல்லும் கர்த்தா உமக்கு தோத்திரம். ஏசா 58:14

ஜெபம் : பரலோக தகப்பனே, உம்மையே நோக்கிப்பார்த்து காத்திருக்கிறேன். நா பயப்படும் போது என்னைத் தேற்றி என்னைப்பலப்படுத்தும் கர்த்தாவே. எ வாழ்வில் உள்ள கோணலானவைகளை நேர்மையாக்கி நான் உம்மிலே என்று மனமகிழ்ந்திருக்கும்படி கிருபை புரியும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்

ஜனவரி - 15

1. தேவனே உம்முடைய சிங்காசனம் என்றென்றைக்கு முள்ளது. உம்முடைய இராஜ்யத்தின் செங்கோல் நீதியுள்ள செங்கோலாயிருக்கிறது. ஆகவே தோத்திரம். எபி 1:8
2. சீயோன் பேதுரு ஆண்டவருடைய வற்த்தையின்படியே வலையைப் போட்ட போது வலை சிழியத்தக்கதாக மிகுதியான மீன்களைப்பிடிக்கும்படி சேதீரே தோத்திரம். லூக் 5:6
3. என்னை நோக்கிக் கூப்பிடு. அப்பொழுது நான் உனக்கு உத்தரவு கொடுத்து நீ அறியாததும் உனக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை உனக்கு அறிவிப்பேன் என்றீரே தோத்திரம். எரே 33:3
4. சந்தோஷமாயருங்கள் நற்சீர் பொருந்துங்கள். ஆறுதலடையுங்கள் ஏக சிந்தையாயிருங்கள். சமாதானமாயிருங்கள். அப்பொழுது அன்புக்கும் சமாதானத்துக்கும் காரணராகிய தேவன் உங்களோடே கூட இருப்பாராக என்று ஆசீர்வதிக்கிறதற்காக தோத்திரம். II கொரி 13 :11
5. பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கும் தேவன், தாழ்மையுள்ளவைகளுக்குக் கிருபை அளிக்கிறபடியால் தோத்திரம். I பே 5:5
6. நன்மை செய், அதினால் உனக்குப் புகழ்ச்சி உண்டாகும் என்றீரே தோத்திரம் ரோ 13:3
7. சமாதானத்தை உங்களுக்கு வைத்துப் போகிறேன். என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன் என்ற உம் வாக்குக்காக தோத்திரம். யோவான் 14:27

ஜெபம் : கிருபை நிறைந்த கர்த்தாவே, உம்முடைய வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிந்து பேதுருவைப்போல நிறைவான நன்மைகளைப் பெற்றுக்கொள்ள கிருபை புரியும். எப்போதும் மனத்தாழ்மையோடு எங்களை உமது கரத்தில் ஒப்புக் கொடுத்தவர்களாய், நீர்தரும் மெய்ச்சமாதானத்தைப் பெற்று வாழச் செய்யுமையா. நான் உம்மை நோக்கிக் கூப்பிடும்போது, எட்டாத காரியத்தை அருளிச்செய்து ஆசீர்வதியும் தகப்பனே. இயேசுவின் மூலம் பிதாவே, ஆமென்.

1. என் ஆலோசனை நிலைநிற்கும் எனக்குச் சித்தமானவைகளை யெல்லாம் செய்வேன் என்ற தேவனே தோத்திரம். ஏசா 46:10
2. எனக்கு ஆலோசனை தந்த கர்த்தரைத் துதிப்பேன். இராக்காலங்களில் என் உள்ளிந்திரியங்கள் என்னை உணர்த்துகிறதற்காய் தோத்திரம். சங் 16:7
3. கர்த்தருக்குச் சித்தமானது அவர் கையினால் வாய்க்கும் ஆகவே தோத்திரம். ஏசா 53:10
4. நான் கர்த்தரைத் தேடின நாட்களில் தேவன் என் காரியங்களை வாய்க்கச் செய்கிறீர். ஆகவே தோத்திரம். II நாளா 26:5
5. நீதிமான் பனையைப் போல செழித்து, லீபனோனிலுள்ள கேதுருவைப் போல வளரச் செய்கிறீரே தோத்திரம். சங் 92:12
6. நன்மையினால் என் வாயைத்திருப்தியாக்கிற தேவனே தோத்திரம் சங் 103:5
7. நான் உனக்குப் போதித்து நீ நடக்க வேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன். உன் மேல் என் கண்ணை வைத்து உனக்கு ஆலோசனை சொல்லுவேன் என்ற தேவனே தோத்திரம். சங் 32:8
8. கர்த்தாவே உமது கிரியைகள் எவ்வளவு மகத்துவமானவைகள் உமது யோசனைகள் மகா ஆழமானவைகள். ஆகவே தோத்திரம். சங் 92:5

ஜெபம்: கிருபை நிறைந்த கர்த்தாவே, என் வாழ்வில் ஒவ்வொரு நிமிடமும் எனக்கு ஆலோசனைக் கர்த்தாவாக இரும். என் மீது உம் கண்ணை வைத்து நான் நடந்து செல்ல வேண்டிய பாதையை எனக்குக் காட்டும் தகப்பனே. உமது மகத்துவமான கிரியைகளை எண்ணி எண்ணி உம்மைத்துதிக்கும்படி கிருபை புரியும் இயேசுவின் மூலம் பிதாவே. ஆமென்.

ஜனவரி - 19

1. எங்களது பிதாவாகிய தேவனாகிய கர்த்தாவே பரலோகத்திலிருக்கிற நீர் அல்லவோ தேவன். தேவரீர் ஜாதிகளுடைய இராஜ்யங்களையெல்லாம் ஆளுகிறவர். உம்முடைய கரத்திலே வல்லமையும் பராக்கிரமும் இருக்கிறது. ஒருவரும் உம்மோடு எதிர்த்து நிற்கக் கூடாது. ஆகவே தோத்திரம். II நாளா 20:6
2. நாங்கள் செய்ய வேண்டியது இன்னதென்று எங்களுக்குத் தெரியவில்லை. ஆகையால் எங்கள் கண்கள் உம்மையே நோக்கிக் கொண்டிருக்கிறபடியால் உமக்கு தோத்திரம். II நாளா 20:12
3. சமுத்திரம் ஒதுங்கும்படி செய்து அதை வறண்டு போகப் பண்ணினார். ஜலம் பிளந்து பிரிந்து போயிற்று. இஸ்ரவேல் புத்திரர் சமுத்திரத்தின் நடுவாக வெட்டாந்தரையில் நடந்து போனார்கள். அவர்கள் வலதுபுறத்திலும் இடதுபுறத்திலும் ஜலம் அவர்களுக்கு மதிலாக நிற்கும்படி செய்த வல்லமையுள்ள கர்த்தாவே உமக்கு தோத்திரம். யாத் 14:22
4. கர்த்தர் நன்மையானதைத் தருவீர். ஆகவே தோத்திரம். சங் 85:12
5. வல்லமையுடையவர் மகிமையானவைகளைச் செய்தீர். ஆகவே தோத்திரம். லூக் 1:49
6. கர்த்தர் என் நடுவில் இருக்கிறபடியால் தோத்திரம். செப் 3:15
7. நீ விசுவாதித்தபடியே உனக்கு ஆகக்கூடாது என்கிறபடியால் தோத்திரம். மத் 8:13

ஜெபம்: பரலோகப் பிதாவே, நீர் ஒருவரே என்னை ஆளுகை செய்கிற தேவன் என்று விசுவாசிக்கிறேன். என் விசுவாசத்தைக் கனப்படுத்தி என்னை ஆசீர்வதியும். என் கண்கள் உம்மையே நோக்கிக் கொண்டிருக்கச் செய்யுமையா. நீர் காட்டும் வழிகளில் நடக்கும்படி புரியும். இயேசுவின் மூலம் பிதாவே, ஆமென்!

ஜனவரி - 20

1. கர்த்தருக்குப் பயப்படுகிற பயம் உங்களிடத்தில் இருக்கக் கடவது எச்சரிக்கயாயிருந்து காரியத்தை நடத்துங்கள். கர்த்தரிடத்திலே அநியாயமும் முகதாட்சிணியமும் இல்லை என்கிறதற்காய் தோத்திரம். நாளா 19:7
2. நீங்கள் செய்கிற காரியத்தைக் குறித்து எச்சாக்கையாயிருங்கள் என்று சொல்லி வழிநடத்துபவரே தோத்திரம். நாளா 19:6
3. நீங்கள் திடமனதாயிருந்து காரியங்களை நடத்துங்கள். உத்தமனுக்குக் கர்த்தர் துணையாயிருந்து வழிகாட்டுபவரே உமக்கு தோத்திரம். நாளா 19:11
4. அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக்கர்த்தா ஆகவே தோத்திரம். ஊகா 9:6
5. கர்த்தர் நம்மை நிச்சயமாய் தப்புவிப்பார். ஆகவே தோத்திரம். ஏகா 36:15
6. தேவ சமாதானம் உங்கள் இருதயங்களைக் காத்துக்கொள்ளும் என்கிறபடியால் தோத்திரம். பிலி 4:7
7. கர்த்தருடைய மகிமை என்னைப் பின்னாலே காக்கும் ஆகவே தோத்திரம் ஏகா 58:8
8. கர்த்தர் எனக்கு வெளிச்சமாயிருப்பார் ஆகவே தோத்திரம். மீகா 7:8

ஜெபம் : கிருபை நிறைந்த காத்தாவே, நான் செய்ய வேண்டியவற்றை உமக்குப் பயப்படுகிற பயத்தோடும், உத்தமத்தோடும் எச்சரிக்கையோடு செயல்படுத்த அருள்புரியும் நீரே எனக்குத் துணையாயிருந்து என்னை வழிநடத்துமையா உம்முடைய மகிமை என்னைக் காக்கக்கடவது. நீரே என் வாழ்வில் வெளிச்சமாயிரும் தகப்பனே. இயேசுவின் மூலம் பிதாவே ஆமென்.

1. கர்த்தாவே என் முழு இருதயத்தோடும் உம்மைத் துதிப்பேன். உம்முடைய அதிசயங்களை யெல்லாம் விவரிப்பேன். சங் 9:1
2. கர்த்தாவே உம்மில் மகிழ்ந்து களிகூறுவேன். உன்னதமானவரே உமது நாமத்தைக் கீர்த்தனம் பண்ணுவேன். சங் 9:2
3. கர்த்தாவே உம்மைத் தேடுகிறவர்களை நீர் கைவிடுகிறதில்லை ஆகவே தோத்திரம். சங் 9:10
4. கர்த்தர் எனக்கு நன்மை செய்தபடியால் அவரைப்பாடுவேன் தோத்திரம். சங் 13:6
5. எனக்கு ஆலோசனை தந்த கர்த்தரைத்துதிப்பேன். சங் 16:7
6. கர்த்தர் எனக்கு ஆதரவாயிருந்தீர் ஆகவே தோத்திரம். சங் 18:18
7. என் மனவிருப்பத்தின்படி நீர் எனக்குத் தந்தருளி என்னுடைய உதடுகளின் விண்ணப்பத்தைத் தள்ளா திருக்கிறீர். ஆகவே தோத்திரம். சங் 21:2
8. நீர் எமது மனவிருப்பத்தின்படி எமக்குத் தந்தருளி எமது ஆலோசனைகளை யெல்லாம் நிறை வேற்றுகிறீர் ஆகவே தோத்திரம். சங் 20:4
9. கர்த்தர் என் வலது பாரிசத்தில் இருக்கிறபடியால் நான் அசைக்கப்படுவதில்லை. ஆகவே தோத்திரம். சங் 16:8

ஜெபம் : உன்னதமான கர்த்தரே இந்த நாளில் நீரே என் ஆலோசனைக்கர்த்தாவாக இருந்து என்னை தயவாய் வழி நடத்தும். நான் எவ்விதத்திலும் அசைக்கப்படாத படிக்கு என் தேவனே, என் வலது பாரிசத்தில் நீர் எனக்கு ஆதரவாக இரும். இயேசுவின் நாமத்தில் பிதாவே ஆமென்.

1. கர்த்தா என் கன்மலையும், என் கோட்டையும், என் இரட்சகரும், என்
தேவனும், நான் நம்பியிருக்கிற என் துருகமும், என் கேடகமும், என்
இரட்சணியக் கொம்பும், என் உயர்ந்த அடைக்கலமுமாயிருக்கிறபடியால்
உமக்கு தோத்திரம். சங் 18:2
2. எனக்கு உண்டான நெருக்கத்திலே கர்த்தரை நோக்கிக்கூப்பிட்ட
வேளையிலே, அவர் தமது ஆலயத்திலிருந்து என் சத்தத்தைக்கேட்டபடியால்
தோத்திரம். சங் 18:6
3. உமது சமூகத்தில் பரிபூரண ஆனந்தமும் உமது வலது பாரிசத்தில் நித்திய
பேரின்பமும் இருக்கிறபடியால் உமக்கு தோத்திரம். சங் 16:11
4. சிறுமைப்பட்டவனுக்குக் கர்த்தர் அடைக்கலமானவர். நெருக்கப்படுகிற
காலங்களில் நீரே தஞ்சமாயிருக்கிறபடியால் உமக்கு தோத்திரம். சங் 9:9
5. தேவரீர் திக்கற்ற பிளைகளுக்கும் ஒடுக்கப்பட்ட வர்களுக்கும் நீதி செய்ய உமது
செவிகளை சாய்க்கிறபடியால் உமக்கு தோத்திரம். சங் 10:18
6. கத்தாவே நீர் சிறுமைப்பட்டவர்களுடைய வேண்டுதலைக் கேட்டு
அவர்களுடைய இருதயத்தை ஸ்திரப்படுத்துகிறபடியால் தோத்திரம்.
சங் 10:17
7. உயரத்திலிருந்து நீர் என்னைக் கை நீட்டிப் பிடித்துத்தூக்கி விடுகிறீர். ஆகவே
தோத்திரம். சங் 18:16

ஜெபம் : என் கன்மலையாகிய கர்த்தாவே, இந்த நாளிலும் என்னுடைய எல்லா
நெருக்கத்திலிருந்தும் என்னைக் கை தூக்கிவிடும். நீரே என் அடைக்கலம்.
உமதுசமூகத்தில் உள்ள பரிபூரண ஆனந்தத்தையும், நித்திய பேரின்பத்தையும்
எனக்குக் கிருபையாய்த்தாரும். இயேசுவின் நாமத்தில் பிதாவே ஆமென்.

1. என் ஆத்துமா இரவிலே உம்மை வாஞ்சிக்கிறது. எனக்குள் இருக்கிற என் ஆவியால் அதிகாலையிலும் உம்மைத் தேடும்படியான வாஞ்சையைத் தந்த தேவனே தோத்திரம். ஏசா 26:9
2. அவன் என்னிடத்தில் வாஞ்சையாயிருக்கிறபடியால் அவனை விடுவிப்பேன், என் நாமத்தை அவன் அறிந்திருக்கிறபடியால் அவனை உயர்ந்த அடைக்கலத்திலே வைப்பேன் என்றீரே தோத்திரம். சங் 91:14
3. வாழ்வு காலத்திலே நன்மையை அனுபவித்திரு என்றீரே தோத்திரம் பிர 7:14
4. உன் சுக வாழ்வு சீக்கிரத்தில் துளிர்த்து உன் நீதி உனக்கு முன்னாலே செல்லும். கர்த்தருடைய மகிமை உன்னைப் பின்னாலே காக்கும் என்றபடியால் தோத்திரம். ஏசா 58:8
5. என்னிடத்தில் உனக்குச் சகாயம் உண்டு என்றீரே தோத்திரம். ஓசி 13:9
6. வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தரிடத்திலிருந்து எனக்கு ஒத்தாசை வரும். ஆகவே தோத்திரம். சங் 121:2
7. தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும், உண்மையாய்த் தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும் சமீபமாயிருக்கும் கர்த்தரே தோத்திரம். சங் 145:18

ஜெபம் : இரக்கமுள்ள பிதாவே, இப்போதும் அதிகாலையிலே உம்மைத் தேடி வாஞ்சையோடு வந்து உம் பாதத்தண்டையில் நிற்கிறேன். உம்மிடத்தில் சகாயம் பெற்ற என்னுடைய சுக வாழ்வினைத் துளிர்க்கப்பண்ணியருளும் தகப்பனே. உண்மையாய் உம்மை நோக்கிக் கூப்பிடும் போது கர்த்தாவே நீரே எனக்கு சமீபமாயிருந்து, உமது வல்ல கரத்தால் என்னை தயவாய் வழி நடத்துமையா. இயேசுவின் மூலம் பிதாவே ஆமென்.

ஜனவரி - 24

1. கர்த்தர் நல்லவர் அவருடைய கிருபை என்றென்றைக்கும் அவருடைய
உண்மை தலைமுறை தலை முறைக்கும் உள்ளது. ஆகவே தோத்திரம்.
சங் 100:5

2. தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார். உங்கள் திராணிக்கு மேலாக
சோத்திக்கப்படுகிறதற்கு அவர் இடங் கொடாமல் சோதனையைத்
தாங்கத்தக்தாக,சோதனை யோடுகூட அதற்குத் தப்பித்துக் கொள்ளும்படியான
போக்கையும் உண்டாக்கித்தருகிறபடியால் தோத்திரம். I கொரி 10:13

3. உம்முடைய இரக்கம் உமக்குப் பயந்திருக்கிறவர்களுக்குத் தலைமுறை
தலைமுறைக்குமுள்ளது. ஆகவே தோத்திரம். லூக் 1:50

4. இஸ்ர வேலின் தேவனாயிருக்கிற கர்த்தராகிய தேவன் அதிசயங்களை
செய்கிறவராயிருக்கிறபடியால் தோத்திரம். சங் 72:18

5. உமது அடியானின் வீடு என்றைக்கும் உமக்கு முன்பாக இருக்கும்படிக்கு
அதை ஆசீர்வதித்தருளினீர். கர்த்தராகிய தேவரீர் அதை
ஆசீர்வதித்தபடியினால் அது என்றைக்கும் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கும்.
ஆகவே தோத்திரம். I நாளா 17:27

6. நான் எப்போதும் வந்தடையத்தக்கக் கன் மலையாயிருப்பதற்காக தோத்திரம்.
சங் 71:3

7. என் இருதயம் கர்த்தருக்குள் களிகூருகிறது. உம்முடைய இரட்சிப்பினாலே
சந்தோஷப்பட கிருபையளிப்பவரே தோத்திரம். I சாமு 2:1

ஜெபம் : பரலோகப் பிதாவே, என் வாழ்வில் பல சோதனைகளின் ஊடாக நான் கடந்து வந்தாலும், சோர்ந்து போகாதபடி என்னைக் கிருபையாய்க் காத்து சோதனைகளைத் தாங்க உமது பெலனைத் தாருமையா. நீரே எனக்கு கன்மலையாயிருந்து ஆறுதல்படுத்தி ஆசீர்வதியும் தகப்பனே. இயேசுவின் மூலம் பிதாவே ஆமென்.

1. இதோ பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்திரம் கர்ப்பத்தின் கனி அவரால் கிடைக்கும் பலன். ஆகவே தோத்திரம். சங் 127:4
2. அன்னாள் ஜெபித்த போது மலடியாயிருந்தவள் ஏழு பெற்றெடுக்கச் செய்த வல்லமை யுள்ளவரே உமக்கு தோத்திரம். 1 சாமு 2:5
3. மலடியை சந்தோஷமான பிள்ளைத்தாய்ச்சி யாக்க வல்ல தேவனே உமக்கு தோத்திரம். சங் 113:9
4. பிள்ளை பெறா மலடியே மகிழ்ந்து பாடு. கர்ப்ப வேதனைப் படாதவனே கெம்பீரமாய்ப்பாடி ஆனந்த சத்தமிடு என்று உற்சாகமும் ஊக்கமும் தருபவரே உமக்கு தோத்திரம். ஏசா 54:1
5. பயப்படாதே நீ வெட்கப்படுவதில்லை என்ற உம் வாக்குத் தத்ததுக்காக தோத்திரம். ஏகா 54:4
6. உன் பிள்ளைகள் உன் பந்தியைச் சுற்றிலும் ஒலிவமரக்கன்று களைப் போல் இருப்பார்கள் என்றீரே தோத்திரம். சங் 128:3
7. நீ உன் பிள்ளைகளின் பிள்ளைகளையும் இஸ்ர வேலுக்கு உள்டாகும் சமாதானததையும காண்பாய் என்பதற்காய் தோத்திரம். சங் 128:6
8. கர்த்தர் சீயோனிலிருந்து என்னை ஆசீர்வதிப்பர். நான்ஜீவனுள்ள நாலெல்லாம் எருசலேமின் வாழ்வைக் காண்பேன். ஆகவே தோத்திரம். சங் 128:5

ஜெபம் : கிருபை நிறைந்த கர்த்தாவே, நான் துன்பத்க்கை கண்ட வருஷங்களுக்குச் சாயாய் என்னை மகிழ்ச்சியாக்கும். நீர் என் கண்ணீரைக்காண்கிற தேவன் என்றும், கண்ணீரோடே விதைப்பவர்கள் கெம்பீரத்தோடே அறுப்பார்கள் என்றும் நான் விசு வாசிக்கிறேன். தயவாய் என் ஜெபத்தைக் கேட்டு பெரிய காரியங்களைச் செய்து, இதினிமித்தம் மகிழ்ந்திருக்கப்பண்ணுமையா. இயேசுவின் மூலம் பிதாவே, ஆமென்.

ஜனவரி - 26

1. தேசமே, பயப்படாதே. மகிழ்ந்து களிகூரு. கர்த்தர் பெரிய காரியங்களை செய்வார் ஆகவே தோத்திரம். யோவேல் 2:21
2. நீ இனிக் கைவிடப்பட்டவள் என்னப்படாமலும் உன் தேசம் இனி பாழான தேசமென்னப்படாமலும், நீ எப்சிபா என்றும், உன் தேசம் பியூலா என்றும் சொல்லப்படும். கர்த்தர் உன்மேல் பிரியமாயிருக்கிறார். உன் தேசம் வாழ்க்கைப்படும் என்றீரே உமக்கு தோத்திரம். ஏசா 62:4
3. உங்கள் வெட்கத்துக்குப் பதிலாக இரண்டத்தனையாய் பலன் வரும். தங்கள் தேசத்தில் இரட்டிப்பான சுதந்திரம் அடைவார்கள். நித்திய மகிழ்ச்சி அவர்களுக்கு உண்டாகும் என்றபடியால் தோத்திரம். ஏசா 61:7
4. தேசம் வானத்தின் செல்வத்தினாலும் பனியினாலும் ஆழத்திலுள்ள நீருற்றுகளினாலும், சூரியன் பக்குவப்படுத்தும் அருமையான கனிகளினாலும், சந்திரன் பக்குவப்படுத்தும் அருமையான பலன்களினாலும், ஆதி பர்வதங்களில் உண்டாகும் திரவியங்களினாலும், நித்திய மலைகளில் பிறக்கும் அரும் பொருள்களினாலும், நாடும் அதின் நிறைவும் கொடுக்கும் அருமையான தானியங்களினாலும் ஆசீர்வதிக்கப்படுவதாக என்றீரே தோத்திரம். உபா 33:13
5. கர்த்தர் சொல்லிய தமது வார்த்தையை நிறைவேற்றுகிறபடியால் தோத்திரம். I நாளா 6:10
6. உன் சுகவாழ்வு சீக்கிரத்தில் துளிர்க்கும் என்றீரே தோத்திரம். ஏசா 58:8
7. இனிக் கொடுமை உன் தேசத்திலும் அழிவும் நாசமும் உன் எல்லைகளிலும் கேட்கப்படாதபடி காக்கிறவரே தோத்திரம். ஏசா 60:18

<u>ஜெபம்:</u> கிருபை நிறைந்த கர்த்தாவே, கர்த்தர் என்வாழ்வில் உள்ள இருளடைந்த பகுதிகளை சரிப்படுத்தி, சுகவாழ்வினை துளிர்க்கும்படி உதவி செய்யும். தேசத்தின் செழிப்பினை இரட்டிப்பாக்கி உம்முடைய வாக்கினை நிறைவேற்றுமையா. நித்திய மகிழ்ச்சியால் என்னை நிரப்பி வழிநடத்தியருளும், இயேசுவின் மூலம் பிதாவே, ஆமென்.

1 உன் விண்ணப்பத்தைக் கேட்டேன். உன் கண்ணீரைக் கண்டேன். இதோ நான் உன்னைக் குணமாக்குவேன் என்ற தேவனே தோத்திரம். II இரா 20:5

2 நித்திய கிருபையுடன் உனக்கு இரங்குவேன் என்றுரைக்கும் கர்த்தராகிய மீட்பரே தோத்திரம். ஏசா 54:8

3 இனிச் சூரியன் உனக்குப் பகலிலே வெளிச்சமாயிராமலும், சந்திரன் தன் வெளிச்சத்தால் உனக்குப் பிரகாசியாமலும், கர்த்தரே உனக்கு நித்திய வெளிச்சமும் உன் தேவனே உனக்கு மகிமையுமாயிருப்பார். ஆகவே தோத்திரம். ஏசா 60:19

4 உன் துக்க நாட்கள் முடிந்து போம் என்றீரே தோத்திரம். ஏசா 60:20

5 கர்த்தர் மேல் உன் பாரத்தை வைத்துவிடு. அவர் உன்னை ஆதரிப்பார் என்றபடியால் தோத்திரம். சங் 55:22

6 கர்த்தரை நம்புகிறவர்கள் என்றென்றைக்கும் அசையாமல் நிலைத்திருக்கும் சீயோன் பர்வதத்தைப் போல் இருப்பார்கள் ஆகவே தோத்திரம். சங் 125:1

7 நான் ஒருக்காலும் அசைக்கப்படுவதில்லை யென்று என் வாழ்விலே சொன்னச் செய்தவரே தோத்திரம் . சங் 30:6

8 சிங்கக் குட்டிகள் தாழ்ச்சியடைந்து பட்டினியாயிருக்கும். கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையும் குறைவுபடாது ஆகவே தோத்திரம். சங் 34:10

<u>ஜெபம்:</u> கிருபை நிறைந்த கர்த்தாவே, எனக்கு நித்திய வெளிச்சமாயிருப்பவரே, உம்மீது என் பாரங்களை யெல்லாம் வைக்கத் தக்கதாக நீர் ஒரு சுமைதாங்கியாக இருப்பதற்காக தோத்திரம். நான் உம்மையே சம்பியிருப்பதால் நான் ஒருக்காலும் அசைக்கப்படுவதில்லை என்று விசுவாசிக்கிறேன். நான் உம்மைத் தேடும் போது ஒரு நன்மையும் குறைவுபடாதபடி தந்து வழி நடத்தியருளும் தகப்பனே. இயேசுவின் மூலம் பிதாவே ஆமென்.

ஜனவரி - 28

1. தேவனே உமது ஆலோசனைகள் எனக்கு எத்தனை அருமையானவைக அவைகளின் தொகை எவ்வளவு அதிகம். அவைகளை எண்ணப்போனா மணலைப்பார்க்கிலும் அதிகமாம் ஆகவே தோத்திரம். சங் 139:17
2. கர்த்தர் வருமளவும் காலத்துக்கு முன்னே யாதொன்றைக் குறித்தும் தீர்ப் சொல்லாதிருக்கும்படி வழி காட்டியதற்காக தோத்திரம். I கொரி 4:5
3. ஒருவரிடத்திலொருவர் அன்பு கூருகிற கடனேயல்லாமல் மற்றொன்றி ஒருவனுக்கும் கடன்படாதிருங்கள் என்றீரே தோத்திரம். ரோ 13:8
4. மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான் என்ற எச்சரிப்புக்க தோத்திரம். கலா 6:7
5. மகா பரிசுத்தமான விசுவாசத்தின் மேல் உங்களை உறுதிப்படுத்திக் கொண் பரிசுத்த ஆவிக்குள் ஜெபம் பண்ணி தேவனுடைய அன்பிலே உங்கள காத்துக் கொண்டு கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய இரக்கத் பெறக் காத்திருங்கள் என்றீரே தோத்திரம். யூதா 1:21
6. பலங் கொண்டு திடமனதாயிரு. திகையாதே, கலங்காதே, நீ போகு இடமெல்லாம் உன் தேவனாகிய கர்த்தர் உன்னோடே இருக்கிற என்றபடியால் தோத்திரம். யோசு 1:9
7. நாளைக்குக் கர்த்தர் எங்கள் நடுவிலே அற்புதங்களைச் செய்ய போகிறபடியால் தோத்திரம். யோசு 3:5

<u>ஜெபம்</u> : இரக்க முள்ள பிதாவே, மற்றவர்களைக் குற்றவாளிகளென் தீர்க்காதபடிக்கு நான் என்னை ஜாக்கிரதையாய்க்காத்துக் கொள்ள உதவி செய்யு மணலைப்பார்க்கிலும் அதிகமாயுள்ள அருமையான உம் ஆலோசனைகளின் நடந்து, நீர் எங்கள் நடுவிலே செய்யப்போகிற ஆசீர்வாதத்துக் தகுதிப்படுத்துமையா. இயேசுவின் மூலம் பிதாவே, ஆமென்.

1. எங்களுக்கு உண்டான சகல உபத்திரவத்திலேயும் பரிபூரண சந்தோஷமாயிருக்கும்படி செய்கிறவரே உமக்கு தோத்திரம். II கொரி 7:4
2. தேவன் எங்களைத் தப்புவித்தார், இப்பொழுதும் தப்புவிக்கிறார், இன்னமும் தப்புவிப்பார் என்று அவரை நம்பியிருக்கிச் செய்கிறவரே உமக்கு தோத்திரம். கொரி 1:10
3. வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருக்கிற தானதர்மமானது லோபத்தனமாய்க் கொடுக்கப்பட்டதாயிராமல், உதாரத்துவமாய் கொடுக்கப்பட்டதாயிருக்கும்படியாக ஆயத்தப் படுத்துகிறவரே உமக்கு தோத்திரம். II கொரி 9:5
4. சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான். பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான் என்றீரே உமக்கு தோத்திரம். II கொரி 9:6
5. உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறீர். ஆகவே தோத்திரம். II கொரி 9:7
6. நாங்கள் எல்லாவற்றிலும் எப்பொழுதும் சம்பூரண முடையவர்களையும் சகல வித நற்கிரியைகளிலும் பெருகிறவர்களையும் இருக்கும்படியாக தேவன் எங்களிடத்தில் சகலவித கிருபையையும் பெருகச் செய்ய வல்லவராயிருக்கிறபடியால் தோத்திரம். II கொரி 9:8
7. வாரியிறைத்து ஏழைகளுக்குக் கொடுத்தவனுடைய நீதி என்றென்றைக்கும் நிலைத்து நிற்கச் செய்கிறவரே தோத்திரம். II கொரி 9:9
8. தேவன் அருளிய சொல்லி முடியாத ஈவுக்காக அவருக்கு தோத்திரம். II கொரி 9:15

ஜெபம் : சொல்லி முடியாத ஈவுகளினால் நிரப்பும் தேவனே, நாங்கள் ஏழைகளுக்குத் தாராளமாகக் கொடுத்து உதவ எங்களை ஏவியருளும் நற்கிரியைகளில் எப்போதும் பெருகுகிறவர்களாயிருந்து உம்மையே நம்பியிருக்கச் செய்யும். எந்தவிதமான உபத்திரவத்திலும், நீர் அருளும் பரிபூரண சந்தோஷத்தோடே செயல்பட கிருபை புரியும் இயேசுவின் நாமத்தில் ஆமென்.

1. என் ஆத்துமா தேவனையே நோக்கி அமர்ந்திருக்கிறது. நான் நம்புகிற
அவராலே வரும். ஆகவே தோத்திரம். சங் 62:5
2. தேவனே நீர் என் பொருத்தனைகளைக் கேட்டபடியால் உமக்கு தோத்திரம்
சங் 61:5
3. நான் உங்களை ஏற்றுக் கொண்டு உங்களுக்குப் பிதாவாயிருப்பேன். நீங்க
எனக்குக் குமாரரும் குமாரத்திகளுமாயிருப்பீர்களென்று சொல்லு
சர்வவல்லமையுள்ள கர்த்தரே உமக்கு தோத்திரம். II கொரி 6:18
4. சிறுமைப் பட்டவர்களுக்கு ஆறுதல் செய்கிற தேவன் எங்களுக்கும் ஆறுத
செய்கிறபடியால் தோத்திரம். II கொரி 7:6
5. மிகுந்த உபத்திரவத்தினாலே சோதிக்கப்படுகையில் கொடிய தரித்
முடையவர்களாயிருந்தும் பரிபூரண சந்தோஷத்தினாலே மிகுந்
உதாரத்துவமாய் கொடுக்கும்படி செய்கிறவரே உமக்கு தோத்திரம்
IIகொரி 8:2
6. கர்த்தருக்கு முன்பாக மாத்திரமல்ல மனுவிருக்கு முன்பாகவு
யோக்கியமானவைகளைச் செய்யும்படி நாடச் செய்கிறவரே உமக்
தோத்திரம். கொரி 8:21
7. எனக்காக யாவையும் செய்து முடிக்கிற தேவனாகிய உன்னதமான தேவனே
உமக்கு தோத்திரம். சங் 57:2
8. நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனும் இரக்கங்களின்
பிதாவும் சகலவிதமான ஆறுதலின் தேவனுமாயிருக்கிறவருக்கு தோத்திரம்
கொரி 1:3

ஜெபம் : ஆறுதலின் தேவனே, உம்மையே நோக்கி உமது பாதத்தி
அமர்ந்திருக்கிறேன். யோக்கியமானவைகளைச் செய்யவும், மிகுந்
உதாரத்துவமாய்க் கர்த்தருக்கென்று கொடுக்கவும் கிருபை செய்யும். நான்
உம்மையே நம்பியிருக்கிறபடியால், என் பொருத்தனைகளைத் தயவாய்க் கேட்
எனக்காக யாவையும் செய்து முடித்தருளும் கர்த்தாவே இயேசுவின் மூல
பிதாவே ஆமென்.

1. உங்களை எனக்கு ஜனங்களாகச் சேர்த்துக் கொண்டு உங்களுக்கு தேவனாயிருந்து உங்கள் மேல் சுமத்தின சுமைகளை நீக்கி உங்களை விடுவிக்கிற உங்கள் தேவனாகிய கர்த்தர் நானே என்றவரே உமக்கு தோத்திரம். யாத் 6:7
2. தேவரீர் நல்லவரும் நன்மை செய்கிறவருமாயிருக்கிறபடியால் உமக்கு தோத்திரம். சங் 119:68
3. எனக்கு நன்மையாகத் துணை நின்றவரே உமக்கு தோத்திரம். சங் 119:122
4. எங்கள் தேவனாகிய கர்த்தர் எங்களுக்கு இரக்கஞ்செய்யும் வரைக்கும் எங்கள் கண்கள் அவரையே நோக்கியிருக்கச்செய்பவரே உமக்கு தோத்திரம். சங்123:2
5. நல்லவர்களுக்கும் இருதயத்தில் செம்மையானவர்களுக்கும் நன்மை செய்கிற கர்த்தாவே உமக்கு தோத்திரம். சங் 125:4
6. கர்த்தர் உயர்ந்தவராயிருந்தும் தாழ்மையுள்ளவனை நோக்கிப் பார்க்கிறபடியால் தோத்திரம். சங் 138:6
7. என் நினைவுகளை தூரத்திலிருந்து தேவரீர் அறிகிறீர் ஆகவே தோத்திரம். சங் 139:2
8. நம்முடைய தாழ்வில் நம்மை நினைத்த கர்த்தாவே உமக்கு தோத்திரம். சங் 136:23

ஜெபம்: தேவனே, நல்லவரே, நன்மை செய்கிறவரே இந்த நாளில் எனக்குத் துணையாயிருந்து என் மேல் உள்ள சுமைகளிலிருந்து என்னை விடுவியும் பிதாவே என்னைத் தாழ்த்தி உமது கரங்களில் என்னை ஒப்புக் கொடுக்கிறேன் என்னுடைய தாழ்வில் என்னை நினைத்து எனக்கு நன்மை செய்யும் கர்த்தாவே இயேசுவின் நாமத்தில் ஆமென்.

பிப்ரவரி - 1

1. இது கர்த்தர் உண்டு பண்ணின நாள் இதிலே களிகூர்ந்து மகிழ்ந்திருக்க
பண்ணுகிறவரே உமக்கு தோத்திரம். சங் 118:24
2. காரியத்தை வாய்க்கப் பண்ணுகிற கர்த்தாவே உமக்கு தோத்திரம். சங் 118:25
3. எங்களைப் பிரகாசிப்பிக்கிற தேவனே உமக்கு தோத்திரம். சங் 118:25
4. நம்முடைய கண்களுக்கு ஆச்சாயமாயிருக்கும் இந்தக் காரியம் கர்த்தரால்
ஆயிற்று ஆகவே தோத்திரம். சங் 118:23
5. நான் கர்த்தருக்குச் செய்த பொருத்தனைகளை அவருடைய
ஜனங்களெல்லாருக்கும் முன்பாகச் செலுத்துவேன். அல்லேலூயா. சங் 116:1
6. நான் கர்த்தருக்கு ஸ்தோத்திர பலியைச் செலுத்தி அவருடைய நாமத்தை
தொழுது கொள்ளச் செய்பவரே உமக்கு தோத்திரம். சங் 116:17
7. தேவனே, பெரிதானவைகளை நீர் செய்கிறீர் ஆகவே உமக்கு தோத்திரம்
சங் 71:19
8. கர்த்தர் எனக்குச் செய்த எல்லா உபகாரங்களுக்காகவும் அவருக்கு
என்னத்தைச் செலுத்துவேன். இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு
கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுவேன் அல்லேலூயா
சங் 116:12

ஜெபம்: எமது இரட்சகரே, நீர் உண்டுபண்ணின இந்த நாளில் நான் உம்மில் களிகூர்ந்து மகிழ்ந்திருக்கப்பண்ணும் நான் கையிட்டுச் செய்யும் காரியங்களை தயவாய் வாய்க்கப்பண்ணும் தகப்பனே. உமக்கு முன்பாகச் செய் பொருத்தனைகளை. உண்மையுடன் நிறைவேற்ற என்றும் கிருபை புரியு இயேசுவின் நாமத்தில் பிதாவே ஆமென்.

1. கர்த்தர் மேல் உன் பாரத்தை வைத்துவிடு. அவர் உன்னை ஆதரிப்பார். நீதிமானை ஒரு போதும் தள்ளாடவொட்டார் என்றீரே தோத்திரம். சங் 55:22

2. அந்தி சந்தி மத்தியான வேளைகளிலும் நான் தியானம் பண்ணி முறையிடுவேன் கர்த்தர் என் சத்தத்தைக் கேட்பார் ஆகவே தோத்திரம். சங் 55:17

3. எனக்காக யாவையும் செய்து முடிக்கப்போகிற தேவனாகிய உன்னதமான தேவனே உமக்கு தோத்திரம். சங் 57:2

4. என் தேவன் தம்முடைய கிருபையினால் என்னைச் சந்திப்பார் ஆகவே தோத்திரம். சங் 59:10

5. தேவனே நீர் என் பொருத்தனைகளைக் கேட்டபடியினால் உமக்கு தோத்திரம் சங் 61:5

6. என ஆத்துமா தேவனையே நோக்கி அமர்ந்திருக்கிறது. நான் நம்புகிறது அவராலே வரும். ஆகவே தோத்திரம். சங் 62:5

7. எனக்கு உதிக்கும் திசை தொடங்கி அது அஸ்தமிக்கும் திசை மட்டும் கர்த்தருடைய நாமம் துதிக்கப்படுவதாக ஆமென். சங் 113:3

8. எனக்கு நெருக்கமுண்டான நாளிலே தேவரீர் எனக்குத் தஞ்சமும் உயர்ந்த அடைக்கலமாயிருந்தபடியால் தோத்திரம். சங் 59:16

ஜெபம்: உன்னதமான என் தேவனே, என் பொருத்தனைகளை நிறைவேற்றிட உம்முடைய அருளைத்தாரும். எனக்காக யாவையும் செய்து முடிக்கப்போகிற உமது இரக்கத்தையும் காருணியத்தையும் உணர்கின்ற உணர்வை எனக்குத் தாரும். உம்மீது என் பாரத்தை வைத்துவிட்டு, விசுவாசத்துடன் பொறுமையாய் அமர்ந்திருக்கக் கிருபை புரியும். இயேசுவின் நாமத்தில் பிதாவே ஆமென்.

பிப்ரவரி - 3

1. பூமி உம்முடைய காருணியத்தால் நிறைந்திருக்கிறது. ஆகவே உம
தோத்திரம். சங் 33:5

2. உமது ஆலயத்திலுள்ள சம்பூரணத்தினால் திருப்தியடையச் செய்கிறவ
உமக்கு தோத்திரம். சங் 36:8

3. என் ஆத்துமாவே நீ ஏன் கலங்குகிறாய் ஏன் எனக்குள் தியங்குகிற
தேவனையே நோக்கிக் காத்ததிரு என்றதற்காய் தோத்திரம். சங் 42:5

4. என் முகத்திற்கு இரட்சிப்பும் என் தேவனுமாயிருக்கிறவரை நான் இன்னு
துதிப்பேன். அல்லேலூயா. சங் 42:11

5. தேவனே என் கண்ணீரை உம்முடைய துருத்தியில் வைத்திருப்பதற்காகவு
அவைகள் உம்முடைய கணக்கில் இருப்பதற்காகவும் உமக்கு தோத்திர
சங் 56:8

6. மனுஷன் எனக்கு என்ன செய்வான். தேவனை நம்பியிருக்கிறேன். நா
பயப்படேன். ஆகவே தோத்திரம். சங் 56:11

விக்கினங்கள் கடந்து போகுமட்டும் உமது செட்டைகளின் நிழலிலே வ
அடையச் செய்பவரே உமக்கு தோத்திரம். சங் 57:1

8. நீர் மெய்யாய் பூமியிலே நியாயஞ் செய்கிற தேவனாயிருக்கிறபடியால் உம
தோத்திரம். சங் 58:11

ஜெபம்: மெய்யாய் பூமியில் நியாயஞ் செய்கிற எங்கள் தேவனே, உம
செட்டைகளின் நிழலிலே வந்து அடைய எனக்கு உதவி செய்யும் என் கண்ணீ
துடைத்தருளும் தேவனே. நான் எப்போதும் உம்மையே நோக்கிக் காத்திரு
கிருபை புரியும் இயேசுவின் நாமத்தில் ஆமென்.

1. திக்கற்ற பிள்ளைகளும் விதவைகளும் படுகிற உபத்திரவத்திலே அவர்களை விசாரிக்கிறதும் உலகத்தால் கறைப்படாதபடிக்குத் தன்னைக் காத்துக் கொள்ளுகிறதுமே பிதாவாகிய தேவனுக்கு முன்பாக மாசில்லாத சுத்தமான பக்தி என்று வெளிப்படுத்தியதற்காக தோத்திரம். யாக் 1:27

2. பிணியாளிகளுக்கு வைத்தியன் வேண்டிய தேயல்லாமல் சுகமுள்ளவர்களுக்கு வேண்டியதில்லை என்று சொல்லி நீதிமான் களையல்ல பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்க வந்தேன் என்றீரே தோத்திரம். லூக் 5:32

3. கிறிஸ்துவின் வல்லமை என்மேல் தங்கும்படி என் பலவீனங்களைக்குறித்து நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மைபாராட்டச் செய்பவரே தோத்திரம். II கொரி 12:9

4. கிறிஸ்துவினிமித்தம் எனக்கு வரும் பலவீனங்களிலும், நிந்தைகளிலும், நெருக்கங்களிலும், துன்பங்களிலும், இருக்கண்களிலும் நான் பிரியப்படப் பண்ணுகிறவரே தோத்திரம். II கொரி 12:10

5. என் கிருபை உனக்குப் போதும் பவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும் என்று தைரியப்படுத்துபவரே தோத்திரம். II கொரி 12:9

6. நம்மிடத்தில் அன்பு கூர்ந்து தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்கறை நம்மைக் கழவி தம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாக நம்மை இராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கின அவருக்கு மகிமையும், வல்லமையும் என்றென்றைக்கும் உண்டாயிருப்பதற்காக தோத்திரம். வெளி 1:6

ஜெபம்: இரக்கமுள்ள பிதாவே மாசில்லாத சுத்தமான பக்தியை நான் செயலில் வெளிப்படுத்த உதவி செய்யும். பலவீனங்களிலே உம்முடைய பலம் என்னிலே பூரணமாய் விளங்குகிறபடியால் தோத்திரம். என் பாவங்களை தயவாய் மன்னித்து, தூய்மையாக்கியருளும் இயேசுவின் மூலம் பிதாவே ஆமென்.

1. நீங்கள் பலவிதமான சோதனைகளில் அகப்படும் போது உங்க
விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்று அறி
அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணும்படி சொன்ன தேவனே தோத்திர
யாக் 1:2
2. நீங்கள் ஒன்றிலும் குறைவுள்ளவர்களாயிராமல் பூரணராயு
நிறைவுள்ளவர்களாயும் இருக்கும்படி பொறுமையானது பூரண கிரி
செய்யக்கடவது என்றீரே தோத்திரம். யாக் 1:4
3. நம்பிக்கையின் தேவன் விசுவாசத்தினால் உண்டாகும் எல்லாவி
சந்தோஷத்தினாலும் சமாதானத்தினாலும எங்களை நிரப்புகிறதற்கா
தோத்திரம். ரோ 15:13
4. விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான் என்றீரே தோத்திரம். ரோமர் 1:1
5. கர்த்தராகிய இயேசுவை விசுவாசிக்கிறவன் எவனோ அவ
வெட்கப்படுவதில்லை. ஆகவே தோத்திரம். ரோ 10:11
6. விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம் என்
எச்சரிப்பவரே தோத்திரம். எபி 11:6
7. ஒருவன் வஸ்திரமில்லாமலும அநுதின ஆகாரமில்லாமலும் இருக்கும் போது
நீங்கள் சமாதானத்தோடே போங்கள் என்று சொல்லி, சரீரத்திற்கு
தேவையானவைகளை அவனுக்குக் கொடாவிட்டால் பிரயோஜன மென்ன
விசுவாசம் கிரியைகளில்லாதிருந்தால் தன்னிலே தானே செத்ததாயிருக்கு
என்பதை வெளிப்படுத்தினீரே தோத்திரம். யாக் 2:16
8. விசுவாசத்தைக் கிரியைகளினாலே காண்பிக்கும்படி போதிக்கிறவ
தோத்திரம். யாக் 2:18

ஜெபம்: கிருபையுள்ள கர்த்தாவே, சோதனைகளைப் பொறுமையோடு சகிக்க தே
பெலனைத்தாரும். அதன்மூலம் என் விசுவாசம் பெருகவும், கிரியைகளினா
அதை வெளிப்படுத்தவும், சமயம் வாய்க்கும் போதெல்லாம் கிரியைகளினா
காட்டவும் கிருபை புரியுமையா. நான் ஒருக்காலும் வெட்கப்பட்டுப் போகாத
காத்துக் கொள்ளும் தகப்பனே. இயேசுவின் மூலம் பிதாவே ஆமென்.

பிப்ரவரி - 6

1. கர்த்தாவே மகத்துவமான உமது கிரியைகளுக்காகவும், மகா ஆழமான உமது யோசனைகளுக்காகவும் உமக்கு தோத்திரம். சங் 92:5
2. தம்முடைய ஜனத்தை நெகிழ விடாமலும் தம்முடைய சுதந்திரத்தை கைவிடாமலுமிருகிற கர்த்தாவே உமக்கு தோத்திரம். சங் 94:14
3. என் கால் சறுக்கும் போது உமது கிருபையால் என்னைத் தாங்குகிற கர்த்தாவே உமக்குத் தோத்திரம். சங் 94:18
4. என் உள்ளத்தில் விசாரங்கள் பெருகும் போது உமது ஆறுதல்கள் என் ஆத்துமாவைத் தேற்றுகிறபடியால் தோத்திரம். சங் 94:19
5. எங்கள் தேவனாகிய கர்த்தாவே, நீர் மன்னிக்கிற தேவனாயிருக்கிறபடியால் உமக்குத் தோத்திரம். சங் 99:9
6. திக்கற்றவர்களுடைய ஜெபத்தை அலட்சியம் பண்ணாமல் அவர்கள் விண்ணப்பத்தை அங்கீகரிப்பதற்காய் உமக்கு தோத்திரம். சங் 102:16
7. எல்லாத் தேவர்களுக்கும் மிகவும் உயர்ந்த உன்னதமானவரே உமக்கு தோத்திரம். சங் 97:9
8. கர்த்தாவே நீர் எனக்குத் துணை செய்து என்னைத்தேற்றுகிறதற்காக உமக்குத் தோத்திரம். சங் 86:17

ஜெபம்: என்னில் விசாரங்கள் பெருகும் போது என்னைத் தேற்றுகின்ற தேற்றரவாளனே இந்த நாளிலும் என்னை உமது கிருபையால் தாங்கியருளும். நீர் என்னைக் கைவிடாத தேவன் என்று விசுவாசிக்கிறேன். கர்த்தாவே என் பாவங்களை யெல்லாம் தயவாய் மன்னித்து என் விண்ணப்பம் உமது சமூகத்தில் அங்கீகரிக்கப்பட கிருபை புரியும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்.

பிப்ரவரி - 7

1. கர்த்தாவே நாங்கள் எங்கள் வாழ் நாளெல்லாம் களிகூர்ந்து மகிழும் காலையிலே எங்களை உமது கிருபையால் திருப்தியாக்குகிறபடியால் உமக்கு ஸ்தோத்திரம். சங் 90:14
2. நாங்கள் சிறுமைப்பட்ட நாட்களுக்கும் நாங்கள் துன்பத்தைக் கண்ட வருஷங்களுக்கும் சரியாய் எங்களை மகிழ்ச்சியாக்குவதற்காய் உமக்கு ஸ்தோத்திரம். சங் 90:15
3. நன்மையினால் என் வாயைத் திருத்தியாக்குகிறீர். ஆகவே உமக்கு ஸ்தோத்திரம். சங் 103:5
4. கர்த்தாவே நீர் எனக்குத் துணை செய்து என்னைத் தேற்றுகிறதற்காக உமக்கு ஸ்தோத்திரம். சங் 86:17
5. தேவரீர் மகத்துவமுள்ளவரும் அதிசயங்களைச் செய்கிற வருமாயிருக்கிறீர். நீர் ஒருவரே தேவன். ஆகவே தோத்திரம். சங் 86:10
6. வானத்தையும் பூமியையும் படைத்த கர்த்தராலே நாங்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் ஆகவே தோத்திரம். சங் 115:15
7. கர்த்தர் அதிசயங்களைச் செய்திருக்கிறார். அவருக்குப் புதுப்பாட்டைப் பாடுவேன். அல்லேலூயா. சங் 98:1
8. நான் இது முதல் என்றென்றைக்கும் கர்த்தரை ஸ்தோத்திரிப்பேன். ஆமென் சங் 115:18

ஜெபம் : என்னைக் களிகூரப்பண்ணும் கர்த்தாவே நான் என் வாழ்வில் நீர் ஈ... நன்மையால் எப்போதும் நிரம்பியிருக்கப்பண்ணும் தகப்பனே. நா... துன்பத்தைக்கண்ட வருஷங்களுக்குச் சரியாய் என்னை மகிழ்ச்சியாக்கும். ... செய்யப்போகும் அதிசயங்களை எண்ணி எண்ணி என்றென்றும் உம்மை துதித்துக் கொண்டேயிருக்க கிருபை புரியும். இயேசுவின் நாமத்தில் பிதா... ஆமென்.

பிப்ரவரி - 8

1. தேவனாகிய கர்த்தர் சூரியனும் கேடகமுமானவர். கர்த்தர் கிருபையையும் மகிமையையும் அருளுவர். உத்தமமாய் நடக்கிறவர்களுக்கு நன்மையை வழங்காதிரார். ஆகவே தோத்திரம். சங் 84:11
2. அவர்தமது சிறகுகளாலே என்னை மூடுவார் அவருடைய சத்தியம் எனக்குப் பரிசையும் கேடகமுமாயிருக்கிறபடியால் தோத்திரம். சங் 91:4
3. நான் எப்பெழுதும் வந்தடையத்தக்கக் கன்மலையான தேவனே தோத்திரம். சங் 71:3
4. ஆராய்ந்து முடியாத பெரிய காரியங்களையும் எண்ணி முடியாத அதிசயங்களையும் செய்கிற தேவனே தோத்திரம். யோபு 5:9
5. நாளைக்குக் கர்த்தர் உங்கள் நடுவிலே அற்புதங்களைச் செய்வார் என்றீரே தோத்திரம். யோசு 3:5
6. நான அற்புதமும் ஆச்சரியமுமான பிரகாரமாக இந்த ஜனங்களுக்குள்ளே ஒரு அதிசயத்தைச் செய்வேன் என்றபடியால் தோத்திரம். ஏசா 29:14
7. என உள்ளத்தில் விசாரங்கள் பெருகுகையில் உம்முடைய ஆறுதல்கள் என் ஆத்துமாவைத் தேற்றுகிறபடியால் தோத்திரம். சங் 94:19
8. நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனும் இரக்கங்களின் பிதாவும் சகலவிதமான ஆறுதலின் தேவனுமாயிருக்கிறவருக்கு தோத்திரம் II கொரி 1:3

ஜெபம்: இரக்கமுள்ள தேவனே, என் உள்ளத்தில் விசாரங்கள் பெருகையில் உம்முடைய ஆறுதல்கள் என்னைத் தேற்றட்டும் ஆண்டவரே. என் வாழ்வின் பாடுகள் நீங்கி, அதிசயமான வழியிலே நீர் நடத்துகிறதை நான் காணும்படி கிருபை செய்யும். நீரே எனக்கு கன்மலையும் கேடகமுமாயிருந்து அணைத்துக் கொள்ளுமையா அதிசயங்களையும் ஆசீர்வாதங்களையும் என் வாழ்வில் அனுபவித்து உம்மை மகிமைப்படுத்த உதவி புரியும் இயேசுவின் மூலம் பிதாவே ஆமென.

பிப்ரவரி - 9

1. நீ பயப்படாதே நான் உன்னுடனே இருக்கிறேன். திகையாதே நான் உ
தேவன். நான் உன்னைப் பலப்படுத்த உனக்குச் சகாயம் பண்ணுவே
என் நீதியின் வலது கரத்தினால் உன்னைத் தாங்குவேன் என்றீரே உம
தோத்திரம். ஏசா 41:10
2. சேனைகளின் கர்த்தர் நம் மோடிருக்கிறார். யாக் கோபின் தேவன் நம
உயர்ந்த அடைக்கலமானவர் ஆகவே தோத்திரம். சங் 46:10
3. ஏற்ற காலத்திலே ஆசீர்வாதமான மழையைப் பெய்யப்பண்ணுகிற
தோத்திரம். எசே 34:26
4. என் அரணான தேவனே உமக்கு தோத்திரம். சங் 43:2
5. கர்த்தர் நல்லவர். இக்கட்டு நாளிலே அரணான கோட்டை தம்
நம்புகிறவர்களை அறிந்திருக்கிறீரே தோத்திரம். நாகூம் 1:7
6. என் இருதயம் கர்த்தரையே நம்பியிருந்தது. நான் சகாயம் பெற்றேன்.
இருதயம் களிகூருகிறது. என் பாட்டினால் அவரைத் துதிப்பேன். சங் 2
7. ஆண்டவராகிய கர்த்தர் என் பெலன் அவர் என் கால்களை மான் கால்க
போலாக்கி உயரமான ஸ்தலங்களில் என்னை நடக்கப் பண்ணுவ
ஆகவே தோத்திரம். ஆப 3:19
8. நீ பயப்படாதே நான் உனக்குக் கேடகமும் உனக்கு மகா பெ
பலனுமாயிருக்கிறேன் என்ற தேவனே தோத்திரம். ஆதி 15:1

ஜெபம்: இரக்கமுள்ள பிதாவே, நீரே எனக்குக் கோட்டையாய், அரண
பெலனாய், இருந்தபடியால் என் இருதயம் களிகூருகிறது. நான் உம்மை மாத்
நம்பியிருக்கறேன். உம்மை நம்பியிருக்கிற பிள்ளைகளை நீர் ஒருபோ
கைவிடாத தேவன் என்பதை நான் விசுவாசித்து இப்போதும் என்னை உ
கரத்தில் ஒப்புக் கொடுக்கிறேன். உமது நீதியின் வலது கரத்தினால் என்
நடத்துமையா. இயேசுவின் மூலம் பிதாவே ஆமென்.

நான் அவர்கள் அநியாயங்களைக் கிருபையாய் மன்னித்து அவர்கள். பாவங்களையும் அக்கிரமங்களையும் இனி நினையாமலிப்பேன் என்று சொல்லும் கர்த்தரே தோத்திரம். எபி 8:12

2. நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால் பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார். ஆகவே தோத்திரம். யோ 1:9

3. பாவங்களை அறிக்கை செய்து விட்டு விடுகிறவனோ இரக்கம் பெறுவான் ஆகவே தோத்திரம். நீதி 28:13

4. தேவரீர் என் ஆத்துமாவை நேசித்து அழிவின் குழிக்கு என்னை விலக்கி, என் பாவங்களை யெல்லாம் உமது முதுகுக்குப்பின்னாக எறிந்து விட்டதற்காக தோத்திரம். ஏசா 38:17

5. நான் என் அக்கிரமத்தை மறைக்காமல் என் பாவத்தை உமக்கு அறிவித்தேன். தேவரீர் என் பாவத்தின் தோஷத்தை மன்னித்துவிட்ட படியால் தோத்திரம். சங் 32:5

6. ஆண்டவரே நீர் நல்லவரும் மன்னிக்கிறவரும் உம்மை நோக்கி கூப்பிடுகிற யாவர் மேலும் கிருபை மிகுந்தவருமாயிருக்கிறீர். ஆகவே தோத்திரம். சங் 86:5

7. எல்லாவற்றிற்கும் மேலாக ஒருவரிலொருவர் ஊக்கமான அன்புள்ளவர்களாயிருங்கள். அன்பு திரளான பாவங்களை மூடும் என்பதற்காய் தோத்திரம். I பே 4:8

ஜெபம் : அன்புள்ள பரலோக பிதாவே, நீர் எங்களுக்குக்காட்டின அன்பை நாங்கள் மற்றவர்களுக்குக் காண்பித்து அதன் மூலமாக எங்களுடைய பாவங்கள் உமது சந்நிதியில் எண்ணப்படாதிருக்க அருள்புரியும். பாவங்களை மறைக்காமல் அவைகளை அறிக்கை செய்து விட்டுவிட மனத்தாழ்மையைத்தாருமையா. நீர் மன்னிக்க தயை பெருத்திருக்கிறீர் என்று விசுவாசித்து உமது பாதத்திலே எங்களையே வைக்கிறோம் தகப்பனே. ஆசீர்வதித்து அனுப்பும் ராஜா. இயேசுவின் மூலம் பிதாவே ஆமென்.

பிப்ரவரி - 11

1. உன் சந்ததியின் மேல் என் ஆவியையும் உன் சந்தானத்தின் மேல் என்
ஆசீர்வாதத்தையும் ஊற்றுவேன் என்று சொன்ன தேவனே உமக்கு
ஸ்தோத்திரம். ஏசா 44:3

2. தன்னைத் தான் புகழுகிறவன் உத்தமனல்ல கர்த்தரால் புகழப்படுகிறவனே
உத்தமன் என்றீரே தோத்திரம். II கொரி 10:18

3. கர்த்தருடைய ஆலோசனை நித்திய காலமாகவும் அவருடைய இருதயத்தின்
நினைவுகள் தலைமுறை தலை முறையாகவும் நிற்கும் ஆகவே தோத்திரம்.
சங் 33:11

4. என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல. உங்கள் வழிகள் என்
வழிகளுமல்ல என்ற கர்த்தரே தோத்திரம். ஏசா 55:8

5. என் நினைவுகளை தூரத்திலிருந்து அறிகிற தேவனே உமக்குத் தோத்திரம்.
சங் 139:2

6. நீ மிகவும் பிரியமானவன்(ள்) ஆதலால் நீ வேண்டிக்கொள்ளத் தொடங்கின
போதே கட்டளை வெளிப்பட்டது என்றீரே தோத்திரம். தானி 9:23

7. சாந்த குண முள்ளவர்கள் பூமியைச் சுதந்தரித்து, மிகுந்த சமாதானத்தினால்
மனமகிழ்ச்சி யாயருப்பார்கள் என்பதற்காய் தோத்திரம். சங் 37:11

8. நீதி மான்களுடைய வாசஸ்தலத்தை ஆசீர்வதிக்கிற தேவனே தோத்திரம்.
நீதி 3:33

ஜெபம்: இரக்க முள்ள பிதாவே, நீர் காட்டும் உன்னதமான வழிகளைத் தெரிந்து
கொள்ள ஞானத்தைத் தாரும். எனக்குச் சாந்த குணத்தைக் கொடுத்து
உமக்குப்பிரியமானதைச் செய்ய கற்றுத்தாருமையா. மிகுந்த சமாதானத்தையும்
மனமகிழ்ச்சியையும் தந்து என்னை ஆசீர்வதியும் தகப்பனே. இயேசுவின் மூலம்
பிதாவே, ஆமென்.

1. தேவனை நோக்கி விண்ணப்பம் பண்ணும் போது அவர் அவன் மேல் பிரசன்னமாகி அந்த மனுஷனுக்கு அவனுடைய நீதியின் பலனைக் கொடுப்பார். ஆகவே தோத்திரம். யோபு 33:26

2. கர்த்தர் உங்களை சகல ஜாதிகளுக்குள்ளும் தமக்கென்று தெரிந்து கொண்டார். ஆகவே தோத்திரம். உபா 10:15

3. இஸ்ர வேலை ஆசீர்வதிப்பதே உமக்குப் பிரியம் கர்த்தாவே, தோத்திரம். எண் 24:1

4. உன் வஸ்திரங்கள் எப்பொழுதும் வெள்ளையாயும் உன் தலைக்கு எண்ணெய் குறையாததாயும் இருப்பதாக என்றீரே தோத்திரம். பிர 9:8

5. துயரத்திற்குப்பதிலாக ஆனந்த தைலத்தையும், ஒடுங்கின ஆவிக்குப் பதிலாகத்துதியின் உடையையும் கொடுக்கிறவரே தோத்திரம். ஏசா 61:3

6. ஆண்டவர் நீர் நல்லவரும் மன்னிக்கிறவரும் உம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவர் மேலும் கிருபை மிகுந்தவருமாயிருக்கிறீர். ஆகவே தோத்திரம். சங் 86:5

7. ஏற்ற காலத்தில் உன் தேசத்திலே மழை பெய்யவும், நீ கையிட்டுச் செய்யும் வேலைகளை யெல்லாம் ஆசீர்வதிக்கவும் கர்த்தர் உனக்குத் தமது நல்ல பொக்கிஷ சாலையாகிய வானத்தைத் திறப்பார். நீ அநேகம் ஜாகிளுக்குக் கடன் கொடுப்பாய். நீயோ கடன் வாங்காதிருப்பாய் என்றீரே தோத்திரம். உபா 28:12

ஜெபம் : கிருபை நிறைந்த கர்த்தாவே, எங்களை ஆசீர்வதிப்பதே உமக்கு பிரியம் என்று விசுவாசிக்கிறேன். மன்னிப்பதில் மகத்துவமுள்ள தேவனே என்னைத்தயவாய் மன்னித்து, நான் கையிட்டுச் செய்யும் வேலைகளை ஆசீர்வதியும். மற்றவர்களுக்குக் கடன் கொடுக்கதக்கதாக என்னை தகுதிப்படுத்துமையா இயேசுவின் மூலம் பிதாவே ஆமென்.

பிப்ரவரி - 13

1. ஒருவன் தேவபக்தியுள்ளவனாயிருந்து தேவனுக்குச் சித்தமான
செய்தால் அவனுக்குச் செவி கொடுப்பார். யோவா 9:31
2. கர்த்தர் நித்தமும் உன்னை நடத்தி மகா வறட்சியான காலங்களில் உ
ஆத்துமாவைத் திருப்தியாக்கி, உன் எலும்புகளை நிண முள்ளதாக்குவார்,
நீர்ப்பாய்ச்சலான தோட்டத்தைப் போலவும் வற்றாத நீரூற்றைப் போல
இருப்பாய் என்றீரே தோத்திரம். ஏசா 58:11
3. உமக்கும் உம்முடைய குடும்பத்தாருக்கும் உமக்கு இருக்கிற யாவற்றி
வறுமை வராதபடிக்கு அங்கே உம்மைப் பராமரிப்பேன் என்ற வாக்கு
தேவனே உமக்கு தோத்திரம். ஆதி 45:11
4. கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பதே எங்களுடைய பெலன் ஆக
தோத்திரம். நெகே 8:10
5. என் புலம்பலை ஆனந்தக்களிப்பாக மாறப்பண்ணினீர். என் மகி
அமர்ந்திராமல் உம்மைக் கீர்த்தனம் பண்ணும்படியாக நீர் என் இரட்
களைந்து போட்டு மகிழ்ச்சியென்னும் கட்டினால் என்னை இடை கட்
ஆகவே தோத்திரம். சங் 30:11
6. என் இருதயம் பூரித்து என் மகிமை களிகூர்ந்தது என் மாம்சமும் நம்பி
யோடே தங்கியிருக்கப்பண்ணுகிறவரே தோத்திரம். சங் 16:9
7. கர்த்தாவே உம்முடைய நாமம் என்றென்றைக்குமுள்ளது. கர்த்தா
உம்முடைய பிரஸ்தாபம் தலை தலை முறைக்கும் இருக்கும். ஆக
தோத்திரம். சங் 135:13

ஜெபம்: இரக்கமுள்ள பிதாவே, நான் எல்லா காரியத்திலும் உமக்கு சித்தமா
நிறைவேற்ற கிருபை புரியும். உம்மிலே மகிழ்ச்சியாயிருந்து உம்மைக் கீர்த்த
பண்ண உதவி செய்யும் தகப்பனே. விசுவாசத்தோடு வாழ்ந்து உம்மிலே பூ
மகிழ்ந்திருக்கப்பண்ணுமையா. இயேசுவின் மூலம் பிதாவே, ஆமென்.

1. கர்த்தரின் ஆசிர்வாதமே ஐசுவரியத்தை தரும். அதனோடே அவர் வேதனையைக் கூட்டார். ஆகவே தோத்திரம். நீதி 10:22
2. எல்லாருக்கும் கர்த்தரானவர் தம்மைத் தொழுது கொள்ளுகிற யாவருக்கும் ஐசுவரிய சம்பன்னராயிருக்கிறபடியால் தோத்திரம். ரோமர் 10:12
3. என் புலம்பலை ஆனந்தக்களிப்பாக மாறப்பண்ணினீர். என் மகிமை அமர்ந்திராமல் உம்மைக் கீர்த்தனம் பண்ணும்படியாக நீர் என் இரட்டைக் களைந்து போட்டு. மகிழ்ச்சி யென்றும் கட்டினால் என்னை இடைகட்டினீர் ஆகவே தோத்திரம். சங் 30:11
4. உம்முடைய கோபம் ஒரு நிமிஷம் உம்முடைய தயவோ நீடிய வாழ்வு சாயங்காலத்தில் அழுகை தங்கினாலும் விடியற்காலத்திலே களிப்புண்டாகச் செய்யும் தேவனே தோத்திரம். சங் 30:5
5. மனத்தாழ்மையுள்ளவனை கனமடையச் செய்கிறவரே தோத்திரம். நீதி 29:23
6. கூப்பிடுகிற எளியவனையும் உதவியற்ற சிறுமையானவனையும் விடுவிக்கிற படியால் தோத்திரம். சங் 72:12
7. எளியவனை சிறுமையினின்று எடுத்து உயர்ந்த அடைக்க லத்திலே வைத்து அவன் வம்சங்களை மந்தையைப் போலாக்குகிறவரே தோத்திரம். சங் 107:41
8. உன் ஆத்துமா வாழ்கிறதுபோல நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிரு என்றீரே தோத்திரம். III யோவா 1:2

ஜெபம்: கிருபை நிறைந்த கர்த்தாவே. என் புலம்பலை ஆனந்தக் களிப்பாக மாறப்பண்ணும் எளியவனாகிய என்னை சிறுமையினின்று தூக்கி எடுத்து உயர்ந்த அடைக்கலத்திலே வைத்துக் கொள்ளும் தகப்பனே. நான் எல்லாவற்றிலும வாழ்ந்து சுகமாயிருக்கும்படி கிருபை புரியுமையா. இயேசுவின் மூலம் பிதாவே ஆமென்.

1. கர்த்தர் என் பெலனும் என் கீதமுமானவர் அவர் என் இரட்சிப்
மானவராயிருக்கிறபடியால் தோத்திரம். யாத் 15:2
2. என் சமூகம் உனக்கு முன்பாகச் செல்லும். நான் உனக்கு இளைப்பாறு
தருவேன் என்றீரே தோத்திரம். யாத் 33:14
3. இக்கட்டு நாளிலே நான் இளைப்பாறுதல் அடையப்பண்ணுகிறவ
தோத்திரம். ஆப 3:16
4. வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும் என்னிடத்
வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன் என்றீ
தோத்திரம். மத் 11:28
5. அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த என்னைக் கிறிஸ்துவுடனே
உயிர்ப்பித்து கிருபையினாலே இரட்சித்தீரே உமக்கு தோத்திரம். எபே 2:
6. என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின் படி உங்கள் குறைவை யெல்லா
கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார் என்பதற்கா
தோத்திரம். பிலி 4:19
7. நீடித்த நாட்களால் அவனைத் திருப்தியாக்கி என் இரட்சிப்பை அவனுக்கு
காண்பிப்பேன் என்றீரே தோத்திரம். சங் 91:16
8. கர்த்தரைத் துதியுங்கள் நம்முடைய தேவனைக் கீர்த்தனம் பண்ணுகிற
நல்லது. துதித்தலே இன்பமும் ஏற்றதுமாயிருக்கிறது. ஆகவே தோத்திர
சங் 147:1

ஜெபம்: துதிகளின் மத்தியில் வாசம் பண்ணுகிற தேவனே, நீர் துதிக்குப்பாத்தி
என்று விசுவாசிக்கிறேன். ஸ்தோத்திரபலியிடுகிறவன் தேவனை மகிமை
படுத்துகிறான் என்ற வசனத்தின்படி நான் என்றும் உம்மைத்துதித்து
கொண்டேயிருக்க உதவி செய்யும். இக்கட்டு நாளிலே நீரே என் ஆறுத
தகப்பனே. நீர் எனக்கு முன் சென்று இளைப்பாறுதலைத்தந்
குறைவையெல்லாம் நீக்கி ஆசீர்வதியுமையா. இயேசுவின் மூலம் பிதா
ஆமென்.

1. எல்லா வற்றைப் பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாயிருக்கிறது கர்த்தராகிய நீர் ஒவ்வொருவனுக்கும் அவனவன் வழிகளுக்கும் செய்கைகளின் பலன்களுக்குத் தக்கதைக் கொடுக்கும் படிக்கு இருதயத்தை ஆராய்கிறவரும் உள்ளிந்திரியங்களைச் சோதிக்கிறவருமாயிருக்கிறபடியால் உமக்கு தோத்திரம். எரே 17:9
2. உன் துன்மார்க்கத்திலே நீ திட நம்பிக்கையாயிருந்து என்னைப் பார்க்கிறவர் ஒருவருமில்லை என்கிறாய். ஆகையால் தீங்கு உன் மேல் வரும் அது எங்கேயிருந்து உதித்ததென்று நீ அறியாய் என்று எச்சரிக்கும் வார்த்தைகளுக்காகத் தோத்திரம். ஏசா 47:10
3. நீங்கள் கூடிவந்து என்னைத் தொழுதுகொண்டு என்னை நோக்கி விண்ணப்பம் பண்ணும் போது நான் உங்களுக்கு செவி கொடுப்பேன் எனறீரே உமக்கு தோத்திரம். எரே 29:12
4. நான் உனக்கு ஆரோக்கியம் வரப்பண்ணி உன் காயங்களை ஆற்றுவேன் என்ற தேவனே தோத்திரம். எரே 30:17
5. உங்களை வர்த்திக்கப்பண்ணுவேன். நீங்கள் குறுகிப்போவதில்லை. உங்களை மகிமைப்படுத்துவேன். நீங்கள் சிறுமைப் படுவதில்லை என்று ஆசீர்வதிக்கிற தேவனே தோத்திரம். எரே 30:19
6. எங்கள் அக்கிரமத்தை மன்னித்து எங்கள் பாவங்களை இனி நினையாதிருக்கிறவரே தோத்திரம். எரே 31:34
7. எனக்குப் பலத்த அரணாயிருக்கும் தேவனே தோத்திரம். II சாமு 22:33

ஜெபம்: கிருபை நிறைந்த கர்த்தாவே, என் இருதயத்தின் சிந்தைகளை எப்போதும் பரிசுத்தமாய்க் காத்துக் கொள்ள உதவிசெய்யும் உமது கண்கள் என் மேல் நோக்கமாயிருக்கிறது என்பதை உணர்ந்து என் நடைகளை உமக்குப் பிரியமாய்க் காத்துக் கொள்ளும்படி செய்யும். என்னை சிறுமைப்படுத்தாத என் தேவன் தாமே என்னை மன்னித்து எல்லாவற்றிலும் எனக்கு ஆரணாய் கோட்டையாய் இருந்து காத்துக் கொள்ளுமையா இயேசுவின் மூலம் பிதாவே ஆமென்.

பிப்ரவரி - 17

1. எல்லாக் காவலோடும் என் இருதயத்தைக் காத்துக் கொள்ளும்படி செ
தேவனே தோத்திரம். நீதி 4:23
2. உன் கண்கள் நேராய் நோக்கக் கடவது. உன் கண்ணிமைகள் உ
முன்னே செவ்வையாய்ப்பார்க்கக்கடவது என்று அறிவுறுத்தும் கர்த்
தோத்திரம். நீதி 4:25
3. ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளே
விபசாரஞ் செய்தாயிற்று என்று சொல்லி மனுஷனை மாத்திர
மனுஷியையும் எச்சரிக்கும் தேவனே தோத்திரம். மத் 5:28
4. உன் இருதயம் பரஸ்திரியின் வழியிலே சாய வேண்டாம். அவள்
பாதாளத்துக்குப் போகும் வழி. அது மரண அறைகளுக்குக் கொ
போய்விடும் என்று போதிக்கிறதற்காக தோத்திரம். நீதி 7:27
5. இளவயதின் மனைவியோடே மகிழ்ந்திருக்கப்பண்ணுகிறதற்காக தோத்
நீதி 5:18
6. குணசாலியான ஸ்திரீயினுடைய விலை முத்துக்களைப் பார்க்
உயர்ந்தது என்றீரே தோத்திரம். நீதி 31:10
7. நீ உன் வாலிபப் பிராயத்திலே உன் சிருஷ்டிகளை நினை எ
நினைப்பூட்டுகிறதற்காக தோத்திரம். பிர 12:1
8. தேவனிடத்தில் விசுவாசமானவர்கள் நற்கிரியைகளைச் செ
ஜாக்கிரதையாயிருப்பார்கள் என்றீரே தோத்திரம். தீத்து 3:8

ஜெபம் : இரக்கமுள்ள தகப்பனே, இளவயதின் பாவங்களுக்கு என்னை வில
காத்துக் கொள்ளும். என் கண்களின் பார்வைகள் பரிசுத்தமாய் உ
பிரியமாய் அமைவதாக ஆண்டவரே வாலிப வயதிலிருந்தே நான்
சிருஷ்டிகரை என் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு ஆண்டவருக்குப் பிரிய
பாத்திரமாக மாற எனக்குக் கிருபை புரியும். இயேசுவின் மூலம் பிதாவே, ஆமெ

பரிசுத்த உபவாசநாளை நியமியுங்கள். விசேஷித்த ஆசரிப்பைக் கூறுங்கள் என்று கூறி உபவாசத்தின் முக்கியத்துவத்தை வெளிக்காட்டிய தேவனே உமக்கு தோத்திரம். யோவேல் 1:14

நீங்கள் உபவாசிக்கும் போது மாயக்காரரைப் போல முக வாடலாய் இராதேயுங்கள். அவர்கள் உபவாசிக்கிறதை மனுஷர் காணும் பொருட்டாக தங்கள் முகங்களை வாடப் பண்ணுகிறார்கள். அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்ததேன்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். மத் 6:16

கொர் நேலியு உபவாசித்து தன் வீட்டிலே ஜெபம் பண்ணிக் கொண்டிருந்த போது பிரகாசமுள்ள வஸ்திரந்தரித்த மனுஷன் ஒருவன் முன்பாக வந்து நின்று கொர்நேலியுவே உன் ஜெபம் கேட்கப்பட்டது. உன் தான தர்மங்கள் தேவ சந்நிதியில் நினைத்தருளப்பட்டது என்று சொன்னதன் மூலம் உபவாசத்தின் மேன்மையை உணரச் செய்தீரே உமக்கு தோத்திரம். அப் 10:30

நாங்கள் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறபடியால் பாவம் எங்களை மேற் கொள்ள மாட்டாது. ஆகவே தோத்திரம். ரோ 6:14

நாம் எல்லாரும் கிருபையின் மேல் கிருபை பெற்றோம் என்று உணரச் செய்தவரே தோத்திரம். யோவா 1:16

கிருபையும் சத்தியமும் உன்னை விட்டு விலகாதிருப்பதாக என்ற ஆசீர்வாதத்திற்காக தோத்திரம். நீதி 3:3

கர்த்தர் உண்மையுள்ளவர் அவர் எங்களை ஸ்திரப்படுத்தி தீமையினின்று விலக்கிக்காத்துக் கொள்ளுவார். ஆகவே தோத்திரம். II தெச 3:3

ஜெபம் : கிருபை நிறைந்த கர்த்தாவே, நான் வெளிவேஷமாக உபவாசிக்காமல் என் பிதாவுக்கு மட்டும் காணப்படும் படியாக நிறைவேற்ற அருள் தாரும் உம்முடைய தானதர்மங்களும் உபவாசத்தோடு ஏறெடுக்கப்படுகிற ஜெபமும் உமது சமுகத்தில் எட்டும்படி கிருபை புரியும். உமது தயவுள்ள கிருபைக்கு என்னை பாத்திரப்படுத்துமையா. இயேசுவின் மூலம் பிதாவே ஆமென்.

பிப்ரவரி - 19

1. மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல என்று சொல்லி ஏற்ற துணை அவனுக்கு உண்டாக்கினீரே உமக்கு தோத்திரம். ஆதி 2:18
2. தேவன் தனிமையானவர்களுக்கு வீடுவாசல் ஏற்படுத்தி கட்டுண்டவர்கள் விடுதலையாக்கினபடியால் தோத்திரம். சங் 68:6
3. இயேசு ஜனங்களை அனுப்பிவிட்ட பின்பு தனித்து ஜெபம் பண்ண மலையின் மேற் ஏறி சாயங்காலமானபோது அங்கே தனிமையாயிருந் போல நாங்களும் தனித்திருந்து ஜெபிக்கக் கற்றுக் கொடுத்தமைக் தோத்திரம். மத் 14:23
4. கர்த்தருக்குள் பூரிப்பாய் மகிழ்கிறேன் என் தேவனுக்குள் என் ஆத் களிகூர்ந்திருக்கிறது ஆகவே தோத்திரம் . ஏசா 61:10
5. கர்த்தாவே நீர் எங்களுடைய பிதா, நாங்கள் களிமண் நீர், எங்க உருவாக்குகிறவர் நாங்கள் அனைவரும் உமது கரத்தின் கிரியை ஆகி தோத்திரம். ஏசா 64:8
6. காரியத்தை வாய்க்கப் பண்ணுகிறவரே உமக்கு தோத்திரம். II நாளா 14
7. அவர் சகலத்தையும் அதினதின் காலத்திலே நேர்த்தி யாகச் செய்திருக்கிற ஆகவே தோத்திரம். பிர 3:11
8. உன்னை நடத்துகிற உன் தேவனாகிய கர்த்தர் நானே என்றவரே உம தோத்திரம். ஏசா 48:17

ஜெபம்: கிருபை நிறைந்த கர்த்தாவே மனுஷனுக்கு ஏற்ற துணையைக் கொடு குடும்பமாக உருவாக்கியவரே உமது கரத்தின் மகத்தான கிரியைகளுக் தோத்திரம். சமயம் வாய்க்கும் போதெல்லாம் தனித்து ஜெபிக்க என் ஏவியருளும் தகப்பனே. எல்லாவற்றையும் நேர்த்தியாய்ச் செய்து என்னை நட நான் கையிட்டுச் செய்கிற காரியங்களைக் கிருபையாய் வாய்க்கப் பண்ணும் இயேசுவின் நாமத்தில் பிதாவே. ஆமென்.

1. கர்த்தருக்குக் காத்திரு அவர் உன் இருதயத்தை ஸ்திகப்படுத்துவார். திடமனதாயிருந்து கர்த்தருக்கே காத்திரு எனறவரே உமக்கு தாத்திரம் சங் 27:14

2. தேவன் நமக்கு அடைக்கலமாயிருக்கிறார் ஆகவே தோத்திரம். சங் 62:8

3. சுத்த இருதயமுள்ளவர்களாகிய இஸ்ரவேலருக்குத் தேவன் நல்லவராகவே இருக்கிறபடியால் தோத்திரம். சங் 73:1

4. என் இருதயத்தில் அக்கிரம சிந்தை கொண்டிருந்தேனானால் ஆண்டவர் எனக்கு செவிகொடார் என்று எச்சரிப்பதற்காக தோத்திரம். சங் 66:16

5. இருதயம் நொறுங்குண்டவர்களைக் குணமாக்கி அவர்களுடைய காயங்களைக் கட்டுகிறபடியால் தோத்திரம். சங் 147:3

6. ஐசுவரியம் விருத்தியானால் இருதயத்தை அதின் மேல் வைக்காதேயுங்கள் என்று போதிக்கிறதற்காக தோத்திரம். சங் 62:10

7. நீதியுள்ளவைராயிருக்கிற தேவரீர் இருதயங்களையும் உள்ளிந்திரியங்களையும் சோதித்து அறிகிறவராயிருக்கிறபடியால் தோத்திரம். சங் 7:9

8. என் இருதயம் நல்ல விசேஷத்தினால் பொங்கி வழியச் செய்கிறவரே தோத்திரம். சங் 45:1

9. உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக என்றீரே தோத்திரம். யோவா 14:1

ஜெபம் : கிருபை நிறைந்தவரே இருதயத்தின் அந்தாங்கிகளை ஆராய்ந்து அறிகிறவரே எனக்கு எப்போதும் நல்ல எண்ணங்களையும் சிந்தைகளையும் தாரும். இந்த உலகத்திலுள்ள ஐசுவரியம் எங்களுக்கு ஒன்றும் செய்ய முடியாது என்பதை உணரப்பண்ணும் தேவன் ஒருவரே எனக்கு அடைக்கலம் என்பதை உணர்ந்து சுத்த இருதயத்தோடு என்னைக் காத்துக் கொள்ள கிருபை புரியும் இயேசுவின் மூலம் பிதாவே ஆமென்.

1. திராட்சரசம் பரியாசஞ்செய்யும். மதுபானம் அமளிபண்ணும். அதினா மயங்குகிற ஒருவனும் ஞானவானல்ல என்பதை வெளிப்படுத்திய தேவ தோத்திரம். நீதி 20:1
2. குடியனும் போஜனப்பிரியனும் தரித்திரராவார்கள் என்ற எச்சாப்புக் தோத்திரம். நீதி 23:21
3. தானியேல் இராஜாவின் போஜனத்தினாலும் அவர் பானம் பண்ணு திராட்சரசத்தினாலும் தன்னைத் தீட்டுப்படுத்தலாகாதென்று தன் இருதயத் தீர்மானம் பண்ணிக் கொண்டு தன்னைத் தீட்டுப்படுத்தாதபடி இருந்த எங்களுக்கு முன்மாதிரியாக வைத்தீரே தோத்திரம். தானி 1:8
4. பத்து நாள் சென்றபின்பு பருப்பு முதலான மரக்கறிகளையும் புசித்த அவர் முகம் களையுள்ளதாயும் சரீரம் புஷ்டியுள்ளதாகவும் காணப்படச் செய்தீ உமக்கு தோத்திரம். தானி 1:15
5. வேசித்தனமும் திராட்சரமும் மதுபானமும் இருதயத்தை மயக்கும் என்பத மூலம் எங்களை நன்மையான வழிகளைத் தெரிந்து கொள்ளச் செய்பவ தோத்திரம். ஓசி 4:11
6. கர்த்தரின் ஆசீர்வாதமே ஐசுவரியத்தைத் தரும். அதனோடே அ வேதனையைக் கூட்டார். ஆகவே தோத்திரம். நீதி 10:22
7. உன் இருதயம் அதிசயப்பட்டுப் பூரிக்கும் என்றீரே உமக்கு தோத்திர ஏசா 60:5
8. உன் துக்க நட்கள் முடிந்து போம் என்ற உம் ஆறுதலின் வாக்குக்க தோத்திரம். ஏசா 60:20

ஜெபம்: இரக்கமுள்ள பிதாவே, அழிவுக்கு நேராய் நான் போகாதபடி நா நன்மையான வழிகளை எப்போதும் தெரிந்து கொள்ள உதவி செய்யு வழிதப்பிப் போய்விடாதபடி உமது கரம் என்னைக் காத்துக் கொள்ள கிரு புரியும். நீர் தரும் ஆசீர்வாதத்தைப் பெற்று பூரித்து மகிழ்ந்திருக்கப்பண்ணுமை இயேசுவின் மூலம் பிதாவே ஆமென்.

1. கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கும் சிலாக்கியத்தைத் தந்தவரே தோத்திரம். கலா 3:26

2. அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் ஆகிய ஆவியின் கனிகளோடு வாழப் போதித்த தேவனே தோத்திரம். கலா 5:22

3. துன்பப்படுகிறவர்கள் என்னப்பட்டாலும் எப்பொழுதும் சந்தோஷப்படுகிறவர்களாகவும் தரித்திரர் என்னப்பட்டாலும் அநேகரை ஐசுவரியவான்களாக்குகிறவர்களாகவும், ஒன்றுமில்லாதவர்களென்னப்பட்டாலும் சகலத்தையும் உடையவர்களாயும் எங்களை விளங்கப் பண்ணுகிறவரே தோத்திரம். II கொரி 6:10

4. வீண் புகழ்ச்சியை விரும்பாமலும் ஒருவரை யொருவர் கோபமூட்டாமலு ஒருவர் மேல் ஒருவர் பொறாமை கொள்ளாமலும் இருக்கப்போதிக்கிறவரே தோத்திரம். கலா 5:26

5. நீங்களெல்லாரும் ஒருமனப்பட்ட வர்களும் இரக்க முள்ளவர்களும் சகோதர சிநேக முள்ளவர்களும் இணக்க முள்ளவர்களுமாயிருந்து, தீமைக்குத் தீமையைச் சரிக்கட்டாமல் அதற்குப் பதிலாக நீங்கள் ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக் கொள்ளும்படி அழைக்கப்பட்டிருக்கிறவர்களென்று அறிந்து ஆசீர்வதியுங்கள் என்று வழிநடத்தும் தேவனே தோத்திரம். I பே 3:8

6. என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பெலனுண்டு ஆகவே தோத்திரம். பிலி 4:13

7. என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி எங்கள் குறைவை யெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவீர் ஆகவே தோத்திரம். பிலி 4:19

ஜெபம் : கிருபையுள்ள கர்த்தாவே, என்னை எப்போதும் ஆவியின் கனிகளினாலே நிரப்பியருளும். வீண்புகழ்ச்சி கோபம் பொறாமை போன்ற துர்க்குணங்களைக் கொண்டிராமல் ஒருமனப்பட்டவனாய் இரக்கமும் சகோதர சிநேகமும் கொண்டு தீமைக்குத் தீமையைச்சரிகட்டாமல் நீர் தரும் ஆசீர்வாதத்தை சுதந்தரித்துக் கொள்ள என்னைப் பக்குவப்படுத்துமையா இயேசுவின் மூலம் பிதாவே ஆமென்.

பிப்ரவரி - 23

1. கர்த்தராகிய இயேசு தாம் காட்டிக் கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியி
அப்பத்தை எடுத்து ஸ்தோத்திரம் பண்ணி அதைப்பிட்டு சீஷர்களிடத்
கொடுத்து இது உங்களுக்காக பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கி
என்னை நினைவு கூரும்படி இதைச் செய்யுங்கள் என்று உமது அன்
ஆழத்தை உணரச் செய்தமைக்காக தோத்திரம். I கொரி 11:24
2. போஜனம் பண்ணின பின்பு அவர் பாத்திரத்தையும் எடுத்து இந்தப்பாத்
என் இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது. நீங்கள் இ
பானம் பண்ணும் போதெல்லாம் என்னை நினைவு கூரும்படி இ
செய்யுங்கள் என்று கர்த்தருடைய மரணத்தை நினைவு கூரப்பண்ணிய
தோத்திரம். I கொரி 11:28
3. நீங்கள் கூடிவரும் போது அவனவன் முந்திச் சாப்பிடுகிறான் ஒருவ
பசியாயிருக்கிறான் ஒருவன் வெறியாயிருக்கிறான் இப்படிச் செய்கி
கர்த்தருடைய இராப் போஜனம் பண்ணுதலல்லவே என்று போதித்தவ
தோத்திரம். I கொரி 11:33
4. நீங்கள் போஜனம் பண்ணக் கூடி வரும் போது ஒருவருக்காக ஒரு
காத்திருக்கும்படி சொன்னீரே தோத்திரம். I கொரி 11:33
5. எந்த மனுஷனும் தன்னைத் தானே சோதித்தறிந்து அப்பத்தைப் புசி
பாத்திரத்தில் பானம் பண்ணக்கடவன் என்று எங்களுக்கு வழி காட்டுபவ
தோத்திரம் I கொரி 11:28
6. அபாத்திரமாய் போஜனம் பண்ணுகிறவன் தனக்கு ஆக்கினைத் தீர்
வரும்படி போஜனம் பண்ணுகிறான் இதினிமித்தம் உங்களில் அநே
பலவீனரும் வியாதியுள்ளவர்களுமயிருக்கிறார்கள் அநேகர் நித்திரை
அடைந்திருக்கிறார்கள் என்று எச்சரிக்கிறதற்காக தோத்திரம். I கொரி 11:3
7. உங்கள் கிரியைகளுக்குப் பலன் உண்டு என்றீரே தோத்திரம். II நாளா 15:

ஜெபம் : என் பரலோகத்தகப்பனே, இராப்போஜனத்தை ஏற்படுத்தி அ
பரிசுத்தமாக்கினீரே உமக்கு தோத்திரம். எப்போதும் பரிசுத்தமான உள்ளத்
அதில் பங்குபெற்று உம்முடைய பாடு மரணங்களை நினைவுகூர்ந்து உ
அன்பின் ஆழத்தை ருசித்துப் பார்க்க கிருபை செய்யும். அபாத்திரத்தன்மைக
களைந்து எங்களை தற்பரிசோதனை செய்து பரிசுத்தத்தைக் காத்துக் கொ
அருள் புரியுமையா இயேசுவின் மூலம் பிதாவே ஆமென்.

பிப்ரவரி - 24

1. எல்லா மனுஷரோடும் சமாதானமாயிருங்கள் என்று சொன்ன தேவ வார்த்தைக்காக தோத்திரம். ரோ 12:18
2. ஒருவன் யாதொரு குற்றத்தில் அகப்பட்டால் ஆவிக்குரியவர்களாகிய நீங்கள் சாந்தமுள்ள ஆவியோடே அப்படிப்பட்டவனைச் சீர் பொருந்தப் பண்ணுங்கள் என்று போதித்தவரே தோத்திரம். கலா 6:1
3. அன்புக்கும் நற்கிரியைகளுக்கும் நாம் ஏவப்படும்படி ஒரு வரையொருவர் கவனித்து சபைகூடி வருதலைச் சிலர் விட்டுவிடுவதைப்போல நாமும் விட்டுவிடாமல் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லக்கடவோம் என்றீரே தோத்திரம். எபி 10:24
4. எங்கள் சத்துருக்களை சிநேகிக்கவும் எங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதிக்கவும் சொல்லும் தேவனே தோத்திரம். மத் 5:44
5. எங்களைத் துன்பப்படுத்துகிறவர்களை சபியாமல் ஆசீர்வதிக்கும்படி கறபித்தவரே தோத்திரம். ரோ 12:14
6. தீமைக்குத் தீமையை சரிக்கட்டாமல் அதற்குப்பதிலாக, ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக் கொள்ளும்படி அழைக்கப்பட்டிருக்கிறவர்களென்று அறிந்து ஆசீர்வதிக்கச் சொன்னீரே உமக்கு தோத்திரம். I பே 3:9
7. சிறுமைப்பட்டவர்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்க கர்த்தர் என்னை அனுப்பினார் இருதயம் நொறுங்குண்டவர்களுக்குக் காயங்கட்டுதலையும் சிறைப்பட்டவர்களுக்குக் கட்டவிழ்த்தலையும் கூறவும் துயரப்பட்ட அனைவருக்கும் ஆறுதல் செய்யவும் என்னை அனுப்பினீர் என்பதை உரைப்பண்ணியவரே தோத்திரம். ஏசா 61:1

ஜெபம்: இரக்கமுள்ள பிதாவே நீர் என்னை மன்னிக்கிறது போல எனக்கு விரோதமாய்க் குற்றம் செய்கிறவர்களை மன்னிக்க எனக்கு உதவி செய்யும் மன்னிப்பதோடுகூட அவர்களை ஆசீர்வதிக்கவும் அவர்களுக்கு சுவிசேஷத்தை அறிவித்து ஆறுதலாயிருக்கவும் ஏவியருளும் தகப்பனே. எல்லாரோடும் சமாதானமாயிருந்து நீர் காட்டின அன்பை வெளிப்படுத்த கிருபை புரியும். இயேசுவின் மூலம் பிதாவே ஆமென்.

1. எளியவனாகிய உன் சகோதரனுக்கு உன் இருதயத்தைக் கடினமாக்காமலு
உன் கையை மூடாமலும் அவனுக்கு உன் கையைத் தாராளமாய்த் திற
அவனுடைய அவசரத்தினிமித்தம் அவனுக்குத் தேவையானதை
கொடுத்துதவும்படி சொல்லும் கர்த்தாவே தோத்திரம். உபா 15:7
2. உங்கள் தேவனாகிய கர்த்தரிடத்தில் நீங்கள் முழு இருதயத்தோடும் உங்க
முழு ஆத்துமாவோடும் அன்புகூருகிறீர்களோ இல்லையோ என்
அறியும்படிக்கு உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களை சோதிக்கிறார் என்
எச்சரிப்பவரே தோத்திரம். உபா 13:3
3. உன் சகோதரனுக்குத் தாராளமாய்க் கொடுப்பாயாக அவனுக்குக் கொடுக்
போது உன் இருதயம் விசனப்படாதிருப்பதாக அதினிமித்தமாக உ
தேவனாகிய கர்த்தர் உன்னுடைய எல்லாக் கிரியைகளிலும் நீ கையிட்
செய்யும் எல்லாக் காரியங்களிலும் உன்னை ஆசீர்வதிப்பார் என்ற தேவ
தோத்திரம். உபா 15:10
4. உங்கள் முழு இருதயத் தாடும் என்னைத் தேடினீர்களானால் என்னை
தேடுகையில் கண்டுபிடிப்பீர்கள் என்றீரே தோத்திரம். எரே 29:13
5. நீங்கள் ஜெபம் பண்ணும் போது எவைகளைக் கேட்டுக் கொள்வீர்களே
அவைகளைப் பெற்றுக் கொள்வோம் என்று விசுவாசியுங்கள் அப்பொ
அவைகள் உங்களுக்கு உண்டாகும் என்று வாக்குப்பண்ணியவ
தோத்திரம். மாற் 11:24
6. விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும் ஆகவே தோத்திரம். மாற் 9:23

ஜெபம் : கிருபை நிறைந்த கர்த்தாவே, தேவையிலிருப்பவர்களுக்கு ஏ
உதவிகளைத் தாராளமாய்ச் செய்ய என் கரங்களைத் திறந்தருளுமையா.
உள்ளிந்திரியங்களை ஆராய்ந்து அறிகிற தேவன் நான் முறுமுறுப்பில்லா
காட்டும் அன்பையும் செய்யும் உதவிகளையும் கண்ணோக்கிப் பார்
நிச்சயமாகவே என்னை ஆசீர்வதிப்பீர் என்று விசுவாசிக்கிறேன். ந
உள்ளத்தைத்தாரும் தகப்பனே இயேசுவின்மூலம் பிதாவே ஆமென்.

பிப்ரவரி - 26

தேவ வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது. தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையும் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர் திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜன முள்ளவைகளாயிருக்கிறது ஆகவே தோத்திரம். II தீமோ 3:16

2. கர்த்தருடைய வசனம் புடமிடப்பட்டது. தம்மை நம்புகிற அனைவருக்கும் அவர் கேடகமாயிருக்கிறபடியால் தோத்திரம். சாமு 22:31

3. தேவன் அருளிய வேதம் இருதயத்தில் இருந்தால் நடைகளில் ஒன்றும் பிசகுவதில்லை ஆகவே தோத்திரம். சங் 37:31

4. உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும் என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறபடியால் தோத்திரம். சங் 119:105

5. உம்முடைய வார்த்தைகள் எனக்கு சந்தோஷமும் என் இருதயத்துக்கு மகிழ்ச்சியுமாயிருக்கிறபடியால் தோத்திரம். எரே 15:16

6. தேவன் என் கால்களை மான்களுடைய கால்களைப் போலாக்கி என்னை உயர்தலங்களில் நிறுத்துகிறபடியால் தோத்திரம். II சாமு 22:34

7. உம்மாலே செய்யக்கூடாத அதிசயமான காரியம் ஒன்றுமில்லை. ஆகவே தோத்திரம். எரே 32:17

ஜெபம்: இரக்கங்களின் பிதாவே, நான் நம்புகிற வேதவசனங்கள் என் கால்கள் வழுவாதபடி காத்துக் கொள்ள கிருபைபுரியும். அவை என்றென்றும் எனக்கு கேடகமாயிருக்கப்பண்ணுமையா எனக்கு சந்தோஷமும் மகிழ்ச்சியும் கொடுக்கிற விலையேறப்பெற்ற வேதபுத்தகம் எந்நேரமும் என்னை வழிநடத்தும் தீபமாய் ஒளியாய், வெளிச்சமாய் இருந்து செயல்பட கிருபை புரியும் இயேசுவின் மூலம் பிதாவே ஆமென்.

1. வேத வசனத்தை ஆண்டவரே தந்தீர். ஆகவே தோத்திரம். சங் 68:11
2. தேவனுடைய வசன மெல்லாம் புடமிடப்பட்டவைகள். தம்மை அண் கொள்ளுகிறவர்களுக்கு அவர் கேடகமானவர் ஆகவே தோத்திரம். நீதி 30
3. கிறிஸ்துவசனம் எங்களுக்குள்ளே சகலஞானத்தோடும் பரிபூரணம வாசமாயிருப்பதற்காக தோத்திரம். கொலோ 3:16
4. தேவ வசனம் எப்பொழுதும் கிருபை பொருந்தினதாயும் உப்பால் மேறினதாயுமிருப்பதற்காக தோத்திரம். கொலோ 4:6
5. உம்முடைய வசனம் சமூலமும் சத்தியம் உம்முடைய நீதி நியாய மெல் நித்தியம் ஆகவே தோத்திரம். சங் 119:160
6. நீர் உமது வசனத்தை அனுப்பி எங்களைக் குணமாக்கி எங்களை அழிவு தப்புவிக்கிற படியால் தோத்திரம். சங் 107:20
7. தேவரீர் எங்களுக்கு சவுக்கியமும் ஆரோக்கியமும் வரப்பண்ணி எங்க குணமாக்கி எங்களுக்குப் பரிபூரண சமாதானத்தையும் சத்தியத்தை வெளிப்படுத்துகிற படியால் தோத்திரம். எரே 33:6
8. இனி களிப்பின் சத்தமும், மகிழ்ச்சியின் சத்தமும், மணவாளனின் சத்த மணவாட்டியின் சத்தமும், சேனைகளின் கர்த்தரைத் துதியுங்கள் கர் நல்லவர் அவர் கிருபை என்று முள்ளதென்று சொல்லுகிறவர்களின் சத்த கேட்கப்படும். ஆகவே தோத்திரம். எரே 33:11

<u>ஜெபம்:</u> இரக்கமுள்ள பிதாவே நீர்தந்த புடமிடப்பட்ட வேத வசனங்கள் என் குணமாக்கி எனக்கு பரிபூரண சமாதானத்தைத் தரக் கிருபை புரியும். இ மாயையான உலகத்தில் எல்லா அழிவுக்கும் என்னை விலக்கிக்கா கொள்ளும். களிப்பின் சத்தமும் துதியின் சத்தமும் என்றென் கேட்கப்பண்ணுமையா . இயேசுவின் மூலம் பிதாவே ஆமென்.

நான் வாசமாயிருக்கத்தக்க ஆலயத்தை நீ எனக்குக் கட்டுவாயோ என்று கேட்கும் தேவனே தோத்திரம். சாமு 7:5

இந்த ஆலயத்தை மகிமையினால் நிறையப்பண்ணுவேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். ஆகவே தோத்திரம். ஆகாய் 2:7

இவ்விடத்திலே சமாதானத்தைக் கட்டளையிடுவேன் என்றீரே தோத்திரம். ஆகாய 2:9

என் விண்ணப்பம் உமது பரிசுத்த ஆலயத்திலே உம்மிடத்திலே வந்து சேர்வதற்காக தோத்திரம். யோனா 2:7

நீ என் சமூகத்தில் செய்த உன் விண்ணப்பத்தையும் உன் வேண்டுதலையும் கேட்டேன். இந்த ஆலயத்தில் என் நாமம் என்றைக்கும் விளங்கத் தக்கதாக அதைப் பரிசுத்த மாக்கினேன். என் கண்களும் என் இருதயமும் எந்நாளும் அங்கே இருக்கும் என்றீரே தோத்திரம். இரா 9:3

நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்டாலும் குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக அதைச் செய்வேன் என்கிறதற்காக தோத்திரம். யோவா 14:13

விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும் ஆகவே தோத்திரம் மாற் 9:23

உமமுடைய பரிசுத்த ஆலயமாகிய உமது வீட்டின் நன்மையால் திருப்தியடையப் பண்ணுகிறவரே தோத்திரம். சங் 65:4

ஜெபம் இரக்கமுள்ள தகப்பனே, நான் ஆராதிக்க நீர் தந்த அருமையான ஆலயத்திற்காக துதிக்கிறேன். அந்த ஆலயம் என்றும் உமது மகிமையால் நிறைந்திருக்கப் பண்ணும். விசுவாசத்தோடு ஆலயத்திலிருந்து ஏறெடுக்கும் விண்ணப்பங்களைத் தயவாய் நிறைவேற்றியருளுமையா. இயேசுவின் மூலம் ஜாவே. ஆமென்.

பிப்ரவரி - 29

1. நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்கள் என்ற தேவனே தோத்
I கொரி 3:16

2. ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால், அவனை தே
கெடுப்பார். தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது நீங்களே
ஆலயம் என்று எச்சரிக்கிறதற்காக தோத்திரம். I கொரி 3:17

3. கர்த்தருடைய ஆலயத்துக்குப் போவோம் வாருங்கள் என்று சொன்ன
மகிழ்ச்சியடையச் செய்கிறவரே தோத்திரம். சங் 122:1

4. கர்த்தருடைய மகிமை ஆலயத்தை நிரப்புகிறதற்காக தோத்திரம். எசே 4

5. உமது அடியேன் இவ்விடத்திலே செய்யும் விண்ணப்பத்தைக் கேட்க
ஆலயத்தின் மேல் உம்முடைய கண்கள் இரவும் பகலும் திறந்திருப்பத
தோத்திரம். II நாளா 6:20

6. எனக்கு உண்டான நெருக்கத்திலே கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டு
தேவனை நோக்கி அபயமிட்டேன். தமது ஆலயத்திலிருந்து என் சத்த
கேட்டார். என் கூப்பிடுதல் அவர் சந்நிதியில் போய் அவர் செவிகளில் எ
ஆகவே தோத்திரம். சங் 18:6

7. நான் கர்த்தர் நான் சொல்லும் வார்த்தை நிறைவேறும் இனித் தாமதி
என்றீரே தோத்திரம். எசே 12:25

ஜெபம் : கிருபை நிறைந்த பிதாவே, என்னுடைய சரீரமாகிய ஆலயத்தை
என்றும் பரிசுத்தமாய்க் காத்துக் கொள்ள உதவி செய்யும்.
நெருக்கப்படுகையில் உம்மை நோக்கிக் கதறும் போது கர்த்தர் தாமே கிரு
செவிகொடுத்து தாமதியாது எனக்கு இரங்கி ஆசீர்வதியுமையா. இயேசுவின்
பிதாவே ஆமென்.

நீ ஆசீர்வதிக்கப்பட்டவன் நீ பெரிய காரியங்களைச் செய்வாய். மேன் மேலும் பலப்படுவாய் என்றீரே உமக்கு தோத்திரம். I சாமு 26:25

2. உமது அடியனின் வீடு என்றென்றைக்கும் உமக்கு முன்பாக இருக்கும்படி அதை ஆசீர்வதித்தருளும் கர்த்தரான ஆண்டவராகிய தேவரீர் அதைச் சொன்னீர். உம்முடைய ஆசீர்வாதத்தினால் உமது அடியாளின் வீடு என்றென்றைக்கும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பதாக ஆகவே தோத்திரம். II சாமு 7:29

3. இஸ்ர வேலின் தேவனாகிய கர்த்தருக்கு தோத்திரம் அவர் தம்முடைய வாக்கினால் சொன்னதை தம்முடைய கரத்தினால் நிறைவேற்றினார் ஆகவே தோத்திரம். I இரா 8:15

4. கர்த்தாவே மாட்சிமையும் வல்லமையும் மகிமையும் ஜெயமும் மகத்துவமும் உம்முடையவைகள் வானத்திலும் பூமியிலும் உள்ளவைகளெல்லாம் உமடையவைகள். ஆகவே தோத்திரம். I நாளா 28:11

5. ஐசுவரியமும் கனமும் உம்மாலே வருகிறது. உம்முடைய கரத்திலே சத்துவமும் வல்லமையும் உண்டு. எவரையும் மேன்மைப்படுத்தவும் பலப்படுத்தவும் உம்முடைய கரத்தினால் ஆகும். ஆகவே தோத்திரம். I நாளா 28:12

6. எல்லாம் உம்மால் உண்டானது. உமது கரத்திலே வாங்கி உமக்குக் கொடுக்கிறோம். இப்போதும் எங்கள் தேவனே நாங்கள் உமக்கு ஸ்தோத்திரம் செலுத்தி உமது மகிமையுள்ள நாமத்தைத் துதிக்கிறோம். II நாளா 28:13

ஜெபம் : கர்த்தாவே, நீர் உம்முடைய வாக்கினால் சொன்னவகளை உம்முடைய சத்துவமும் வல்லமையுமுள்ள கரத்தினால் நிறைவேற்றியருளும் நாங்கள் இந்த நாளில் பெரிய காரியங்களைச் செய்து மேன்மேலும் பலப்பட கிருபை புரியும் இயேசுவின் நாமத்தில் பிதாவே ஆமென்.

1. கர்த்தர் நான் நம்பியிருக்கிற துருகமும், என் கேடகமும், என் ரட்சண்ய கொம்பும் என் உயர்ந்த அடைக்கலமும், என் புகலிடமும், இரட்சருமானவர். என்னை வல்லடிக்கு நீங்கலாக்கி இரட்சிக்கிறவர் அவரே ஆகவே தோத்திரம். சாமு 22:3

2. நம் தேவனாகிய கர்த்தர் நமக்குச் சொன்ன நல்வார்த்தைகளிலெல்லாம் ஒரு வார்த்தையும் தவறிப் போகவில்லை அவைகளெல்லாம் நமக்கு நிறைவேற்றிற்று போகவில்லை ஆகவே தோத்திரம். யோசுவா 23:14

3. எனக்கு உண்டான நெருக்கத்திலே கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டு என் தேவனை நோக்கி அபயமிட்டேன் அவர் தமது ஆலயத்திலிருந்து என் சத்தத்தைக் கேட்டார் ஆகவே தோத்திரம். சாமு 22:7

4. கர்த்தராகிய தேவரீர் என் விளக்காயிருக்கிறீர் கர்த்தர் என் இருளை வெளிச்சமாக்குகிறவர் ஆகவே தோத்திரம். சாமு 22:29

5. கர்த்தரை நம்புகிற அனைவருக்கும் அவர் கேடகமாயிருக்கிறார் ஆகவே தோத்திரம். சாமு 22:31

6. கர்த்தர் எனக்கு பலத்த அரணானவர் அவர் என் வழியை செவ்வைப்படுத்துகிறவர் ஆகவே தோத்திரம். சாமு 22:33

7. இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்குச் சதாகாலங்களிலும் ஸ்தோத்திரம் உண்டாவதாக ஆமென். நாளா 16:36

ஜெபம் : நான் நம்பியிருக்கிற என் துருகமும் கேடகமுமானவரே பரலோகப்பிதாவே எங்கள் வாழ்வில் உள்ள இருளை வெளிச்சமாக்கி எங்களுக்கு விளக்காயிருக்கிற எங்கள் அடைக்கலமும் புகலிடமுமானவரே நாங்கள் எங்கள் வழிகளை செவ்வைப்படுத்த எப்போதும் உமது கிருபையைப்புரியும் இயேசுவின் நாமத்தில் பிதாவே ஆமென்.

ஏறக்குறைய எண்பத்து நாலு வயதுள்ள அன்னாள் என்ற விதவை தேவாலயத்தை விட்டு நீங்காமல் இரவும் பகலும் விசுவாசித்து ஜெபம் பண்ணி ஆராதனை செய்து கொண்டிருந்ததைப் போல என்னையும் உபவாசிக்கும்படி போதிக்கிறதற்காக தோத்திரம். லூக் 2:37

2. பசியுள்ளவனுக்கு உன் ஆகாரத்தைப் பகிர்ந்து கொடுக்கிறதும், துரத்துண்ட சிறுமை யானவர்களை வீட்டிலே சேர்த்துக் கொள்ளுகிறதும் வஸ்திரமில்லாதவனைக் கண்டால் அவனுக்கு வஸ்திரங்கொடுக்கிறதும் உன் மாம்சமானவனுக்கு உன்னை ஒளிக்காமலிருக்கிறதும் அல்லவோ எனக்கு உகந்த உபவாசம் என்கிறீரே உமக்கு தோத்திரம். ஏசா 58:7

3. கர்த்தருக்கு முன்பாக மாத்திரமல்ல மனுஷருக்கு முன்பாகவும் யோக்கியமானவைகளைச் செய்ய நாடுகிறோம். ஆகவே தோத்திரம். 2 கொரி 8:21

4. பிதாவாகிய தேவனாலும் பிதாவின் குமாரனாயிருக்கிற கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையும் இரக்கமும் சமாதானமும் சத்தியத்தோடும் அன்போடுங்கூட எங்க ளோடிருப்பதற்காக தோத்திரம். 2 யோ 1:3

5. என் பிள்ளைகள் சத்தியத்திலே நடக்கிறார்கள் என்று நான் கேள்விப்படுகிற சந்தோஷத்திலும் அதிகமான சந்தோஷம் எனக்கு இல்லை என்று உணரச் செய்வதற்காக தோத்திரம். 3 யோ 1:4

6. கர்த்தருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை ஆகவே தோத்திரம். புல 3:22

ஜெபம்: கிருபை நிறைந்த கர்த்தாவே நீர் எனக்குக் காட்டும் இரக்கங்களுக்கு முடிவில்லையப்பா. சிறுமைப்பட்டவர்களுக்கு உதவி செய்ய எப்போதும் ஆயத்தமாயிருந்து அதன் மூலம் உமக்கு உகந்த உபவாசத்தை கடைப்பிடிக்கிறவர்களாக என்னை மாற்றும் நான் மாத்திரமல்ல என் பிள்ளைகளும் கூட சத்தியத்தின் வழியிலே நடந்து உம்மை மகிமைப்படுத்த கிருபை புரியும். இயேசுவின் நாமத்தில் பிதாவே ஆமென்.

மார்ச் - 4

1. நீங்கள் இப்பொழுதே உபவாசத்தோடும் அழுகையோடும் புலம்பலோ
உங்கள் முழு இருதயத்தோடும் என்னிடத்தில் திரும்புங்கள் என்று சொ
கர்த்தாவே உமக்கு தோத்திரம். யோவேல் 2:12
2. நீ யோ உபவாசிக்கும் போது அந்த உபவாசம் மனுஷர்களு
காணப்படாமல் அந்தரங்கத்தில் இருக்கிற உன் பிதாவு
காணப்படும்படியாக உன் தலைக்கு எண்ணெய் பூசி, உன் முகத்தைக்
அப்பொழுது அந்தரங்கத்தில் பார்க்கிறஉன்பிதா உனக்கு வெளியரங்
பலனளிப்பார். என்பதற்காக தோத்திரம். மத் 6:18
3. எங்களை அழைக்கிறவர் உண்மையுள்ளவர் ஆகவே தோத்
I தெச 5:24
4. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும், நம்மிடத்தில் அன்பு கூ
நித்திய ஆறுதலையும் நல் நம்பிக்கையையும் கிருபையாய் நம
கொடுத்திருக்கிற நம்முடைய பிதாவாகிய தேவனும் உங்கள் இருதயங்க
தேற்றி எல்லா நல்வசனத்திலும் நற்கிரியையிலும் உங்க
ஸ்திரப்படுத்துவாராக என்கிறபடியால் தோத்திரம். II தெச 2:16
5. நீங்கள் எல்லாவற்றிலும் எப்பொழுதும் சம்பூரணமுடையவர்களாயும் சகல
நற்கிரியைகளிலும் பெருகுகிறவர்ளாயுமிருக்கும்படியாக தே
எங்களிடத்தில் சகலவித கிருபையையும் பெருகச் செ
வல்லவராயிருக்கிறார் ஆகவே தோத்திரம். II கொரி 9:8
6. தேவன் அருளிய சொல்லி முடியாத ஈவுக்காக அவருக்குத் தோத்
II கொரி 9:15

ஜெபம் : என்னை அழைத்த உண்மையுள்ள தேவனே, இந்த வேளை
என்னைத் தாழ்த்தி, உமது கரத்தில் ஒப்புக் கொடுக்கிறேன் மாயக்காரரைப்
வெளியரங்கமாய் அல்ல, அந்தரங்கத்தில் பார்க்கிற நீர் மாத்திரம் கா
வண்ணம் உபவாசிக்க அருள் தாரும் சகலவித நற்கிரியைகளிலும் சக
கிருபையிலும் பெருகச் செய்ய வல்ல என் தேவன் தாமே என்னை ஆசீர்வ
நடத்துமையா. இயேசுவின் மூலம் பிதாவே ஆமென்.

தேவனிடத்தில் அன்பு கூருகிறேனென்று ஒருவன் சொல்லியும் தன் சகோதரனைப் பகைத்தால் அவன் பொய்யன் தான் கண்ட சகோதரனிடத்தில் அன்பு கூராமலிருக்கிறவன். தான் காணாத தேவனிடத்தில் எப்படி அன்பு கூருவான் என்று கிறிஸ்தவ அன்பின் இரகசியத்தை வெளிப்படுத்தியதற்காக தோத்திரம். யோா 4:20

இனி வீண் காணிக்கைகளைக் கொண்டு வரவேண்டாம் என்று எச்சரிப்பவரே தோத்திரம். ஏசா 1:13

நான் செலுத்தும் காணிக்கைகளை யெல்லாம் அவர் நினைத்து எனது சர்வாங்க தகன பலியைப் பிரியமாய் ஏற்றுக் கொள்ளுகிறதற்காக உமக்கு தோகதிரம். சங் 20:3

இதோ தத்தளிப்பின் பாத்திரத்தை என கையிலிருந்து நீக்கிப் போடுகிறவரே உமககு தோத்திரம். ஏசா 51:22

நோவாவின் காலத்திலுண்டான வெள்ளம் இனி பூமியின் மேல் புரண்டு வருவதில்லை என்று நான் ஆணையிட்டது போல உன் மேல் நான் கோபங்கொள்வதில்லை என்றும், உன்னை நான் கடிந்து கொளவதில்லையென்றும் ஆணையிட்டதற்காக தோத்திரம். ஏகா 54:9

நான் கூப்பிடுகிறதற்கு முன்னே எனக்கு மறு உத்தரவு கொடுப்பவரே உமக்கு தோத்திரம். ஏசா 65:24

உனக்கு விரோதமாய் உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காதே போம் என்றீரே தோத்திரம். ஏசா 54:17

ஜெபம்: கிருபையுள்ள கர்த்தாவே, நான் அனைவரையும் நேசித்து அன்பு பாராட்டி உமமைப பிரதிபலிக்க எனக்கு உதவி செய்யும் நீர் என்னைக் கழிந்து கொள்ளாத தேவன் என்று விசுவாசிக்கிறேன். என் விண்ணப்பத்திற்கு செவிசாய்த்து எனக்கு மறுஉத்தரவு கொடுத்து வழிநடத்துமையா. இயேசுவின் மூலம் பிதாவே ஆமென்.

மார்ச் - 6

1. கிறிஸ்து நமக்காகத் தம்மைத் தேவனுக்கு சுகந்த வாசனையா காணிக்கையாகவும் பலியாகவும் ஒப்புக் கொடுத்து நம்மில் அன்பு கூர் போல் நீங்களும் அன்பிலே நடந்துகொள்ளுங்கள் என்று போதித்த உமக்கு தோத்திரம். எபே 5:2
2. தன் வறுமையிலிருந்து தன் ஜீவனத்துக்கு உண்டாயிருந்த தெல் காணிக்கையாகப் போட்ட ஏழைவிதவை மற்றெல்லாதைப் பார்க்கி அதிகமாய்ப் போட்டாள் என்று காணிக்கை செலுத்தும் முறை வெளிப்படுத்திக் காட்டியதற்காக தோத்திரம். லூக் 21:3
3. உன்னை நித்திய மாட்சிமையாகவும் தலைமுறை தலைமுறையாயிருக் மகிழ்ச்சியாகவும் வைப்பேன் என்று ஆசீர்வதிப்பவரே தோத்திரம் ஏசா 60:1
4. கர்த்தரே உனக்கு நித்திய வெளிச்சமும், உன்தேவனே உன மகிமையுமாயிருப்பார் என்பதற்காக தோத்திரம். ஏசா 60:19
5. சின்னவன் ஆயிரமும் சிறியவன் பலத்த ஜாதியுமாவான் கர்த்தராகிய ந ஏற்ற காலத்திலே இதைத் தீவிரமாய் நடப்பேன் என்றீரே உமக்கு தோத் ஏசா 60:22
6. உன்னை, அதிசயங்களைக் காணப்பண்ணுவேன் என்றீரே உம தோத்திரம். மீகா 7:15
7. இன்று உமது அடியானுக்குக் காரியத்தைக் கைகூடிவரப்பண்ணிமனுஷரு முன்பாக எனக்கு இரக்கம் கிடைக்கப்பண்ணியருளப்போவதற் தோத்திரம். நெகே 1:11

ஜெபம் : இரக்கமுள்ள பிதாவே நீர் எங்களுக்குப் பாராட்டின அளவிட முடி அன்பினை ருசித்த நாங்களும் அந்த அன்பை பிறருக்கு அள்ளி வழ ஏவியருளும் நான் செய்யும் காரியத்தைக் கைகூடிவரப்பண்ணி எல்லாவற்றி அதிசயங்களைக் காணப்பண்ணுமையா நீரே எனக்கு நித்திய மாட்சிமையா மகிழ்ச்சியாகவும் இருந்து வழி நடத்தும் தகப்பனே இயேசுவின் மூலம் பித ஆமென்.

1. செம்மை யானவர்களின் ஜெபம் கர்த்தருக்குப் பிரியமானது ஆகவே தோத்திரம். நீதி 15:8

2. செய்கைகளை கர்த்தரிடத்தில் ஒப்புவிக்கும் போது யோசனைகளை உறுதிப்படுத்துகிறவரே உமக்கு தோத்திரம். நீதி 16:3

3. விதவையின் எல்லையை நிலைப்படுத்துகிறவரே உமக்கு தோத்திரம். நீதி 15:25

4. விதவைகளை விசாரிக்கிறவரே உமக்கு தோத்திரம். சங் 68:5

5. திக்கற்ற பிள்ளைகளின் சகாயரே உமக்கு தோத்திரம். சங் 10:14

6. திக்கற்ற பிள்ளைகளின் ஜெபத்தை அலட்சியம் பண்ணாமல் அவர்கள் விண்ணப்பத்தை அங்கீகரிக்கிறபடியால் உமக்கு தோத்திரம். சங் 102:16

7. தேவன் தனிமையானவர்களுக்கு விடுவாசல் ஏற்படுத்துகிறபடியால் உமக்கு தோத்திரம். சங் 68:6

8. எளியவனைக் குப்பையிலிருந்து உயர்த்துகிறவரே உமக்குத்தோத்திரம். சங் 113:7

9. திக்கற்றோரின் தகப்பனே உமக்கு தோத்திரம். சங் 68:5

10. சிறியவனைப் புழுதியிலிருந்து தூக்கி விடுகிறவரே உமக்கு தோத்திரம். சங் 113:7

ஜெபம்: பரம தகப்பனே, என் செய்கைகளையெல்லாம் உமது கரத்தில் ஒப்புவிக்கிறேன் நீரே எனக்கு ஆலோசனைக்கர்த்தாவாக இருந்து என்னை வழிநடத்தும் கர்த்தாவே குப்பையிலிருந்தும் புழுதியிலிருந்தும் என்னைத் தயவாய் தூக்கி எடும் எப்போதும் உம்மை மாத்திரம் மகிமைப்படுத்துகிற பாதையை தெரிந்து கொள்ள கிருபை புரியும் இயேசுவின் நாமத்தில் ஆமென்.

மார்ச் - 8

1. புத்தியுள்ள மனைவி கர்த்தர் அருளும் ஈவு ஆகவே தோத்திரம். நீதி 19:
2. குணசாலியான ஸ்திரியின் விலை முத்துக்களைப் பார்க்கிலும் உயர்ந்த இருக்கிறபடியால், உமக்கு தோத்திரம். நீதி 31:10
3. புத்தியுள்ள ஸ்திரியின் பிள்ளைகள் எழும்பி அவளைப்பாக்கியவதி என் அவள் புருஷன் அவளைப்பார்த்து அநேகம் பெண் குணசாலிகளாயிருந்ததுண்டு நீயோ அவர்கள் எல்லோருக்கும் மேற்பட் என்று அவளைப் புகழும்படியும் வைக்கிறவரே உமக்கு தோத்தி நீதி 31:28
4. மனைவியானவள் வீட்டோரங்களில் கனிதரும் திராட்சக்கொடியைப்போ வைக்கிறவரே உமக்கு தோத்திரம். சங் 128:3
5. மனைவியைக் கண்டடைகிறவன் நன்மையையும் கர்த்தரால் தயை பெற்றுக் கொள்வான் என்கிறவரே உமக்கு தோத்திரம். நீதி 18:22
6. குணசாலியான ஸ்திரி தன் புருஷனக்குக் கிரீடமாயிருக்கிறாள் என்கிறபடிய உமக்கு தோத்திரம். நீதி 12:4
7. குணசாலியான ஸ்திரி சிறுமையான வர்களுக்குத்தன் கையைத் திற ஏழைகளுக்குத் தன் கரங்களை நீட்டும்படி செய்கிறவரே உமக்கு தோத்தி நீதி 31:20
8. சௌந்தரியம் வஞ்சனையுள்ளது அழகம் வீண் கர்த்தருக்குப் பயப்படு ஸ்திரியே புகழப்படுவாள் ஆகவே தோத்திரம். நீதி 31:30

ஜெபம்: மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல என்று ஏற்ற துணை அவனுக்கு உண்டாக்கின கர்த்தாவே ஒவ்வொரு குடும்பமும் உம்மிலே கட் அருள் தாரும் வெளிப்பகட்டை வெறுத்து உமக்குப் பயப்படுகிற பயத் அலங்காரமாகத் தரித்துக் கொள்ள கிருபை புரியும் தகப்பனே இயேசுவின் நாம ஆமென்.

நீ பலிபீடத்தினிடத்தில் உன் காணிக்கையை செலுத்த வந்து உன் பேரில் உன்
சகோதரனுக்குக் குறை உண்டென்று அங்கே நினைவுகூருவாயாகில் அங்கே
தானே பலிபீடத்தின் முன் உன் காணிக்கையை வைத்துவிட்டுப் போய் முன்பு
உன் சகோதரனோடே ஒப்புரவாகி பின்பு வந்து உன் காணிக்கையைச்
செலுத்து என்று என்னை வழிநடத்தினீரே உமக்கு தோத்திரம். மத் 5:23

2. ஒருவன் தன் தகப்பனையாவது தாயையாவது நோக்கி உனக்கு நான்
செய்யத்தக்க உதவி எது உண்டோ, அதைக் கொர்பான் என்னும்
காணிக்கையாகக் கொடுக்கிறேன் என்று சொல்லி அவனுடைய கடமை
தீர்த்தது என்று சொன்னால் தேவவசனத்தை அவமாக்குகிறீர்கள் என்று
எச்சரிக்கிறதற்காக தோத்திரம். மாற் 7:11

3. கர்த்தருக்கு அவருடைய நாமத்திற்குரிய மகிமையைச் செலுத்தி
காணிக்கைகளைக் கொண்டு வந்து அவருடைய சந்நிதியில் பிரவேசித்து
பரிசுத்த அலங்கரத்துடனே கர்த்தரைக் தொழுது கொள்ளச் சொன்னதற்காக
தோத்திரம். நாளா 16:29

4. நானே நானே உங்களுக்கு ஆறுதல் செய்கிறவர் என்றீரே உமக்கு தோத்திரம்.
ஏசா 51:12

5. இமைப் பொழுது உன்னைக் கைவிட்டேன் ஆனாலும் உருக்கமான
இரககங்களால் உன்னைச் சேர்த்துக் கொள்வேன் என்ற படியால் தோத்திரம்.
ஏசா 54:7

6. என் முகத்தை இமைப் பொழுது உனக்கு மறைத்தேன் ஆனாலும் நித்திய
கிருபையுடன் உனக்கு இரங்குவேன் என்றீரே தோத்திரம். ஏசா 54:8

ஜெபம்: இரக்கமுள்ள கர்த்தாவே, நான் செலுத்தும் காணிக்கையை ஒப்புரவாகுதலோடு, சமாதானத்தோடு, மனத்தாழ்மையோடு, பிறரை நேசிக்கும் அன்போடு, செலுத்த கிருபைபுரியும், என்னை ஒருபோதும் கைவிடாமல் எனக்கு ஆறுதலாயிருமையா. உமது இரக்கங்களால் என்னை நிரப்பும் தகப்பனே. இயேசுவின் மூலம் பிதாவே ஆமென்.

மார்ச் - 10

1. ஆபேலையும் அவன் காணிக்கையையும் அங்கிகரித்த கர்த்தாவே
காணிக்கையையும் அங்கீகரிக்கப்போவதற்காக தோத்திரம். ஆதி 4:4
2. மனப்பூர்வமாய் உற்சாகத்துடன் கொடுப்பவன் எவனோ அவனிடத்
எனக்குக் காணிக்கையை வாங்குவீர்களாக என்றுரைத்த கர்த்தரே உ
தோத்திரம். யாத் 25:2
3. முதற்கனிகளைக் காணிக்கையாகக் கொண்டு வந்து அவை க
கர்த்தருக்குச் செலுத்தலாம் என்பதற்காக தோத்திரம். லேவி 2:12
4. காணிக்கையை கர்த்தருடைய ஆலயத்துக்குக் கொண்டு வரத் தொடங்கி
முதல் நாங்கள் சாப்பிட்டுத் திருப்தியடைந்தோம் இன்னும் மிச்சமும் இருக்
ஆகவே தோத்திரம். II நாளா 32:10
5. கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள் ஆனந்தக்களிப்புடன் பாடி சீயோனக்குத் தி
வருவார்கள் நித்திய மகிழ்ச்சி அவர்கள் தலையின் மேலிருக்கும் சந்தோ
மகிழ்ச்சியும் அடைவார்கள் சஞ்சலமும் தவிப்பும் ஓடிப்போம் ஆ
தோத்திரம். ஏசா 51:11
6. மலைகள் விலகினாலும் பர்வதங்கள் நிலை பெயர்ந்தாலும் என் கி
உன்னை விட்டு விலகாமலும் என் சமாதானத்தின் உடன்படிக்கை நி
பெயராமலும் இருக்கும் என்று என் மேல் மனதுருகிக் கர்த்தர் சொன்னத
தோத்திரம். ஏசா 54:10

ஜெபம்: கிருபை நிறைந்த கர்த்தாவே. வானத்திலும் பூமியிலும் உ
வைகளெல்லாம் உம்முடையவைகள். உமது கரத்திலே வாங்கி உம
கொடுக்கிற காணிக்கைகளை மனஉற்சாகத்துடனும் மனப்பூர்வமா
கொடுக்கச்செய்யும் தகப்பனே சஞ்சலமும் தவிப்பும் என் வாழ்வை
ஓடிப்போகத்தக்கதாக முதற்கனிகளை மாத்திரமல்ல என்னையே அர்ப்ப
ஏவியருளும் இயேசுவின் மூலம் பிதாவே ஆமென்.

1. இதோ சீக்கிரமாய் வருகிறேன் என்று சொல்லும் தேவனே தோத்திரம்.
வெளி 22:12

2. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாளிலே நாங்கள் குற்றஞ்சாட்டப்படாதவர்களாயிருக்கும்படி முடிவு பரியந்தம் எங்களை ஸ்திரப்படுத்துபவரே தோத்திரம். I கொரி 1:4

3. மனுஷ குமாரன் மிகுந்த வல்லமை யோடும் மகிமையோடும் மேகத்தின் மேல் வருகிறதைக் காணப்பண்ணப் போகிறவரே தோத்திரம். லூக் 21:27

4. இயேசு பரலோகத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பின்பு சீஷர்கள் அவரைப் பணிந்து கொண்டு மிகுந்த சந்தோஷத்துடனே திரும்பி வந்து நாடோறும் தேவாலயத்திலே தேவனைப்புகழ்ந்து துதித்துக் கொண்டிருக்கச் செய்தவரே தோத்திரம். லூக் 24:52

5. ஆமென், எங்கள் தேவனுக்குத் துதியும், மகிமையும், ஞானமும், ஸ்தோத்திரமும், கனமும் வல்லமையும், பெலனும், சதாகாலங்களிலும் உண்டாயிருப்பதற்காக தோத்திரம். வெளி 7:12

6. உன் கிரியைகளையும் உன் அன்பையும் உன் ஊழியத்தையும் உன் விசுவாசத்தையும் உன் பொறுமையையும் நீ முன்பு செய்த கிரியைகளிலும் பின்பு செய்த கிரியைகள் அதிகமாயிருக்கிறதையும் அறிந்திருக்கிறேன் என்கிறீரே உமக்கு தோத்திரம். வெளி 2:19

7. மெய்யாகவே நான் சீக்கிரமாய் வருகிறேன் என்கிறார் கர்த்தராகிய இயேசுவே வாரும், ஆமென். வெளி 22:20

ஜெபம் : கர்த்தராகிய இயேசுவே, நீர் சீக்கிரமாய் வரப்போகிறதற்காய் தோத்திரம். அந்த நாளிலே நான் உம்மை முகமுகமாய் தரிசிக்க வேண்டிய கிருபையைத் தாரும். என் கிரியையையும் விசுவாசத்தையும் பொறுமையையும் நீர் தயவாய் அறிந்து நீர் மேகத்தின் மேல் வருகிறதை என கண்கள் காணும்படி அருள் புரியுமையா இயேசுவின் மூலம் பிதாவே ஆமென்.

1. மனுஷனுடைய வழி யெல்லாம் அவன் பார்வைக்குச் செம்மை
தோன்றும். கர்த்தரே இருதயங்களை நிறுத்துப்பார்க்கிறீர் ஆகவே தோத்
நீதி 21:2

2. கதவு கீல் முளையில் ஆடுகிறது போல சோம்பேறியும் படுக்கையில்
கொண்டிருக்கிறான் என்று சொல்லி சோம்பேறித்தனத்தை கண்
உணர்த்தியதற்காக தோத்திரம். நீதி 26:14

3. சோம்பேறி குளிருகிற தென்று உழமாட்டான் அறப்பிலே பிச்சை கேட்
அவனுக்கு ஒன்றும் கிடைக்காது என்று எச்சரிப்பரே தோத்திரம். நீதி 2

4. சோம்பேறியே, நீ எவ்வளவு நேரம் படுத்திருப்பாய் உன் தரித்திரம்
போக்கனைப் போல வரும் என்ற வசனத்தின் மூலம் எங்களை நி
நிற்கச் செய்கிறவரே தோத்திரம். நீதி 6:9

5. எறும்பினிடத்தில் போய் அதின் வழிகளைப் பார்த்து ஞானத்தைக் க
கொள்ளும்படி போதிக்கிறவரே தோத்திரம். நீதி 6:6

6. சோம்பலின் அப்பத்தைச் புசியாமல் தன் வீட்டுக்காரியம் எப்படி நட
என்று கண்ணோக்கமாயிருக்கும் குணசாலியான ஸ்திரியைப்
என்னையும் மாற்றப் போகிறதற்காகத் தோத்திரம். நீதி 31:27

7. கர்த்தர் உன்னை வாலாக்காமல் தலையாக்குவார். நீ கீழாகாமல் மேல
என்று ஆசீர்வததிப்பவரே தோத்திரம். உபா 28:14

8. நீ கையிடும் எல்லா வேலையிலும் உனக்கு ஆசீர்வாதம் கட்டளையி
என்பதற்காய் தோத்திரம். உபா 28:8

ஜெபம் : இரக்கமுள்ள பிதாவே, சோம்பலின் ஆவியைத் தயவாய் என்னை
எடுத்துப் போடும். நான் சோம்பேறியாக இருந்து தரித்திரம் அடையாதபடி கா
கொள்ளும். நீர் என்னை முற்றிலுமாக மாற்றி குணசாலியான ஸ்திரியைப்
ஆக்கியருளும் தகப்பனே. நான் கையிடும் எல்லா வேலையிலும் எ
ஆசீர்வதித்து உயர்த்தி மற்றவர்களுக்கும் ஆசீர்வாதமாயிருக்க கிருபை புரியு
இயேசுவின் மூலம் பிதாவே ஆமென்.

1 உன் சுகவாழ்வு சீக்கிரத்தில் துளிர்த்து உன் நீதி உனக்கு முன்னாலே செல்லும் கர்த்தருடைய மகிமை உன்னைப் பின்னாலே காக்கும் என்றீரே தோத்திரம் ஏசா 58:8

2 இருளில் உன் வெளிச்சம் உதித்து உன் அந்தகாரம் மத்தியானத்தைப் போலாகும் என்றபடியால் தோத்திரம். ஏசா 58:10

3 உன் பிள்ளைகளெல்லாரும் கர்த்தரால் போதிக்கப்பட்டிருப்பார்கள் உன் பிள்ளைகளுடைய சமாதானம் பெரிதாயிருக்கும் என்றபடியால் தோத்திரம். ஏசா 54:13

4 நீங்கள் உண்மையாய் நியாயந்தீர்த்து அவனவன் தன்தன் சகோரனுக்குத் தயவும் இரக்கமும் செய்து விதவையையும் திக்கற்ற பிள்ளையையும் பரதேசியையும் சிறுமையானவையையும் ஒடுக்காலும் உங்களில் ஒருவனும் தன சகோதரனக்கு விரோதமாய்த் தன் இருதயத்திலே தீங்கு நினையாமலும் இருங்கள் என்று வழிகாட்டுபவரே தோத்திரம். சக 7:9

5 ஒருவனும் பிறனுக்கு விரோதமாய்த்தன் இருதயத்தில் தீங்கு நினையாமலும் பொய் யாணையின் மேல் பிரியப்படாமலும் இருங்கள் என்று போதிக்கிறவரே தோததிரம். சக 8:17

6 என வாயிலிருந்து புரப்படும் வசனம் வெறுமையாய் என்னிடத்திற்குத் திரும்பாமல் அது நான் விரும்புகிறதைச் செய்து நான் அதை அனுப்பின காரியமாகும் படி வாய்க்கும் என்றீரே உமக்கு தோத்திரம். ஏசா 55:11

7 நீ கூப்பிடுவாய் அப்பொழுது கர்த்தர் மறுஉத்தரவு கொடுப்பார் என்கிறவரே தோத்திரம். ஏசா 58:9

ஜபம்: கிருபை நிறைந்த கர்த்தாவே, நான் என் இருதயத்தில் எந்த வித தீங்கையும் ணையாதபடி உமக்குப் பிரியமாய் என்னைக் காத்துக் கொள்ள உதவி செய்யும். ன் சுகவாழ்வை சீக்கிரத்தில் துளிர்க்கச் செய்யப்போகிற தேவனே, நான் உம்மை நோக்கிக் கூப்பிடும் போது மறுஉத்தரவு கொடுமையா. இயேசுவின் மூலம் ாவே. ஆமென்.

மார்ச் - 14

1. கர்த்தர் உங்கள் முன்னே போவார் இஸ்ரவேலின் தேவன் உங்கள் பிறகே உங்களைக் காக்கிறவராயிருப்பார் என்றீரே தோத்திரம். ஏசா 52:12
2. உன் சந்ததி மணலத்தனையாகவும் உன் கர்ப்பப்பிறப்பு அதின் அணுக்களத்தனையாகவும் இருக்கும் அப்பொழுது அதின் பெயர் நம்மைவிட்டு அற்றுப் போகாமலும் அழிக்கப்படாமலும் இருக்கும் என்பதற்காய் தோத்திரம். ஏசா 48:19
3. என் தேவனாகிய கர்த்தர் என் நடுவில் இருக்கிறார் ஆகவே தோத்திரம். செப் 3:17
4. மனுஷகுமாரன் தம்முடைய பிதாவின் மகிமை பொருந்தினவராய்த் தம்முடைய தூதரோடுகூட வருவார். அப்பொழுது அவனவன் கிரியைக்குத் தக்கதாக அவனவனுக்குப் பலனளிப்பார் என்று எங்களுக்கு நினைப்பூட்டுகிறதற்காக தோத்திரம். மத் 16:27
5. உட்காவலறையிலே பவுலும் சீலாவும் அடைக்கப்பட்டு அவர்கள் கால்களைத் தொழுமரத்திலே மாட்டி வைத்த நேரத்திலே நடு ராத்திரியிலே அவர்கள் ஜெபம் பண்ணி தேவனைத் துதித்துப்பாடிய செயல் எங்களுக்கு ஒரு பாடமாக அமைவதற்காக உமக்கு தோத்திரம். அப் 16:24
6. சடிதியிலே சிறைச்சாலையின் அஸ்திபாரங்கள் அசையும் படியாக பூமி மிகவும் அதிர்ந்து கதவுகளெல்லாம் திறவுண்டு எல்லாருடைய கட்டுகளும் கழன்று போகப்பண்ணி அதன் மூலம் உமது வல்லமையை வெளிப்படுத்தியவரே உமக்கு தோத்திரம். அப் 16:26
7. உனக்கு விரோதமாய் உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காதே போம் என்றீரே தோத்திரம். ஏசா 54:17

<u>ஜெபம்:</u> இரக்கமுள்ள பிதாவே, நான் துன்பப்படும் போதெல்லாம் சோர்ந்து போகாமலும் முறுமுறுக்காமலும் உம்மைத்துதித்துக் கொண்டிருக்க என்னை ஏவியருளும் உம்மைத் துதிக்கும்போது என் வாழ்விலுள்ள இருளடைந்த பகுதிகள் ஒளிபெறும் என்று விசுவாசிக்கிறேன் நீர் என் நடுவில் இருந்து எனக்குப் பக்கபலமாயிருந்து காத்துக் கொள்ளும் இயேசுவின் மூலம் பிதாவே, ஆமென்.

1. நான் கர்த்தர் எனக்குக் காத்திருக்கிறவர்கள் வெட்கப்படுவதில்லை என்றீரே உமக்கு தோத்திரம். ஏசா 49:23
2. இதோ உம் உள்ளங்கைகளில் என்னை வரைந்திருக்கிற படியால் உமக்கு தோத்திரம். ஏசா 49:16
3. கர்த்தாவே எங்களுக்குச் சமாதானத்தைக் கட்டளையிடுவீர். எங்கள் கிரியைகளை யெல்லாம் எங்களுக்காக நடத்தி வருகிறவர் நீரே ஆகவே தோத்திரம். ஏசா 26:12
4. உபத்திரவத்தின் குகையிலே என்னைத் தெரிந்து கொண்டதற்காய் தோத்திரம். ஏசா 48:10
5. கர்த்தர் என சிறையிருப்பை மாற்றுவீர் ஆகவே தோத்திரம். யோபு 42:10
6. மனந்திரும்பினால் திரும்பக் கட்டப்படுவீர்கள் என்றீரே உமக்கு தோத்திரம். யோபு 22:23
7. அவனவனுக்கு அவனவனுடைய கிரியைகளின் பலனுக்குத்தக்கதாக அளிக்கும்படி உம்முடைய கண்கள் மனுபுத்திரருடைய எல்லா வழிகளின் மேலும் நோக்கமாயிருப்பதால் தோத்திரம். எரே 32:19
8. இனி நீ அழுது கொண்டிராய் உன் கூப்பிடுதலின் சத்தத்துக்கு அவர் உருக்கமாய் இரங்கி அதைக் கேட்டவுடனே உனக்கு மறுஉத்தரவு அருளுவார் என்றீரே தோத்திரம். ஏசா 30:19
9. எண்ணி முடியாத அதிசயங்களை செய்கிற தேவனே தோத்திரம். யோபு 5:9

ஜெபம் : இரக்கமுள்ள தகப்பனே, நீர் என்னை உமது உள்ளங்கையில் வைத்துக் காத்துக் கொள்ளும். எனக்காக யுத்தம் பண்ணி என் சிறையிருப்பையும் நெருக்கத்தையும் மாற்றிப்போடுமையா நான் இனி அழாதபடி என் கண்ணீரை உமது துருத்தியில் வைத்து அற்புத அதிசயங்களைக் காணும்படி கிருபை செய்யும். நான் உம்மையே நம்பிகாத்திருக்கிறேன். நான் ஒருக்காலும் கலங்காதபடி காத்துக் கொள்ளும். இயேசுவின் மூலம் பிதாவே ஆமென்.

மார்ச் - 16

1. மனுஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு தன் மனைவியுடன் இசைந்து இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள் என்ற பெரிய இரகசியத்தை வெளிப்படுத்திய தேவனே தோத்திரம். எபே 5:31
2. உங்களில் அவனவன் தன்னிடத்தில் அன்புகூருவது போல தன் மனைவியிடத்திலும் அன்பு கூரக்கடவன் மனைவியும் புருஷனிடத்தில் பயபக்தியாயிருக்கக் கடவள் என்று போதித்தவரே உமக்கு தோத்திரம். எபே 5:33
3. ஒரு ஸ்திரியை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபசாரஞ் செய்தாயிற்று என்று எச்சரிக்கிறபடியால் தோத்திரம். மத் 5:28
4. துர் இச்சைகளுக்கு இடமாக உடலைப் பேணாமலிருந்து கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை தரித்துக் கொள்ளச் செய்பவரே தோத்திரம். ரோமர் 13:14
5. தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்தச் செய்கிறவரே உமக்கு தோத்திரம். I கொரி 6:20
6. ஒரு மனிதன் தன் பிள்ளையை சுமந்து கொண்டு போவதுபோல நம் தேவனாகிய கர்த்தர் நம்மைச் சுமந்து கொண்டு வந்ததைக் காணப்பண்ணுகிறவரே உமக்கு தோத்திரம். உபா 1:31
7. உமது உடியானின் வீடு என்றைக்கும் உமக்கு முன்பாக இருக்கும்படிக்கு அதை ஆசீர்வதித்தருளினீர் கர்த்தராகிய தேவரீர் அதை ஆசீர்வதித்தபடியினால் அது என்றைக்கும் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கும் ஆகவே தோத்திரம். I நாளா 17:27

ஜெபம்: கிருபை நிறைந்த கர்த்தாவே நான் என் குடும்பத்தில் உத்தமமும் உண்மையுமாய் நடந்து உமது பரிசுத்த நாமத்தை மகிமைப்படுத்த உதவி செய்யும். மனிதனின் கண்களுக்கு மறைவாகச் செய்யும் அந்தரங்கமான பாவங்களை என் தேவனுக்கு மறைக்கமுடியாது என்பதை உணரச் செய்யும் நீர் எங்கு நிறைந்த ஏலோஹிம் என்பதை உணர்ந்து என் நடைகளை ஜாக்கிரதையாய்க் காத்துக் கொள்ள கிருபை புரியும் இயேசுவின் மூலம் பிதாவே ஆமென்.

மார்ச் - 17

1. கர்த்தாவே உம்மை உறுதியாய்ப்பற்றிக் கொண்ட மனதையுடையவன் உம்மையே நம்பியிருக்கிறபடியால் நீர் அவனைப் பூரண சமாதானத்துடன் காத்துக் கொள்வீர் ஆகவே தோத்திரம். ஏசா 26:3
2. விசுவாசிக்கிறவன் பதறான் ஆகவே தோத்திரம். ஏசா 28:16
3. நீங்கள் மனந்திரும்பி அமர்ந்திருந்தால் இரட்சிக்கப்படுவீர்கள் அமைரிக்கையும் நம்பிக்கையுமே உங்கள் பெலனாயிருக்கும் என்று சொன்ன இஸ்ரவேலின் பரிசுத்தராயிருக்கிற கர்த்தராகிய தேவனே தோத்திரம். ஏசா 30:15
4. பலத்தினாலும் அல்ல பராக்கிரமத்தினாலும் அல்ல என்னுடைய ஆவியினாலேயே ஆகும் என்று சொல்லும் சேனைகளின் கர்த்தாவே உமக்கு தோத்திரம். சக 4:6
5. என் கால்களை மான்கால்களைப் போலாக்கி உயரமான ஸ்தலங்களில் என்னை நடக்கப்பண்ணுகிறவரே தோத்திரம். ஆபகூக் 3:19
6. இஸ்ர வேலின் இராஜாவாகிய கர்த்தர் உன் நடுவில் இருக்கிறார் இனித் தீங்கைக் காணாதிருப்பாய் என்று ஆசீர்வதிப்பவரே உமக்குத்தோத்திரம். செப் 3:15
7. கர்த்தர் என் பெலனும் கீதமுமானவர் ஆகவே தோத்திரம். சங் 118:14
8. உம்முடைய கிருபை என் கண்களுக்கு முன்பாக இருக்கிற படியால் தோத்திரம். சங் 26:3

ஜெபம் : இரக்கமுள்ள பிதாவே, நான் மனந்திரும்பி இரட்சிப்பின் அனுபவத்துக்குள் கடந்துவர உதவிசெய்யும். நான் உம்மைமாத்திரம் சார்ந்து பூரண சமாதானத்துடன் என்னைக் காத்துக் கொள்ள கிருபை புரியுமையா நீர் என் நடுவில் இருக்கும் போது எந்த தீங்கும் என்னை அணுகாது என்று விசுவாசிக்கிறேன் உமது கிருபையைத் தந்து என்னை என்றும் காத்துக் கொள்ளுமையா இயேசுவின் மூலம் பிதாவே ஆமென்

மார்ச் - 18

1. உங்களுக்கு இரங்கும்படி கர்த்தர் காத்திருப்பார் உங்கள் மேல் மனதுருகும்படி எழுந்திருப்பார் கர்த்தர் நீதி செய்கிற தேவன் ஆகவே தோத்திரம். ஏசா 30:18

2. நீங்கள் வலது புறமாய்ச் சாயும் போதும் இடது புறமாய்ச் சாயும் போதும் வழி இதுவே, இதிலே நடவுங்கள் என்று உங்களுக்குப் பின்னாலே சொல்லும் வார்த்தையை உங்கள் காதுகள் கேட்கும் என்கிறீரே உமக்கு தோத்திரம் ஏசா 30:21

3. நீர் காற்றுக்கு ஒதுக்காகவும் பெருவெள்ளத்துக்குப் புகலிடமாகவும் வறண்ட நிலத்துக்கு நீர்க்கால்களாகவும் விடாய்த்த பூமிக்குப் பெருங்கன் மலையின் நிழலாகவும் இருக்கிறபடியால் தோத்திரம். ஏசா 32:2

4. உங்களைத் தொடுகிறவன் என் கண்மணியைத் தொடுகிறான் என்றவரே உமக்குத் தோத்திரம். சக 2:8

5. இனி உன்னைச் சிறுமைப்படுத்தாதிருப்பேன் உன் மேல் இருக்கிற நுகத்தை முறித்து உன் கட்டுகளை அறுப்பேன் என்றீரே உமக்கு தோத்திரம். நாகூம் 1:13

6. நீ உன் பொருத்தனைகளைச் செலுத்து துஷ்டன் இனி உன் வழியாய்க் கடந்து வருவதில்லை என்றபடியால் தோத்திரம் . நாகூம் 1:15

7. தரிசனம் தாமதித்தாலும் அதற்குக் காத்திரு அது நிச்சயமாய் வரும் அது தாமதிப்பதில்லை என்பதற்காய் தோத்திரம். ஆபகூக் 2:3

8. நான் உங்களுடனே இருக்கிறேன் என்று சொல்லும் கர்த்தரே உமக்கு தோத்திரம். ஆகாய் 1:13

ஜெபம் : இரக்கத்தில் ஐசுவரியமுள்ள கர்த்தாவே என்மேல் மனதுருகி இரங்கும் நான் நடக்க வேண்டிய வழியைக் காட்டி என்னை வழி நடத்துமையா நான் ஒருக்காலும் சிறுமைப்படுத்தப்படாத படிக்குக் காத்துக் கொள்ளும் என் கட்டுகளை அறுத்து நான் உம்மிலே சமாதானமாய் வாழ கிருபை தாரும் இயேசுவின் மூலம் பிதாவே ஆமென்.

1. என்னோடு வழக்காடுகிறவர்களோடே வழக்காடி என் பிள்ளைகளை இரட்சித்துக் கொள்ளும் கர்த்தாவே தோத்திரம். ஏசா 49:25
2. ஸ்திரியானவள் தன் கர்ப்பத்தின் பிள்ளைக்கு இரங்காமல் தன் பாலகனை மறப்பாளோ அவர்கள் மறந்தாலும் நான் உன்னை மறப்பதில்லை என்றீரே உமக்கு தோத்திரம். ஏசா 49:15
3. கன் மலையிலிருந்து தண்ணீரை சுரக்கப்பண்ணிய தேவனே தோத்திரம். ஏசா 48:21
4. பிரயோஜனமாயிருக்கிறதைப் போதித்து நீ நடக்க வேண்டிய வழியிலே உன்னை நடத்துகிற உன் தேவனாகிய கர்த்தர் நானே என்றவரே தோத்திரம். ஏசா 48:17
5. எங்களை மனப்பூர்வமாய்ச் சிநேகிப்பவரே தோத்திரம். ஓசியா 14:4
6. எங்களை விடுவிக்கிற தேவனாகிய கர்த்தரே தோத்திரம். யாத் 6:7
7. நீங்கள் எதைக்கேட்டாலும் அதை நான் செய்வேன் என்றவரே உமக்கு தோத்திரம். யோவா 14:14
8. கர்த்தருக்குள் மகிழ்ந்து களிகூறப்பண்ணுகிறவரே உமக்கு தோத்திரம். யோவேல் 2:23
9. எங்களோடே இருக்கிற தேவனே உமக்கு தோத்திரம். சக 8:23

ஜெபம் : என்னை மறவாத தேவனே நான் நடக்க வேண்டிய பாதையை ஒவ்வொருநாளும் எனக்கு வெளிப்படுத்தும் நான் எதைக் கேட்டாலும் அதைச் செய்ய தேவனே நீர் சித்தம் கொண்டிருப்பதற்காக தோத்திரம். சற்றும் தகுதியில்லாத என்னை சிநேகித்து உம்மில் மகிழ்ந்து களிகூரப்பண்ணுகிற என் இராஜாவே, என்னோடு எப்போதும் இருந்து என்னை ஆசீர்வதியுமையா இயேசுவின் மூலம் பிதாவே ஆமென்.

மார்ச் - 20

1. நானே தேவன் நீதிபரரும் இரட்சகருமாகிய என்னையல்லாமல் வேறே தேவன் இல்லை என்றவரே உமக்கு தோத்திரம். ஏசா 45:21
2. ஒளியைப்படைத்து இருளையும் உண்டாக்கினேன், சமாதானத்தைப்படைத்து தீங்கையும் உண்டாக்குகிறவர் நானே என்றீரே தோத்திரம். ஏசா 45:7
3. தாயின் வயிற்றில் தோன்றினது முதல் எங்களை ஏந்தி தாயின் கர்ப்பத்தில் உற்பத்தியானது முதல் எங்களைத் தாங்குகிற தேவனே உமக்கு தோத்திரம். ஏசா 46:3
4. இனிமேலும் நான் ஏந்துவேன், நான் சுமப்பேன், தப்புவிப்பேன் என்றீரே தோத்திரம். ஏசா 46:4
5. நீங்கள் கலங்காமலும் பயப்படாமலும் இருங்கள் என்று சொல்லி ஆறுதல் படுத்துகிறவரே தோத்திரம். ஏசா 44:8
6. உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவே பிரிவினை உண்டாக்குகிறது. உங்கள் பாவங்களே அவர் உங்களுக்குச் செவி கொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது என்று எங்களை எச்சரிக்கை செய்வதற்காய் தோத்திரம். ஏசா 59:2
7. நியாயஞ் செய்து இரக்கத்தை சிநேகித்து உன் தேவனக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பதை அல்லாமல் வேறே என்னத்தைக் கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார் என்று சொல்லி எங்களைத் திருத்துவதற்காய் தோத்திரம். மீகா 6:8
8. உன்னை அதிசயங்களைக் காணப்பண்ணுவேன் என்று ஆசீர்வதிக்கிறவரே தோத்திரம். மீகா 7:15

ஜெபம்: கிருபை நிறைந்த கர்த்தாவே, நீர் அளிக்கும் ஆசீர்வாதங்களக்குத் தடையாக என்னிடத்தில் காணப்படுகிற எல்லா அக்கிரமங்களையும் தயவாய் நினையாதிரும் என்னை என்றென்றும் ஏந்தி சுமந்து தப்புவிக்கிற என் தேவன்தாமே கிருபையாய் மன்னித்து அதிசங்களைக் காணப்பண்ணுமையா இயேசுவின் மூலம் பிதாவே ஆமென்.

1. எங்கள் பாவங்கள் சிவே ரென்றிருந்தாலும் உறைந்த மழையைப் போல வெண்மையாக்கி அவைகள் இரத்தாம்பரச் சிவப்பாயிருந்தாலும் பஞ்சைப் போல ஆகும் படி செய்கிற தேவனே உமக்கு தோத்திரம். ஏசா 1:18
2. இருளில் நடக்கிற ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக் காணும்படி செய்கிறவரே தோத்திரம். ஏசா 9:2
3. அந்த ஜாதியார் தங்கள் தீங்கைவிட்டுத் திரும்பினால் நானும்அவர்களுக்குச் செய்ய நினைத்த தீங்கைச் செய்யாதபடிக்கு மனம் மாறுவேன் என்றீரே உமக்கு தோத்திரம். எரே 18:8
4. கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்கள் புதுப்பெலன் அடைந்து கழுகு களைப்போல செட்டைகளை அடித்து எழும்பப்பண்ணுகிறவரே தோத்திரம். ஏசா 40:31
5. நீ என் தாசன் நான் உன்னைத் தெரிந்து கொண்டேன் நான் உன்னை வெறுத்துவிடவில்லை என்கிறீரே தோத்திரம். ஏசா 41:9
6. பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன் திகையாதே நான் உன் தேவன் நான் உன்னைப் பலப்படுத்தி உனக்குச் சகாயம் பண்ணுவேன் என் நீதியின் வலது கரத்தினால் உன்னைத் தாங்குவேன் என்றபடியால் தோத்திரம். ஏசா 41:10
7. பயப்படாதே நான் உனக்குத் துணை நிற்கிறேன் என்று கர்த்தரும் இஸ்ரவேலின் பரிசுத்தருமாகிய மீட்பர் உரைக்கிறபடியால் தோத்திரம். ஏசா 41:14
8. கர்த்தராகிய நான் அவர்களுக்கு செவிகொடுத்து இஸ்ரவேலின் தேவனாகிய நான் அவர்களைக் கைவிடாதிருப்பேன் என்றவரே உமக்கு தோத்திரம். ஏசா 41:17

ஜெபம் : என்னைக் கைவிடாத தேவனே, நீர் ஒவ்வொரு நாளும் என்னைப் பலைபடுத்தி, எனக்குத் துணை நின்றருளும் என்னுடைய பாவங்களை மன்னித்து பஞ்சைப் போலாக்குமையா எப்போதும் உமது பாதத்தில் என்னை அர்ப்பணித்து விசுவாசத்துடன் காத்திருந்து புதுபெலன் அடைய கிருபை புரியும். இயேசுவின் நாமம் பிதாவே ஆமென்.

மார்ச் - 22

1. சாலொமோனோடு கூட இருந்து அவனைப் பெரியவனாக்கின தேவனாகிய கர்த்தர் என்னுடனும் கூட இருப்பதற்காய் தோத்திரம். நாளா 1:1
2. இராத்திரியிலே சாலொமோனுக்குத் தரிசனமாகி நீ விரும்புகிறதை என்னிடத்தில் கேள் என்று சொன்ன தேவன் இன்று எனக்கும் அப்படியே செய்யப் போகிறதற்காய் தோத்திரம். நாளா 1:7
3. எங்கள் தேவனாகிய கர்த்தாவே எங்களுக்காக யுத்தம் பண்ணப் போகிறதற்காக தோத்திரம். உபா 3:22
4. என்னத்தை உண்போம் என்னத்தைக் குடிப்போம் என்று நீங்கள் கேளாமலும் சந்தேகப்படாமலும் இருங்கள் என்றீரே உமக்கு தோத்திரம். லூக் 12:29
5. தேவனுடைய இராஜ்யத்தையே தேடுங்கள். அப்பொழுது எல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும் என்றீரே உமக்கு தோத்திரம். லூக் 12:31
6. நான் அவர்களுக்குச் செய்யும் நன்மையை யெல்லாம் கேட்கப் போகிற பூமியின் எல்லா ஜாதிகளுக்கு முன்பாக அது எனக்கு மகிழ்ச்சியுள்ள கீர்த்தியாயும் புகழ்ச்சியாயும் மகிமையாயும் இருக்கும் என்றபடியால் தோத்திரம். எரே 33:9
7. எங்களுடைய சிறையிருப்பை திருப்பி எங்களுக்கு இரங்கும் தேவனே தோத்திரம். எரே 33:26
8. நான் சொன்ன நல்வார்த்தையை நிறை வேற்றுவேன் என்றவரே தோத்திரம். எரே 33:14

ஜெபம் : இரக்கமுள்ள தகப்பனே நான் ஒவ்வொருநாளும் உமது முகத்தைக்காணும்படி செய்யும் சாலொமோனுக்கு தரிசனமானீரே அதேபோல எனக்கும் உம்மை வெளிப்படுத்துமையா எதைக்குறித்தும் கலவைப்படாமல் எங்களுக்காக யுத்தம் பண்ணப்போகிற உம்மையே சார்ந்து வாழ கிருபை புரியும் நீர் அப்படியே நிறை வேற்றப்போகிறதற்காக நன்றி தகப்பனே இயேசுவின் மூலம் பிதாவே ஆமென்.

1 கர்த்தாவே எளியவனை நீர் என்றைக்கும் மறப்பதில்லை சிறுமைப்பட்டவர்களுடைய நம்பிக்கை ஒரு போதும் கெட்டுப்போவதில்லை ஆகவே தோத்திரம். சங் 9:18

2. தேவரீர் சிறுமைப்பட்ட ஜனத்தை இரட்சிக்கிறீர் ஆகவே தோத்திரம். சங் 18:27

3 கர்த்தர் சிறியவனைப் புழுதியிலிருந்து தூக்கி விடுகிறீர் எளியவனைக் குப்பையிலிருந்து உயர்த்துகிறீர் ஆகவே தோத்திரம். சங்113:7

4 தேவரீர் உமது ஜனத்தை இரட்சித்து உமது சுதந்திரத்தை ஆசீர்வதிக்கிறீர் ஆகவே தோத்திரம். சங் 28:9

5 கர்த்தர் தமது ஜனத்திற்கும் சமாதானம் அருளி அவர்களை ஆசீர்வதிக்கிறீர் ஆகவே தோத்திரம். சங் 29:11

6 கூப்பிடுகிற எளியவனையும் உதவியற்ற சிறுமையானவனையும் விடுவிக்கிறபடியால் உமக்கு தோத்திரம். சங் 72:12

7 பலவீனனுக்கும் எளியவனுக்கும் இரங்கி எளியவர்களின் ஆத்துமாக்களை இரட்சிக்றிபடியால் உமக்கு தோத்திரம். சங் 72:13

8 திடமனதாயிருந்து கர்த்தருக்குக் காத்திரு அவர் உன் இருதயத்தை ஸ்திரப்படுத்துவார் என்றதற்காய் தோத்திரம். சங் 27:14

ஜெபம்: எளியவனை என்றைக்கும் மறக்காத தேவனே நான் திடமனதாயிருந்து உமக்குக் காத்திருக்கும்படி செய்யும். என்னைப் புழுதியிலிருந்து இந்த நாளில் தூக்கி எடுத்து குப்பையிலிருந்து உயர்த்தியருளும் இரட்சிப்பின் சந்தோஷத்தைப் பெற்று உமமை மகிமைப்படுத்த எனக்குக் கிருபை புரியும். இயேசுவின் நாமத்தில் பிதாவே ஆமென்.

மார்ச் - 24

1. கர்த்தாவே நீர் என்றென்றைக்கும் ராஜாவாக வீற்றிருக்கிறபடியால் உமக்
தோத்திரம். சங் 29:10

2. கர்த்தாவே நீர் என்னைக் கைதூக்கி எடுத்த படியினால் நான் உம்மை
போற்றுவேன். அல்லேலூயா. சங் 30:1

3. நான் பாதாளக் குழியில் இறங்காதபடி கர்த்தாவே என்னை உயிரோடே காத்
படியால் உமக்கு தோத்திரம். சங் 30:3

4. நான் ஒருக்காலும் அசைக்கப்படுவதில்லை ஆகவே உமக்கு தோத்திர
சங் 30:6

5. கர்த்தாவே நீர் எனக்கு சகாயராயிருக்கிறபடியால் தோத்திரம். சங் 30:9

6. கர்த்தர் என் இருதயத்தின் வேண்டுதல்களை எனக்கு அருள் செய்கிற
அவரிடத்தில் மனமகிழ்ச்சியாயிருப்பேன் ஆகவே தோத்திரம். சங் 37:4

7. என் வழியைக் கர்த்தருக்கு ஒப்புவித்து அவர் மேல் நம்பிக்கை யாயிருக்கு
போது அவரே காரியத்தை வாய்க்கப் பண்ணுகிறபடியால் தோத்திர
சங் 37:5

ஜெபம்: நான் பாதாளக்குழியில் இறங்காதபடி என்னை உயிரோடே காக்
பரலோக ராஜாவே இந்த நாளில் என்னையும் என் வழிகளையும் உமது கரத்தி
ஒப்புவிக்கிறேன் கர்த்தாவே காரியத்தை வாய்க்கப்பண்ணுவீராக இயேசுவி
நாமத்தில் பிதாவே ஆமென்.

1. என் ஆத்துமாவே நீ ஏன் கலங்குகிறாய் தேவனை நோக்கி காத்திரு தேவனே என் தேவனே உம்மைச் சுரமண்டலத்தால் துதிப்பேன். அல்லேலூயா. சங் 43:4

2. தேவன் நமக்கு அடைக்கலமும் பெலனும் ஆபத்துக்காலத்தில் அநுகூலமான துணையுமாயிருக்கிறபடியால் உமக்கு தோத்திரம். சங் 46:1

3. நான் சந்தோஷமும் மகிழ்ச்சியும் கேட்கும்படி செய்து என் எலும்புகளைக் களிகூரப்பண்ணுகிறபடியால் உமக்கு தோத்திரம். சங் 51:8

4. என் பாவங்களைப் பாராதபடிக்கு நீர் உமது முகத்தை மறைத்து என் அக்கிரமங்களை யெல்லாம் நீக்குகிறபடியால் உமக்கு தோத்திரம். சங் 51:9

5. உற்சாகமான ஆவி என்னைத் தாங்கும்படி செய்கிறவரே உமக்கு தோத்திரம். சங் 51:12

6. நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான இருதயத்தைப் புறக்கணியாத தேவனே உமக்குத் தோத்திரம். சங் 51:17

7. தேவனே நீரே எனக்கு இதைச் செய்தீர் என்று உம்மை என்றென்றைக்கும் துதித்து உமது நாமத்திற்குக் காத்திருப்பேன் அல்லேலூயா. சங் 52:9

8. கர்த்தர் எல்லா நெருக்கத்தையும் நீக்கி என்னை விடுவிக்கிறபடியால் உமக்கு தோத்திரம். சங் 54:7

ஜெபம் : தேவனே நான் உம்மையே நோக்கிக் காத்திருப்பேன் நான் ஒருக்காலும் கலங்காதபடி செய்யும் நான் நொறுங்குண்டு மனஸ்தாபப்படும் போது என் பாவங்களைப் பாராமல் என்னை தயவாய் மன்னியும் எல்லா நெருக்கத்தினின்றும் நீங்கலாகி வாழ கிருபைபுரியும் தகப்பனே இயேசுவின் நாமத்தில் ஆமென்.

மார்ச் - 26

1. தேவரீர் என் துணையும், என்னை விடுவிக்கிறவருமாயிருக்கிறீர். தேவரீ
என் மேல் நினைவாயிருக்கிறபடியால் உமக்கு தோத்திரம். சங் 40:17
2. சிறுமைப்பட்டவன் மேல் சிந்தையுள்ளவனைத் தீங்கு நாளில் கர்த்த
விடுவிக்கிறதற்காய் உமக்கு தோத்திரம். சங் 41:1
3. என்னுடைய வியாதியிலே என் படுக்கை முழுவதையும் மாற்றி
போடுகிறவரே உமக்கு தோத்திரம். சங் 41:3
4. தீமையை விட்டு விலகி நன்மை செய்யும் போது என்றென்றைக்கும்
நிலைத்திருக்கச் செய்பவரே உமக்கு தோத்திரம். சங் 37:26
5. என்றென்றைக்கும் சதாகாலங்களிலும் நம்முடைய தேவனாய் இருந்
மரணபரியந்தம் நம்மை நடத்துகிறபடியால் தோத்திரம். சங் 48:14
6. நீ தேவனுக்கு ஸ்தோத்திர பலியிட்டு, உன்னதமானவருக்கு உன்
பொருத்தனைகளைச் செலுத்தி, ஆபத்துக்காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு
நான் உன்னை விடுவிப்பேன். நீ என்னை மகிமைப் படுத்துவாய் என்றீர
உமக்கு தோத்திரம். சங் 50:14
7. ஸ்தோத்திர பலியிடுகிறவன் என்னை மகிமைப்படுத்துகிறான் என்ற தேவனே
உமக்கு தோத்திரம். சங் 50:23

ஜெபம்: மரணபரியந்தம் என்னை நடத்தும் தேவனே, தீங்கு நாளில் என்னை விடுவித்து, நான் என்றும் உம்மில் நிலைத்திருக்கச் செய்யும். பரம வைத்தியரே, நீர் யேகோவா ரொபேகாவாக இருந்து வியாதி என்னை அணுகாதபடி காத்தருளும். பொருத்தனை செய்து உம்மை மகிமைப்படுத்த கிருபை புரியும் இயேசுவின் நாமத்தில் பிதாவே ஆமென்.

1. கர்த்தாவே நீர் என் மனவிருப்பத்தின்படி எனக்குத் தந்தருளி என்னுடைய உதடுகளின் விண்ணப்பத்தைத் தள்ளாதிருக்கிறீர் ஆகவே தோத்திரம். சங் 21:2

2. நீர் எமது மனவிருப்பத்தின்படி எமக்குத் தந்தருளி எமது ஆலோசனைகளையெல்லாம் நிறை வேற்றுகிறீர். ஆகவே தோத்திரம். சங் 20:14

3. தம்முடைய சொந்த குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக் கொடுத்தவர், அவரோடே கூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி, ஆகவே தோத்திரம். ரோ 8:32

4. கிறிஸ்து மரித்து எழுந்து தேவனுடைய வலது பாரிசத்தில் இருந்து நமக்காக வேண்டுதல் செய்கிறீரே உமக்கு தோத்திரம். ரோ 8:34

5. நான் எப்போதும் வந்தடையத்தக்க கன்மலையாய் காத்தாவே, நீர் இருப்பதற்காக உமக்கு தோத்திரம். சங் 71:3

6. கர்த்தாவே உம்மைத் தேடுகிறவர்களை நீர் கைவிடுகிறதில்லை ஆகவே தோத்திரம். சங் 9:10

7. கர்த்தர் எனக்கு நன்மை செய்தபடியால் அவரைப் பாடுவேன். சங் 13:6

8. கர்த்தரில் மனமகிழ்ச்சியாயிருப்பாய் பூமியின் உயர்ந்த இடங்களில் உன்னை ஏறியிருக்கும்படி பண்ணுவேன் என்று சொல்லும் கர்த்தாவே உமக்கு தோத்திரம். ஏசா 58:14

ஜெபம்: உயிர்த் தெழுந்த பரம தகப்பனே, என் விண்ணப்பத்துக்கு பதில் அறித்து நன்மையானதை அருளிச் செய்யும் நீர் என்னைக் கைவிடாத தேவன் என்று விசுவாசிக்கிறேன் உம்மில் என்றும் மனமகிழ்ச்சியாயிருந்து, உம்மை பாடிப் போற்றி மகிமைப்படுத்த கிருபை புரியும் தகப்பனே. இயேசுவின் நாமத்தில் ஆமென்.

மார்ச் - 28

1. தேவரீர் திக்கற்ற பிள்ளைகளுக்கும் ஒடுக்கப்பட்டவர்களுக்கும் நீதி செய்
உமது செவிகளை சாய்க்கிறபடியால் உமக்கு தோத்திரம். சங் 10:1
2. உபத்திரவம் பொறுமையையும், பொறுமை பரீட்சையையும், பரீட்
நம்பிக்கையையும், உண்டாக்குகிறதென்று நாங்கள் அறிந்
உபத்திரவங்களிலே மேன்மைபாராட்டும்படி செய்கிறவரே உமக்கு தோத்திர
ரோ 5:3
3. தேவ அன்பு எங்களுடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறபடியா
உமக்கு தோத்திரம். ரோ 5:5
4. ஆவியானவரும் பெலவீனங்களில் எனக்கு உதவி செய்கிறீர் நான் ஏற்ற
வேண்டிக் கொள்வதின்னதென்று அறியாமலிருக்கிறபடியால் ஆவியான
தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு எனக்காக வேண்டுத
செய்கிறீரே உமக்கு தோத்திரம். ரோ 8:26
5. அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தி
அன்பு கூடுகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதற்கா
தோத்திரம். ரோ 8:28
5. கர்த்தர் என் கன்மலையும் என் கோட்டையும் என் இரட்சகரும் என் தேவனு
நான் நம்பியிருக்கிற என் துருகமும், என் கேடகமும், எ
இரட்சண்யக்கொம்பும், என்உயர்ந்த அடைக்கலமமாயிருக்கிறபடியா
உமக்கு தோத்திரம். சங் 18:2
7. நெருக்கப்படுகிற காலங்களில் நீரே என் தஞ்சமாயிருக்கிறபடியால் உமக்
தோத்திரம். சங் 9:9

ஜெபம்: திக்கற்ற பிள்ளைகளுக்கு அடைக்கலமாயிருக்கும் கர்த்தா
நெருக்கப்படுகிற காலங்களில் என் தஞ்சம் நீரே எனக்காக வேண்டுதல் செய்கிறவ
உமது செவியைச் சாய்த்து தயவாய் என் விண்ணப்பத்தைக் கேட்டருளும் தே
அன்பினால் என்னை நிரப்பும் இயேசுவின் நாமத்தில் ஆமென்.

மார்ச் - 29

1 கர்த்தராகிய தேவனே நீர் அதிசயங்களைச் செய்கிறவர் ஆகவே உமக்குத் தோத்திரம். சங் 72:18

2 கர்த்தருடைய செயல்களையும் பூர்வகாலத்து அதிசயங்களையும் நினைவு கூரும்படி செய்தவரே உமக்கு தோத்திரம். சங் 77:11

3 கர்த்தரின் துதிகளையும், அவருடைய பலத்தையும் அவர்செய்த அதிசயங்களையும், பின்வரும் சந்ததியான பிள்ளைகளுக்கு விவரிக்கும்படி செய்கிறவரே உமக்கு தோத்திரம். சங் 78:4

4 என் சத்தத்தை தேவனிடத்தில் உயர்த்திக் கெஞ்சின போது அவர் எனக்கு செவிகொடுத்தபடியால் தோத்திரம். சங் 77:1

5 உன் தேவனாகிய கர்த்தர் நானே உன் வாயை விரிவாய்த்திற நான் அதை நிரப்புவேன் என்றவரே உமக்குத் தோத்திரம். சங் 81:10

6 அதிசயங்களைச் செய்கிற தேவன் நீரே ஆகவே தோத்திரம். சங் 77:14

7 கர்த்தர் நன்மையானதைத் தருகிறபடியால் உமக்குத் தோத்திரம். சங் 85:12

8 எனக்கோ தேவனை அண்டிக் கொண்டிருப்பதே நலம் ஆகவே தோத்திரம். சங் 73:28

ஜெபம்: பரலோகப்பிதாவே, அதிசயங்களைச் செய்கிற தேவன் நீர் ஒருவரே என்று விசுவாசிக்கிறேன். என் சத்தத்தை உம்மிடத்தில் உயர்த்திக் கெஞ்சும்போது கர்த்தாவே இரக்கமாய் எனக்குச் செவி கொடுத்தருளும் இன்றும் என்றும் உம்மையே அண்டிக் கொண்டிருக்கக் கிருபை புரியும் இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்.

மார்ச் - 30

1. என் வலது கையைப்பிடித்துத் தாங்குபவரே உமக்கு தோத்திரம். சங் 73:2
2. கர்த்தர் என் மேன்மையை பெருகப்பண்ணி என்னை மறுபடி தேற்றுகிறபடியால் தோத்திரம். சங் 71:21
3. ஒருவனைத் தாழ்த்தி ஒருவனை உயர்த்தும் தேவனே உமக்கு தோத்திர சங் 75:7
4. ஜனத்தில் சிறுமைப்படுகிறவனை நியாயம் விசாரித்து ஏழைகளி பிள்ளைகளை இரட்சிக்கிறவரே உமக்கு தோத்திரம். சங் 72:4
5. நெருக்கத்திலே நான் கூப்பிட்ட வேளையிலே நீர் என்னை தப்புவிக்கிறபடியால் உமக்கு தோத்திரம். சங் 81:7
6. கர்த்தருக்குப்பயப்படுகிற மனுஷனுக்குத் தாம் தெரிந்து கொள்ளும் வழியை போதிக்கிறவரே உமக்கு தோத்திரம். சங் 25:12
7. கர்த்தருக்கு பயப்படுகிற மனுஷனுடைய ஆத்துமாவை நன்மையா நிரப்புகிறவரே உமக்கு தோத்திரம். சங் 25:13
8. உச்சிதமான கோதுமையினால் போஷித்து கன்மலையின் தேனினா என்னை திருப்தியாக்குபவரே உமக்கு தோத்திரம். சங் 81:16

ஜெபம் : இரக்கம் நிறைந்த தேவனே, இந்த நாளில் நான் உம்மை நோக்கி கூப்பிடுகிறேன். எல்லா நெருக்கத்தினின்றும் இன்று என்னைத் தப்புவியும். உம வழிகளைத் தெரிந்து கொள்ளக்கூடிய ஞானத்தை எனக்குத் தாரும். நீர் என் வலதுகையைப்பிடித்து என்னைத்தாங்கும் போது நான் தேற்றப்பட கிருபை புரி இயேசுவின் நாமத்தில் பிதாவே ஆமென்.

1. யாவருக்கும் செலுத்தவேண்டிய கடமைகளைச் செலுத்துங்கள். எவனுக்கு வரியைச் செலுத்த வேண்டியதோ அவனுக்கு வரியையும் எவனுக்கு தீர்வையைச் செலுத்த வேண்டியதோ அவனுக்குத் தீர்வையையும் செலுத்துங்கள். எவனுக்குப் பயப்பட வேண்டியதோ அவனுக்குப் பயப்படுங்கள் எவனைக் கனம் பண்ண வேண்டியதோ அவனைக் கனம் பண்ணுங்கள் என்றுரைத்த தேவனே தோத்திரம். ரோ 13:7

2. இராயனுடையதை இராயனக்கும் தேவனடையதை தேவனுக்கும் செலுத்துங்கள் என்று வழி நடத்தியவரே தோத்திரம். மாற் 12:17

3. ஐசுவரியமும் கனமும் உம்மாலே வருகிறது தேவரீர் எல்லாவற்றையும் ஆளுகிறவர் உம்முடைய கரத்திலே சத்துவமும் வல்லமையும் உண்டு ஆகவே தோத்திரம். I நாளா 29:12

4. கர்த்தாவே மாட்சிமையும், வல்லமையும், மகிமையும், ஜெயமும், மகத்துவமும், உம்முடையவைகள். வானத்திலும் பூமியிலும் உள்ளவைகளெல்லாம் உம்முடைய வைகளாயிருப்பதால் தோத்திரம். I நாளா 29:11

5. எல்லாம் உம்மால் உண்டானது. உமது கரத்திலே வாங்கி உமக்கும் கொடுக்கச் செய்கிறவரே தோத்திரம். I நாளா 29:14

6. அநாதி தேவனே எனக்கு அடைக்கலம் அவருடைய நித்திய புயங்கள் எனக்கு ஆதாரம். ஆகவே தோத்திரம். உபா 33:27

7. நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன். திகையாதே, நான் உன் தேவன், நான் உன்னைப் பலப்படுத்தி, உனக்குச் சகாயம் பண்ணுவேன். என் நீதியின் வலது கரத்தினால் உன்னைத் தாங்குவேன் என்றீரே தோத்திரம். ஏசா 41:10

ஜெபம்: இரக்கமுள்ள பிதாவே, நான் என் கடமைகளை கிரமமாய் நிறைவேற்ற கிருபை புரியும். அரசாங்கத்துக்கு செலுத்த வேண்டிய வரிப்பணத்தை நேர்மையாய் செலுத்த என் இருதயத்தை பரிசுத்தப்படுத்தி காரும் தகப்பனே. நீர் எப்போதும் என்னோடு கூடவே இருந்து, நான் பரிசுத்தத்திலும் உண்மையிலும் தெய்வபயத்திலும் நிலைத்திருக்கக்கிருபை தாருமையா. இயேசுவின் மூலம் பிதாவே ஆமென்.

ஏப்ரல் - 1

1. நான் ஏற்ற காலத்தில் உங்களுக்கு மழை பெய்யப்பண்ணுவேன் பூமி பலனையும் வெளியிலுள்ள மரங்கள் தங்கள் கனியைக் கொடுக்கும் எ சொன்ன தேவனே உமக்கு தோத்திரம். லேவி 26:4
2. நீ உன் தானியத்தையும் உன் திராட்ச ரசத்தையும் உன் எண்ணெயை சேர்க்கும்படிக்கு. நான் ஏற்ற காத்தில் உங்கள் தேசத்தில் முன் மாரியை பின் மாரியையும் பெய்யப்பண்ணி. மிருக ஜீவன்களுக்காக வெளிகளிலே புல் முளைக்கும்படி செய்வேன். நீ சாப்பிட்டுத் திருப்தியடை என்று ஆசீர்வதிக்கும் தேவனே தோத்திரம். உபா 11:15
3. நான் பிரமிக்கத்தக்க அதிசயமாய் உண்டாக்கப்பட்ட படியால் உம் துதிப்பேன் உமது கிரியைகள் அதிசயமானவைகள் ஆகவே தோத் சங் 139:14
4. சிறுமைப்பட்டவர்களுடைய கூப்பிடுதலை மறவாத தேவனே தோத் சங் 9:12
5. என் தேவனாகிய கர்த்தர் என் நடுவிலே இருக்கிறார். வல்லமையுள்ளவர் ஆகவே தோத்திரம். செப் 3:17
6. நன்மையினால் என் வாயைத் திருப்தியாக்குகிறார் கழுகுக்குச் சமான என் வயது திரும்ப வால வயது போலாகிறது. ஆகவே தோத்திரம். சங் 10
7. கர்த்தர் உன் ஆக்கினைகளை அகற்றி உன் சத்துருக்களை விலக்கினார் வேலின் ராஜாவாகிய கர்த்தர் உன் நடுவிலே இருக்கிறார் இனித்தீங் காணாதிருப்பாய் என்றீரே உமக்கு தோத்திரம். செப் 3:15

ஜெபம்: கிருபை நிறைந்த பிதாவே, எங்கள் தேசத்தில் நல்ல மழை கட்டளையிட்டு செழிப்பின் நாட்களைக் காணப்பண்ணும். அதிசயமான கிரியைகளை எண்ணி எண்ணி உம்மைத் துதிக்கக் கிருபை புரியும். தீ நாட்களை எங்களை விட்டகற்றி, நன்மையால் எங்களைத் திருப்தியா இயேசுவின் மூலம் பிதாவே ஆமென்.

இனி உன்னைச் சிறுமைப்படுத்தாதிருப்பேன் என்று சொல்லும் கர்த்தாவே உமக்கு தோத்திரம். நாகூம் 1:12

துஷ்டன் இனி உன் வழியாய்க் கடந்து வருவதில்லை என்றதற்காய் தோத்திரம். நாகூம் 1:15

என சித்தத்தின் படியல்ல, உம்முடைய சித்தத்தின் படியே ஆகக்கடவது என்று நீர் ஜெபம் பண்ணி அதை எங்களுக்கும் போதிக்கிறவரே உமக்கு தோத்திரம். லூக் 22:42

பிதாவே இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே என்று மொழிந்து மன்னிப்பின் மேன்மையை வெளிப்படுத்தினீரே உமக்கு தோத்திரம். லூக் 23:34

இன்றைக்கு நீ என்னுடனே கூட பரதீசிலிருப்பாய் என்று சிலுவையிலிருந்து உம்மை இகழ்ந்த குற்றவாளியை ஆசீர்வதித்தவரே உமக்கு தோத்திரம். லூக் 23:43

அத்திமரம் துளிர்விடாமற் போனாலும் திராட்சச் செடிகளில் பழம் உண்டாகாமற் போனாலும் ஒலிவமரத்தின் பலன் அற்றுப் போனாலும் உங்கள் தானியத்தை விளைவியாமற் போனாலும் தொழுவத்தில் மாடு இல்லாமற் போனாலும் நான் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன் என் இரட்சிப்பின் தேவனுக்குள் களிகூருவேன் அல்லேலூயா. ஆபகூக் 3:17

...பம். மன்னிப்பின் மகத்துவத்தை வெளிப்படுத்தின கர்த்தாவே, நான் எந்த ...லையிலிருந்தாலும் உம்மில் மனமகிழ்ச்சியாயிருந்து களிகூரப்பண்ணியருளும் ...தைச் செய்தாலும் உமது சித்தத்தின் படி செய்ய கிருபைபுரியும் நான் ஒருக்காலும் ...றுமைப்படுத்தப்படாதபடிக்கு கிருபையாய் காத்தருளும் இயேசுவின் நாமத்தில் ...தாவே ஆமென்.

ஏப்ரல் - 3

1. கர்த்தர் நல்லவர் இக்கட்டு நாளிலே அரணான கோட்டை ஆகவே தோத்தி
நாகூம் 1:7
2. இஸ்ரவேலின் ராஜாவாகிய கர்த்தர் உன் நடுவில் இருக்கிறார். இ
தீங்கைக் காணாதிருப்பாய் என்பதற்காய் தோத்திரம். செப் 3:15
3. மனுஷகுமாரனுக்கு முன்பாக நிற்கப் பாத்திரவான்களாக எண்ணப்படுவத
எப்பொழுதும் ஜெபம் பண்ணி விழித்திருக்கும்படி சொல்வதற்காய் தோத்தி
லூக் 21:36
4. நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு ஜெபம் பண்ணுங்கள் என்றீரே உம
தோத்திரம். லூக் 22:40
5. உங்களில் பெரியவன் சிறியவனைப் போலவும் தலைவன் பணிவிடை
காரனைப் போலவும் இருக்கக்கடவன் என்று சொல்லி தாழ்மை
போதிக்கிறவரே உமக்கு தோத்திரம். லூக் 22:26
6. பூமியிலுள்ள சகல ஜனங்களுக்குள்ளும் நான் உங்களைக் கீர்த்தி
புகழ்ச்சியுமாக வைப்பேன் என்றவரே உமக்குத் தோத்திரம். செப் 3:15
7. பயப்படாதே மகிழ்ந்து களிகூரு கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்
என்கிறபடியால் தோத்திரம். யோவேல் 2:21

ஜெபம்: நல்லவரே வல்ல பிதாவே இக்கட்டு நாளிலே எங்களுக்கு அரண
இருப்பவரே இனி நாங்கள் தீங்கைக் காணாதபடிக்குக் காத்தருளும் எப்போ
ஜெபம் பண்ணி சோதனைகளில் அகப்படாதபடி எங்களைக் காத்துக்கொள்ளகிரு
புரியும். எங்கள் வாழ்வில் பெரிய காரியங்களைச் செய்வீர் எ
விசுவாசிக்கிறேன் இயேசுவின் நாமத்தில் ஜெபம் கேளும் பிதாவே ஆமென்.

ஏப்ரல் - 4

1. எல்லா தேவர்களுக்கும் மகாராஜனுமாயிருக்கிற கர்த்தாவே உமக்கு தோத்திரம். சங் 95:3
2. கர்த்தர் எங்களையும் எங்கள் பிள்ளைகளையும் வர்த்திக்கப்பண்ணுகிறீர் ஆகவே தோத்திரம். சங் 115:14
3. சிலுவையில் அறையப்பட்ட நசரேயனாகிய இயேசு உயிர்த்தெழுந்தீரே உமக்கு தோத்திரம். மாற் 16:6
4. உயிர்த் தெழுந்த பின்பு மறுரூபமாய்த் தரிசனமானபடியால் தோத்திரம். மாற் 16:12
5. பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு தேவனுடைய வலது பாரிசத்தில் உட்கார்ந்திருக்றிவரே உமக்கு தோத்திரம். மாற் 16:19
6. உமக்குப் பயப்படுகிற பெரியோரையும் சிறியோரையும் ஆசீர்வதிக்கும் தேவனே உமக்கு தோத்திரம். சங் 115:13
7. கர்த்தர் பெரியவரும் ஸ்தோத்திரிக்கப்படத்தக்கவருமாயிருக்கிற படியால் தோத்திரம். சங் 96:4
8. யேகோவா என்னும் நாமத்தையுடைய தேவரீர் ஒருவரே பூமியனைத்தின் மேலும் உன்னதமானவராய் இருக்கிறபடியால் உமக்கு தோத்திரம். சங் 83:17

ஜெபம் : யேகோவா தேவனே சிலுவையில் வெற்றி சிறந்து தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருப்பவரே எங்களையும் எங்கள் பிள்ளைகளையும் வர்த்திக்கப்பண்ணி ஆசீர்வதியும் நீர் ஒருவரே உன்னதமானவர் என்றும் மகாராஜனுமாயிருக்கிறீர் என்று விசுவாசிக்கிறோம் எங்களது விசுவாசத்தை பலப்படுத்தி நாங்கள் என் றென்றும் உம்மைத் துதித்து மகிமைப்படுத்த கிருபை புரியும். இயேசுவின் நாமத்தில் பிதாவே ஆமென்.

ஏப்ரல் - 5

1. பொல்லாப்பு உனக்கு நேரிடாது, வாதை உன் கூடாரத்தை அனுகாது என் தேவனே உமக்கு தோத்திரம். சங் 91:10
2. என் பாதம் கல்லில் இடறாதபடிக்கு தூதர்கள் என்னைத்தங்கள்கைகள ஏந்திக் கொள்ளும்படி செய்கிறதற்காய் உமக்கு தோத்திரம். சங் 91:12
3. என் வழிகளிலெல்லாம் என்னைக் காக்கும்படி தூதர்களுக்குக் கட்டளையிடு கர்த்தாவே உமக்கு தோத்திரம். சங் 91:11
4. என் சித்தத்தின் படியல்ல, உம்முடைய சித்தத்தின் படியே ஆகக் கடவது என் சொல்லி எங்களுக்கு கற்றுக் கொடுக்கிறவரே உமக்கு தோத்திரம். மாற் 14:3
5. நீங்கள் சோதனைக் குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம் பண்ணுங் என்று எங்களை எச்சரிக்கிறதற்காக உமக்கு தோத்திரம். மாற் 14:38
6. என் பக்கத்தில் ஆயிரம் பேரும், என் வலது புறத்தில் பதினாயிரம் பேரு விழுந்தாலும் அது என்னை அணுகாதபடி காக்கிறவரே உமக்கு தோத்திர சங் 91:7
7. பாழாக்கும் கொள்ளை நோய்க்கு என்னைத் தப்புவிக்கிறவரே உமக் தோத்திரம். சங் 91:3
8. உன்னதமானவருடைய மறைவில் என்னை வைத்து சர்வ வல்லவருடை நிழலில் தாங்கச் செய்கிறவரே உமக்கு தோத்திரம். சங் 91:1

ஜெபம் : பரலோகப் பிதாவே, இந்த நாளில் எந்த வித பொல்லாப்பும் என்ன அணுகாதபடி தயவாய்க் காத்தருளும். உமது சித்தத்திற்கு முழுமனதோடு என்ன ஒப்புக் கொடுக்கிறேன். வாதை என்னை அணுகாதபடி காத்து, பாழாக்கும் கொள்ள நோய்க்கு என்னை தப்புவித்தருளும். உம்முடைய நிழலில் எப்போத இருக்கும்படி தேவனே கிருபை புரியும். இயேசுவின் நாமத்தில் பிதாவே ஆமென்.

ஏப்ரல் - 6

1. கர்த்தரை நம்பியிருக்கிறவனையோ கிருபை சூழ்ந்து கொள்ளும்ஆகவே தோத்திரம். சங் 32:10

2. அன்பினால் ஒருவருக் கொருவர் ஊழியஞ் செய்யுங்கள் என்றீரே உமக்கு தோத்திரம். கலா 5:13

3. சின்னவன் ஆயிரமும் சிறியவன் பலத்த ஜாதியுமாவான் என்றீரே தோத்திரம். ஏசா 60:22

4. கர்த்தர் நல்லவர் இக்கட்டு நாளிலே அரணான கோட்டை ஆகவே தோத்திரம். நாகூம் 1:7

5. எங்கள் மேல் நீதியின் சூரியனை உதிக்கப்பண்ணுகிறவரே தோத்திரம். மல் 4:2

6. கர்த்தர் நமக்குப் பெரிய காரியங்களைச் செய்தார் ஆகவே தோத்திரம். சங் 126:3

7. நான் உன்னோடே கூட இருந்து உன்னை ஆசீர்வதிப்பேன் என்றீரே உமக்கு தோத்திரம். ஆதி 26:3

8. இரட்டிப்பான நன்மையைத் தருகிறவரே தோத்திரம். சக 9:12

9. கேளுங்கள் அப்பொழுது கொடுக்கப்படும் என்றீரே உமக்கு தோத்திரம். மத் 7:7

10. கர்த்தர் என் ஜெபத்தை ஏற்றுக் கொள்ளுவார் ஆகவே தோத்திரம். சங் 6:9

ஜெபம்: பரலோகப் பிதாவே, நீரே எனக்கு அரணான கோட்டையாய் இருந்து என்னைக் காத்துக் கொள்ளும் நான் எப்போதும் உம்மை மாத்திரம் சார்ந்து வாழ்ந்து அதன் மூலம் ஆசீர்வதிக்கப்பட கிருபை புரியும். இரட்டிப்பான நன்மையைத் தந்து தயவாய் வழிநடத்தும் கிருபையாய் இரங்கி என் ஜெபத்தை ஏற்றுக் கொண்டு, நீர் பெரிய காரியங்களைச் செய்வீர் என்று விசுவாசிக்க உதவிசெய்யும். இயேசுவின் நாமத்தில் ஆமென்.

ஏப்ரல் - 7

1. மரித்தோரிலிருந்து எழுந்த கிறிஸ்து இனி மரிப்பதில்லை என்று அறிந்திருக்கிறோம். மரணம் இனி அவரை ஆண்டுகொள்வதில்லை ஆகவே தோத்திரம். ரோ 6:9
2. மரித்தோரை உயிர்ப்பித்து இல்லாதவைகளை இருக்கிறவைகளைப் போல அழைக்கிறவருமாயிருக்கிற தேவனே தோத்திரம். ரோ 4:17
3. நம்மில் ஒவ்வொருவனும் தன்னைக் குறித்து தேவனுக்குக் கணக்கொப்புவிப்பான் என்று எச்சரிக்கிறபடியால் தோத்திரம். ரோ 14:12
4. உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன் உனக்குக் கொஞ்சம் பெலன் இருந்தும் நீ என் நாமத்தை மறுதலியாமல் என் வசனத்தைக் கைக் கொண்டபடியினால் இதோ திறந்தவாசலை உனக்கு முன்பாக வைத்திருக்கிறேன் என்றவரே தோத்திரம். வெளி 3:8
5. கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார் இனி மரணமுமில்லை துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை, முந்தினவைகள் ஒழிந்து போயின ஆகவே தோத்திரம். வெளி 21:4
6. இனி ஒரு சாபமுமிராது என்கிறீரே உமக்கு தோத்திரம். வெளி 22:3
7. மெய்யாகவே நான் சீக்கிரமாய் வருகிறேன் என்கிறார் ஆமென் கர்த்தராகிய இயேசுவே வாரும். வெளி 22:20

ஜெபம்: பரலோகத்திலிருந்து வருகிற தேவனே, நீர் எல்லாரிலும் மேலானவர் உமக்குப் பிரியமில்லாதபடிக்கு என்னிடத்தில் காணப்படுகின்ற என் பொல்லா கிரியைகளை கிருபையாய் மன்னித்து ஒரு சாபமும் என்னை அணுகாதபடி தயவாய்க் காத்துக் கொள்ளும் என் கண்ணீர் யாவையும் துடைத்து என்னை ஆறுதல்படுத்தும் இயேசுவின் மூலம் ஜெபம் கேளும் பிதாவே ஆமென்.

ஏப்ரல் - 8

1 கர்த்தாவே என் விண்ணப்பம் உமது சந்நிதியில் வரும் போது உமது
வார்த்தையின்படி என்னை விடுவிக்கிறதற்காக உமக்கு தோத்திரம்.
சங் 119:170

2 உம்முடைய வார்த்தையிலே என் காலடிகளை நிலைப்படுத்தி ஒரு அநியாயமும்
என்னை ஆளவொட்டாமல் காக்கிறவரே உமக்கு தோத்திரம். சங் 119:133

3 தேவனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் அவருடைய நாமத்தினாலே
பாவமன்னிப்பைப் பெறுவான். ஆகவே தோத்திரம். அப் 10:43

4 தேவன் நன்மை செய்து வந்து வானத்திலிருந்து மழைகளையும் செழிப்புள்ள
காலங்களையும் நமக்குத் தந்து ஆகாரத்தினாலும் சந்தோஷத்தினாலும்
நம்முடைய இருதயங்களை நிரப்புகிறதற்காக தோத்திரம். அப் 14:17

5 சிறைச் சாலையின் உட்காவலறையில் பவுலும் சீலாவும் நடு ராத்திரியில்
ஜெபம் பண்ணி தேவனைத் துதித்துப் பாடவைத்தீரே உமக்கு தோத்திரம்.
அப் 16:25

6 அப்போது பூமி மிகவும் அதிர்ந்து கதவுகளெல்லாம் திறவுண்டு போகவும்
எல்லாருடைய கட்டுகளும் கழன்று போகவும் பண்ணினீரே உமக்கு
தோத்திரம். அப் 16:26

7 உமது வேதத்தை நேசிக்கிறவர்களுக்கு இடறலில்லாத மிகுந்த
சமாதானத்தைத் தருகிறவரே உமக்கு தோத்திரம். சங் 119:165

8 நான் மிகவும் உபத்திரவப்படும் போது கர்த்தாவே, உம்முடைய
வசனத்தின்படியே என்னை உயிர்ப்பிக்கிறதற்காய் உமக்கு தோத்திரம்.
சங் 119:107

ஜெபம்: இரக்கமுள்ள கர்த்தாவே, நான் உம்முடைய வார்த்தைகளை விசுவாசித்து உம்முடைய நாமத்தினாலே பாவமன்னிப்பைப் பெற்றுக் கொள்ள உதவி செய்யும் நான் உபத்திரவப்படும் வேளைகளில் என்னை நீர் உயிர்ப்பித்து, சமாதானத்தால் நிரப்பியருளும் தகப்பனே, ஒரு அநியாயமும் என்னை ஆளவொட்டாதபடி காத்துக் கொள்ளும் இயேசுவின் நாமத்தில் பிதாவே ஆமென்.

ஏப்ரல் - 9

1. கர்த்தாவே உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும் என் பாதைக்கு
வெளிச்சமுமாயிருக்கிறபடியால் உமக்கு தோத்திரம். சங் 119:105
2. கர்த்தாவே உம்முடைய வசனம் சமூலமும் சத்தியம் உம்முடைய நீதி நியாய
மெல்லாம் நித்தியம் ஆகவே தோத்திரம். சங் 119:160
3. நீ பயப்படாமல் பேசு மவுனமாயிராதே நான் உன்னுடனே கூட இருக்கிறேன்
உனக்கு தீங்கு செய்யும்படி ஒருவனும் உன் மேல் கை போடுவதில்லை
என்கிறீரே உமக்கு தோத்திரம். அப் 18:10
4. தேவனுடைய தூதனானவன் இராத்திரியிலே என்னிடத்தில் வந்து நின்று
பயப்படாதே இதோ தேவன் உனக்கு தயவு பண்ணினார் என்று சொல்லி
தேற்றுகிறவரே உமக்கு தோத்திரம். சங் 27:24
5. எனக்குச் சொல்லப்பட்ட பிரகாரமாகவே நடக்கும் என்று தேவனிடத்தில்
நம்பிக்கையாயிருக்கும் படி செய்கிறீரே உமக்கு தோத்திரம். அப் 27:25
6. உங்கள் தலையிலிருந்து ஒரு மயிரும் விழாது என்று சொல்லி
பாதுகாப்பளிப்பவரே உமக்கு தோத்திரம். அப் 27:34
7. தேனிலும் மதுரமான உம்முடைய வார்த்தைகள் என் நாவுக்கு
இனிமையானவைகளா யிருக்கிறபடியால் உமக்கு தோத்திரம். சங் 119:103
8. இக்கட்டும் நெருக்கமும் என்னைப் பிடித்த வேளையில் உமது கற்பனைகள்
என்மன மகிழ்ச்சியாயிருக்கிறபடியால் உமக்கு தோத்திரம். சங் 119:143

ஜெபம் : என் தேற்றரவாளனாகிய தேவனே, உமது வசனம் எனக்கு ஆறுதலாயிருந்து என்னை வழிநடத்தும்படி கிருபை புரியும் ஒருவரும் எனக்குத் தீங்கு செய்யாதபடிக்கு உம்முடைய வார்த்தைகள் எனக்கு அரணான கோட்டையாய் இருக்கும்படி செய்யும. நீர் தாமே எப்போதும் என்னோடிருந்து உமது திருவசனங்கள் மூலம் என்னை நடத்தும் பிதாவே இயேசுவின் நாமத்தில் ஆமென்.

1 ஸ்திரிகளுக்குள்ளே நீ ஆசீர்வதிக்கப்பட்டவள் உன் கர்ப்பத்தின்கனியும் ஆசீர்வதிக்கப்பட்டது என்று என்னை ஆசீர்வதிக்கும் கர்த்தாவே உமக்கு தோத்திரம். லூக் 1:42

2 மனைவியை வீட்டோரங்களில் கனி தரும் திராட்சக் கொடியைப் போல இருக்கச் செய்கிறவரே உமக்கு தோத்திரம். சங் 128:3

3 விசுவாசித்தவனே பாக்கியவதி கர்த்தரால் சொல்லப்பட்டவைகள் நிறைவேறும் என்பதற்காய் தோத்திரம். லூக் 1:45

4 நீ உன் பிள்ளைகளின் பிள்ளைகளையும் இஸ்ர வேலுக்கு உண்டாகும் சமாதானத்தையும் காண்பாய் என்றவரே உமக்கு தோத்திரம். சங் 128:6

5 கர்த்தர் சீயோனிலிருந்து உன்னை ஆசீர்வதிப்பார். நீ ஜீவனுள்ள நாளெல்லாம் எருசலேமின் வாழ்வைக் காண்பாய் என்று சொன்ன தேவனே உமக்கு தோத்திரம். சங் 128:5

6 கர்த்தர் நமக்குப் பெரிய காரியங்களைச் செய்தார். இதினிமித்தம் நாம் மகிழ்ந்திருக்கப்பணுகிற தேவனே உமக்கு தோத்திரம். சங் 126:3

7 மனுஷரால் இது கூடாதது தான் தேவனால் இது கூடாததல்ல தேவனாலே எல்லாம் கூடும் ஆகவே தோத்திரம். மாற் 10:27

8 கர்த்தருக்குப் பயப்படுகிற மனுஷன் (இவ்விதமாய்) ஆசீர்வதிக்கப்படுவான் ஆகவே தோத்திரம். சங் 128:4

ஜெபம்: அன்பு தெய்வமே என் வாழ்வில் பெரிய காரியங்களை நடப்பிக்கிற கர்த்தாவே என்னையும் குடும்பத்ினரையும்உம் பாதத்தில் ஒப்புக் கொடுக்கிறேன் இஸ்ரவேலுக்கு உண்டாகும் சமாதானத்தையும் எருசலேமின் வாழ்வையும் உமது இரக்கம் நிறைந்த கரத்திலிருந்து பெற்று இவ்விதமாய் ஆசீர்வதிக்கப்பட எனக்குக் கிருபை புரியும். இயேசுவின் நாமத்தில் பிதாவே ஆமென்.

ஏப்ரல் - 11

1. கர்த்தாவே உமது இரக்கங்கள் மிகுதியாயிருக்கிறபடியால் உமக்கு தோத்திரம். சங் 119:156
2. உனக்குப் பாக்கியமும் நன்மையும் உண்டாயிருக்கும் என்றவரே உமக்கு தோத்திரம். சங் 128:2
3. வல்லமையுடையவர் மகிமையானவைகளை எனக்குச் செய்கிறபடியால் உமக்கு தோத்திரம். லூக் 1:49
4. உமது இரக்கம் உமக்குப் பயந்தவர்களுக்குத் தலைமுறை தலைமுறைக்குமுள்ளது. ஆகவே தோத்திரம். லூக் 1:50
5. பள்ளங்களை எல்லாம் நிரப்பி கோணலானவைகளை செவ்வைப்படுத்துகிற தேவனே உமக்கு தோத்திரம். லூக் 3:4
6. கர்த்தர் என்னை எல்லாத் தீங்குக்கும் விலக்கிக் காப்பார் அவர் என் ஆத்துமாவைக் காப்பார் ஆகவே தோத்திரம். சங் 121:7
7. கர்த்தரிடத்தில் கிருபையும் திரளான மீட்பும் உண்டு ஆகவே தோத்திரம். சங் 130:7
8. கர்த்தர் எனக்காக யாவையும் செய்து முடிக்கப் போகிற படியால் தோத்திரம். சங் 138:8

ஜெபம்: கோணலானவைகளைச் செவ்வைப்படுத்துகிற தேவனே எல்லாத்தீங்குக்கும் ஒவ்வொருவரையும் விலக்கிக் காத்தருளும் நீர் எனக்காக யாவையும் செய்து முடிப்பீர் என்று விசுவாசித்து. உம்மையே நோக்கி கொண்டிருக்கிறேன் மிகுதியாய் இருக்கக் கூடிய உமது இரக்கங்களைப் பெற்று கொள்ள தயவாய் கிருபை புரிந்து ஆசீர்வதியும் இயேசுவின் நாமத்தில் பிதாவே ஆமென்.

1. என் கருவை உம்முடைய கண்கள் கண்டதற்காய் உமக்கு தோத்திரம். சங் 139:16
2. என்னிடத்திலுள்ள என் பிள்ளைகளை ஆசீர்வதிக்கிறவரே உமக்கு தோத்திரம். சங் 147:13
3. சுகமாயிருப்பீர்களாக என்றீரே உமக்கு தோத்திரம். அப் 15:29
4. கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள் என்றவரே தோத்திரம். அப் 16:31
5. நம்பிக்கையின் தேவன் விசுவாசத்தினால் உண்டாகும் எல்லாவித சந்தோஷத்தினாலும் சமாதானத்தினாலும் உங்களை நிரப்புவாராக என்று சொல்லி எங்களை ஆசீர்வதிக்கிறவரே உமக்கு தோத்திரம். ரோ 15:13
6. சமாதானத்தின் தேவன் சீக்கிரமாய் சாத்தானை எங்கள் கால்களின் கீழே நசுக்கிப் போடப் போகிறதற்காய் உமக்கு தோத்திரம். ரோ 16:20
7. என் எல்லைகளைச் சமாதான முள்ளவைகளாக்குகிற படியால் உமக்கு தோத்திரம். சங் 147:14
8. என் களஞ்சியங்கள் நிரம்பியிருக்கப்பண்ணுகிறதற்காய் உமக்கு தோத்திரம். சங் 144:13

ஜெபம்: அன்புள்ள பரமதகப்பனே, உம்மிடத்தில் நானும் என்வீட்டாரும் வைத்துள்ள விசுவாசம் பெருகும்படி கிருபை செய்யும். என் பிள்ளைகளை ஆசீர்வதித்து என எல்லைகளில் சமாதானம் உண்டாகக் கட்டளையிடும் பிதாவே. சாத்தானையும் அவன் கிரியைகளையும் நசுக்கிப் போட்டு என் வாழ்வில் உம்மை மேன்மைப்படுத்தும்படி அருள்புரியும் இயேசுவின் நாமத்தில் பிதாவே ஆமென்.

ஏப்ரல் - 13

1. ஒருவராய்ப் பெரிய அதிசயங்களைச் செய்கிற தேவனே உமக்குத் தோத்திர
சங் 136:4

2. தேவன் பட்சபாத முள்ளவரல்ல. உமக்குப்பயந்து நீதியைச் செய்கிறவ
உமக்கு உகந்தவன் ஆகவே தோத்திரம். அப் 10:34

3. கர்த்தருடைய கரம் எங்களோடிருக்கிறபடியால் உமக்கு தோத்திரம். அப் 11:2

4. நீர் நன்மை செய்கிறவராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரைய
குணமாக்குகிறவராயும் இருக்கிறபடியால் தோத்திரம். அப் 10:38

5. நாங்கள் ஜெபம் பண்ணுவதிலும் தேவவசனத்தைப் போதிக்கிற ஊழியத்தில
இடைவிடாமல் தரித்திருக்கும்படி போதிக்கிறவரே உமக்கு தோத்திர
அப் 6:4

6. தேவாதி தேவனே உமக்கு தோத்திரம். சங் 136:2

7. கர்த்தாதி கர்த்தரே உமக்கு தோத்திரம். சங் 136:3

8. நான் மிகவும் தாழ்த்தப்பட்ட போது கர்த்தாவே உம்மை நோக்கிக் கூப்பிடுகி
வேளையில் நீரே என் அடைக்கலமாயிருக்கிறபடியால் உமக்கு தோத்திர
சங் 143:5

ஜெபம்: ஒருவராய்ப் பெரிய அதிசயங்களைச் செய்கிற தேவனே நான் உம்மை நோக்கிக் கூப்பிடும்போது நீரே எனக்கு அடைக்கலமாயிரும் பிசாசி வல்லமையிலிருந்தும், சகல நோய்களினின்றும் எனக்கு விடுதலை தாரு தகப்பனே உமது கரம் எப்போதும் என்னோடிருந்து காக்கும்படி கிருபை புரிய இயேசுவின் நாமத்தில் ஆமென்.

1 கர்த்தரில் மனமகிழ்ச்சியாயிரு பூமியின உயர்ந்த இடங்களில் உன்னை ஏறியிருக்கும்படி பண்ணுவேன் என்கிறவரே உமக்கு தோத்திரம். ஏசா 58:14

2 நீ நீர்ப்பாய்ச்சலான தோட்டத்தைப் போலவும் வற்றாத நீரூற்றைப் போலவும் இருப்பாய் என்பதற்காக உமக்கு தோத்திரம். ஏசா 58:11

3 விடியற்கால வெளுப்பைப்போல உன் வெளிச்சம் எழும்பி, உன் சுகவாழ்வு சீக்கிரத்தில் துளிர்த்து உன் நீதி உனக்கு முன்னாலே செல்லும் கர்த்தருடைய மகிமை உன்னைப் பின்னாலே காக்கும் என்று ஆசீர்வதிப்பதற்காக தோத்திரம். ஏசா 58:8

4 நீ கூப்பிடு கர்த்தர் மறுஉத்தரவு கொடுப்பார் என்ற வாக்குக்காக தோத்திரம். ஏசா 58:9

5 உன் பிள்ளைகளெல்லாரும் கர்த்தரால் போதிக்கப்பட்டிருப்பார்கள் உன் பிள்ளைகளுடைய சமாதானம் பெரிதாயிருக்கும் என்றவரே உமக்கு தோத்திரம். ஏசா 54:13

6 பயமில்லாமிருப்பாய் திகிலுக்குத் தூரமாவாய் அது உன்னை அணுகுவதில்லை என்று சொல்லி என்னைக் காப்பவரே உமக்கு தோத்திரம். ஏசா 54:14

7 உனக்கு விரோதமாய் உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காதே போம் என்று எனக்கு ஆறுதலளிப்பவரே உமக்கு தோத்திரம். ஏசா 54:17

8 நீரே எங்களுக்கு ஆறுதல் செய்கிறவர் ஆகவே தோத்திரம். ஏசா 51:12

ஜெபம்: சகல ஆறுதலின் தேவனே, நான் உம்மை நோக்கிக் கூப்பிடுகையில் றுஉத்தரவு கொடுத்தருளும் இந்த உலகப்பாடுகளை கண்டு சோர்ந்து போகாமல் யமில்லாமல் என்றும் உம்மில் மனமகிழ்ச்சயாயிருக்கும்படி கிருபை புரியும். யேசுவின் நாமத்தில் பிதாவே ஆமென்.

ஏப்ரல் - 15

1. கர்த்தர் உங்கள் முன்னே போவார் இஸ்ரவேலின் தேவன் உங்கள் பிற
உங்களைக் காக்கிறவராயிருப்பார் என்றவரே உமக்கு தோத்திர
ஏசா 52:12
2. தத்தளிப்பின் பாத்திரத்தை என் கையிலிருந்து நீக்கிப் போடுகிறவரே உமக்
தோத்திரம். ஏசா 51:22
3. அலைகள் கொந்தளிக்கத்தக்கதாய் சமுத்திரத்தைக் குலுக்குகிற சேனைகளி
கர்த்தரே உமக்கு தோத்திரம். ஏசா 51:15
4. கர்த்தருக்குச் சித்தமானது அவர் கையினால் வாய்க்கும் ஆகவே தோத்திர
ஏசா 53:10
5. நீ வலது புறத்திலும் இடது புறத்திலும் இடங்கொண்டு பெருகுவாய் என்றவ
உமக்கு தோத்திரம். ஏசா 54:3
6. இமைப் பொழுது என்னைக் கைவிட்டீர். ஆனாலும் உருக்கமா
இரக்கங்களால் என்னைச் சேர்த்துக் கொண்டீர். ஆகவே தோத்திர
ஏசா 54:7
7. நித்திய கிருபையுடன் எனக்கு இரங்குகிறீர். ஆகவே தோத்திரம். ஏசா 54:8
8. மலைகள் விலகினாலும் பர்வதங்கள் நிலைபெயர்ந்தாலும் உமது கிரு
என்னை விட்டு விலகாமலும் உமது சமாதானத்தின் உடன்படிக்
நிலைபெயராமலும் இருக்கும்படி செய்கிற மனதுருகுகிற கர்த்தரே உமக்
தோத்திரம். ஏசா 54:10

ஜெபம்: என் மேல் மனதுருகுகிற கர்த்தாவே உமது சித்தம் என் வாழ்வி
நிறைவேற உமது கரத்தில் என்னை ஒப்புக் கொடுக்கிறேன். இமைப்பொழுது
என்னைக் கைவிடாமல் எனக்கு முன் சென்று என்னைக் காத்து நித்தி
கிருபையுடன் எனக்கு இரங்கும் தகப்பனே இயேசுவின் நாமத்தில் பிதா
ஆமென்.

1 என் அப்பத்தையும் தண்ணீரையும் ஆசீர்வதித்து வியாதியை என்னிலிருந்து
விலக்குவேன் என்றீரே தேவனே தோத்திரம். யாத் 23:25

2 உம்முடைய நியமங்கள் யாவையும் கைக் கொண்டால் எகிப்தியருக்கு
வரப்பண்ணின வியாதிகளில் ஒன்றையும் வரப்பண்ணேன் என்ற தேவனே
நீரே என் பரிகாரியாகிய கர்த்தர் ஆகவே தோத்திரம். யாத் 15:26

3 பொல்லாப்பு உனக்கு நேரிடாது வாதை உன் கூடாரத்தை அணுகாது என்றீரே
தோத்திரம். சங் 91:10

4 நான் அவர்களுக்குச் சவுக்கியமும் ஆரோக்கியமும் வரப்பண்ணி
அவர்களைக் குணமாக்கி அவர்களக்குப் பரிபூரண சமாதானத்தையும்
சத்தியத்தையும் வெளிப்படுத்துவேன் என்றபடியால் தோத்திரம். எரே 33:6

5 உங்களில் ஒருவன் வியாதிப்பட்டால் அவன் சபையில் மூப்பர்களை
வரவழைப்பானாக அவர்கள் கர்த்ருடைய நாமத்தினாலே அவனுக்கு
எண்ணெய் பூசி அவனுக்காக ஜெபம் பண்ணக் கடவர்கள் அப்பொழுது
விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும் என்றீரே தோத்திரம்.
யாக் 5:14

6 நல்ல ஔஷதமாகிய மனமகிழ்ச்சியைத்தருபவரே தோத்திரம். நீதி 17:22

7 முகமலர்ச்சியைத்தரும் மனமகிழ்ச்சியைத்தருபவரே தோத்திரம். நீதி 15:13

8 அவர் தாமே நம்முடைய பெலவீனங்களை ஏற்றுக் கொண்டு நம்முடைய
நோய்களைச் சுமந்தார் ஆகவே தோத்திரம். மத் 8:17

9 உம்முடைய தழும்புகளால் குணமடையச் செய்கிறவரே உமக்கு தோத்திரம்.
1பே 2:24

ஜெபம்: இரக்கமுள்ள பிதாவே, நீர் என்னைக் குணமாக்கும் கர்த்தர் என்பதை விசுவாசிக்கிறேன். நீரே எனக்கு யேகோவா ரொபேகாவாய், பரமவைத்தியராய் இருந்து என்னைத் தொட்டு சுகம் தாரும் தகப்பனே. வேண்டாத வைத்தியச் செலவுகளுக்கு என்னைத் தப்புவித்துக் காத்துக் கொள்ளுமையா உம்முடைய தழும்புகளால் குணமடைந்து உமக்குச் சாட்சியாய் வாழக்கிருபை புரியும் இயேசுவின் நாமத்தில் பிதாவே ஆமென்.

ஏப்ரல் - 17

1. நானே உயிர்த் தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன் என்
விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான் என்று சொல்லும் தேவ
உமக்கு தோத்திரம். யோவா 11:25
2. உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவனெவனும் என்றென்றைக்
மரியாமலும் இருப்பான் என்றீரே உமக்கு தோத்திரம். யோவா 11:26
3. நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய் என்றபடி
உமக்கு தோத்திரம். யோவா 11:40
4. பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்திரம் கர்ப்பத்தின் கனி அவரால் கிடைக்
பலன் ஆகவே தோத்திரம். சங் 127:4
5. பிள்ளைகளின் பிள்ளைகளை முதியோருக்குக் கிரீடமாக வைப்பரே உம
தோத்திரம். நீதி 17:6
6. நிச்சயமாகவே முடிவு உண்டு உன் நம்பிக்கை வீண்போகாது என்று சொ
தேவனே உமக்கு தோத்திரம். நீதி 23:18
7. காரிய சித்தி யோ கர்த்தரால் வரும் ஆகவே தோத்திம். நீதி 16:33
8. நான் செய்கிறது இன்ன தென்று இப்பொழுது நீ அறியாய் இனிமேல் அறிவ
எனற கர்த்தரே உமக்கு தோத்திரம். யோவா 13:7

ஜெபம் : எங்கள் ஜீவனுள்ள தகப்பனே, நாங்கள் ஒவ்வொருநாளும் உம்
விசுவாசித்து உமது மகிமையைக் காணப்பண்ணும். எங்களுக்கு நீர் த
கர்ப்பத்தின் கனிகள் சகல ஆசீர்வாதத் தோடும் கூட வாழ்ந்திருக்கும்படி கிரு
புரியும் கர்த்தாவே நிச்சயமாகவே முடிவு உண்டு. உன் நம்பிக்கை வீண் போக
என்ற வசனத்தின் மூலம் நாங்கள் புதுபெலன் அடைய உதவி செய்
இயேசுவின் நாமத்தில் பிதாவே ஆமென்.

1 கர்த்தர் பெரியவரும் மிகவும் புகழப்படத்தக்கவருமாயிருக்கிறீர் ஆராய்ந்து
முடியாத உமது மகத்துவத்திற்காக, உமக்கு தோத்திரம். சங் 145:3

2 சப்பாணியாய்ப் பிறந்தவனை, நசரேயனாகிய இயேசுகிறிஸ்துவின்
நாமத்தினாலே நீ எழுந்து நட என்று பேதுரு தூக்கி விட்டபோது, நீர் உமது
வல்லமையை அனுப்பி அவன் நடந்து குதித்தெழுந்து தேவனைத் துதித்துக்
கொண்டு தேவாலயத்திற்குள் பிரவேசிக்கும்படி செய்தீரே உமக்கு தோத்திரம்.
அப் 3:8

3. எங்களெல்லாரையும் எங்கள் பொல்லாங்குகளிலிருந்து விலக்கி எங்களை
ஆசீர்வதிக்கும்படி தேவன் தம்முடைய பிள்ளையாகிய இயேசுவை எழுப்பி
எங்களிடத்திற்கு அனுப்பினீரே உமக்கு தோத்திரம். அப் 3:26

4. இயேசு கிறிஸ்துவினாலன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை ஆகவே
தோத்திரம். அப் 4:12

5. ஜெபம் பண்ணும் போது கூடியிருந்த அந்த இடத்தை அசையப்பண்ணின
தேவனே உமக்கு தோத்திரம். அப் 4:31

6. அப்போஸ்தலர்களில் ஒருவனுக்கும் ஒன்றும் குறைவாயிருந்ததில்லை
அவர்கள் எல்லார் மேலும் பூரண கிருபை உண்டாயிருக்கப் பண்ணினவரே
உமக்கு தோத்திரம். அப் 4:33

7. கர்த்தர் எல்லார் மேலும் தயவுள்ளவர் அவர் இரக்கங்கள் அவருடைய எல்லாக்
கிரியைகளின் மேலும் உள்ளது ஆகவே தோத்திரம். சங் 145:9

8. தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும் உண்மையாய் தம்மை நோக்கிக்
கூப்பிடுகிற யாவருக்கும் சமீபமாயிருக்கும் தேவனே உமக்கு தோத்திரம்.
சங் 145:18

ஜெபம்: இரக்கம் நிறைந்த கர்த்தாவே, என்னை இந்த உலகத்திலுள்ள சகல பொல்லாங்குகளிலிருந்து விலக்கிக் காத்தருளும் நான் ஜெபிக்கிற வேளையில் நீர் இறங்கி வாரும் தகப்பனே. அந்த இடத்தை அசையப் பண்ணும் நீர் மிகவும் தயவுள்ளவர் என்று விசுவாசிக்கிறேன். குறைவில்லாத பூரண கிருபை உண்டாயிருக்கும்படி கிருபைபுரியும். இயேசுவின் நாமத்தில் தேவனே ஆமென்.

ஏப்ரல் - 19

1. தேவனே உமது ஆலோசனைகள் எனக்கு எத்தனை அருமையானவை
ஆகவே தோத்திரம். சங் 139:17
2. கர்த்தாவே நீர் வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலு
யாவற்றையும் உண்டாக்கின தேவனாயிருக்கிறிர் ஆகவே தோத்திர
அப் 4:24
3. யோசனையும் கிரியையும் மனுஷரால் உண்டாயிருந்ததானால் ஒழி
போம் தேவனால் உண்டாயிருந்ததேயானால் அதை ஒழித்து விட எவரா
கூடாது. ஆகவே தோத்திரம். அப் 5:39
4. தேவன் யோசேப்போடே கூட இருந்து எல்லா உபத்திரவங்களிலுமிரு
அவனை விடுவித்து அவனுக்குக் கிருபையையும் ஞானத்தை
அருளியவரே உமக்கு தோத்திரம். அப் 7:10
5. உன் ஜெபம் கேட்கப்பட்டது உன் தானதருமங்கள் தேவசந்நிதி
நினைத்தருளப்பட்டது என்ற தேவனே உமக்கு தோத்திரம். அப் 10:31
6. நான் நடந்தாலும் படுத்திருந்தாலும் என்னைச் சூழ்ந்திருக்கிற என் தேவ
உமக்கு தோத்திரம். சங் 139:3
7. நான் முழு இருதயத்தோடும் விசுவாசித்தால் ஞானஸ்நானம் பெறுகிற
உள்ள தடைகளை நீக்குகிறதற்காக உமக்கு தோத்திரம். அப் 8:37
8. உன் அரங்கத்திற்குள்ளே சமாதானமும் உன் அரமனைக்கள்ளே சுக
இருப்பதாக என்றவரே உமக்கு தோத்திரம். சங் 122:7

ஜெபம் : என் ஜெபத்தைக் கேட்கும் தேவனே, முழு இருதயத்தோடும்
பலத்தோடும் உம்மை விசுவாசிக்க கிருபை செய்யும். என் வாழ்வின் எ
சூழ்நிலைகளிலும் உமது ஆலோசனைகள் மூலமாக எனக்கு வழிகாட்
தகப்பனே வரக்கூடிய எல்லா உபத்திரவங்களினின்றும் என்னை விடு
சமாதானமும் சுகமும் தந்து தயவாய்க் காத்தருளும். இயேசுவின் நாம
பிதாவே ஆமென்.

1. கர்த்தராகிய ஆண்டவரே நீரே என் நோக்கமும் என் சிறுவயது தொடங்கி என் நம்பிக்கையுமாயிருப்பதற்காக உமக்கு தோத்திரம். சங் 71:5
2. முதிர்ந்த வயதில் என்னைத் தள்ளிவிடாமலும் என் பெலன் ஒடுங்கும்போது என்னைக் கைவிடாமலும் இருக்கும்தேவனே தோத்திரம். சங் 71:9
3. முதிர் வயதும் நரை மயிருள்ளவனாகும் வரைக்கும்என்னைக் கைவிடாத தேவனே உமக்குதோத்திரம். சங் 71:18
4. முதிரி வயதிலும் கனிதந்து புஷ்டியும் பசுமையுமாயிருக்ககச் செய்பவரே உமக்கு தோத்திரம். சங் 92:15
5. பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து எனக்கு சாட்சிகளாயிருப்பீர்கள் என்றீரே உமக்கு தோத்திரம். அப் 1:8
6. உயர வானத்திலே அற்புதங்களையும் தாழப்பூமியிலே அதி சயங்களையும் காட்டுவேன் என்றவரே உமக்கு தோத்திரம். அப் 2:19
7. கர்த்தரை எப்போதும் எனக்கு முன்பாக நிறுத்திக் கொண்டிருக்கிறேன் நான் அசைக்கப்படாதபடி கர்த்தர் என் வலது பாரிசத்திலே இருக்கிறார் ஆகவே தோத்திரம். அப் 2:25
8. என் தேவன் எனக்குப்பலத்தைக் கட்டளையிட்டீர் ஆகவே தோத்திரம். சங 68:28

ஜெபம்: என் பெலனாகிய கர்த்தாவே நான் முதிர் வயதாகும் வரைக்கும் உம்மை மாத்திரம் பற்றிக் கொண்டிருக்கும்படி ஏவியருளும் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்று புதுபெலனடைந்து உமக்கு சாட்சிகளாக இருக்கும்படி கிருபை புரியும் நீர் என் பக்கத்தில் இருக்கும்போது நான் அசைக்கப்படுவதில்லை இந்த நம்பிக்கையை சுதந்தரமாக்கிக் கொள்ள உதவிசெய்யும் இயேசுவின் நாமத்தில் ஆமென்.

ஏப்ரல் - 21

1. தேவரீர் என் நிந்தையையும் என் வெட்கத்தையும் என் அவமானத்தை அறிந்திருக்கிறபடியால் உமக்கு தோத்திரம். சங் 69:19
2. ஜீவமார்க்கங்களை எனக்குத் தெரியப்படுத்தினீர். உம்முடை சந்திதானத்திலே என்னைச் சந்தோஷத்தினால் நிரப்புவீர் ஆகவே தோத்திர அப் 2:28
3. வாக்குத்தத்தமானது எங்களுக்கும் எங்கள் பிள்ளைகளக்கும் தூரத்திலு யாவருக்கும் உண்டாயிருக்கிறது ஆகவே தோத்திரம். அப் 2:39
4. விசுவாசிகளெல்லாரும் ஒருமித்து சகலத்தையும் பொதுவாய் வைத் அனுபவிக்கும்படி ஒருமனதின் ஆவியைக் கட்டளையிட்டபடியால் உன தோத்திரம். அப் 2:44
5. பரலோகத்தின் தேவனானவர் எங்களுக்குக் காரியத்தைக் கைகூடி வரப்பண்ணுவார் ஆகவே தோத்திரம். நெகே 2:20

6. கர்த்தர் உண்மையுள்ளவர் அவர் உங்களை ஸ்திரப்படுத்தி தீமையினின்று விலக்கிக் காத்துக் கொள்ளுவார் என்கிறபடியால் உமக்கு தோத்திரம். II தெச 3:3

7. உம்முடைய கூடாரம் சமாதானத்தோடிருக்கக் காண்பீர் என்றீரே உமக்கு தோத்திரம். யோபு 5:24

8. சமாதானத்தின் கர்த்தர் தாமே எப்பொழுதும் சகலவிதத்திலும் எங்களுக்கு சமாதானத்தைத் தந்தருளுவாராக கர்த்தர் எங்களனைவரோடும் கூட இருப்பாராக ஆமென். II தெச 3:16

ஜெபம்: பரலோக தேவனே, இந்த வேளையில் என்னை உமது கரத்தில் ஒப்புக் கொடுக்கிறேன் வாழ்க்கையின் பாரமான எல்லாவற்றையும் என்னை விட்டு எடுத்துப்போட்டு காரியம் நன்மையாய்க்கைகூடி வரும்படி கிருபை செய்யும், அப்பனே, நீர் கொடுக்கிற சமாதானம் மாத்திரம் என் உள்ளத்தை நிரம்பப்பண்ணும் பிதாவே, இடைவிடாமல் ஜெபிக்கவும் உம்மைத் தோத்திரிக்கவும் கிருபை புரியும் அப்பனே ஆமென்.

ஜூலை - 8

1. பயப்படாதிருங்கள், அநேகம் அடைக்கலான் குருவிகளைப்பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்கள் என்று எங்களை ஆசீர்வதிக்கும் கர்த்தரே உமக்கு தோத்திரம். மத் 10:31
2. எங்கள் விசுவாசத்தின் கிரியையையும், எங்கள் அன்பின் பிரயாசத்தையும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மேலுள்ள எங்கள் நம்பிக்கையின் பொறுமையையும் பிதாவாகிய தேவனுக்கு முன்பாக இடைவிடாமல் நினைவுகூர்ந்து ஜெபங்களில் இடைவிடாமல் எங்களைக் குறித்து விண்ணப்பண்ணி எப்போதும் தேவனை ஸ்தோத்திரிக்கச் செய்பவரே உமக்கு தோத்திரம். I தெச 1:4
3. அன்பிலே நாங்கள் அதிகமாய்ப் பெருகவும் ஒன்றிலும் எங்களுக்கக் குறைவில்லாதிருக்கும்படிக்கு அமைதலுள்ளவர்களாயிருக்கும்படி நாடவும் வேண்டுமென்று புத்தியைத் தெளிவுபடுத்துகிறவரே உமக்கு தோத்திரம். I தெச 4:12
4. திடனற்றவர்களைத் தேற்றவும், பலவீனரைத் தாங்கவும், எல்லாரிடத்திலும் நீடிய சாந்தமாயிருந்து ஒருவனும் மற்றொருவன் செய்யும் தீமைக்குத் தீமை செய்யாதிருக்கும்படி யாவருக்குள்ளும் நன்மை செய்ய நாடும் படி போதிக்கிறவரே உமக்கு தோத்திரம். I தெச 5:14
5. சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கி சொஸ்தமாக்குபரே உமக்கு தோத்திரம். மத் 9:35
6. நீ விசுவாசித்தபடியே உனக்கு ஆகக்கடவது என்கிறீரே உமக்கு தோத்திரம். மத் 8:13
7. எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள் என்று எங்களைத் தேற்றுகிறவரே உமக்கு தோத்திரம். I தெச 5:16

ஜெபம்: இயேசுவே சகல நோய்களையும் நீக்கி என்னை சுகமாக்கவல்ல நீர் எல்ஷடாய் என்று விசுவாசிக்கிறேன் என் விசுவாசத்தின் அளவுக்குத்தக்கதாக என்னை ஆசீர்வதியும் பிதாவே. நான் அன்பிலே நாளுக்கு நாள் பெருகி வளரவும் அநேகருக்கு ஆறுதலாய் இருக்கவும் எனக்கு உதவிசெய்யும் உம்மிலே எப்போதும் சந்தோஷமாயிருக்கும் பாக்கியததைக் கிருபையாய் எனக்குத் தாரும். இயேசுவின் நாமத்தில் பிதாவே ஆமென்.

ஜூலை - 9

1 இயேசுகிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராய் இருக்கிற படியால் தோத்திரம். எபி 13:8

2. தேவனுடைய கிருபை வரங்களும் அழைப்பும் மாறாதவைகள். ஆகவே தோத்திரம். ரோமர் 11:29

3 உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக என்றீரே தோத்திரம். யோவா 14:1

4 உம்முடைய ஆயுசுகாலம் பிரகாசமாயிருக்கும் என்கிறபடியால் தோத்திரம். யோபு 11:17

5. இதோ சீக்கிரமாய் வருகிறேன் என்கிறீரே உமக்கு தோத்திரம். வெளி 22:12

6. உன் அலங்கத்திற்குள்ளே சமாதானமும் சுகமும் இருப்பதாக என்றபடியால் தோத்திரம். சங் 122:7

7 இன்றைக்கு இந்த வீட்டுக்கு இரட்சிப்பு வந்தது. ஆகவே தோத்திரம். லூக் 19:9

8 ஜீவகிரீடத்தைத் தருவேன் என்றீரே உமக்கு தோத்திரம். வெளி 2:10

9 நான் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருக்கப்பண்ணுகிறவரே தோத்திரம். ஆப 3:18

ஜெபம்: நேற்றும் இன்றும் என்றும் மாறாத பரலோகதேவனே நான் உம்மில் மகிழ்ச்சியாயிருக்கும்படி தயவாகக் கிருபை புரியும். இரட்சிப்பின் அனுபவத்தைப் பெற்று என் அலங்கத்திற்குள் எப்போதும் நீர் தரும் சமாதானத்தோடும் சுகத்தோடும் வாழ்ந்திருக்கும்படி செய்யும். இயேசுவின் நாமத்தில் பிதாவே ஆமென்.

ஜூலை - 10

1. கர்த்தர் என் பட்சத்தில் இருக்கிறார். நான் பயப்படேன். ஆகவே தோத்திரம் சங் 118:6
2. கர்த்தர் எனக்கு நன்மை செய்தபடியால் அவரைப்பாடுவேன் அல்லேலூயா சங் 13:6
3. நான் உன் அக்கிரமத்தை நீங்கச் செய்தேன் என்றீரே உமக்கு தோத்திரம் சக 3:4
4. நான் இன்றுமுதல் உங்களை ஆசீர்வதிப்பேன் என்றீரே உமக்கு தோத்திரம் ஆகாய் 2:19
5. நீ கையிட்டு செய்யும் வேலைகளை யெல்லாம் ஆசீர்வதிப்பேன் என்றீரே உமக்கு தோத்திரம். உபா 28:12
6. பயப்படாதே நீ வெட்கப்படுவதில்லை என்றபடியால் தோத்திரம். ஏசா 54:4
7. நான் அவர்களை மரணத்துக்கு நீங்கலாக்கி விடுவிப்பேன் என்றீரே உமக்கு தோத்திரம். ஓசி 13:14
8. என் இரட்சிப்பு தாமதிப்பதில்லை ஆகவே தோத்திரம். ஏசா 46:13
9. மெய்யாகவே நீர் எங்களுடைய துக்கங்களைச் சுமந்த படியால் தோத்திரம் ஏசா 53:4
10. என் நீதியின் வலது கரத்தினால் உன்னைத் தாங்குவேன் என்றீரே தோத்திரம் ஏசா 41:10

ஜெபம்: நீதியின் தேவனே. இந்த நேரத்தில் என்னை உமது கரத்தில் வைக்கிறேன் நான் வெட்கப்பட்டுப் போகாதபடி காத்துக் கொள்ளும். நீர் செய்த நன்மைகளை எண்ணி உம்மைப்பாடித்துதிக்க ஏவியருளும். நான் கையிட்டுச் செய்யு வேலைகளையெல்லாம் ஆசீர்வதித்து உமது வலது கரத்தினால் என்னை கிருபையாக தாங்கிக் கொள்ளும் தகப்பனே. இயேசுவின் மூலம் ஆமென்.

1 உன்னதமானவருடைய மறைவில் என்னை வைத்து சர்வ வல்லவருடைய நிழலில் தங்கச் செய்கிறவரே உமக்கு தோத்திரம். சங் 91:1

2 தேவனுடைய ஐசுவரியம் ஞானம் அறிவு என்பவைகளின் ஆழம் எவ்வளவாயிருக்கிறது அவருடைய நியாயத்தீர்ப்புகள் அளவிடப்படாதவைகளாயும் அவருடைய வழிகள் ஆராயப்படாதவைகளுமாயிருப்பதற்காய் தோத்திரம். ரோ 11:33

3 கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய கிருபை உங்களுடனே கூட இருப்பதாக என்று ஆசீர்வதிப்பவரே உமக்கு தோத்திரம். I கொரி 16:23

4 நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக் கொடுத்த தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன் ஆகவே தோத்திரம். கலா 2:20

5 அன்பினால் கிரியை செய்கிற விசுவாசமே உதவும் என்று சொல்லி எங்களுக்கு வழிகாட்டுகிறபடியால் தோத்திரம். கலா 5:6

6 வீண்புகழ்ச்சியை விரும்பாமலும், ஒருவரை யொருவர் கோபமூட்டாமலும் ஒருவர் மேல் ஒருவர் பொறாமை கொள்ளாமலும் இருக்கும்படி எங்களுக்குப் போதிக்கிறபடியால் தோத்திரம். கலா 5:26

7 நம்பிக்கையிலே சந்தோஷமாயிருக்கவும் உபத்திரவத்திலே பொறுமையாயிருக்கவும், ஜெபத்திலே உறுதியாய்த் தரித்திருக்கவும் தக்கதாக எங்களை வழிநடத்துகிறவரே உமக்கு தோத்திரம். ரோ 12:12

ஜெபம்: உன்னதமான கர்த்தரே, நான் எப்பொழுதும் உம்முடைய நிழலில் வாழ்ந்திருக்கச் செய்யும். நான் உம்மிலே கொண்டுள்ள விசுவாசம் செயலில் வெளிப்பட கிருபை புரியும். கோபம் பொறாமை போன்ற துர்க்குணங்களை என்னை விட்டகற்றி ஜெபத்திலே உறுதியாய்த் தரித்திருக்கும்படி கர்த்தாவே அருள் தாரும் இயேசுவின் நாமத்தில் ஆமென்.

ஜூலை - 12

1. பகிர்ந்து கொடுக்கிறவன் வஞ்சனையில்லாமல் கொடுக்கவும், இரக்க செய்கிறவன் உற்சாகத்துடனே செய்யவும் எங்களுக்குப் போதிககிறதேவனே உமக்கு தோத்திரம். ரோ 12:8
2. நன்மை செய்கிறதில் சோர்ந்து போகாமல் இருப்போமாக நாம் தளர்ந்து போகாதிருந்தால் ஏற்ற காலத்தில் அறுப்போம். ஆகவே தோத்திரம். கலா 6:9
3. ஒருவன் தான் ஒன்றுமில்லாதிருந்தும் தன்னை ஒரு பொருட்டென்று எண்ணினால் தன்னைத்தானே வஞ்சிக்கிறவனாவான் என்று என்னை எச்சரிக்கிற தேவனே உமக்குத் தோத்திரம். கலா 6:3
4. அவனவன் தன் சுய கிரியையைச் சோதித்துப் பார்க்கக்கடவன் என்று சொல்லி வழி நடத்தும் தேவனே உமக்கு தோத்திரம். கலா 6:4
5. நாங்கள் புத்திரராயிருக்கிறபடியினால் 'அப்பா பிதாவே' என்று கூப்பிடத்தக்கதாக தேவன் தமது குமாரனுடைய ஆவியை எங்கள் இருதங்களில் அனுப்புகிறபடியால் தோத்திரம். கலா 4:6
6. இனி நீ அடிமையாயிராமல் புத்திரனாயிருக்கிறாய். கிறிஸ்து மூலமாய் தேவனுடைய சுதந்தரனாயுமிருக்கிறாய் என்று ஆசீர்வதிக்கும் தேவனே உமக்கு தோத்திரம். கலா 4:7
7. கர்த்தருக்குப் பயப்படுகிற பெரியோரையும் சிறியோரையும் அவ ஆசீர்வ்திக்கிறார். ஆகவே தோத்திரம். சங் 115:13
8. நீங்கள் இனித் தொய்ந்து போவதில்லை என்று எங்களைத் தேற்றுகிறபடியா உமக்குத் தோத்திரம். எரே 31:12

ஜெபம்: இரக்கத்தில் ஐசுவரியமுள்ள தேவனே, நான் இனி உம்முடை பிள்ளையாக வாழ அருள்தாரும். ஒவ்வொரு நிமிடமும் எங்களை தற்பரிசோதனை செய்து பார்த்து எங்களைத் திருத்திக் கொள்ள உதவி செய் தேவையிலிருப்பவர்களுக்கு வஞ்சனையில்லாமல் கொடுத்து உதவும்படி எங்கள ஏவியருளும். இனி நான் தொய்ந்து போகாமல் உம்மிலே சந்தோஷமாய் வ கிருபை புரியும். இயேசுவின் மூலம் பிதாவே ஆமென்.

மாலை - 13

1. கர்த்தாவே நீர் எனக்குத் துணை நின்று என்னைத் தேற்றுகிறதற்காக உமக்கு தோத்திரம். சங் 86:17

2. மிகுந்த உதாரகுணத்திலே நீங்கள் எவ்விதத்திலும் சம்பூரணமுள்ளவர்களாவீர்கள் என்பதற்காய் தோத்திரம். II கொரி 9:11

3. நீங்கள் விசுவாசமுள்ளவர்களோ வென்று உங்களை நீங்களே சோதித்து அறியுங்கள். உங்களை நீங்களே பரிட்சித்துப் பாருங்கள் என்று எச்சரிப்பவரே உமக்கு தோத்திரம். II கொரி 13:5

4. என்றென்றைக்கும் ஸ்தோத்திரிக்கப்பட்ட தேவனும் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவுமானவர் நான் பொய் சொல்லுகிறதில்லை என்று அறிவீர் ஆகவே தோத்திரம். II கொரி 11:31

5. நான் என் தாயின் வயிற்றில் இருந்தது முதல் என்னைப் பிரித்தெடுத்து உம்முடைய கிருபையினால் அழைத்த தேவனே உமக்கு தோத்திரம். கலா 1:15

6. நாங்கள் சிறுமைப்பட்ட நாட்களுக்கும் நாங்கள் துன்பத்தைக் கண்ட வருஷங்களுக்கும் சரியாய் எங்களை மகிழ்ச்சியாக்குவதற்காய் உமக்கு தோத்திரம். சங் 90:15

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய கிருபையும் தேவனுடைய அன்பும் பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியமும் நம்மோடுகூட இருப்பதற்காக தோத்திரம். கொரி 13:14

பம்: என்றென்றைக்கும் தோத்திரிக்கப்பட்ட தேவனே, நீர் எனக்கு துணை நின்று ன்னைத் தேற்றியருளும். என்னுடைய வேதனை நாட்களை மகிழ்ச்சியின் களாக மாற்றி என் கண்ணீரை யெல்லாம் தயவாய்த்துடைத்தருளும் துதிக்குப் த்திரர் நீர் ஒருவர் மட்டுமே என்று விசுவாசிக்கிறேன். இயேசுவின் நாமத்தில் ாவே ஆமென்.

ஜுலை - 14

1. திக்கற்ற உங்களுடைய ஜெபத்தை அலட்சியம் பண்ணாமல் அவர்க
விண்ணப்பத்தை அங்கீகரிப்பதற்காய் தேவனே உமக்கு தோத்திர
சங் 102:16
2. உம்முடைய பரிசுத்தர் அழிவைக் காண வொட்டீர் ஆகவே தோத்திர
அப் 13:35
3. ஆகாத சம்பாஷணைகள் நல்லொழுக்கத்தைக் கெடுக்கும் மோச
போகாதிருங்கள் என்று எச்சரிக்கிறவரே உமக்கு தோத்திரம். I கொரி 15:3
4. நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனும் இரக்கங்களி
பிதாவும் சகலவிதமான ஆறுதலின் தேவனுமாயிருக்கிறவருக்கு தோத்திர
II கொரி 1:3
5. கர்த்தர் நீதி யோடே சீக்கிரமாய்த் தம்முடைய காரியத்தை நிறை வேற்றுவா
அவர் பூமியிலே சீக்கிரமாகவே காரியத்தை நிறை வேற்றி முடிப்பார் ஆக
தோத்திரம். ரோ 9:28
6. நாங்கள் எங்கள் மேல் நம்பிக்கையாயிராமல் மரித்தோரை எழுப்புகிற தேவ
மேல் நம்பிக்கையாயிருக்கத்தக்கதாக கிருபை செய்கிறவரே உமக்
தோத்திரம். II கொரி 1:9
7. கர்த்தரிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ அவ
வெட்கப்படுவதல்லை ஆகவே தோத்திரம். ரோ 9:33
8. காரிய சித்தியோ கர்த்தரால் வரும் ஆகவே தோத்திரம். நீதி 16:33

ஜெபம்: பரிசுத்தமுள்ள பரலோக பிதாவே, நான் ஆகாத சம்பாஷணைகளுக் இடங்கொடாதபடிக்கு ஜாக்கிரதையாய் நல்லொழுக்கத்தைக் காத்துக் கொள்ள உத செய்யும். என் விண்ணப்பத்தை தயவாய் அங்கீகரித்தருளும். தேவைகள நிறைவேற்றி காரிய சித்தியினை உமது கரத்திலிருந்து பெற்றுக் கொள்ள கிரு புரியும். இயேசுவின் நாமத்தில் ஆமென்.

கர்த்தாவே வருஷங்களின் நடுவிலே உமது கிரியையை உயிர்ப்பியும். வருஷங்களின் நடுவிலே அதை விளங்கப்பண்ணுகிறபடியால் உமக்கு தோத்திரம். ஆப 3:2

கர்த்தர் நல்லவர். இக்கட்டு நாளிலே அரணான கோட்டை. தம்மை நம்புகிறவர்களை அறிந்திருக்கிறபடியால் தோத்திரம். நாகூம்1:7

கர்த்தர் என் ஆக்கினைகளை அகற்றி என் சத்துருக்களையெல்லாம் விலக்குகிறபடியால் தோத்திரம். செப் 3:15

இதோ நான் வந்து உன் நடுவில் வாசம் பண்ணுவேன் என்று சொன்னதற்காய் தோத்திரம். சக 2:10

5. நீ என்தாசன். நீ என்னால் மறக்கப்படுவதில்லை என்றீரே உமக்கு தோத்திரம். ஏசா 44:21

6. நானே எல்லாவற்றையும் செய்கிற கர்த்தர் உன் மீட்பரும் தாயின் கர்ப்பத்தில் உன்னை உருவாக்கினவருமான கர்த்தர் நானே என்றவரே உமக்கு தோத்திரம். ஏச 44:24

7. நான் உனக்கு முன்னே போய் கோணலானவைகளைச் செவ்வையாக்குவேன் என்றபடியால் தோத்திரம். ஏசா 45:2

8. அந்தகாரத்தில் இருக்கிற பொக்கிஷங்களையும் ஒளிப்பிடத்தில் இருக்கிற புதையல்களையும் உனக்குக் கொடுப்பேன் என்றீரே உமக்கு தோத்திரம். ஏசா 45:4

ஜெபம்: இரக்கமுள்ள கர்த்தாவே, நீர் எனக்கு அரணான கோட்டையாய் இருந்து எனக்காக எல்லாவற்றையும் செய்தருளும். என்னை உருவாக்கிய சிருஷ்டி கர்த்தாவே, இம்மட்டும் என்னை மறக்காமல் என்னோடு கூட இருந்து ஜீவதித்தது போல, இனியும் இம்மானுவேலாக இருந்து வழி நடத்தும். எனக்கு முன் சென்று கோணலானவைகளை செவ்வையாக்கி சாபமாய்ப் போனவற்றை நன்மைகளாக மாற்றித் தாருமையா. இயேசுவின் மூலம் பிதாவே ஆமென்.

ஜூலை - 16

1. பயப்படாமலும் கலங்காமலும் இருங்கள் இந்த யுத்தம் உங்களுடையதல் தேவனுடையது என்று கர்த்தர் சொல்லுகிறார் ஆகவே தோத்திர II நாளா 20:15
2. உன் இருதயம் இளகி, எனக்கு முன்பாக நீ உன்னைத் தாழ்த்தி, என முன்பாகப் பணிந்து, உன் வஸ்திரங்களைக் கிழித்துக் கொண்டு என முன்பாக அழுதபடியினால் நான் உன் விண்ணப்பத்தைக் கேட்பேன் என் சொல்லும் கர்த்தாவே உமக்கு தோத்திரம். II நாளா 34:27
3. நீ தண்ணீர்களைக் கடக்கும் போது நான் உன்னோடு இருப்பேன் ஆறுகளைக் கடக்கும்போது அவைகள் உன் மேல் புரளுவதில்லை அக்கினியில் நடக்கும் போது வேகாதிருப்பாய். அக்கினி ஜுவாலை உ பேரில் பற்றாது என்றீரே உமக்கு தோத்திரம். ஏசா 43:2
4. உன் சந்ததியின் மேல் என் ஆவியையும் உன் சந்தானத்தின் மேல் எ ஆசீர்வாதத்தையும் ஊற்றுவேன் என்றபடியால் தோத்திரம். ஏசா 44:3
5. நீதியும் நியாயமும் கிருபையும் உருக்க இரக்கமுமாய் உன்னை என நியமித்துக் கொள்வேன். உண்மையாய் உன்னை எனக்கு நியமித் கொள்ளுவேன் என்றீரே தோத்திரம். ஓசியா 2:20
6. நான் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன் என் இரட்சிப்பின் தேவனக் களிகூருவேன். ஆகவே தோத்திரம். ஆப 3:18
7. நீங்கள் திடன் கொள்ளுங்கள் வேலையை நடத்துங்கள் நான் உங்களுட இருக்கிறேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். ஆகவே தோத்திர ஆகாய் 2:4

ஜெபம்: இரக்கம் நிறைந்த தகப்பனே, என் வாழ்வின் கரடுமுரடான பாதைக என்னை நடத்துபவர் நீர் ஒருவர் தானைய்யா. தண்ணீர்களைக்கடக்கும் போ அக்கினியில் நடக்கும்போதும் என்னைக் காத்து கரம்பிடித்து நடக்க கிருபை புரி உம்மில் எப்பொழுதும் களிகூர்ந்து மகிழ்ந்திருக்கப் பண்ணும் தகப்பனே. என்னுடன் கூடவே இருந்து வேலையை நடத்த பெலப்படுத்தும் கர்த்தா இயேசுவின் மூலம் பிதாவே ஆமென்.

1. கர்த்தர் நன்மையானதைத் தருகிறபடியால் உமக்குத் தோத்திரம். சங் 85:12
2. நீங்கள் தேவனுடைய பண்ணையும் தேவனுடைய மாளிகையுமாய் இருக்கிறீர்கள் என்கிறவரே உமக்கு தோத்திரம். I கொரி 3:9
3. இருளில் மறைந்திருக்கிறவைகளை கர்த்தர் வெளியரங்கமாக்கி இருதயங்களின் யோசனைகளை வெளிப்படுத்துகிறவரே உமக்கு தோத்திரம். I கொரி 4:5
4. உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல் சோதனையைத் தாங்கத் தக்கதாக சோதனையோடுகூட அதற்குத் தப்பித்துக் கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவேன் என்று காக்கும் தேவனே உமக்கு தோத்திரம். I கொரி 10:13
5. கர்த்தராகிய தேவனே நீர் அதிசயங்களைச் செய்கிறவர் ஆகவே உமக்குத் தோத்திரம். சங் 72:18
6. அதிசயங்களைச் செய்கிற தேவன் நீரே ஆகவே தோத்திரம். சங் 85:12
7. நான் இருக்கிறது தேவ கிருபையினாலே இருக்கிறேன் ஆகவே தோத்திரம். கொரி 15:10
8. எனக்கோ தேவனை அண்டிக் கொண்டிருப்பதே நலம். ஆகவே தோத்திரம் சங் 73:28

ஜெபம்: அதிசயங்களைச் செய்கிற என் தேவனே. நான் சோதனைக்குள் பிரவேசித்து விடாதபடி தீமையினின்று என்னை இரட்சித்துக் கொள்ளும். தகப்பனே, நன்மையானதைத் தந்து ஆசீர்வதியும். எப்போதும் உம்மையே அண்டிக் கொள்ள கிருபை புரியும் இயேசுவின் நாமத்தில் ஆமென்.

ஜுலை - 18

1. நெருக்கத்திலே நான் கூப்பிட்ட வேளையிலே என்னைத் தப்புவிக்கிற தேவனே உமக்கு தோத்திரம். சங் 81:7
2. கர்த்தருக்குப் பயப்படுகிற மனுஷனுக்குத் தாம் தெரிந்து கொள்ளும் வழியை போதிக்கிறவரே உமக்கு தோத்திரம். சங் 25:12
3. மரணமானாலும், ஜீவனானாலும், தேவதூதர்களானாலும், அதிகாரங்களானாலும், வல்லமைகளானாலும், நிகழ்காரியங்களானாலும், வருங்காரியங்களானாலும், உயர்வானாலும், தாழ்வானாலும், வேறெந்த சிருஷ்டியானாலும், நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிக்க மாட்டாரே. ஆகவே தோத்திரம். ரோ 8:39
4. ஒருவரிடத்திலொருவர் அன்பு கூருகிற கடனேயல்லாமல் மற்றொன்றிலும் ஒருவனுக்கும் கடன்படாதிருக்கும்படி போதிக்கிறவரே உமக்கு தோத்திரம். ரோ 13:8
5. களியாட்டும் வெறியும் வேசித்தனமும் காமவிகாரமும் வாக்குவாதமும் பொறாமையும் உள்ளவர்களாய் நடவாமலிருக்கும்படி செய்யும் தேவனே உமக்கு தோத்திரம். ரோ 13:13
6. கர்த்தருக்குப் பயப்படுகிற மனுஷனுடைய ஆத்துமாவை நன்மையால் நிரப்புகிறவரே உமக்கு தோத்திரம். சங் 25:13
7. கர்த்தர் என் மேன்மையைப் பெருகப்பண்ணி என்னை மறுபடியும் தேற்றுகிறபடியால் தோத்திரம். சங் 71:21

<u>ஜெபம்:</u> கிருபை நிறைந்த கர்த்தாவே, சகலவிதமான பொல்லாப்புகளுக்கும் என்னை தயவாய் தப்புவியும். உமக்கு பயப்படுகிற பயத்தால் என்னை நிர... என்னுடைய ஆத்துமாவை நன்மையால் நிரப்பியருளும். நீர் எனக்குக் காட்... வழியிலே நடக்க கிருபை புரியும் தகப்பனே. இயேசுவின் மூலம் பிதாவே, ஆமென்.

1. எல்லாத் தேவர்களுக்கும் மகா ராஜனுமாயிருக்கிற கர்த்தாவே உமக்கு ஸ்தோத்திரம். சங் 95:3
2. என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி எங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குகிறதற்காய் உமக்கு ஸ்தோத்திரம். பிலி 4:19
3. சந்தோஷத்தோடே கூடிய எல்லாப் பொறுமையும் நீடிய சாந்தமும் உண்டாவதற்கு மகிமையான அவருடைய வல்லமையின்படி எல்லா வல்லமையாலும் பலப்படுத்தப்பட கிருபை செய்கிறவரே உமக்கு ஸ்தோத்திரம். கொலோ 1:11
4. விசுவாசத்தில் உறுதிப்பட்டு ஸ்தோத்திரத்தோடே அதில் பெருகும்படி செய்கிறவரே உமக்கு ஸ்தோத்திரம். கொலோ 2:7
5. கர்த்தருக்குப் பயப்படுகிற சிறியோரையும் பெரியோரையும் நீர் ஆசீர்வதிக்கிறீர் ஆகவே தோத்திரம். சங் 115:13
6. உங்கள் சாந்தகுணம் எல்லா மனிதருக்கும் தெரிந்திருப்பதாக என்று சொல்லும் தேவனே உமக்கு தோத்திரம். பிலி 4:5
7. துர் இச்சைகளுக்கு இடமாக உடலைப் பேணாமலிருந்து கர்த்தராகிய இயேசு கிறிஸ்வை தரித்துக் கொள்ளுங்கள் என்று எச்சரிக்கிறபடியால் உமக்கு தோத்திரம். ரோ 13:14
8. கர்த்தர் எங்களையும் எங்கள் பிள்ளைகளையும் வர்த்திக்கப்பண்ணுகிறீர் ஆகவே தோத்திரம். சங் 115:14

ஜெபம்: மகாராஜாவாயிருக்கிற கர்த்தாவே, நாங்கள் விசுவாசத்தில் உறுதிப்பட்டு ஸ்தோத்திரத்தோடே அதில் பெருகும்படி செய்யும். துர் இச்சைகளுக்கு எங்களை விலக்கிக் காத்து உம்முடைய பரிசுத்த இரத்தக் கோட்டைக்குள் கிருபையாய் வைத்துக் கொள்ளும் பிதாவே. சாந்த குணத்தை எப்போதும் தரித்து பரிசுத்தத்தில் நிலைத்திருக்கக் கிருபை புரியும். இயேசுவின் நாமத்தில் பிதாவே ஆமென்.

ஜுலை - 20

1. என் ஆத்துமாவே கர்த்தரை ஸ்தோத்திரி. என் முழு உள்ளமே அவருடை பரிசுத்த நாமத்தை ஸ்தோத்திரி. என் ஆத்துமாவே கர்த்தரை ஸ்தோத்திரி அவ செய்த சகல உபகாரங்களையும் மறவாதே ஆமென். சங் 103:1
2. சமாதானத்தின் தேவன் எங்களோடிருப்பதற்காக தோத்திரம். பிலி 4:9
3. நான் எந்த நிலைமையிலிருந்தாலும் மரைம்மியமாயிருக்கக் கற்றுக் கொள் கிருபை யளிப்பவரே உமக்கு தோத்திரம். பிலி 4:11
4. தாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும் வாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரிய எவ்விடத்திலும் எல்லாவற்றிலும் திருப்தியாயிருக்கவும் பட்டினியாயிருக்கவ பரிபூரணமடையவும்குறைவுபடவும் போதிக்கப்பட்டேன் என்னை பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்கு பலனுண்டு. ஆகவே தோத்திரம். பிலி 4:12
5. எல்லாம் எனக்குக் கிடைத்தது பரிபூரணமும் உண்டாயிருக்கிறது ஆகவே தோத்திரம். பிலி 4:18
6. என் வழிகளிலெல்லாம் என்னைக் காக்கும்படி தூதர்களுக்குக் கட்டளையிடு கர்த்தாவே தோத்திரம். சங் 91:11
7. நான் நம்பும் கர்த்தர் என் அடைக்கலமும் என் கோட்டையும் எ தேவனுமாயிருப்பதற்காய் உமக்கு தோத்திரம். சங் 91:12

ஜெபம்: சமாதானத்தின் தேவனே, நீர் என்னோடிருந்து, எனக்காக யெகோ ஷாலோமாயிருந்து எந்த சூழ்நிலையிலும் உம்மிலே மரைம்மியமாயிருக்கும் கிருபை புரியும். என் வாழ்வில் எல்லாக் குறைவுகளையும் என்னை விட்டக பரிபூரணம் உண்டாகக்கட்டளையிடும் தகப்பனே. நீர் செய்கிற உபகாரங்க நான் ஒருபோதும் மறவாமல் உம்மை துதித்துக் கொண்டேயிருக்க அருள் தா இயேசுவின் நாமத்தில் பிதாவே ஆமென்.

லை - 21

1. தேவனே என் கண்ணீரை உம்முடைய துருத்தியில் வைத்திருப்பதற்காகவும்
அவைகள் உம்முடைய கணக்கில் இருப்பதற்காகவும் உமக்கு தோத்திரம்.
சங் 56:8

2. அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரித்தவர்களாயிருந்த எங்களை
உயிர்ப்பித்தபடியால் உமக்கு தோத்திரம். எபே 2:1

3. கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டோம். இது
எங்களால் உண்டானதல்ல இது தேவனுடைய ஈவு. ஆகவே தோத்திரம்.
எபே 2:8

4. நான் கிறிஸ்துவினுடைய அளவற்ற ஐசுவரியத்தைப் புறஜாதிகளிடத்தில்
சுவிசேஷமாய் அறிவிக்கிறதற்காக இந்தக்கிருபை எனக்கு
அளிக்கப்பட்டிருகிறபடியால் தோத்திரம். எபே 3:8

5. கிறிஸ்துவினுடைய அன்பின் அகலமும், நீளமும், ஆழமும், உயரமும்
இன்னதென்று உணர்ந்து அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்து கொள்ள
வல்லவர்களாகவும் தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிறையப்படவும்
அவர் தமது மகிமையின் ஐசுவரியத்தின்படியே எங்களுக்கு அநுக்கிரகம்
பண்ணுகிறீரே. உமக்கு தோத்திரம். எபே 3:18

6. மனுஷன் எனக்கு என்ன செய்வான். தேவனை நம்பியிருக்கிறேன் நான்
பயப்படேன். ஆகவே தோத்திரம். சங் 56:11

7. விக்கினங்கள் கடந்து போகுமட்டும் உமது செட்டைகளின் நிழலிலே வந்து
அடையச் செய்பவரே. உமக்கு தோத்திரம். சங் 57:1

ஜெபம்: அளவற்ற ஐசுவரிய சம்பன்னரே, நான் எப்போதும் உமது செட்டைகளின் நிழலிலே தங்கியிருக்கச செய்யும். மனுஷன் எனக்கு என்ன செய்ய முடியும் கர்த்தாவே நான் உம்மையே நம்பியிருக்கிறேன். என் கண்ணீரை உம்முடைய கணக்கில் வைத்து மகிழ்ச்சியின் நாட்களை அவைகளுக்கு ஈடாகத் தந்து ஆசீர்வதியும். இயேசுவின் நாமத்தில் ஆமென்.

ஜூலை - 22

1. என் ஆத்துமா தேவனையே நோக்கி அமர்ந்திருக்கிறது நான் நம்புகிற
அவராலே வரும். ஆகவே தோத்திரம். சங் 62:5
2. அவர் நாம் வேண்டிக் கொள்ளுகிற தற்கும் நினைக்கிறதற்கும் மிகவு
அதிகமாய் நமக்குள்ளே கிரியை செய்கிற வல்லமையின் படியே நமக்கு
செய்ய வல்லவராயிருக்கிறபடியால் தோத்திரம். எபே 3:20
3. நீங்கள் கோபங்கொண்டாலும் பாவஞ்செய்யாதிருங்கள் சூரிய
அஸ்தமிப்பதற்கு முன்னதாக உங்கள் எரிச்சல் தணியக்கடவது என்கிறீ
உமக்கு தோத்திரம். எபே 4:26
4. சகலவிதமான கசப்பும், கோபமும், மூர்க்கமும், கூக்குரலும், தூஷணமு
மற்ற எந்த துர்க்குணமும் உங்களை விட்டு நீங்கக்கடவது என்று எங்கள
எச்சரிக்கிறவரே உமக்கு தோத்திரம். எபே 4:31
5. ஒருவருக் கொருவர் தயவாயும் மன உருக்கமாயும் இருந்து கிறிஸ்துவுக்கு
தேவன் உங்களுக்கு மன்னித்தது போல நீங்களும் ஒருவருக் கொருவ
மன்னியுங்கள் என்று போதிக்கிறபடியால் உமக்கு தோத்திரம். எபே 4:3
6. கர்த்தர் மேல் உன் பாரத்தை வைத்துவிடு அவர் உன்னை ஆதரிப்ப
என்கிறீரே உமக்கு தோத்திரம். சங் 55:22
7. தேவனே நீர் என் பொருத்தனைகளைக் கேட்டபடியினால் உமக்கு தோத்திர
சங் 61:5

<u>ஜெபம்:</u> மன்னிப்பதில் மகத்துவமுள்ள தேவனே, நாங்கள் எப்போது
மற்றவர்களைக் குறித்த கசப்புணர்ச்சி கொண்டிராதபடிக்கு மனதார மன்னி
எங்களுக்கு உதவி செய்யும். நீர் எங்களை மன்னித்தது போல நாங்களு
கோபத்தையும் மூர்க்கத்தையும் விட்டுவிட்டு ஒளியின் பிள்ளைகளாக ஆவியி
கனிகளைப் பெற்று வாழ கிருபை புரியும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமெ

ஜெபமாலை - 23

ஜனத்தில் சிறுமைப்படுகிறவனை நியாயம் விசாரித்து ஏழைகளின் பிள்ளைகளை இரட்சிக்கிறவரே உமக்கு தோத்திரம். சங் 72:4

மனைவிகள் கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறது போல தங்கள் சொந்த புருஷருக்குக் கீழ்ப்படியச் செய்கிறவரே தோத்திரம். எபே 5:22

புருஷர்களும் தங்கள் மனைவிகளைத் தங்கள் சொந்த சரீரங்களாகப் பாவித்து அவர்களில் அன்பு கூரவைப்பவரே உமக்கு தோத்திரம். எபே 5:28

மனுஷன் தன் தகப்பனையும் தாயையும் விட்டு தன் மனைவியுடன் இசைந்து இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள் என்ற பெரிய இரகசியத்தை வெளிப்படுத்தும் தேவனே தோத்திரம். எபே 5:31

அவனவன் தனக்கானவைகளையல்ல பிறருக்கானவைகளையும் நோக்குவானாக என்பதற்காய் தோத்திரம். பிலி 2:4

ஒருவனைத் தாழ்த்தி ஒருவனை உயர்த்தும் தேவனே உமக்கு தோத்திரம். சங் 75:7

நெருக்கத்திலே நான் கூப்பிட்ட வேளையிலே நீர் என்னைத் தப்புவிக்கிறபடியால் உமக்கு தோத்திரம். சங் 81:7

ஜெபம்: நீதியுள்ள நியாயாதிபதியே, நான் நெருக்கப்படும்போது உம்மை மாத்திரம் ...பிட கிருபை புரியும். இந்த உலக வாழ்க்கையில் ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்து அன்பினால் கட்டப்பட்டிருக்க உதவி செய்யும் தகப்பனே. எங்கள் தேவைகளுக்காக மட்டுமில்லாது மற்ற தேவையிலிருக்கும் அனைவருக்காவும் பாரத்தோடு ஜெபிக்கக்கூடிய வாஞ்சையைத் தாரும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்.

ஜுலை - 24

1. அதிசயங்களைச் செய்கிற தேவன் நீரே. ஆகவே தோத்திரம். சங் 77:14
2. உன் வாயை விரிவாய்த்திற நான் அதை நிரப்புவேன் என்றவரே உமக்கு தோத்திரம். சங் 81:10
3. முற்காலத்தில் நீங்கள் அந்த காரமாயிருந்தீர்கள். இப்பொழுதோ கர்த்தருக்குள் வெளிச்சமாயிருக்கிறீர்கள் என்கிறீரே உமக்கு தோத்திரம். எபே 5:8
4. சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக் கொருவர் புத்தி சொல்லிக் கொண்டு உங்கள் இருதயத்தில் கர்த்தரைப்பாடி கீர்த்தனம் பண்ணி நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரித்து தெய்வபயத்தோடே ஒருவருக் கொருவர் கீழ்ப்படிந்திருக்கும்படி போதிக்கிறவரே உமக்கு தோத்திரம். எபே 5:19
5. எந்த சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம் பண்ணி அதன் பொருட்டு மிகுந்த மன உறுதி யோடு சகல பரிசுத்த வான்களுக்கும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக் கொண்டிருககும்படி எங்களை வழி நடத்துகிறவரே உமக்கு தோத்திரம். எபே 6:18
6. ஒன்றையும் வாதினாலாவது பெருமையினாலாவது செய்யாமல் மனத்தாழ்மையினாலே ஒருவரை யொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள் என்கிறீரே உமக்கு தோத்திரம். பிலி 2:3
7. கர்த்தர் நன்மையானதைத் தருகிறபடியால் உமக்கு தோத்திரம். சங் 85:12

ஜெபம்: நன்மைக்குக் காரணராகிய கர்த்தாவே, நான் எப்பொழுதும் உம்மைப் கீர்த்தனம் பண்ணவும் வேண்டுதல்களை விசுவாசத்துடன் விழித்துக் கொண் ஏறெடுக்கவும் என்னைத் தூண்டியருளும். அதிசயங்களைச் செய்கிற தேவன் வாழ்விலும் நன்மை யானவைகளைத் தந்து ஆசீர்வதியும் தகப்பனே. இயேசுவின் நாமத்தில் பிதாவே ஆமென்.

1. கர்த்தர் என் வலது பாரிசத்தில் இருக்கிறபடியால் நான் அசைக்கப்படுவதில்லை ஆகவே தோத்திரம். சங் 16:8
2. பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடும்படி செய்கிறவரே உமக்கு தோத்திரம். கொலோ 3:2
3. விபசாரம், அசுத்தம், மோகம், துர் இச்சை, விக்கிரகாராதனையாகிய பொருளாசை ஆகிய இவைகளைப் பூமியிலே உண்டு பண்ணுகிற எங்கள் அவயங்களை அழித்துப் போட ஆயத்தமாயிருக்கச் செய்கிறவரே உமக்கு தோத்திரம். கொலோ 3:5
4. கோபமும், மூர்க்கமும், பொறாமையும், எங்கள் வாயில் பிறக்கலாகாத தூஷணமும் வம்பு வார்த்தைகளுமாகிய இவைகளை யெல்லாம் விட்டு விடும்படி செய்கிறவரே உமக்கு தோத்திரம். கொலோ 3:8
5. ஒருவருக்கொருவர் பொய் சொல்லாதிருக்கும்படி கட்டளையிட்டீரே உமக்கு தோத்திரம். கொலோ 3:9
6. கர்த்தர் என் மனவிருப்பத்தின்படி எனக்குத் தந்தருளி எமது ஆலோசனைகளையெல்லாம் நிறைவேற்றுகிறீர். ஆகவே தோத்திரம். சங் 20:4
7. கர்த்தர் எனக்கு நன்மை செய்தபடியால் அவரைப் பாடுவேன் தோத்திரம். சங் 13:6

ஜெபம்: இரக்கம் நிறைந்த கர்த்தாவே நான் எப்போதும் உம்மையே சார்ந்து வாழும்படி கிருபை செய்யும் என் மனவிருப்பத்தின்படி எனக்குத் தந்தருளி என் தேவைகளை யெல்லாம் சந்தியும் தகப்பனே எல்லாவிதமான துர்க்குணங்களையும் பிசாசின் கிரியைகளையும் இயேசுவின் நாமத்தில் மேற்கொள்ள அருள் புரியும் நான் உமது வலது பாரிசத்தில் இருப்பதால் நான் அசைக்கப்படுவதில்லை என்ற உறுதியான விசுவாசத்தைத்தாரும் பிதாவே இயேசுவின் நாமத்தில் ஆமென்.

ஜுலை - 26

1. எனக்கு உண்டான நெருக்கத்திலே கர்த்தரை நோக்கிக் கூப்பி
வேளையிலே அவர் தமது ஆலயத்திலிருந்து என் சத்தத்தைக் கேட்ட படிய
தோத்திரம். சங் 18:6
2. உருக்கமான இரக்கத்தையும் தயவையும் மனத்தாழ்மையை
சாந்தத்தையும் நீடிய பொறுமையையும் தரித்துக் கொண்டு ஒருவ
யொருவர் தாங்கி ஒருவர் பேரில் ஒருவருக்குக் குறைபாடு உண்டான
கிறிஸ்து உங்களுக்கு மன்னித்தது போல ஒருவருக்கொருவர் மன்னியுங்
என்றீரே உமக்கு தோத்திரம். கொலோ 3:13
3. சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினா
ஒருவருக் கொருவர் போதித்து புத்தி சொல்லிக் கொண்டு எங்கள் இருதயத்தி
கர்த்தரை பக்தியுடன் பாடி தேவனை ஸ்தோத்திரிக்கும்படி செய்கிறவ
உமக்கு தோத்திரம். கொலோ 3:16
4. தேவசமாதானம் எங்கள் இருதயங்களை ஆளும்படி செய்கிறவரே உம
தோத்திரம். கொலோ 3:15
5. எதைச் செய்தாலும் அதை மனுஷர்களுக்கென்று செய்யா
கர்த்தருக்கென்றே மனப்பூர்வமாய்ச் செய்யச் செய்கிறவரே உம
தோத்திரம். கொலோ 3:24
6. தேவரீர் திக்கற்ற பிள்ளைகளுக்கும் ஒடுக்கப்பட்டவர்களுக்கும் நீதி செ
உமது செவிகளை சாய்க்கிறபடியால் உமக்கு தோத்திரம். சங் 10:18
7. உயரத்திலிருந்து நீர் என்னைக் கைநீட்டிப்பிடித்துத்தூக்கி விடுகிறீர் ஆக
தோத்திரம். சங் 18:16

<u>ஜெபம்:</u> திக்கற்ற பிள்ளைகளுக்கு அடைக்கலமான தேவனே, இந்த நேரத்தி
நான் உம்மை நோக்கிப் பார்க்கிறேன். எல்லா நெருக்கங்களினின்றும் என்
தூக்கி விடும் பிதாவே. எப்போதும் உம்மை நோக்கிப்பாடித் துதித்து உம
மகிமைப் படுத்திக் கொண்டேயிருக்க கிருபை புரியும். இயேசுவின் நாம
பிதாவே ஆமென்.

1. கர்த்தாவே நீர் நல்லவரும் உத்தமருமாயிருக்கிறீர் ஆகவே தோத்திரம். சங் 25:8
2. என் மீட்பர் உயிரோடிருக்கிறீர் ஆகவே தோத்திரம். யோபு 19:25
3. உமது வீட்டின் நன்மையால் திருப்தியடையப்பண்ணுகிறவரே தோத்திரம். சங் 65:4
4. உம்முடைய நன்மையால் முடிசூட்டுகிறீர் ஆகவே தோத்திரம். சங் 65:11
5. என் சமூகம் உனக்கு முன்பாகச் செல்லும் என்றவரே தோத்திரம். யாத் 33:14
6. நான் உன் பேரைப் பெருமைப்படுத்துவேன் என்றீரே உமக்கு தோத்திரம். ஆதி 12:2
7. ஆபத்துக் காலத்தில் உம்மை நோக்கிக் கூப்பிடும்படி சொன்னவரே உமக்கு தோத்திரம். சங் 50:15
8. பயப்படாதே உன் வேண்டுதல் கேட்கப்பட்டது என்று தேற்றுபவரே உமக்கு தோத்திரம். லூக் 1:13
9. கர்த்தர் என்னை எல்லாத் தீங்குக்கும் விலக்கிக் காக்கப் போவதற்காக உமக்கு தோத்திரம் சங் 121:7
10. கர்த்தாவே உமது கிருபை எங்கள் மேல் இருப்பதற்காக உமக்கு தோத்திரம். சங் 33:22

ஜெபம்: நல்லவராகிய என் மீட்பரே, என்னை ஒருபோதும் தனித்து விடாதபடி உமது சமூகம் எப்போதும் என்னோடிருக்கச் செய்யும் என் வேண்டுதலைக் கேட்டு நன்மையால் என்னை முடி சூட்டியருளும். எல்லாத் தீங்குக்கும் என் கால்களை விலக்கிக் காத்து உமது கிருபை என் மேல் இருக்கும்படி தகப்பனே தயவாய் கிருபை கூரும். இயேசுவின் நாமத்தில் ஜெபம் கேளும் பிதாவே. ஆமென்.

ஜூலை - 28

1. கர்த்தாவே காலையிலே என் சத்தத்தைக் கேட்டருள்வீர். ஆகவே தோத்திர
சங் 5:3

2. கர்த்தாவே நீர் ஒருவரே என்னைச் சுகமாய்த் தங்கப்பண்ணுகிறபடிய
உமக்கு தோத்திரம். சங் 4:8

3. கர்த்தாவே எங்களுக்கு இரங்குகிறபடியால் தோத்திரம். ஏசா 33:2

4. இதோ நான் புதிய காரியத்தைச் செய்கிறேன் என்கிறவரே உமக்கு தோத்திர
ஏசா 43:19

5. நீ கர்த்தரான எனக்குப் பரிசுத்த ஜனமாயிருப்பாய் என்ற படியால் உம
தோத்திரம். உபா 26:19

6. கர்த்தராலே நாங்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். ஆகவே தோத்திர
சங் 115:15

7. கர்த்தரே எனக்கு நித்திய வெளிச்சமாயிருப்பீர். ஆகவே தோத்திர
ஏசா 60:20

8. உம்முடைய அதிசயங்களை யெல்லாம் விவரிக்கும்படி செய்கிறவ
தோத்திரம். சங் 9:1

9. தேவன் அருளிய சொல்லி முடியாத ஈவுக்காக உமக்கு தோத்திர
II கொரி 9:15

ஜெபம்: இரக்க முள்ள கர்த்தாவே, அதிகாலையில் நான் ஏறெடுக்கும் விண்ண உம்முடைய சந்நிதியில் எட்டும்படி செய்யும். எனக்கு தயவாய் இரங்கி என் ஆசீர்வதியும். நீர் அருளும் சொல்லி முடியாத ஈவுகளை நினைவுகூ உம்முடைய அதிசயங்களை யெல்லாம் எண்ணி எண்ணி உம்மைத் து அருள் தாரும். இயேசுவின் நாமத்தில் பிதாவே ஆமென்.

1 ஆண்டவரே நீர் நல்லவரும் மன்னிக்கிறவரும் உம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவர் மேலும் கிருபை மிகுந்த வருமாயிருக்கிறபடியால் உமக்கு தோத்திரம். சங் 86:5

2 நீர் மனவுருக்கமும் இரக்கமும் நீடிய பொறுமையும் பூரண கிருபையும் சத்தியமுமுள்ள தேவனாக இருக்கிறபடியால் உமக்கு தோத்திரம். சங் 86:15

3 கர்த்தாவே உமது அடியார் சுமக்கும் நிந்தையை நினைத்திருக்கிறீர் ஆகவே தோத்திரம். சங் 89:51

4 நான் துயரப்படுகிற நாளில் உம்மை நோக்கிக் கூப்பிடுகையில் தேவரீர் என்னைக் கேட்டருளுகிறீர் ஆகவே தோத்திரம். சங் 86:7

5 ஆபத்தில் நானே அவனோடிருந்து அவனைத் தப்புவித்து அவனைக் கனப்படுத்துவேன் என்றதற்காய் தோத்திரம். சங் 91:15

6 ஆண்டவரே தேவரீர் தலைமுறை தலைமுறையாக எங்களுக்கு அடைக்கலமாயிருக்கிறபடியால் தோத்திரம். சங் 90:1

7 நீடித்த நாட்களால் அவனைத் திருப்தியாக்கி என் இரட்சிப்பை அவனுக்குக் காண்பிப்பேன் என்றவரே உமக்கு தோத்திரம். சங் 91:16

8 கர்த்தர் நல்லவர் அவர் கிருபை என்றென்றுமுள்ளதற்காய் உமக்கு தோத்திரம். சங் 100:5

ஜெபம்: இரக்கமுள்ள கர்த்தாவே, நீர் நல்லவரும் மன்னிப்பதில் மகத்துவமுள்ளவருமாயிருக்கிறீர். இந்த நாளில் என் மீது உமது கிருபையை வைத்து என் நிந்தையையும் துயரத்தையும் என்னை விட்டு அகற்றும் தகப்பனே. உம்மை நோக்கி நான் கூப்பிடும் போது எனக்கு இரங்கிக் கிருபை புரியும் இயேசுவின் நாமத்தில் பிதாவே ஆமென்.

ஜூலை - 30

1. கர்த்தர் அதிசயங்களைச் செய்திருக்கிறார் ஆகவே தோத்திரம். சங் 98:1
2. என் அக்கிரமங்களை யெல்லாம் மன்னித்து என் நோய்களையெல்லா குணமாக்குகிறீர் ஆகவே தோத்திரம். சங் 103:3
3. என் பிராணனை அழிவுக்கு விலக்கிமீட்டு உன்னைக் கிருபையினாலு இரக்கங்களினாலும் முடிசூட்டுகிறதற்காக உமக்கு தோத்திரம். சங் 103:4
4. எப்போதும் கடிந்து கொள்ளாதவரே என்றைக்கும் கோபம் கொண்டிராதவ உமக்கு தோத்திரம். சங் 103:9
5. என் பாவங்களுக்குத் தக்கதாக எனக்குச் செய்யாமலும் என் அக்கிரமங்களு தக்கதாக சரிக்கட்டாமலும் இருக்கிறவரே உமக்கு தோத்திரம். சங் 103:10
6. பூமிக்கு வானம் எவ்வளவு உயரமாயிருக்கிறதோ அவருக்கு பயப்படுகிறவர்கள் மேல் அவ்வளவு பெரிதாய் இருக்கும் அவருடை கிருபைக்காக தோத்திரம். சங் 103:11
7. மேற்குக்கும் கிழக்குக்கும் எவ்வளவு தூரமோ அவ்வளவு தூரம என்னுடைய பாவங்களை என்னை விட்டு விலக்குகிறதற்காய் உம தோத்திரம் சங் 103:12
8. நான் உயிரோடிருக்கு மட்டும் என் கர்த்தரைப்பாடுவேன் நான் உள்ளளவும் தேவனைக் கீர்த்தனம் பண்ணுவேன் அல்லேலூயா சங் 104:33

ஜெபம்: பரிசுத்தமுள்ள கர்த்தாவே, என் பாவங்களை மன்னி அவைகளுக்குத்தக்கதாக என்னைத் தண்டியாதிரும். எனக்கு இரங்கி என்னை குணமாக்கியருளும் என் வாழ்வில் அதிசயங்களைக் காணும்படி கிருபை புரி தகப்பனே. இயேசுவின் நாமத்தில் பிதாவே ஆமென்.

துன்மார்க்கன் தன் வழியையும் நினைவுகளையும் விட்டுக் கர்த்தரிடத்தில் திரும்பும் போது அவன் மேல் மனதுருகி மன்னிக்கிறதற்குத் தயை பெருத்திருக்கிறீர். ஆகவே தோத்திரம். ஏசா 55:7

உம் வாயிலிருந்து புறப்படும் வசனம் வெறுமையாய் உம்மிடத்திற்குத் திரும்பாமல் அது நீர் விரும்புகிறதைச் செய்து நீர் அதை அனுப்பின காரியமாகும்படி வாய்க்கும். ஆகவே தோத்திரம். ஏசா 55:11

இனிக் கொடுமை உன் தேசத்திலும் அழிவும் நாசமும் உன் எல்லைகளில் கேட்கப்படமாட்டாது என்றவரே உமக்கு தோத்திரம். ஏசா 60:18

நீ இனிக் கைவிடப்பட்டவள் என்னப்படாமலும் உன்தேசம் இனி பாழான தேசமென்னப்படாமலும், நீ எப்சிபா என்றும், உன் தேசம் பியூலா என்றும் சொல்லப்படும் என்று ஆசீர்வதிக்கும் கர்த்தரே உமக்கு தோத்திரம். ஏசா 62:4

இரட்சிக்கக் கூடாதபடிக்கு கர்த்தருடைய கை குறுகிப்போகவுமில்லை. ஆகவே தோத்திரம். ஏசா 59:1

கர்த்தர் மேல் நம்பிக்கை வைத்து கர்த்தரையே தன் நம்பிக்யையாகக் கொண்டிருக்கிற மனுஷன் பாக்கியவான் ஆகவே தோத்திரம். எரே 17:7

நீங்கள் கர்த்தராலே ஆசீர்வதிக்கப்பட்ட சந்ததியாயிருப்பீர்கள் என்றவரே உமக்கு தோத்திரம். ஏசா 65:23

ஜெபம்: அன்பு தெய்வமே, நீர் பாவிகளை மன்னிக்கத் தயை பெருத்திருக்கிறீர் என்பதை அறிவேன். துன்மார்க்க வழியிலிருந்து என்னைத் திருப்பி உமக்குப்பிரியமான பாதையில் நடக்கும்படி செய்யும் கர்த்தாவே. உம்மாலே ஆசீர்வதிக்கும் சந்ததியாக மாற உமது கிருபையை எனக்கு அருளிச் செய்யும். இயேசுவின் நாமத்தில் ஆமென்.

ஆகஸ்டு - 1

1. இதோ நான் புதிய வானத்தையும் புதிய பூமியையும் சிருஷ்டிக்கிறே என்பவரே உமக்கு தோத்திரம். ஏசா 65:17
2. நாங்கள் கூப்பிடுமுன்னே கர்த்தாவே நீர் மறுஉத்தரவு கொடுக்கிறீர் ஆகவே தோத்திரம். ஏசா 65:24
3. அழுகையின் சத்தமும் கூக்குரலின் சத்தமும் இனி கேட்கப்படாது காக்கிறவரே உமக்கு தோத்திரம். ஏசா 65:19
4. முந்தினவைகள் இனி நினைக்கப்படுவதில்லை என்றவரே உமக்கு தோத்திர ஏசா 65:17
5. உன்னைக் காக்கும்படிக்கு நான் உன்னுடனே இருக்கிறேன் என்பதற்கா உமக்கு தோத்திரம். எரேமியா 1:8
6. தீங்கின் காலத்திலும் நெருக்கத்தின் காலத்திலும் உனக்காக நான் சத்துருவு எதிர்ப்பட்டு உனக்குச் சகாயஞ் செய்வேன் என்றவரே உமக்கு தோத்திர எரே 15:11
7. நீங்கள் எதிர்பார்த்திருக்கும் முடிவை உங்களுக்குக் கொடுக்கும்படிக்கு நா உங்கள் பேரில் நினைத்திருக்கிற நினைவுகளை அறிவேன் அவை தீமைக்கல்ல சமாதானத்துக் கேதுவான நினைவுகளே என்று சொல் கர்த்தாவே உமக்கு தோத்திரம். எரே 29:11
8. கர்த்தர் என் மேல் பிரியமாயிருக்கிறீர் ஆகவே தோத்திரம். ஏசா 62:4

<u>ஜெபம்:</u> என் மீட்பரே, தீங்கின் காலத்தில் என்னைக் காக்கும்படிக்கு என்னே இருந்தருளும். நான் உம்மை நோக்கிக் கூப்பிடுகையில் எனக்கு மறுஉத் கொடும் கர்த்தாவே. நான் எதிர்பார்த்திருக்கும் முடிவை உமது கரத்திலி பெற்றுக் கொள்ள கிருபை புரியும். இயேசுவின் நாமத்தில் பிதாவே ஆமென்.

நீ பயப்படாதே நான் உன்னுடனே இருக்கிறேன், திகையாதே, நான் உன் தேவன் என்கிறபடியால் உமக்கு தோத்திரம். ஏசா 41:10

நான் உன்னைப் பலப்படுத்தி உனக்கு சகாயம் பண்ணுவேன் என் நீதியின் வலதுகரத்தினால் உன்னைத்தாங்குவேன் என்பவரே உமக்கு தோத்திரம். ஏசா 41:10

பயப்படாதே, நான் உனக்குத் துணை நிற்கிறேன் என்கிறவரே உமக்கு தோத்திரம். ஏசா 41:14

எனக்கு இரங்கும்படி கர்த்தர் காத்திருப்பார் என்மேல் மனதுருகும்படி எழுந்திருப்பார். ஆகவே தோத்திரம். ஏசா 30:18

என் கூப்பிடுதலின் சத்தத்துக்கு அவர் உருக்கமாய் இரங்கி அதைக் கேட்டவுடனே எனக்கு மறுஉத்தரவு அருளிச் செய்கிறபடியால் தோத்திரம். ஏசா 30:19

உன் விண்ணப்பத்தைக் கேட்டேன். உன் கண்ணீரைக் கண்டேன் இதோ உன் நாட்களோடே வருஷங்களைக் கூட்டுவேன் என்றவரே உமக்கு தோத்திரம். ஏசா 38:5

கர்த்தராகிய நான் அவர்களுக்கு செவி கொடுத்து அவர்களைக் கைவிடாதிருப்பேன் என்றவரே உமக்கு தோத்திரம். ஏசா 41:17

ஜெபம்: அன்புள்ள கர்த்தாவே, இந்த நேரத்தில் நான் ஏறெடுக்கும் விண்ணப்பத்தைக் கேட்டருளும். என் கண்ணீரைக் காண்கிற தேவனே, எனக்கு இரங்கி துணை நின்றருளும் நான் கைவிடப்படாதபடி என்றும் காக்கப்பட உமது கிருபையைத் தாரும். இயேசுவின் நாமத்தில் பிதாவே ஆமென்.

ஆகஸ்டு - 3

1. நானும் கர்த்தர் எனக்குக் கொடுத்த பிள்ளைகளும் சீயோன் பர்வதத்
வாசமாயிருக்கிற சேனைகளின் கர்த்தராலே இஸ்ரவேலி
அடையாளங்களாகவும் அற்புதங்களாகவும் இருக்கும்படி செய்கிறவ
உமக்கு தோத்திரம். ஏசா 8:18

2. பறந்து காக்கிற பட்சிபோல சேனைகளின் கர்த்தர் ஆதரவாக இருந்து கா
தப்பப்பண்ணுகிறபடியால் தோத்திரம். ஏசா 31:5

3. கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள் சந்தோஷமும் மகிழ்ச்சியும் அடைவார்க
சஞ்சலமும் தவிப்பும் ஓடிப்போம். ஆகவே தோத்திரம். ஏசா 35:10

4. சோர்ந்து போகிறவனுக்கு பெலன் கொடுத்து சத்துவமில்லாதவனு
சத்துவத்தை பெருகப்பண்ணுகிறவரே உமக்கு தோத்திரம். ஏசா 40:29

5. கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்கள் புதுப்பெலன் அடைந்து கழுகுகளைப் போ
செட்டைகளை அடித்து எழும்பப் பண்ணுகிறவரே உமக்கு தோத்திர
ஏசா 40:31

6. உங்கள் வழக்கைக் கொண்டு வாருங்கள் என்றழைக்கும் தேவ
தோத்திரம். ஏசா 41:21

7. பயப்படாதே நான் உன்னை மீட்டுக் கொண்டேன் உன்னைப் பேர் சொ
அழைத்தேன். நீ என்னுடையவன் என்பவரே உமக்கு தோத்திரம். ஏசா 4

ஜெபம்: சேனைகளின் கர்த்தாவே. சோர்ந்து போகும் போது என்னை பலப்படு
சந்தோஷமும் மகிழ்ச்சியும் கேட்கப்பண்ணும் தகப்பனே நான் என்றும் உம்மு
பிள்ளையாக வாழ கிருபை புரியும். இயேசுவின் நாமத்தில் பிதாவே ஆமென்.

1. உன் தேவனாகிய கர்த்தருடைய கட்டளைகளின்படியெல்லாம் செய்ய நீ கவனமாயிருக்கும் படிக்கு அவர் சத்தத்திற்கு உண்மையாய் செவி கொடுப்பாயானால் உன் தேவனாகிய கர்த்தர் பூமியிலுள்ள சகல ஜாதிகளிலும் உன்னை மேன்மையாக வைப்பார் என்றவரே உமக்கு தோத்திரம். உபா 28:1

2. நீ பட்டணத்திலும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பாய், வெளியிலும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பபாய் என்றதற்காய் உமக்கு தோத்திரம். உபா 28:3

3. உன் கர்ப்பத்தின் கனியும் உன் நிலத்தின் கனியும் உன் மிருக ஜீவன்களின் பலனும் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கும் என்றவரே உமக்கு தோத்திரம். உபா 28:4

4. உன் கூடையும் மாப்பிசைகிற உன் தொட்டியும் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கும் என்றவரே உமக்கு தோத்திரம். உபா 28:5

5. நீ வருகையிலும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பாய், நீ போகையிலும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பாய் என்றவரே உமக்கு தோத்திரம். உபா 28:6

6. உன் விரோதமாய் எழும்பும் உன் சத்துருக்கள் ஒரு வழியாய் உனக்கு எதிராகப்புறப்பட்டு வருவார்கள். ஏழு வழியாய் உனக்கு முன்பாக ஓடிப்போவார்கள் என்றீரே உமக்கு தோத்திரம். உபா 28:7

7. நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் உனக்கு முன்பாக எதிர்த்து எவரும் நிற்பதில்லை நான் மோசேயோடே இருந்தது போல உன்னோடே இருப்பேன். நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை என்றதற்காய் தோத்திரம். யோசுவா 1:5

ஜெபம்: எங்களை விட்டு விலகாமலும் எங்களைக் கைவிடாமலும் இருக்கிற கிருபை நிறைந்த எங்கள் பரலோக தகப்பனே, இந்த நாளிலும் நாங்கள் உம் சத்தத்திற்குச் செவிகொடுத்து உமது கட்டளைகளின்படி செய்ய கவனமாயிருக்கும்படி எங்களுக்கு கிருபை புரியும். இயேசுவின் நாமத்தில் பிதாவே ஆமென்.

ஆகஸ்டு - 5

1. எங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தாவே பரலோகததிலிருக்கிற அல்லவோ தேவன், உம்முடைய கரத்திலே வல்லமையும் பராக்கிர இருக்கிறது. ஆகவே தோத்திரம். II நாளா 20:6
2. நீங்கள் தரித்து நின்று கர்த்தர் உங்களுச் செய்யும் இரட்சிப்பை பாருங் பயப்படாமலும் கலங்காமலும் இருங்கள் கர்த்தர் உங்களோடே இருக்கி என்றதற்காய் தோத்திரம். II நாளா 20:17
3. பரலோகத்தின் தேவனாகிய கர்த்தாவே உம்மில் அன்புகூர்ந்து உம்மு கற்பனைகளைக் கைக் கொள்ளுகிறவர்களுக்கு உடன்படிக்கையை கிருபையையும் காக்கிற மகத்துவமுள்ள தேவனே உமக்கு தோத்தி நெகே 1:5
4. கர்த்தர் கிருபையும் இரக்கமுமுள்ளவர். நாம் அவரிடத்திற்குத் திரும்பின அவர் தம்முடைய முகத்தை நம்மைவிட்டு விலக்குவதில்லை. ஆக தோத்திரம். II நாளா 30:9
5. கர்த்தாவே உம்முடைய மிகுந்த இரக்கங்களின்படியே எங்கள நிர்மூலமாக்கமலும் எங்களைக் கைவிடாமலும் இருந்தீர் நீர் கிருபை இரக்கமுள்ள தேவன். ஆகவே தோத்திரம். நெகே 9:31
6. நான் போகும் வழியை தேவன் அறிவார். எனக்குத் குறித்திருக்கிறதை அ நிறைவேற்றுவார். ஆகவே தோத்திரம். யோபு 23:10,14
7. அவர் தீபம் என் தலையின் மேல் பிரகாசித்தது. அவர் அருள வெளிச்சத்தினால் இருளைக் கடந்து போனேன் ஆகவே தோத்தி யோபு 29:3

ஜெபம்: பரலோகத்திலிருக்கிற வல்லமையும் பராக்கிரமமுள்ள தேவனே, இ நாளில் நாங்கள் போகின்ற பாதைகளை பயப்படாமலும் கலங்காமலும் கட செல்ல கிருபை புரியும் தகப்பனே. உமது வெளிச்சத்தினால் இருளை மேற் கொ உதவி செய்யும் .இயேசுவின் நாமத்தில் பிதாவே ஆமென்.

நான் உன் சந்ததியை வானத்தின் நட்சத்திரங்களைப் போல பெருகப் பண்ணி உன் சந்ததிக்கு இந்தத் தேசங்கள் யாவையும் தருவேன். உன் சந்ததிக்குள் ..மியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்ற தேவனே தோத்திரம். ஆதி 26:5

..லும் தேனும் ஓடுகிற தேசத்தை உங்களுக்கு சுதந்தரமாகக் கொடுப்பேன். உங்களை மற்ற ஜனங்களைவிட்டு பிரித்தெடுத்த உங்கள் தேவனாகிய ..தர் நானே என்றதற்காய் தோத்திரம். லேவி 20:24

..ங்கள் உங்கள் அப்பத்தைத் திருப்தியாகச் சாப்பிட்டு உங்கள் தேசத்தில் ..மாய்க் குடியிருப்பீர்கள், தேசத்தில் சமாதானம் கட்டளையிடுவேன் என்ற .. ஆசீர்வாதத்திற்காக தோத்திரம். லேவி 26:5

..கள் மனம் பொருந்தி கர்த்தருக்குச் செவி கொடுத்தால் தேசத்தின் ..மையைப் புசிப்பீர்கள் என்றீரே தோத்திரம். ஏசா 1:19

.. எல்லா பக்தியோடும் நல்லொழுக்கத் தோடும் கலகமில்லாத ..மைதலுள்ள ஜீவனம் பண்ணும்படிக்கு இராஜாக்களுக்காகவும் ..காரமுள்ள யாவருக்காகவும் விண்ணப்பங்களையும் ஜெபங்களையும் ..தோத்திரங்களையும் பண்ண வேண்டும் என்று போதித்தவரே தோத்திரம். ..மா 2:2

.. உன் பேரைப் பெருமைப்படுத்துவேன் என்றீரே உமக்கு தோத்திரம். ஆதி 12:2

..வன் தமது தேசத்தின் மேலும் தமது ஜனங்களின் மேலும் ..ருபையுள்ளவராவார். ஆகவே தோத்திரம். உபா 32:43

..எங்களையும் மற்ற எல்லாவற்றையும் படைத்து ஆளுகின்ற சிருஷ்டி ..வ. எங்கள் சந்ததியைப் பெருகப்பண்ணி பெருமைப்படுத்தியருளும். நீர் ..வற்றின் மேலும் கிருபையுள்ளவராயிருக்கிறீர் என்று விசுவாசிக்கிறேன். ..கள் எப்போதும் எங்கள் அரசியல் தலைவர்களுக்குக்காகவும் நேர்மையான ..க்காகவும் எங்கள் நாட்டின் செழிப்பான நாட்களுக்காகவும் ஊக்கமாக ஜெபிக்க ..தும் எங்களை ஏவியருளுமையா. இயேசுவின் மூலம் பிதாவே ஆமென்.

ஆகஸ்டு - 7

1. நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி உன்னை ஆசீர்வதித்து உன் பேரை பெருமைப்படுத்துவேன் நீ ஆசீர்வாதமாய் இருப்பாய் என்று சொ தேவனே உமக்கு தோத்திரம். ஆதி 12:2
2. நான் அவனை ஆசீர்வதித்து அவனை மிகவும் அதிகமாய்ப் பலுக பெருகவும் பண்ணுவேன் அவனைப் பெரிய ஜாதியாக்குவேன் என் தோத்திரம். ஆதி 17:20
3. வீட்டிலும் வெளியிலும் உண்டானவைகள் எல்லாவற்றிலும் கர்த்தரு ஆசீர்வாதம் இருக்கிறபடியால் தோத்திரம். ஆதி 39:5
4. தேவரீர் அவனவன் இருதயத்தை அறிந்திருக்கிறபடியே அவனவனு வழிகளுக்குத்தக்கதாகச் செய்து அவனவனுக்கு பலன் அளிக்கிறபடி தோத்திரம். I இரா 8:40
5. தேவரீர் எங்களை சிறுமைப்படுத்தின நாட்களுக்கும் நாங்கள் துன்பத் கண்ட வருஷங்களுக்கும் சரியாய் எங்களை மகிழ்ச்சி யாக்குவதற் தோத்திரம். சங் 90:15
6. எங்கள் தேவனாகிய ஆண்டவரின் பிரியம் எங்கள் மேல் இருக்கிறது. ஆ தோத்திரம். சங் 90:17
7. என் இருதயம் கர்த்தரை நம்பியிருந்தது நான் சகாயம் பெற்றேன். ஆகை என் இருதயம் களிகூருகிறது என் பாட்டினால் அவரைத் துதிப்பேன். ஆ சங் 28:7

ஜெபம்: கிருபை நிறைந்த கர்த்தாவே, இதுவரை நான் கடந்துவந்த சோதனை நிறைந்த பாதைகள் மகிழ்ச்சி நிறைந்தவைகளாக மாறும்படி செய்யும் என் இரு உம்மை மாத்திரம் நம்பி உம்மில் களிகூருகிறது. ஆபிரகாமை ஆசீர்வதித்த தே தாமே என்னையும் ஆசீர்வதித்து, உமது கிருபைகள் என்னைச் சூ கொள்ளும்படி கிருபை புரியுமையா. இயேசுவின் மூலம் பிதாவே ஆமென்.

பயப்படாதிருங்கள், அநேகம் அடைக்கலான் குருவிகளைப் பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்கள் என்று எங்களை ஆசீர்வதிக்கும் கர்த்தரே உமக்கு தோத்திரம். மத் 10:31

எவர்களுடைய அக்கிரமங்கள் மன்னிக்கப்பட்டதோ எவர்களுடைய பாவங்கள் மூடப்பட்ட தோ அவர்கள் பாக்கியவான்கள், ஆகவே தோத்திரம். ரோ 4:7

எவனுடைய பாவத்தைக் கர்த்தர் எண்ணாதிருக்கிறாரோ அவன் பாக்கியவான். ரோ 4:8

திடன் கொள், உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டது என்றீரே உமக்கு தோத்திரம். மத் 9:2

பூமியிலே பாவங்களை மன்னிக்க மனுஷகுமாரனுக்கு அதிகாரம் உண்டு ஆகவே தோத்திரம். மத் 9:6

தேவன் வாக்குத்தத்தம் பண்ணினதை நிறைவேற்ற வல்லவராயிருக்கிறாரென்று முழு நிச்சயமாய் நம்பி தேவனை மகிமைப்படுத்தி விசுவாசத்தில் வல்லவராகும்படி செய்கிறவரே உமக்கு தோத்திரம். ரோ 4:21

நீ விசுவாசித்தபடியே உனக்கு ஆகக்கடவது என்று எங்களை போத்துகிறவரே உமக்கு தோத்திரம். மத் 8:13

என்னுடைய சந்தோஷம் உங்களில் நிலைத்திருக்கும் உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும் என்றபடியால் தோத்திரம். யோவா 15:11

ஜெபம்: பரலோக பிதாவே, நீர் என் பாவங்களை யெல்லாம் மன்னித்து பரிசுத்தமாக்குகிற 'யேகோவா மெக்காதீஸ்' என்று விசுவாசிக்கிறேன். விசுவாசத்தில் நாளுக்கு நாள் வேரூன்றி வளரும்படி உதவி செய்யும். நீர் தரும் சந்தோஷம் என்னில் நிலைத்திருக்கும்படி கர்த்தாவே கிருபை புரியும். இயேசுவின் நாமத்தில் பிதாவே ஆமென்.

ஆகஸ்டு - 9

1. வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும் என்னிட
வாருங்கள் நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன் என்று அழை
தேவனே உமக்கு தோத்திரம். மத் 11:28
2. மகிமையையும் கனத்தையும் அழியாமையையும் தேடுகிறவர்களுக்கு நி
ஜீவனை அளிப்பவரே உமக்கு தோத்திரம். ரோ 2:7
3. எவன் நன்மை செய்கிறானோ அவனுக்கு மகிமையும் கனமும் சமாதா
உண்டாகும் என்றீரே உமக்கு தோத்திரம். ரோ 2:10
4. தேவனிடத்தில் பட்சபாதமில்லை ஆகவே தோத்திரம். ரோ 2:11
5. தேவன் வாக்குத்தத்தம் பண்ணினதை நிறைவே
வல்லவராயிருக்கிறபடியால் உமக்கு தோத்திரம். ரோ 4:21
6. பரலோகத்தின் தேவனானவர் எங்களுக்குக் காரியத்தைக் கை
வரப்பண்ணுகிறபடியால் தோத்திரம். நெகே 2:20
7. எங்கள் சஞ்சலத்தை சந்தோஷமாகவும் எங்கள் துக்கத்தை மகிழ்ச்சியா
மாற்றுகிறவரே உமக்கு தோத்திரம். எஸ்றா 9:21
8. உம்முடைய கூடாரம் சமாதானத் தோடிருக்கக் காண்பீர் என்றீரே உ
தோத்திரம். யோபு 5:24

ஜெபம்: பரலோகப்பிதாவே, நான் எப்போதும் நன்மை செய்து அதன் மகிமையையும் கனத்தையும் சமாதானத்தையும் பெற்றுக் கொள்ளும்படி செ எங்களுக்குக் காரியத்தைக் கைகூடி வரப்பண்ணி சந்தோஷமும் மகிழ் எங்களை நிரப்பும்படி கிருபை புரியும். இயேசுவின் மூலம் பிதாவே ஆமென்.

ஆகஸ்டு - 10

கர்த்தரை நம்புகிற அனைவருக்கும் அவர்கேடகமாயிருக்கிறார் ஆகவே தோத்திரம். II சாமு 22:31

2. பலவீனரைத் தாங்கவும், வாங்குகிறதைப்பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம் என்றும் போதித்தவரே உமக்கு தோத்திரம். அப் 20:35

3. விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான் ஆகவே தோத்திரம். ரோமர் 1:17

4. நீ குற்றமாகத் தீர்க்கிறவைகள் எவைகளோ அவைகளை நீயே செய்கிறபடியால் நீ மற்றவர்களைக் குறித்துச் சொல்லுகிற தீர்ப்பினாலே உன்னைத் தானே குற்றவாளியாகத் தீர்க்கிறாய் என்று சொல்லி எங்களை எச்சரிக்கிறவரே உமக்கு தோத்திரம். ரோ 2:1

5. தேவன் அவனவனுடைய கிரியைகளுக்குத்தக்கதாய் அவனவனுக்குப் பலனளிப்பார். ஆகையால் சோர்ந்து போகாமல் நற்கிரியைகளைச் செய்யுங்கள் என்றவரே உமக்கு தோத்திரம். ரோ 2:6

6. எனக்கு உண்டான நெருக்கத்திலே கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டு என் தேவனை நோக்கி அபயமிட்டேன் அவர் தமது ஆலயத்திலிருந்து என் சத்தத்தைக் கேட்டார் ஆகவே தோத்திரம். II சாமு 22:7

7. இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்குச் சதாகாலங்களிலும் ஸ்தோத்திரம் உண்டாவதாக ஆமென். I நாளா 16:36

ஜெபம்: இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தாவே. மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதபடிக்கு என்னைக் காத்துக் கொள்ளும் சோர்ந்து போகாமல் நற்கிரியைகளைச் செய்யும்படிக்கு எனக்கு உதவி செய்யும் பிதாவே. உமக்கு என்றென்றும் துதியும் மகிமையும் கனமும் உண்டாவதாக ஆமென்.

ஆகஸ்டு - 11

1. கர்த்தாவே மாட்சிமையும் வல்லமையும் மகிமையும் ஜெயமும் மகத்துவமு உம்முடையவைகள் வானத்திலும் பூமியிலும் உள்ளவைளெல்ல உம்முடையவைகள். ஆகவே தோத்திரம். I நாளா 28:11
2. ஐசுவரியமும் கனமும் உம்மாலே வருகிறது உம்முடைய கரத்தி சத்துவமும் வல்லமையும் உண்டு எவரையும் மேன்மைப்படுத்த பலப்படுத்தவும் உம்முடைய கரத்தினால் ஆகும். ஆகவே தோத்தி I நாளா 28:12
3. உலகத்தையும் அதிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின தேவனான வானத்திற்கும் பூமிக்கும் ஆண்டவராயிருக்கிற படியால் தோத்திர அப் 17:24
4. கர்த்தர் நம்மில் ஒருவருக்கும் தூரமானவரல்லவே. ஆகவே தோத்தி அப் 17:27
5. பவுலின் கைகளினாலே தேவன் விசேஷித்த அற்புதங்களைச் செய்தருளி அவனுடைய சரீரத்திலிருந்து உறுமால்களையும் கச்சைகளையும் கொண் வந்து வியாதியஸ்தர் மேல் போட வியாதிகள் அவர்களை விட்டு நீங் போகும்படியும் பொல்லாத ஆவிகள் அவர்களை விட்டுப் புறப்படவும் அதிகா கொடுத்த சர்வவல்லவரே தோத்திரம். அப் 19:12
6. வெகு மனத்தாழ்மை யோடும் மிகுந்த கண்ணீரோடும் எனக்கு நேரி சோதனைகளோடும் கர்த்தரை சேவிக்கும் படி செய்கிறவரே தோத்தி அப் 20:19
7. நீ ஆசீர்வதிக்கப்பட்டவன்(ள்). நீ பெரிய காரியங்களைச் செய்வா மேன்மேலும் பலப்படுவாய் என்கிறீரே உமக்கு தோத்திரம். I சாமு 26:2

ஜெபம்: என்னை ஆசீர்வதிக்கும் பரலோக பிதாவே, எனக்கு நேரி சோதனைகளிலே மிகுந்த கண்ணீரோடும் விசுவாசத்தோடும் உம்மை மாத் நோக்கிப் பார்க்க கிருபை செய்யும். வானத்திலும் பூமியிலும் உள்ளவைகளெல் உம்முடையவைகள். உமது கரத்தால் என்னை ஆசீர்வதியும். இயேசு நாமத்தில் ஆமென்.

ஆகஸ்டு - 12

1 கர்த்தாவே உமது கரங்கள் என்னை உண்டாக்கி என்னை உருவாக்கியபடியால் உமக்கு தோத்திரம். சங் 119:73

2 நான் பிழைத்திருக்கும்படிக்கு உமது இரக்கங்கள் எனக்குக் கிடைத்திருப்பதற்காக உமக்கு தோத்திரம். சங் 119:77

3 காணாமல் போன ஆட்டைப் போல வழிதப்பி நடந்தபோது என்னைத் தேடினவரே உமக்கு தோத்திரம். சங் 119:176

4 என் நெருக்கத்திலே கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டபோது எனக்குச் செவி கொடுத்தபடியால் உமக்கு தோத்திரம். சங் 120:1

5 பொய் உதடுகளுக்கும், கபட நாவுக்கும் என் ஆத்துமாவைத் தப்புவிக்கிற கர்த்தாவே உமக்கு தோத்திரம். சங் 120:2

6 கர்த்தர் எனது வலது பக்கத்திலே எனக்கு நிழலாயிருக்கிறபடியால் உமக்கு தோத்திரம். சங் 121:5

7 பகலிலே வெயிலாகிலும் இரவிலே நிலவாகிலும் என்னைச் சேதப்படுத்தாதபடி காக்கிறவரே உமக்கு தோத்திரம். சங் 121:6

8 கர்த்தர் என் போக்கையும் என் வரத்தையும் என் றென்றைக்கும் காக்கிறபடியால் தோத்திரம். சங் 121:8

ஜெபம்: என்னைப் படைத்த சிருஷ்டி கர்த்தாவே, இந்த நாளில் எனக்கு ஏற்படும் எல்லா நெருக்கத்தினின்றும் என்னை விடுவித்து உமது இரக்கங்கள் எனக்குக் கிடைக்கும்படி கிருபை செய்யும். பிதாவே என் வலது பக்கத்தில் எப்போதும் நிழலாயிருந்து ஒரு ஆபத்தும் என்னை அணுகாதபடி காத்தருளும். இயேசுவின் நாமத்தில் பிதாவே ஆமென்.

ஆகஸ்டு - 13

1. அதிகாலையில் எழுந்து உம்முடைய வசனத்துக்குக் காத்திருக்கும்படி செய்த
கர்த்தரே உமக்கு தோத்திரம். சங் 119:147

2. உம்முடைய வசனத்தை தியானிக்கும்படி குறித்த ஜாமங்களுக்கு முன்னே
என் கண்கள் விழித்துக் கொள்ளும்படி செய்கிறவரே உமக்கு தோத்திரம்
சங் 119:148

3. உமது நீதியான நியாயத்தீர்ப்புகளினிமித்தம் உம்மைத் துதிக்கும்படி
பாதிராத்திரியில் எழுந்திருக்கப்பண்ணுகிறவரே உமக்கு தோத்திரம்
சங் 119:62

4. அதிகாலையில் என்னைத் தேடுகிறவர்கள் என்னைக் கண்டடைவார்கள்
என்றவரே உமக்கு தோத்திரம். நீதி 8:17

5. அதிகாலையில் உமது கிருபையைக் கேட்கப்பண்ணி நான் நடக்க வேண்டிய
வழியை எனக்கு காண்பிக்கிறபடியால் உமக்கு தோத்திரம். சங் 143:8

6. வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தரிடத்திலிருந்து எனக்கு வரும்
ஒத்தாசைக்காக உமக்கு தோத்திரம். சங் 121:2

7. நான் விழிக்கும் போது என்றும் என்னை உம்மண்டையில் இருக்கச்
செய்கிறவரே உமக்கு தோத்திரம். சங் 139:18

8. எனக்காக யாவையும் செய்து முடிக்கம் கர்த்தரே உமக்கு தோத்திரம்
சங் 138:8

<u>ஜெபம்:</u> நீதியுள்ள எங்கள் நியாயதிபதியே, அதிகாலையில் உமது சமூகத்தில் வந்து காத்திருக்கிற எனக்கு உம்மைக் காணக்கூடிய பாக்கியத்தைத் தாரும். இந்த நாளில் உம்முடைய வசனத்துக்கு நான் காத்திருக்கும்போது கர்த்தாவே, எனக்காக யாவையும் நீரே செய்து முடித்துத் தாரும் இயேசுவின் நாமத்தில் பிதாவே ஆமென்.

நான் உன் விண்ணப்பத்தைக் கேட்டு இந்த ஸ்தலத்தைத் தெரிந்து கொண்டேன். இந்த ஸ்தலத்தில் செய்யப்படும் ஜெபத்திற்கு என் கண்கள் திறந்தவைகளும் என் செவிகள் கவனிக்கிறவைகளுமாயிருக்கும். என் கண்களும் என் இருதயமும் எந்நாளும் இங்கே இருக்கும் என்றீரே உமக்கு தோத்திரம். II நாளா 7:12

கர்த்தாவே பலமுள்ளவனுக்காகிலும் பலனற்றவனுக்காகிலும் உதவி செய்கிற உமக்கு லேசான காரியம் ஆகவே தோத்திரம். II நாளா 14:11

நீங்கள் கர்த்தரோடிருந்தால், அவர் உங்களோடிருப்பார் நீங்கள் அவரைத் தேடினால் அவர் உங்களுக்கு வெளிப்படுவார். ஆகவே தோத்திரம். II நாளா 15:2

தம்மைப்பற்றி உத்தம இருதயத்தோடிருக்கிறவர்களுக்குத் தம்முடைய வல்லமையை விளங்கப்பண்ணும்படி கர்த்தருடைய கண்கள் பூமியெங்கும் உலாவிக் கொண்டிருக்கிறது ஆகவே தோத்திரம். II நாளா 16:9

கர்த்தர் எல்லா இருதயங்களையும் ஆராய்ந்து நினைவுகளின் தோற்றத்தை எல்லாம் அறிகிறார் நீ அவரைத் தேடினால் உனக்குத் தென்படுவார் ஆகவே தோத்திரம். I நாளா 28:9

நாங்கள் கர்த்தரைத் தேடின நாட்களில் தேவன் எங்கள் காரியங்களை வாய்க்கச் செய்தீர் ஆகவே தோத்திரம். II நாளா 26:5

எங்கள் தகப்பனாகிய இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தாவே, சதாகாலங்களிலும் தேவரீருக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக ஆமென். I நாளா 28:10

ஜெபம்: நாங்கள் உம்மைத் தேடும் பொழுது எங்களுக்கு உம்மை வெளிப்படுத்தும் கொண்ட எங்கள் பரமபிதாவே, இந்த எமது இல்லம் நீர் தெரிந்து கொண்ட இடமாக என்றும் இருப்பதாக உம்முடைய கண்கள் பூமியெங்கும் உலாவிக் கொண்டிருப்பதால் நாங்கள் எங்கள் இருதயத்தின் நினைவுகளை பரிசுத்தமாய்க்காத்துக் கொள்ள கிருபை புரியும். இயேசுவின் நாமத்தில் பிதாவே ஆமென

ஆகஸ்டு - 15

1. கர்த்தர் உன் களஞ்சியங்களிலும் நீ கையிடும் எல்லாவேலையிலும் உன
ஆசீர்வாதம் கட்டளையிடுவார் என்றவரே உமக்கு தோத்திரம். உபா 28:
2. உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கும் தேசத்திலே உன்
ஆசீர்வதிப்பார் என்றதற்காய் உமக்கு தோத்திரம். உபா 28:8
3. கர்த்தர் உன் கர்ப்பத்தின் கனியிலும் உன் மிருக ஜீவன்களின் பலனிலும் உ
நிலத்தின் கனியிலும் உனக்கு பரிபூரண நன்மை உண்டா
கட்டளையிடுவார் என்றீரே உமக்குதோத்திரம். உபா 28:11
4. ஏற்ற காலத்தில் உன் தேசத்தில் மழை பெய்யவும் நீ கையிட்டுச் செய்
வேலைகளை யெல்லாம் ஆசீர்வதிக்கவும் கர்த்தர் உனக்குத் தமது நல்
பொக்கிஷ சாலையாகிய வானத்தைத் திறப்பார் என்றீரே உமக்கு தோத்திர
உபா 28:12
5. நீ அநேக ஜாதிகளுக்கு கடன் கொடுப்பாய் நீயோ கடன் வாங்காதிருப்ப
என்பதற்காய் உமக்கு தோத்திரம். உபா 28:12
6. கர்த்தர் உன்னை வாலாக்காமல் தலையாக்குவார் நீ கீழாகாமல் மேலாவ
என்றீரே உமக்கு தோத்திரம். உபா 28:14
7. பலங் கொண்டு திடமனதாயிரு உன் தேவானகிய கர்த்தர் தாமே உன்னுட
கூட வருகிறார் என்பதற்காய் உமக்கு தோத்திரம். உபா 30:6

<u>ஜெபம்:</u> எங்களுக்கு பரிபூரண நன்மை உண்டாகக் கட்டளையிடும் எங்
மாட்சிமை நிறைந்த தகப்பனே, எங்களுக்குத் தருவேன் என்று நீர் வாக்கரு
இந்த ஆசீர்வாதங்கள் ஒவ்வொன்றுக்கும் எங்களை ஒவ்வொரு நாளும் த
படுத்தும். இயேசுவின் நாமத்தில் பிதாவே ஆமென்.

1. நீ பட்டணத்திலும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பாய். வெளியிலும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பாய் என்றீரே உமக்கு தோத்திரம். உபா 28:3

2. உன் கர்ப்பத்தின் கனியும் உன் நிலத்தின் கனியும் உன் மிருக ஜீவன்களின் பலனும் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கும் என்று சொன்ன தேவனே உமக்கு தோத்திரம். உபா 28:4

3. நீங்கள் விசுவாசமுள்ளவர்களாய் ஜெபத்திலே எவைகளைக் கேட்பீர்களோ அவைகளை யெல்லாம் பெறுவீர்கள் என்றதற்காய் உமக்கு தோத்திரம். மத் 21:22

4. நீ வருகையிலும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பாய் நீ போகையிலும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பாய். என்று சொன்ன தேவனே உமக்கு தோத்திரம். உபாகமம் 28:6

5. உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும் அன்பு கூருவாயாக என்று முதலாம் பிரதான கற்பனையைத்தந்த தேவனே உமக்கு தோத்திரம். மத் 22:37

6. இதற்கு ஒப்பாயிருக்கிற இரண்டாம் கற்பனையாக உன்னிடத்தில் நீ அன்பு கூறுவது போல பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்று சொல்லித்தந்தவரே உமக்கு தோத்திரம். மத் 22:39

7. நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் உனக்கு முன்பாக எதிர்த்து எவரும் நிற்பதில்லை. நான் மோசேயோடே இருந்தது போல உன்னோடே இருப்பேன் நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவது மில்லை என்றதற்காய் தோத்திரம். யோசுவா 1:5

ஜெபம்: என்னை விட்டு ஒருபோதும் விலகாமலும் என்னைக் கைவிடாமலும் இருக்கிற என் தேவனே, இப்போதும் ஜெபத்தில் நான் விசுவாசத்தோடே கேட்கிறவற்றைதேவன் எனக்கு கிருபையாக அருளிச் செய்தருளும். நான் உயிரோடிருக்கும் நாளெல்லாம் உம்மில் அன்புகூரவும், பிறனை நேசிக்கவும் கிருபாபுரியும். இயேசுவின் நாமத்தில் பிதாவே ஆமென்.

ஆகஸ்டு - 17

1. நான் போகும் வழியை தேவன் அறிவார். எனக்குக் குறித்திருக்கிறதை
நிறைவேற்றுவார் ஆகவே தோத்திரம். யோபு 23:10,14
2. உம் தீபம் என் தலையின் மேல் பிரகாசிக்கிறது. நீர் அருளின வெளிச்சத்தி
இருளைக் கடக்கப்பண்ணியதற்காக உமக்கு தோத்திரம். யோபு 29:
3. கோழி தன் குஞ்சுகளைத் தன் சிறகுகளின் கீழே கூட்டிச் சேர்த்துக் கொள்
வண்ணமாக நீர் எத்தனை தாமோ எங்களைக் கூட்டிச் சேர்த்துக் கொ
மனதாயிருக்கிறபடியால் உமக்கு தோத்திரம். மத் 23:37
4. தன்னைத் தாழ்த்துகிறவன் எவனும் உயர்த்தப்படுவான் என்று சொ
தேவனே உமக்குத் தோத்திரம். மத் 23:12
5. நான் போகும் வழியை தேவன் அறிவார் எனக்குக் குறித்திருக்கி
நிறைவேற்றுகிறதற்காய் தோத்திரம். யோபு 23:10
6. நீங்கள் தரித்து நின்று கர்த்தர் உங்களுக்குச் செய்யும் இரட்சிப்பைப் பாரு
பயப்படாமலும் கலங்காமலும் இருங்கள் கர்த்தர் உங்களோடே இருக்
என்றதற்காய் உமக்கு தோத்திரம். II நாளா 20:17
7. உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்
உண்மையாயிருந்தாய். அநேகத்தின் மேல் உன்னை அதிகாரி
வைப்பேன். உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி என்று சொ
என்னை ஆசீர்வதிக்கிறதற்காக உமக்கு தோத்திரம். மத் 25:21

<u>ஜெபம்:</u> என்னுடைய தாழ்வில் என்னை உயர்த்துகிற பரலோக பிதாவே.
எப்போதும் கொஞ்சத்தில் உண்மையாயிருக்க உதவி செய்யும். பாவ வலை
சிக்கி விடாதபடி கோழி தன்குஞ்சுகளைக் காப்பது போல என்னையும் தய
காத்தருளும். உம்முடைய வெளிச்சத்தில் நடந்து இருளைக்கடக்க கிருபை பு
இயேசுவின் நாமத்தில் பிதாவே ஆமென்.

இதோ கர்த்தர் சொன்னபடியே என்னை உயிரோடே காத்தீர் ஆகவே தோத்திரம். யோசு 14:10

அவர் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை என்றதற்காய் உமக்கு தோத்திரம். உபா 30:6

ஏழு அப்பங்களையும் சில சிறு மீன்களையும் ஆசீர்வதித்து 4000 பேருக்கு போதுமானதாக போஷித்து மீதியானதை 7 கூடை நிறைய எடுக்கும்படி செய்த தேவனே இந்த நாளில் என் வாழ்விலும் நிறைவைக் காணப்பண்ணப் போவதற்காக உமக்கு தோத்திரம். மத் 15:37

கடுகு விதையளவு விசுவாசமிருந்தால் உங்களால் கூடாத காரியம் ஒன்றுமிராது என்று சொல்லி என் விசுவாசத்தைப் பலப்படுத்துகிறதற்காக உமக்கு தோத்திரம். மத் 17:20

ஜனங்களுக்காக பரிதபிக்கிறேன் இவர்களைப் பட்டினியாய் அனுப்பிவிட எனக்கு மனதில்லை என்ற தேவன் ஒவ்வொருநாளும் எங்களை திருப்தியடையும்படி போஷிக்கிறதற்காக தோத்திரம். மத் 15:32

6. ஜீவனுள்ள தேவன் நம் நடுவில் இருக்கிறார் ஆகவே தோத்திரம். யோசுவா 3:10

7. பலங்கொண்டு திடமனதாயிரு திகையாதே கலங்காதே நீ போகுமிடமெல்லாம் உன் தேவனாகிய கர்த்தர் உன்னோடே இருக்கிறார் என்ற வசனத்திற்காக தோத்திரம். யோசு 1:9

8. கர்த்தர் தாமே உனக்கு முன்பாகப் போகிறவர். அவர் உன்னோடே இருப்பார் நீ பயப்படவும் கலங்கவும் வேண்டாம் என்றீரே உமக்கு தோத்திரம். உபா 31:8

ஜெபம்: என்னை விட்டு விலகாமலும் என்னைக் கைவிடாமலுமிருக்கிற பரலோகப்பிதாவே, இந்த நாளில் நான் போகுமிட மெல்லாம் எனக்கு முன்பாகச் சென்று எப்போதும் என்னோடே கூட இருந்தருளும் என்னுடைய விசுவாசத்தை வர்த்திக்கப்பண்ணி என் வாழ்வில் என்றும் எல்லாவற்றிலும் நிறைவைக் காணும்படி கிருபை புரியும் இயேசுவின் நாமத்தில் பிதாவே ஆமென்.

ஆகஸ்டு - 19

1. என்னைக் கனம் பண்ணுகிறவர்களை நான் கனம் பண்ணுவேன் என்
உமக்கு தோத்திரம். I சாமு 2:30
2. உங்களில் இரண்டு பேர் தாங்கள் வேண்டியக் கொள்ளப் போகிற எ
காரியத்தைக் குறித்தாகிலும் பூமியிலும் பூமியிலே ஒருமனப்பட்டிரு
பரலோகத்தில் இருக்கிற என் பிதாவினால் அது அவர்களுக்கு உண்
என்று வாக்களித்த தேவனே உமக்கு தோத்திரம். மத் 18:19
3. இரண்டு பேராவது மூன்று பேராவது என் நாமத்திலே எங்
கூடியிருக்கிறார்களோ அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்று சொ
எங்கள் மத்தியில் இருப்பதற்காக உமக்கு தோத்திரம் மத் 18:20
4. கர்த்தர் சிறியவனைப் புழுதியிலிருந்து எடுத்து எளியவனைக் கு
யிலிருந்து உயர்த்துகிறீர். அவனைப் பிரபுக்களோடே உட்கார
மகிமையுள்ள சிங்காசனத்தை சுதந்தரிக்கவும் பண்ணுகிறீர் ஆ
தோத்திரம். I சாமு 2:8
5. மனுஷரால் இது கூடாததுதான். ஆனால் தேவனாலே எல்லாம் கூடும் எ
வசனத்தின் மூலம் என்னைத் தேற்றுகிறதற்காக உமக்கு தோத்
மத் 19:26
6. நான் உங்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்றிருக்கிறீர்கள் எ
கேட்கும் உம் கரிசனைக்காக உமக்கு தோத்திரம். மத் 20:30
7. என் ஜீவன் கர்த்தரின் பார்வைக்கு அருமையாய் இருப்பதினால் அ
என்னை எல்லா உபத்திரவத்திற்கும் நீங்கலாக்கி விடுகிறதற்காக தோத்
I சாமு 26:24

ஜெபம்: புழுதியிலிருந்தும் குப்பையிலிருந்தும் என்னைத் தூக்கி எடுத்த தேவ
நீர் சர்வ வல்லவர் 'எல்ஷடாய்' என்று நான் விசுவாசிக்கிறேன். என் ஜீவ
தாழ்த்தி உமது கரத்தில் ஒப்புக் கொடுக்கிறேன். ஜீவனுள்ள தேவன்தாமே எ
நடுவில் எப்போதும் இருந்தருள வேண்டுமென்று இயேசுவின் மூலம் கேட்கி
பிதாவே ஆமென்.

1 மதுபானம் இரத்த வருணமாயிருந்து பாத்திரத்தில் பளபளப்பாய்த் தோன்றும்
போது நீ அதைப் பாராதே. அது மெதுவாய் இறங்கும். முடிவிலே அது பாம்பைப்
போல கடிக்கும் விரியனைப் போல தீண்டும் என்று எச்சரிக்கும் தேவனே
தோத்திரம். நீதி 23:31

2. ஐயோ யாருக்கு வேதனை? யாருக்கு துக்கம்? யாருக்குச் சண்டைகள்?
யாருக்குப் புலம்பல்? யாருக்குக் காரணமில்லாத காயங்கள்? யாருக்கு
இரத்தங்கலங்கின கண்கள்? மதுபானம் இருக்கும் இடத்தில் தங்கித்
தரிப்பவர்களுக்கும் கலப்புள்ள சாராயத்தை நாடுகிறவர்க்குந்தானே என்று
சொல்லி நல்வழிப்படுத்துபவரே உமக்கு தோத்திரம். நீதி 23:29

3. தேவனுடைய இராஜ்யம் புசிப்பும் குடிப்புமல்ல. அது நீதியும் சமாதானமும்
பரிசுத்தாவியினாலுண்டாகும் சந்தோஷமுமாயிருக்கிறது. ஆகவே தோத்திரம்.
ரோம 14:17

4. யோவான் திராட்சரசமும் மதுவும் குடியாமல் கர்த்தருக்கு முன்பாகப்
பெரியவனாயிருந்தது போல என்னையும் மாற்றுகிறதற்காக தோத்திரம்.
லூக் 1:15

5. மனுஷனுடைய வழிகள் கர்த்தரின் கண்களுக்கு முன்பாக இருக்கிறது
அவனுடைய வழிகளெல்லாவற்றையும் நீர் சீர்தூக்கிப் பார்க்கிறீர். ஆகவே
தோத்திரம். நீதி 5:21

6. ஜனங்கள் தீங்கைவிட்டுத் திரும்பினால் தேவனும் எங்களுக்குச் செய்ய
நினைத்த தீங்கைச் செய்யாதபடிக்கு மனம் மாறுவார். ஆகவே தோத்திரம்.
எரே 18:8

7. இனி ஒரு சாபமுமிராது ஆகவே தோத்திரம். வெளி 22:3

ஜெபம்: இரக்கமுள்ள பரலோகத்தகப்பனே, நான் என்னைத் தற்பரிசோதனை செய்து என்னைத் திருத்திக் கொள்ள உதவி செய்யும். உலகப்பிரகாரமான மாம்ச இச்சைகளுக்கு இடங்கொடாமல் உமக்குப் பிரியமான வழிகளைத் தெரிந்து கொள்ள கிருபை புரியும். எனக்கு நேரிடப்போகும் சகலவித சாபத்திலிருந்தும் என்னை விடுவித்து ஆசீர்வதியுமையா. இயேசுவின் மூலம் பிதாவே ஆமென்.

ஆகஸ்டு - 21

1. சாராளை ஆசீர்வதித்து அவளை ஜாதிகளுக்குத் தாயாகவும் அவளா ஜாதிகளின் இராஜாக்கள் உண்டாகவும் ஆசீர்வதித்தது போல என்னை ஆசீர்வதிக்கப் போவதற்காக தோத்திரம். ஆதி 17:16
2. ஆபிகாமை சகல காரியங்களிலும் ஆசீர்வதித்த கர்த்தர் என்னை ஆசீர்வதிக்கிறதற்காக தோத்திரம். ஆதி 24:1
3. கர்த்தர் உன்னை ஆசீர்வதித்து காக்கக்கடவர். கர்த்தர் தம்முடைய முகத் உன் மேல் பிரகாசிக்கப்பண்ணி, உன் மேல் கிருபையாயிருக்கக்கடவர் என் இஸ்ரவேல் புத்திரரை ஆசீர்வதித்தவரே தோத்திரம். எண் 6:24
4. இருதயத்தின் அந்தரங்கங்களை அறிந்திருக்கிறவரே உமக்கு தோத்தி சங் 44:21
5. கர்த்தரிடத்தில் மனமகிழ்ச்சியாயிரு அவர் உன் இருதயத் வேண்டுதல்களை உனக்கு அருள் செய்வார் என்றீரே உமக்கு தோத்தி சங் 37:4
6. கர்த்தரைத் தேடுகிறவர்களின் இருதயம் மகிழ்ந்திருக்கப் பண்ணுகிற உமக்கு தோத்திரம். சங் 105:3
7. நான் உங்களைத் திக்கற்றவர்களாக விடேன் என்றீரே உமக்கு தோத்தி யோவா 14:18
8. உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக என்று ஆறுதல்படுத்தும் தேவ தோத்திரம். யோவா 14:1

ஜெபம்: ஆசீர்வதிக்கும் தேவனே, என்னை உமது கரத்தில் ஒப்புவிக்கிறே இருதயத்தின் அந்தரங்கங்களை நீர் அறிகிறபடியால் நான் எப்போதும் நடைகளை ஜாக்கிரதையாய்க் காத்துக் கொள்ள உதவி செய்யும். நீர் என்னை காரியங்களிலும் ஆசீர்வதித்து, என் இருதயத்தின் வேண்டுதல்களை என அருளிச் செய்யுமையா. நான் என்றும் உம்மில் மகிழ்ந்திருக்கப் பண் தகப்பனே. இயேசுவின் மூலம் பிதாவே ஆமென்.

1. கேட்கிறவன் எவனும் பெற்றுக் கொள்ளும்படி செய்கிற தேவனே உமக்கு ஸ்தோத்திரம். மத் 7:8

2. இருக்கிறவரும் இருந்தவரும் வருகிறவருமாகிய சர்வ வல்லமையுள்ள கர்த்தர் நான் அல்பாவும் ஓமேகாவும் ஆதியும் அந்தமுமாயிருக்கிறேன் என்று திருவுளம் பற்றுகிறபடியால் ஸ்தோத்திரம். வெளி 1:8

3. தேவன் ஐசுவரியத்தையும் சம்பத்தையும் எவனுக்குக் கொடுத்திருக்கிறாரோ அதிலே அவன் புசிக்கவும் தன் பிரயாசத்திலே மகிழ்ச்சியாயிருக்கவும் அவனுக்கு அதிகாரம் அளிப்பது தேவனுடைய அநுக்கிரகம் ஆகவே ஸ்தோத்திரம். பிர 5:19

4. கர்த்தருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம் விருதாவாயிரா தென்று அறிந்து நீங்கள் உறுதிப்பட்டவர்களையும் அசையாதவர்களையும் கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாயும் இருப்பீர்களாக என்றீரே உமக்கு ஸ்தோத்திரம். I கொரி 15:58

5. நான் செய்த முயற்சிகளிலெல்லாம் என் மனம் மகிழ்ச்சி கொண்டிருக்கச் செய்பவரே ஸ்தோத்திரம். பிர 2:10

6. உமக்கும் உம்முடைய குடும்பத்தாருக்கும் உமக்கு இருக்கிற யாவற்றிற்கும் வறுமை வராதபடிக்கு அங்கே உம்மைப் பராமரிப்பேன் என்கிறபடியால் உமக்கு ஸ்தோத்திரம். ஆதி 45:11

7. பிதாவை நோக்கி நாம் வேண்டிக் கொள்ளுகிறதற்கு முன்னமே நமக்கு இன்னது தேவை என்று அறிந்திருக்கிற கர்த்தாவே உமக்கு ஸ்தோத்திரம். மத் 6:8

ஜெபம்: கிருபை நிறைந்த கர்த்தாவே, என் தேவைகளை யெல்லாம் சந்திப்பீர் என்று விசுவாசிக்கிறேன் நான் உம்மை நோக்கி வேண்டிக் கொள்வதற்கு முன்னமே எனக்கு இன்னது தேவை என்பதை நீர் அறிவீர். தகப்பனே, உமது சமூகத்தில் நான் எடுக்கும் விண்ணப்பத்தை தயவாய் அங்கீகரித்து அவைகளை பெற்றுக் கொள்ளும்படி கிருபை புரியும். இயேசுவின் நாமத்தில் பிதாவே ஆமென்.

ஆகஸ்டு - 23

1. நீங்கள் ஆசீர்வாதமாயிருக்கும்படி நான் உங்களை இரட்சிப்பே பயப்படாதேயுங்கள். உங்கள் கைகள் திடப்படக்கடவது என்ற தேவ உமக்கு தோத்திரம். சக 8:13
2. சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தாவே, தேவரீருடைய கிரியை மகத்துவமும் ஆச்சரியமுமானவைகள். பரிசுத்த வான்களின் இராஜா தேவரீருடைய வழிகள் நீதியும் சத்தியமுமானவைகள். ஆகவே தோத்திர வெளி 15:3
3. நாம் பாவங்களுக்குச் செத்து நீதிக்குப் பிழைத்திருக்கும் படிக்கு அவர் தா தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின் மேல் சுமந்த அவருடைய தழும்புகளால் குணமாகிறோம் ஆகவே தோத்திரம். பே 2:2
4. வேலைக்காரரே, அதிக பயத்துடனே உங்கள் எஜமான்களுக் கீழ்ப்படிந்திருங்கள் நல்லவர்களுக்கும் சாந்த குணமுள்ளவர்களுக் மாத்திரம் அல்ல முரட்டுகுணமுள்ளவர்களுக்கும் கீழ்ப்படிந்திருங்கள் என் போதிக்கிறவரே உமக்கு தோத்திரம். I பே 2:18
5. என் நாமத்திற்குப் பயந்திருக்கிற உங்கள் மேல் நீதியின் சூரியன் உதிக் என்றீரே தோத்திரம் மல் 4:2
6. எங்கள் தேவனைத் தேடின போது சுற்றிலும் எங்களுக்கு இளைப்பாறுதலை கட்டளையிட்டு காரியத்தை வாய்க்கப்பண்ணியும்படியால் உமக்கு தோத்திர II நாளா 14:7
7. எங்கள் தேவனுக்குத் துதியும் மகிமையும் ஞானமும் ஸ்தோத்திரமும் கனமு வல்லமையும் பெலனும் சதாகாலங்களிலும் உண்டாவதாக ஆமெ வெளி 7:12

ஜெபம்: இரக்கங்களின் பிதாவே, நாங்கள் அன்பினால் ஏவப்பட்டு எல்லாருக் அடங்கி கீழ்ப்படிய உதவி செய்யும். உமக்குப் பயப்படுகிற பயத்தை எங்களு எப்போதும் தாரும். காரியத்தை வாய்க்கப்பண்ணி கிருபையாக எங்கள் கைகள திடப்படுத்தியருளும். இயேசுவின் நாமத்தில் ஆமென்.

ஆகஸ்டு - 24

நீங்கள் எதிர்பார்த்திருக்கும் முடிவை உங்களுக்குக் கொடுக்கும் படிக்கு
நாங்கள் உங்கள் பேரில் நினைத்திருக்கிற நினைவுகளை அறிவேன்
அவைகள் தீமைக்கல்ல, சமாதானத்துக் கேதுவான நினைவுகளே என்று
சொல்லும் கர்த்தாவே உமக்கு தோத்திரம். எரே 29:11

2 நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால் அவர் நமக்குச்
செவிகொடுக்கிறார். நாம் எதைக் கேட்டாலும் அவர் நமக்குச் செவி
கொடுக்கிறாறென்று நாம் அறிந்திருந்தோமானால் அவரிடத்தில் நாம்
கேட்டவைகளைப் பெற்றுக் கொண்டோமென்றும் அறிந்திருக்கிறோம் ஆகவே
தோத்திரம். யோ 5:14

3 பிரியமானவனே(ளே) உன் ஆத்துமா வாழ்கிறது போல நீ எல்லாவற்றிலும்
வாழ்ந்து சுகமாயிருக்கும்படி வேண்டுகிறேன் என்பதற்காய் தோத்திரம்.
I யோ 1:2

4 முந்தினவைகள் இனி நினைக்கப்படுவதில்லை என்றவரே உமக்கு தோத்திரம்.
சா 65:17

5 கர்த்தர் என்மேல் பிரியமாயிருக்கிறீர். ஆகவே தோத்திரம். ஏசா 62:4

6 னக்கு சமாதானம் உண்டாவதாக என்கிறீரே உமக்கு தோத்திரம்.
III யோ 1:15

7 கர்த்தர் எல்லாத்தீமையினின்றும் என்னை இரட்சித்து தம்முடைய பரம
ராஜயத்தை அடையும்படி காப்பாற்றுவார் அவருக்குச் சதாகாலங்களிலும்
மகிமை உண்டாவதாக ஆமென். II தீமோ 4:18

ஜெபம்: இரக்கங்களின் பிதாவே, நான் ஜெபத்தில் வேண்டிக் கொண்டவற்றை
ருபையாய்க் கட்டளையிட்டருளும். முந்தின பாவங்களை யெல்லாம் தயவாய்
ன்னித்து என்னை எல்லாத் தீமையினின்றும் இரட்சித்து பரம ராஜ்யத்தை
டையும்படி காத்தருளும் தகப்பனே. உலகம் தரமுடியாத சமாதானத்தைத் தந்து
சீர்வதித்தருள வேண்டுமென்று இயேசுவின் மூலம் ஜெபிக்கிறேன் பிதாவே
மென்.

ஆகஸ்டு - 25

1. இரட்சிக்கக் கூடாதபடிக்கு கர்த்தருடைய கை குறுகிப் போகவுமில்லை. கேட்க கூடாதபடிக்கு அவருடைய செவி மந்தமாகவுமில்லை. ஆகவே தோத்திர ஏசா 59:1
2. தன் சகோதரனைப் பகைக்கிற எவனும் மனுஷகொலை பாதகனாயிருக்கிறா என்று எச்சரிக்கிறபடியால் தோத்திரம். I யோ 3:15
3. ஒருவன் இவ்வுலக ஆஸ்தி உடையவனாயிருந்து தன் சகோதரனுக்கு குறைச்சலுண்டென்று கண்டு தன் இருதயத்தை அவனுக்கு அடைத்து கொண்டால் அவனுக்குள் தேவ அன்பு நிலை கொள்ளா தென் போதிக்கிறவரே உமக்கு தோத்திரம். I யோ 3:17
4. நீங்களோ உங்கள் மகா பரிசுத்தமான விசுவாசத்தின் மேல் உங்கள உறுதிப்படுத்திக் கொண்டு பரிசுத்த ஆவிக்குள் ஜெபம் பண்ணி தேவனுடை அன்பிலே உங்களைக் காத்துக் கொண்டு நம்முடைய கர்த்தராகி இயேசுகிறிஸ்துவினுடைய இரக்கத்தைப் பெறக் காத்திருக்கும்படி செய்கிறவ உமக்கு தோத்திரம். யூதா 1:20
5. உன் வாயிலிருந்து புறப்படும் வசனம் வெறுமையாய் உம்மிடத்திற்கு திரும்பாமல் அது நீர் விரும்புகிறதைச் செய்து நீர் அதை அனுப்பி காரியமாகும்படி வாய்க்கும் ஆகவே தோத்திரம். ஏசா 55:11
6. வழுவாதபடி உங்களைக் காக்கவும் தமது மகிமையுள்ள சந்நிதானத்தி மிகுந்த மகிழ்ச்சியோடே உங்களை மாசற்றவர்களாய் நிறுத்தவு வல்லமையுள்ளவருமாகிய நம்முடைய இரட்சகரான தேவனுக்குக் கனமு மகத்துவமும் வல்லமையும் அதிகாரமும் இப்பொழுதும் எப்பொழுது உண்டாவதாக ஆமென். யூதா 1:24

<u>ஜெபம்:</u> கிருபை நிறைந்த பிதாவே, நான் இவ்வுலக வாழ்வில் என்னை நேசிப்பதைப் போல மற்றவர்களையும் நேசிக்க மெய்யான அன்பின் இருதயத்தை எனக்குத் தந்தருளும். உம்முடைய கை ஒருக்காலும் குறுகிப்போவதில்லை என் விசுவாசிக்கிறேன். உம்முடைய மகிழ்ச்சியால் என்னை நிரப்பி ஆசீர்வதிய பிதாவே. இயேசுவின் மூலம் ஆமென்.

ஆகஸ்டு - 26

1. தடைகளை நீக்கிப் போடுகிற கர்த்தாவே நீர் எங்களுக்கு முன் நடந்து போகிறபடியால் உமக்கு தோத்திரம். மீகா 2:13

2. நாங்கள் பிதாவாகிய தேவனுக்கு முன்பாகப் பிழையற்ற பரிசுத்த முள்ளவர்களாயிருக்கும்படி எங்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்துகிறபடியால் தோத்திரம். I தெச 3:13

3. தன்னைத்தான் புகழுகிறவன் உத்தமனல்ல கர்த்தராலே புகழப்படுகிறவனே உத்தமன் என்று அறிவுத்தும் தேவனே உமக்கு தோத்திரம். I கொரி 10:18

4. எங்கள் திராணிக்குத் தக்கதாகவும் எங்கள் திராணிக்கு மிஞ்சியும் கொடுக்க மனதுள்ளவரிகளாயிருக்கப் போதிக்கிறவரே உமக்கு தோத்திரம். I கொரி 8:3

5. ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுசிருஷ்டியாயிருக்கிறான் பழையவைகளை ஒழிந்து போயின எல்லாம் புதிதாயின என்று தேற்றுகிறபடியால் உமக்கு தோத்திரம். II கொரி 5:17

6. இனி உன்னைச் சிறுமைப்படுத்தாதிருப்பேன் என்றவரே உமக்கு தோத்திரம். நாகூம் 1:12

7. உன்னை அதிசயங்களைக் காணப்பண்ணுவேன் என்றீரே உமக்கு தோத்திரம். மீகா 7:15

ஜபம்: பிதாவாகிய தேவனே, நீர் எனக்கு முன்சென்று வரப்போகிற தடைகளை யெல்லாம் தயவாய் நீக்கிப் போடும் தேவையிலிருப்போர்க்கு எங்கள் திராணிக்கு மிஞ்சி தாராளமாய்க் கொடுத்துதவுமாறு நல்ல உள்ளத்தை எனக்குத்தாரும் அப்பனே நான் சிறுமைப்படுத்தப்படாதபடிக்கு கிருபையாய் என்னைக் காத்தருளும் யேசுவின் மூலம் பிதாவே ஆமென்.

ஆகஸ்டு - 27

1. பூமியிலுள்ள சகல ஜனங்களுக்குள்ளும் நான் உங்களைக் கீர்த்தி புகழ்ச்சியுமாக வைப்பேன் என்றவரே உமக்கு தோத்திரம். செப் 3:15
2. நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினா தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்கள் என்ற தேவனே உமக்கு தோத்திர கலா 3:26
3. விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான் ஆகவே தோத்திரம். கலா 3:11
4. மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான் என்று எச்சரி தேவனே உமக்கு தோத்திரம். கலா 6:7
5. என் தேவனாகிய கர்த்தர் என் நடுவில் இருக்கிறபடியால் தோத்திர செப் 3:17
6. பயப்படாதே மகிழ்ந்து களிகூரு. கர்த்தர் பெரிய காரியங்களைச் செய் என்றபடியால் தோத்திரம். யோவேல் 2:21
7. கர்த்தர் எல்லாத் தீமையினின்றும் என்னை இரட்சித்து தம்முடைய ப ராஜயத்தை அடையும் படி காப்பாற்றுவார் அவருக்குச் சதாகாலங்களி மகிமை உண்டாவதாக ஆமென். II மோ 4:18

<u>ஜெபம்:</u> கிருபை யுள்ள தேவனே, உம்மேல் நான் முழு விசுவாசத்தையும் வை அதன் மூலம் உம்முடைய பிள்ளையாக இருக்கக்கூடிய சிலாக்கியத்தை என தாரும். நீர் எப்போதும் என் நடுவில் இருந்து நீர் செய்யும் பெரிய காரியங்க நான் காணும்படி கிருபை செய்யும். இயேசுவின் மூலம் பிதாவே ஆமென்.

சேனைகளின் கர்த்தர் ஆலோசனையில் ஆச்சரியமானவர் செயலில் மகத்துவமானவர். ஆகவே தோத்திரம். ஏசா 28:29

2. நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால் பாவங்களை நமக்கு மன்னித்து, எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார் ஆகவே தோத்திரம். I யோ 1:9

3. நம்முடைய பாவங்களை நிவர்த்தி செய்கிற கிருபாதார பலி அவரே. நம்முடைய பாவங்களை மாத்திரமல்ல, சர்வ லோகத்தின் பாவங்களையும் நிவிர்த்தி செய்கிற பலியாயிருக்கிறபடியால் தோத்திரம். I யோ 2:2

4. நாம் தேவனுடைய பிள்ளைகளென்று அழைக்கப்படுவதினாலே பிதாவானவர் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பார்க்கும்படி செய்கிறவரே தோத்திரம். I யோ 3:1

5. எங்கள் கிரியைகளையெல்லாம் எங்களுக்காக நடத்தி வருகிறவர் நீரே. ஆகவே தோத்திரம். ஏசா 26:12

6. ஆண்டவர் என் றென்றைக்கும் கைவிடமாட்டார் ஆகவே தோத்திரம். புல 3:31

7. அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திர பலியை அவர் மூலமாய் எப்போதும் தேவனுக்குச் செலுத்தச் செய்கிறவரே உமக்கு தோத்திரம். எபி 13:15

ஜெபம்: துதிக்குப் பாத்திரராகிய பிதாவே, என் பாவங்களைக் குறித்து மெய் மனஸ்தாபப்பட்டு அவைகளை அறிக்கையிட்டு விட்டுவிட உதவி செய்யும். தயவாய் என்னை மன்னித்தருளும் தகப்பனே. நீரே கிருபாதார பலி என்று விசுவாசிக்கிறேன். என்னைக் கைவிடாதபடி காத்து எனக்காக எல்லாவற்றையும் செய்து முடித்தருளும். கர்த்தாவே இயேசுவின் மூலம் ஆமென்.

ஆகஸ்டு - 29

1. கர்த்தர் என் துக்கத்தையும் என் தத்தளிப்பையும் என் அடிமைத்தனத்தை நீக்கி என்னை இளைப்பாறப் பண்ணுகிறீர். ஆகவே தோத்திரம். ஏசா 14:
2. எந்த சிட்சையும் தற்காலத்தில் சந்தோஷமாய்க் காணாமல் துக்கமாய் காணும் ஆகிலும் பிற்காலத்தில் அது பழகினவர்களுக்கு அது நீதியா சமாதான பலனைத் தரும் ஆகவே தோத்திரம். எபி 12:11
3. முதிர்வயதுள்வர்களைக் கடிந்து கொள்ளாமல் அவர்களைத் தகப்ப போலவும் தாய்களைப் போலவும் பாவித்து புத்தி சொல்லும் போதிக்கிறபடியால் தோத்திரம். I தீமோ 5:1
4. மற்றவர் செய்யும் பாவங்களுக்கு உடன்படாமல் உன்னைச் சுத்தவான காத்துக் கொள் என்றீரே உமக்கு தோத்திரம். I தீமோ 5:22
5. போது மென்கிற மனதுடனே கூடிய தேவ பக்தியே மிகந்த ஆதாயம் எ உண்மையை வெளிப்படுத்தியபடியால் தோத்திரம். I தீமோ 6:6
6. இருளில் நடக்கிற எங்களைப் பெரிய வெளிச்சத்தைக் காணும்படி செய்கிற உமக்கு தோத்திரம். ஏசா 9:2
7. ஒடுக்கப்பட்டவனை ஆதரித்துக் காப்பவரே உமக்கு தோத்திரம். ஏசா 1:17

ஜெபம்: இரக்கம் நிறைந்த தகப்பனே எனக்கு நீர் தந்திருக்கிற ஆசீர்வாதங்க மன திருப்தி யோடுகூட இருக்கும்படி காத்துக் கொள்ளும் முறுமுறுப்பின் ஆவி என்னை விட்டு எடுத்துப் போட்டு நான் எப்போதும் என்னை பரிசுத்தமாய்க்கா கொள்ள உதவி செய்யும் முதிர்வயதுள்ள வர்களை மதிக்கவும் ஆதரிக்கவும் கிரு செய்யும் இயேசுவின் மூலம் ஆமென்.

ஒருவனை அவன் தாய் தேற்றுவது போல எங்களைத் தேற்றுகிறவரே உமக்கு தோத்திரம். ஏசா 66:13

தேவன் தாமே எங்களுடைய கண்ணீர் யாவையும் துடைப்பீர். ஆகவே தோத்திரம். வெளி 7:17

இனி மரணமுமில்லை துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை, முந்தினவைகள் ஒழிந்து போயின. ஆகவே தோத்திரம். வெளி 21:4

இதோ நான் சகலத்தையும் புதிதாக்குகிறேன் என்கிறீரே உமக்கு தோத்திரம். வெளி 21:5

இனி ஒரு சாபமுமிராது. ஆகவே தோத்திரம் வெளி 22:3

உம்முடைய சமூகத்தில் இராக்காலமிராது. விளக்கும், சூரியனுடைய வெளிச்சமும் அவர்களுக்கு வேண்டுவதில்லை தேவனாகிய கர்த்தரே அவர்கள் மேல் பிரகாசிப்பார். அவர்கள் சதாகாலங்களிலும் அரசாளுவார்கள். ஆகவே தோத்திரம். வெளி 22:5

உம்மை உறுதியாய்ப் பற்றிக் கொண்ட மனதையுடையவன் உம்மையே நம்பியிருக்கிறபடியால் நீர் அவனைப் பூரண சமாதானத்துடன் காத்துக் கொள்கிறீர். ஆகவே தோத்திரம். ஏசா 26:3

என் ஆண்டவருடைய வல்லமை பெரிதாய் விளங்குகிறபடியால் உமக்கு தோத்திரம். எண் 14:18

ஜெபம்: கிருபை நிறைந்த ஆண்டவரே வேதனை நிறைந்த என் வாழ்வின் கண்ணீர் யாவையும் துடைத்தருளும். எல்லா சாபத்தையும் இயேசுவின் நாமத்தில்விலகச் செய்தருளும். உம்மையே உறுதியாய் பற்றிக் கொண்டு விசுவாசத்தோடு காத்திருந்து நீர் அருளும் சமாதானத்தைப் பெற்றுக் கொள்ள கிருபை புரியும். இயேசுவின் நாமத்தில் பிதாவே ஆமென்.

ஆகஸ்டு - 31

1. கோணலானதை நேர்மையாக்குபவரே உமக்கு தோத்திரம். பிர 7:13
2. திருவசனத்திற்குக் கீழ்ப்படியாத புருஷர்கள் மனைவியின் பயபக்தியோடு கூடி கற்புள்ள நடக்கையைப் பார்த்து போதனையின்றி மனைவிகளி நடக்கையினாலேயே ஆதாயப்படுத்திக் கொள்ளப்படுவார்கள் என்றீ தோத்திரம். பே 3:1
3. மனைவியானவள் பெலவீன பாண்டமாயிருக்கிறபடியால் புருஷர்கள் தாங் ஜெபங்களுக்குத் தடை வராதபடிக்கு விவேகத்துடனே அவர்களுடன் வாழ் அவர்களுக்குச் செய்யவேண்டிய கனத்தைச் செய்யும்படி போதிக்கிறவ உமக்கு தோத்திரம். I பே 3:7
4. மனைவியானவள் மயிரைப்பின்னி பொன்னாபரணங்களை அணி உயர்ந்த வஸ்திரங்களை உடுத்திக் கொள்ளுதலாகிய புறம்பான அலங்கரி அலங்காரமாயிராமல் அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமு அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குண உங்களுக்கு அலங்காரமாயிருக்கக்கடவது அதுவே தேவனுடை பார்வையில் விலையேறப் பெற்றதாயிருக்கிறபடியால் தோத்திரம். I பே 3:
5. எல்லாவற்றிற்கும் மேலாக ஒருவரிலொருவர் ஊக்கமா அன்புள்ளவர்களாயிருங்கள். அன்பு திரளான பாவங்களை மூடும் என்றவ உமக்கு தோத்திரம். I பே 4:8
6. சகல கிருபையும் பொருந்திய தேவன் தாமே கொஞ்சக்காலம் பாடநுபவிக் நம்மைச் சீர்ப்படுத்தி , ஸ்திரப்படுத்தி, பலப்படுத்தி, நிலைநிறுத்துவார அவருக்கே மகிமையும் வல்லமையும் சதாகாலங்களிலு உண்டாயிருப்பதாக ஆமென். I பே 5:10

<u>ஜெபம்:</u> கிருபை பொருந்திய தேவனே, நான் எப்போதும் எல்லாரிடத்தி அனபுள்ளவளாக இருக்கும்படி செய்யும். எப்போதும் தேவனுடைய பார்வை விலையேறப் பெற்ற சாந்த குணத்தையும் அமைதலுள்ள ஆவியை எனக்குத்தாரும். இயேசுவின் நாமத்தில் பிதாவே ஆமென்.

கர்த்தரை நான் எக் காலத்திலும் ஸ்தோத்தரிப்பேன் அவர் துதி எப்போதும் என் வாயிலிருக்கும். ஆகவே தோத்திரம். சங் 34:1

கர்த்தர் சொல்ல ஆகும். அவர் கட்டளையிட நிற்கும் ஆகவே தோத்திரம். சங் 33:9

நான் கர்த்தரைத் தேடினேன். அவர் எனக்குச் செவிகொடுத்து என்னுடைய எல்லாப்பயத்துக்கும் என்னை நீங்கலாக்கி விட்டபடியால் உமக்கு தோத்திரம். சங் 34:4

கர்த்தருக்குப் பயந்து அவருடைய கிருபைக்குக் காத்திருக்கிறவர்களின் ஆத்துமாக்களை மரணத்திற்கு விலக்கி விடுவிக்கிறபடியால் தோத்திரம். சங் 33:18

என் மேல் உம் கண்ணை வைத்து எனக்கு ஆலோசனை சொல்லுகிறபடியால் உமக்கு தோத்திரம். சங் 32:8

நீர் எனக்குப் போதித்து நான் நடக்க வேண்டிய வழியை எனக்குக் காட்டுகிறபடியல் உமக்கு தோத்திரம். சங் 32:8

பக்தியுள்ளவன் உம்மை நோக்கி விண்ணப்பம் செய்யும் போது மிகுந்த ஜலப்பிரவாகம் வந்தாலும் அது அவனை அணுகவிடாமல் காக்கிறபடியால் உமக்கு தோத்திரம். சங் 32:6

ஜெபம் : சர்வ வல்லமையுள்ள பிதாவே, இந்த நாளில் என் ஜெபத்திற்குச் செவிகொடுத்து என்னுடைய எல்லா பயத்துக்கும். என்னை நீங்கலாக்கும். கர்த்தாவே நான் நடக்க வேண்டிய வழியை எனக்குக் காட்டி எனக்கு ஆலோசனைக் கர்த்தாவாக இரும். தகப்பனே, உமது கண் எப்போதும் என் மேல் இருப்பதாக ஆமென்.

செப்டம்பர் - 2

1. கண் மணியைப் போல என்னைக் காப்பவரே உமக்கு தோத்திரம். சங்
2. உமது வலது கரம் என்னைத் தாங்குகிறது உம்முடைய காருணியம் என்
பெரியவனாக்குகிறபடியால் உமக்கு தோத்திரம். சங் 18:35
3. கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கு ஒரு நன்மையும் குறைவுபடாதபடிக் காப்ப
உமக்கு தோத்திரம். சங் 34:10
4. உம்முடைய வெளிச்சத்திலே வெளிச்சம் காணப்பண்ணுகிறவரே உம
தோத்திரம். சங் 36:9
5. கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்கள் பூமியைச் சுதந்தரித்துக் கொள்ளுவா
ஆகவே தோத்திரம். சங் 37:9
6. உம்மைத் தேடுகிற அனைவரும் உமக்குள் மகிழ்ந்து சந்தோஷப்படு
வைப்பவரே உமக்கு தோத்திரம். சங் 40:16
7. கர்த்தருக்காக பொறுமையுடன் காத்திருந்த வேளையில் அவர் என்னிடம
சாய்ந்து என் கூப்பிடுதலைக்கேட்ட படியால் உமக்கு தோத்திரம். சங் 4
8. சாந்த குணமுள்ளவர்கள் மிகுந்த சமாதானத்தினால் மனமகிழ்ச்சியாயிரு
பண்ணுபவரே உமக்கு தோத்திரம். சங் 37:11

ஜெபம்: கண்மணிபோல் என்னைக் காக்கும் தகப்பனே. உம்மைத் தேடு
எனக்கு ஒரு நன்மையும் குறைவுபடாதபடி காரும். இந்த நாளில் உமது பாத
நான் பொறுமையுடன் காத்திருக்க உதவி செய்யும். மிகுந்த சமாதானத்தை
மன மகிழ்ச்சியாயிருக்கும்படி கிருபை புரியும் தகப்பனே. ஆமென்.

செப்டம்பர் - 3

1 என்னை நோக்கிக் கூப்பிடு அப்பொழுது நான் உனக்கு உத்தரவு கொடுத்து நீ அறியாததும் உனக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை உனக்கு அறிவிப்பேன் என்ற தேவனே உமக்கு தோத்திரம். எரே 33:3

2 எங்களுக்கு உண்டானவைகளையெல்லாம் விற்று தரித்திரருக்குக் கொடுக்கையில் பரலோகத்திலே பொக்கிஷம் உண்டாயிருக்கும் என்று சொல்லி ஆசீர்வதிப்பவரே தோத்திரம். லூ 18:22

3 சொற்களின் மிகுதியில் பாவமில்லாமல் போகாது தன் உதடுகளை அடக்குகிறவனோ புத்திமான் என்று எச்சரிக்கிறபடியால் தோத்திரம். நீதி 10:19

4 நீங்கள் பேச வேண்டியவைகளைப் பரிசுத்த ஆவியானவர் அந்நேரத்தில் உங்களுக்குப் போதிப்பார் என்று வழிகாட்டும் தேவனே தோத்திரம். லூ 12:12

5 நான் உங்களைத் திக்கற்றவர்களாக விடேன் என்றீரே உமக்கு தோத்திரம். யோ 14:18

6 நான் அவர்கள் துக்கத்தைச் சந்தோஷமாக மாற்றி அவர்களைத் தேற்றி அவர்கள் சஞ்சலம் நீங்க அவர்களைச் சந்தோஷப்படுத்துவேன் என்ற தேவனே தோத்திரம். எரே 31:13

7 நீங்கள் பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருங்கள் என்கிறபடியால் உமக்கு தோத்திரம். அப் 1:5

ஜெபம்: பரிசுத்த பிதாவே, இந்த வேளையில் உம்மை நோக்கிக் கூப்பிடுகிறேன். நான் பேச வேண்டிய வார்த்தைகளை அளந்து பேசும்படி என் நாவை ஜாக்கிரதையாய்க் காத்துக் கொள்ளும்படி உதவி செய்யும். என் துக்கத்தை சந்தோஷமாய் மாற்றுவேன் என்ற உம் வாக்குத்தத்தம் நிறைவேற பொறுமையுடன் காத்திருந்து ஆசீர்வதிகப்பட கிருபை புரியும். இயேசுவின் நாமத்தில் பிதாவே ஆமென்.

செப்டம்பர் - 4

1. கிறிஸ்து ஒருவரே உங்களுக்குப் போதகராயிருக்கிறார். நீங்கள் எல்லா[...] சகோதரர்காளயிருக்கிறீர்கள் என்றீரே உமக்கு தோத்திரம். மத் 23:8
2. புருஷனானவன் தன் தகப்பனையும் தாயையும் விட்டுத் தன் மனைவியோ[...] இசைந்திருப்பான் அவர்கள் இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள் என்[...] உமக்கு தோத்திரம். மத் 19:5
3. நீங்கள் இனித் தொய்ந்து போவதில்லை என்று ஆசீர்வதிக்கிறீரே உம[...] தோத்திரம். எரே 31:12
4. என்னைக் குறித்தும் என் வார்த்தைகளைக் குறித்தும் எவ[...] வெட்கப்படுவானோ அவனைக் குறித்து மனுஷகுமாரனும் வெட்கப்படு[...] என்று எச்சரிக்கிறபடியால் தோத்திரம். மாற் 8:38
5. உபத்திரவத்தின் நாட்களைக் குறைக்கப் போவதற்காய் உமக்கு தோத்திர[...] மாற் 13:20
6. கர்த்தரில் மனமகிழ்ச்சியாயிருப்பாய். பூமியின் உயர்ந்த இடங்க[...] உன்னை ஏறியிருக்கும்படி பண்ணுவேன் என்று சொல்லும் கர்த்தா[...] உமக்கு தோத்திரம். ஏசா 58:14
7. கவலைப்படுகிறதினால் உங்களில் எவன் தன் சரீர அளவோடு ஒரு முழத்[...] கூட்டுவான் என்று சொல்லி ஆறுதல்படுத்தும் தேவனே தோத்திர[...] லூா 12:25
8. இழந்து போனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்[...] ஆகவே தோத்திரம். லூா 19:10

ஜெபம்: எங்கள் போதகரும் பிதாவுமானவரே, நான் எதைக் குறித்[...] கவலைப்படாமல் உம்மில் மனமகிழ்ச்சியாயிருக்கும்படி செய்யும். நா[...] உம்மைக்குறித்து வெட்கப்படாமல் சமயம் வாய்க்கும் போதெல்லாம் உம[...] மகிமைப்படுத்த சிலாக்கியம் தாரும். குடும்பத்திலே கணவன் மனைவி எப்போ[...] இசைந்திருந்து ஒரு மனதின் ஆவியோடு வாழ்ந்திருக்கப்பண்ணு[...] உபத்திரவத்தின் நாட்களைக்குறைத்து ஆசீர்வதிக்க வேண்டுமென்று இயேசு[...] மூலம் கேட்கிறேன் பிதாவே ஆமென்.

உண்மையுள்ள மனுஷன் பரிபூரண ஆசீர்வாதங்களைப் பெறுவான் என்றவரே உமக்கு தோத்திரம். நீதி 28:20

உன்னிடத்தில் நீ அன்பு கூருகிறது போல பிறனிடத்திலும் அன்பு கூறுவாயாக என்றீரே உமக்கு தோத்திரம். யாக் 2:26

கிரியைகளில்லாத விசுவாசம் செத்தது மனுஷன் விசுவாசத்தினாலே மாத்திரமல்ல கிரியைகளினாலே நீதிமானாக்கப்படுகிறான் என்று போதித்தவரே உமக்கு தோத்திரம். யாக் 2:24

ஞானத்திற்குரிய சாந்தத்தோடே நம் கிரியைகளை நல்ல நடக்கையினாலே காண்பிக்கச் செய்கிறவரே தோத்திரம். யாக் 3:13

ஒருவன் நன்மை செய்ய அறிந்தவனாயிருந்தும் அதைச் செய்யாமற் போனால் அது அவனுக்குப் பாவமாயிருக்கும் என்று எச்சரிக்கிறபடியால் உமக்கு தோத்திரம். யாக் 4:17

விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும் கர்த்தர் அவனை எழுப்புவீர் ஆகவே தோத்திரம். யாக் 5:15

நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கச் செய்கிறவரே உமக்கு தோத்திரம். யாக் 5:16

கர்த்தரை நம்பியிருக்கிறவனோ செழிப்பான் என்று ஆசீர்வதிப்பவரே உமக்கு தோத்திரம். நீதி 28:25

ஜெபம்: இரக்கமுள்ள கர்த்தாவே, நான் எப்போதும் பிறனிடத்திலும் அன்பு வைத்து கிரியைகளினாலே அந்த அன்பை வெளிப்படுத்தக் கிருபை புரியும். விசுவாசத்துடன் பிறருக்காக ஊக்கமாக ஜெபிக்கக்கூடிய பாரத்தை எனக்குத் தாரும். எப்போதும் எல்லாவற்றிலும் உண்மையாயிருந்து பரிபூரண ஆசீர்வாதத்திற்கு பாத்திரனானவனாகும்படி கிருபை செய்யும். இயேசுவின் நாமத்தில் ஆமென்.

செப்டம்பர் - 6

1. திக்கற்றோரின் தகப்பனே உமக்கு தோத்திரம். சங் 68:5
2. தேவன் பொல்லாங்கினால் சோதிக்கப்படுகிறவரல்ல. ஒருவனையும் அ சோதிக்கிறவருமல்ல. ஆகவே தோத்திரம். யாக் 1:13
3. திக்கற்ற பிள்ளைகளும் விதவைகளும் படுகிற உபத்திரவத்திலே அவர்க விசாரிக்கிறதும். உலகத்தால் கறை படாதபடிக்குத்தன்னைக் காத் கொள்ளுகிறதுமே பிதாவாகிய தேவனுக்கு முன்பாக மாசில்லாத சுத்தமா பக்தியாயிருக்கிறது என்றீரே உமக்கு தோத்திரம். யாக் 1:27
4. ஒருவன் தன் நாவை அடக்காமல் தன் இருதயத்தை வஞ்சித்து தன் தேவபக்தியுள்ளவனென்று எண்ணினால் அவனுடைய தேவ பக் வீணாயிருக்கும் என்றவரே தோத்திரம். யாக் 1:26
5. சிறிய நெருப்பு பெரிய காட்டைக் கொளுத்தி விடுகிறதைப்போல நம் நாவு முழுச்சரீரத்தையும் கறைப்படுத்தி ஆயுள் சக்கரத்தைக் கொளு விடுகிறதாயும் இருக்கிறது என்று போதிக்கிறவரே உமக்கு தோத்திர யாக் 3:6
6. நாவு அடங்காத பொல்லாங்குள்ளதும், சாவுக் கேதுவான விஷ நிறைந்ததுமாயிருக்கிறது என்று எச்சரிக்கிற தேவனே உமக்க தோத்திர யாக் 3:8
7. செய்கைகளை கர்த்தரிடத்தில் ஒப்புவிக்கும் போது என் யோசனைக உறுதிப்படுத்துகிறவரே உமக்கு தோத்திரம். நீதி 16:3
8. நிச்சயமாகவே முடிவு உண்டு உன் நம்பிக்கை வீண்போகாது என்றவ உமக்கு தோத்திரம். நீதி 23:18

ஜெபம்: திக்கற்றோரின் தகப்பனே, என் நாவை அடக்க உதவி செய்யும். வேண் வார்த்தைகளை அலப்பி குடும்பசமாதானத்தை இழந்து போகாதபடிக்கு சா குணத்தையும் அமைதலுள்ள ஆவியையும் கிருபையாக எனக்குத் தா என்னையும் என் செய்கைகளையும் கர்த்தாவே உமது கரத்தில் ஒப்பபை பொறுமையுடன் காத்திருக்கக் கிருபை புரியும். இயேசுவின் நாமத்தில் ஆமென்.

கர்த்தர் தாமே உனக்கு முன்பாகப் போகிறவர். அவர் உன்னோடே இருப்பார் நீ பயப்படவும் கலங்கவும் வேண்டாம் என்றீரே உமக்கு தோத்திரம். உபா 31:8

அநாதி தேவனே உனக்கு அடைக்கலம். அவருடைய நித்திய புயங்கள் உனக்கு ஆதாரம். ஆகவே தோத்திரம். உபா 33:27

அவர் உன்னை விட்டு விலகுவதுமில்லை உன்னைக் கைவிடுவதுமில்லை என்றதற்காய் உமக்கு தோத்திரம். உபா 30:6

பலங்கொண்டு திடமனதாயிரு. திகையாதே, கலங்காதே. நீ போகுமிடமெல்லாம் உன் தேவனாகிய கர்த்தர் உன்னோடே இருக்கிறார் என்ற வசனத்திற்காக தோத்திரம். யோசு 1:9

ஜீவனுள்ள தேவன் நம் நடுவில் இருக்கிறார். ஆகவே தோத்திரம். யோசு 3:10

இதோ கர்த்தர் சொன்னபடியே என்னை உயிரோடே காத்தார். ஆகவே தோத்திரம். யோசு 14:10

என் ஜீவன் கர்த்தரின் பார்வைக்கு அருமையாய் இருப்பதினால் அவர் என்னை எல்லா உபத்திரவத்திற்கும் நீங்கலாக்கி விடுவாராக என்ற வசனத்திற்காக உமக்கு தோத்திரம். I சாமு 26:24

ஜெபம் எங்கள் முன்னால் சென்று எங்களுடன் கூடவே இருக்கும் எங்கள் பரலோக பிதாவே. எங்களுடைய காலங்கள் உமது கரத்திலிருக்கிறது. எங்கள் ஜீவனைஇந்த நாளில் உமது கரத்தில் தாழ்த்தி ஒப்புக் கொடுக்கிறோம். ஜீவனுள்ள தேவன் எங்கள் நடுவில் எப்போதும் இரும். இயேசுவின் இன்ப நாமத்தில் பிதாவே ஆமென்.

செப்டம்பர் - 8

1. கர்த்தரைப் போல பரிசுத்த முள்ளவர் இல்லை உம்மையல்லாம
வேறொருவரும் இல்லை. எங்கள் தேவனைப் போல ஒரு கன்மலை
இல்லை ஆகவே தோத்திரம். I சாமு 2:2

2. என்னைக் கனம் பண்ணுகிறவர்களை நான் கனம்பண்ணுவேன் என்
உமக்கு தோத்திரம். I சாமு 2:30

3. கர்த்தர் சிறியவனைப்புழுதியிலிருந்து எடுத்து, எளியவனை
குப்பையிலிருந்து உயர்த்துகிறீர். அவனைப் பிரபுக்களோடே உட்கார
மகிமையுள்ள சிங்காசனத்தை சுதந்தரிக்கவும் பண்ணுகிறீர் ஆக
தோத்திரம். I சாமு 2:8

4. சகல ஜனங்களின் தேவர்களும் விக்கிரகங்கள் தானே. கர்த்த
வானங்களை உண்டாக்கினவர். ஆகவே தோத்திரம். I நாளா 16:26

5. மகிமையும் கனமும் கர்த்தரின் சமூகத்தில் இருக்கிறது. வல்லமை
மகிழ்ச்சியும் அவர் ஸ்தலத்தில் இருக்கிறது. ஆகவே தோத்திர
I நாளா 16:27

6. கர்த்தரைப்பாடி அவரைக் கீர்த்தனம் பண்ணி அவருடை
அதிசயங்களையெல்லாம் தியானித்துப் பேசி அவருடைய பரிசுத்த நாமத்
குறித்து மேன்மை பாராட்டுவோம் கர்த்தரைத் தேடுகிறவர்களின் இருத
மகிழ்ந்திருக்கும் ஆகவே தோத்திரம். நாளா 16:9

ஜெபம்: பரித்தமுள்ள பரமதகப்பனே உம்மை எப்போதும்பாடி கீர்த்த
பண்ணவும் உம்முடைய அதிசயங்களையெல்லாம் தியானித்துப் பேச
எங்களுக்கு கிருபை புரியும். உம்மைத் தேடும்போது எங்கள் இருதயம் மகிழ்கி
இயேசுவே இந்த சிலாக்கியத்தை என்றென்றும் எங்களுக்குத் தாரும். இயேசு
நாமத்தில் ஆமென்.

தாயின் வயிற்றில் தோன்றினது முதல் எங்களை ஏந்தி தாயின் கர்ப்பத்தில் உற்பத்தியானது முதல் எங்களை தாங்கும் கர்த்தாவே உமக்கு தோத்திரம். ஏசா 46:3

இனிமேலும் நான் ஏந்துவேன், நான் சுமப்பேன், தப்புவிப்பேன் என்கிறவரே உமக்கு தோத்திரம். ஏசா 46:4

உன் சமாதானம் நதியைப் போலும், உன் நீதி சமுத்திரத்தின் அலைகளைப் போலும் இருக்கும் என்று ஆசீர்வதிக்கும் கர்த்தரே உமக்கு தோத்திரம். ஏசா 48:18

கன்மலையைப்பிளந்து தண்ணீரை ஓடிவரப்பண்ணினவரே உமக்கு தோத்திரம். ஏசா 48:21

உம் உள்ளங்கைகளில் என்னை வரைந்திருக்கிறவரே உமக்கு தோத்திரம். ஏசா 49:16

கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள் ஆனந்தக்களிப்புடன் பாடுவார்கள். நித்திய மகிழ்ச்சி அவர்கள் தலையின் மேல் இருக்கும். ஆகவே தோத்திரம். ஏசா 51:11

சந்தோஷமும் மகிழ்ச்சியும் அடைவார்கள் சஞ்சலமும் தவிப்பும் ஓடிப்போம் என்கிறவரே உமக்கு தோத்திரம். ஏசா 51:11

நான் நானே உங்களுக்கு ஆறுதல் செய்கிறவர் என்கிற தேவனே உமக்கு தோத்திரம். ஏசா 51:12

...ம என் மீட்பராகிய கர்த்தாவே, நான் நித்திய மகிழ்ச்சியால் நிரம்பி உம்மை என்றும் மகிமைப்படுத்தும்படி செய்யும் சஞ்சலமும் தவிப்பும் என் வாழ்வில் இல்லாதபடி காத்துக் கொள்ளும். நீரே எனக்கு ஆறுதலாய் எப்போதும் இருந்து வழிநடத்திடும் தகப்பனே. இயேசுவின் நாமத்தில் ஆமென்.

செப்டம்பர் - 10

1. நீ என் பார்வைக்கு அருமையானபடியால் கனம் பெற்றாய் என்ற தேவ உமக்கு தோத்திரம். ஏசா 43:4
2. வனாந்திரத்திலே வழியையும் அவாந்திர வெளியிலே ஆறுகளை உண்டாக்குகிறவரே உமக்கு தோத்திரம். ஏசா 43:19
3. உன் சந்ததியின் மேல் என் ஆவியையும் உன் சந்தானத்தின் மேல் ஆசீர்வாதத்தையும் ஊற்றுவேன் என்கிற பிதாவே உமக்கு தோத்திர ஏசா 44:3
4. நீ என் தாசன் நீ என்னால் மறக்கப்படுவதில்லை என்றிரே உமக்கு தோத்தி ஏசா 44:21
5. நீரே எல்லாவற்றையும் செய்கிற கர்த்தர் ஆகவே தோத்திரம். ஏசா 44:24
6. நீர் எனக்கு முன்னே போய் கோணலானவைகளை செவ்வையாக்குகிறபடியால் உமக்கு தோத்திரம். ஏசா 45:2
7. பெயர் சொல்லி என்னை அழைக்கிற இஸ்ரவேலின் தேவனே உம தோத்திரம். ஏசா 45:3
8. பள்ளங்களை உயர்த்தி சகல மலையையும் குன்றையும் தாழ் கோணலானதை செவ்வையாக்கி கரடுமுரடானவைகளை சமமாக் கர்த்தாவே உமக்கு தோத்திரம். ஏசா 40:5

ஜெபம்: பெயர் சொல்லி என்னை அழைக்கின்ற தேவனே, என் வாழ்வி கோணலானவைகளை யெல்லாம் உமது வல்லகரத் செவ்வையாக்கியருளும். நீர் எனக்கு முன்னே சென்று காரியங்களை வாய் செய்யும் தகப்பனே. உமது பார்வையில் என்றும் அருமையாயிருக்கக் கிரு புரியும். இயேசுவின் நாமத்தில் பிதாவே ஆமென்.

எனக்கு உண்டான நெருக்கத்திலே கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டு என் தேவனை நோக்கி அபயமிட்டேன் அவர் தமது ஆலயத்திலிருந்து என் சத்தத்தைக் கேட்டார். ஆகவே தோத்திரம். II சாமு 22:7

உலகத்திலே நாம் ஒன்றும் கொண்டு வந்ததுமில்லை. இதிலிருந்து நாம் ஒன்றும் கொண்டு போவது மில்லை என்பது நிச்சயம். ஆகவே தோத்திரம். I தீமோ 6:7

பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது என்று போதிக்கிறவரே உமக்கு தோததிரம். I தீமோ 6:10

இவ்வுலகத்திலே ஐசுவரியமுள்ளர்கள் இறுமாப்பான சிந்தையுள்ளவர்களாயிராமலும், நிலையற்ற ஐசுவரியத்தின் மேல் நம்பிக்கை வையாமலும், நாம் அனுபவிக்கிறதற்குச் சகலவித நன்மைகளையும் நமக்குச் சம்பூரணமாய்க் கொடுக்கிற ஜீவனுள்ள தேவன் மேல் நம்பிக்கை வைக்கவும், நன்மை செய்யவும் நற்கிரியைகளில் ஐசுவரியவான்களாகவும் தாராளமாய்க் கொடுக்கிறவர்களும், உதார முள்ளவர்களுமாய் இருக்க வேண்டும் என்று வழி நடத்தும் தேவனே தோத்திரம். I தீமோ 6:17

கிருபையானது உன்னோடே கூட இருப்பதாக என்கிறீரே உமக்கு தோத்திரம். தீமோ 6:21

நம் தேவனாகிய கர்த்தர் நமக்குச் சொன்ன நல்வார்த்தை களிலெல்லாம் ஒரு வார்த்தையும் தவறிப் போகவில்லை அவைகளெல்லாம் நமக்கு நிறைவேறிற்று ஆகவே தோத்திரம். யோசுவா 23:14

...ம் கிருபையைத் தரும் கர்த்தாவே, இந்த நேரத்திலும் எனக்கு நேரிட்ட நெருக்கத்திலின்று என்னைத் தூக்கி எடுத்து எல்லாப் பாடுகளினின்றும் விடுதலை ...மே நீர் எனக்குச் சொன்ன நல்வார்த்தைகளையெல்லாம் என் வாழ்வில் ...வாய் நிறைவேற்றி என்னை வழி நடத்தும் தகப்பனே. இயேசுவின் நாமத்தில் ...வே ஆமென்.

செப்டம்பர் - 12

1. எல்லாம் உம்மால் உண்டானது. உமது கரத்திலே வாங்கி உம
கொடுக்கிறோம். நாங்கள் உமக்கு ஸ்தோத்திரம் செலுத்தி உமது மகிமை
நாமத்தைத் துதிக்கிறோம். II நாளா 28:13

2. துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் கீழ்ப்படிந்து அடங்கியிருக்க
சகலவித நற்கிரியைகளையும் செய்ய ஆயத்தமாயிருக்கவும், ஒருவனை
தூஷியாமலும், சண்டை பண்ணாமலும் பொறுமையுள்ளவர்களாய் எ
மனுஷருக்கும் சாந்த குணத்தைக் காண்பிக்கவும், போதிக்கிறவரே உம
தோத்திரம். தீத்து 3:1

3. கர்த்தாவே நீர் நிலைத்திருப்பீர். ஆகவே தோத்திரம். எபி 1:11

4. கர்த்தாவே நீர் மாறாதவராயிருக்கிறீர் உம்முடைய ஆண்டுகள் மு
போவதில்லை. ஆகவே தோத்திரம். எபி 1:12

5. மனுஷனை தேவதூதரிலும் சற்று சிறியவனாக்கினீர் மகிமையின
கனத்தினாலும் அவனுக்கு முடிசூட்டி உம்முடைய கரத்தின் கிரியைக
மேல் அவனை அதிகாரியாக வைத்து சகலத்தையும் அவனு
பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தி வைத்திருக்கிறீர் ஆகவே தோத்திரம். எபி 2

6. உமது அடியானின் வீடு என்றென்றைக்கும் உமக்கு முன்பாக இருக்
அதை ஆசீர்வதித்தருளும். கர்த்தரான ஆண்டவராகிய தேவரீர் அ
சொன்னீர். உம்முடைய ஆசீர்வாதத்தினால் உமது அடியாளின்
என்றென்றைக்கும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பதாக. ஆமென் அல்லேலு
II சாமு 7:29

ஜெபம்: நேற்றும் இன்றும் என்றும் மாறாத தேவனே நான் எப்பொழு
பொறுமையுடன் சாந்த குணத்துடனும் இருந்து சகல வித நற்கிரியைகளை
செய்யும்படி என்னை ஆயத்தப்படுத்தும் நீர் என்னை ஆசீர்வதித்தாலொழிய உம்
நான் விடேன் என்று சொல்லி உமது பாதத்தை என்றும் பற்றிக் கொள்ள கி
புரியும் தகப்பனே இயேசுவின் நாமத்தில் ஆமென்.

கர்த்தாவே உம்மில் மகிழ்ந்து களி கூறுவேன் உன்னதமானவரே உமது நாமத்தைக் கீர்த்தனம் பண்ணுவேன். சங் 9:2

கர்த்தாவே உம்மைத் தேடுகிறவர்களை நீர் கைவிடுகிறதில்லை. ஆகவே ஸ்தோத்திரம். சங் 9:10

பசியாயிருந்தேன் எனக்குப் போஜனங் கொடுத்தீர்கள். தாகமாய் இருந்தேன், என் தாகத்தைத் தீர்த்தீர்கள். அந்நியனாயிருந்தேன், என்னைச் சேர்த்துக் கொண்டீர்கள். வஸ்திர மில்லாதிருந்தேன், எனக்கு வஸ்திரம் கொடுத்தீர்கள். வியாதியாயிருந்தேன், என்னை விசாரிக்க வந்தீர்கள். காவலிலிருந்தேன், என்னைப் பார்க்க வந்தீர்கள் என்று சொல்லி மிகவும் சிறியவராயிருப்போருக்கு நாங்கள் செய்தவற்றை உமக்கே செய்ததாகச் சொல்லி எங்களை ஏற்றுக் கொள்ளுகிறவரே உமக்கு தோத்திரம். மத் 25:35

இதோ உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் என்று சொல்லி எங்களை ஆசீர்வதிக்கிறவரே உமக்கு ஸ்தோத்திரம். மத் 28:20

என் மனவிருப்பத்தின்படி நீர் எனக்குத் தந்தருளி எமது ஆலோசனைகளை எல்லாம் நிறைவேற்றுகிறீர். ஆகவே தோத்திரம். சங் 20:4

நீர் எமது மனவிருப்பத்தின்படி எமக்குத் தந்தருளி என்னுடைய உதடுகளின் விண்ணப்பத்தைத் தள்ளாதிருக்கிறபடியால் உமக்கு தோத்திரம். சங் 21:2

ஜெபம்: என்னை ஒரு போதும் கைவிடாத தேவனே, ஏழைகளுக்கும் தேவையிலிருப்போருக்கும் உதவ எப்போதும் எனதுள்ளத்தைத் திறந்தருளும். என்னாலும் உமது பரிசுத்த நாமத்தை என்றென்றும் மகிமைப்படுத்த கிருபை தாரும். சமயம் கிடைக்கும் போதெல்லாம் உம்மைப்பாடிக் கீர்த்தனம் பண்ண என்னை ஏவியருளும் இயேசுவின் நாமத்தில் பிதாவே ஆமென்.

செப்டம்பர் - 14

1. எனக்கு உண்டான நெருக்கத்திலே கர்த்தரை நோக்கிக் கூ
வேளையிலே அவர் தமது ஆலயத்திலிருந்து என் சத்தத்தைக் கேட்ட
தோத்திரம். சங் 18:6
2. கர்த்தாவே நீர் சிறுமைப்பட்டவர்களுடைய வேண்டுதலைக் கேட்டு
இருதயத்தை ஸ்திரப்படுத்துகிறபடியால் உமக்கு தோத்திரம். சங் 10:17
3. பலவிதமான வியாதிகளினால் உபத்திரவப்பட்டிருந்த அநேகரை சொஸ்
அநேகம் பிசாசுகளையும் துரத்திவிட்டவரே உமக்கு தோத்திரம். மாற்
4. எனக்கு சித்தமுண்டு சுத்தமாகு என்று சொல்லி சுத்தமாக்குகிறவரே உ
தோத்திரம். மாற் 1:41
5. மகனே உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது என்று சொல்லி
கர்த்தரே உமக்கு தோத்திரம். மாற் 2:5
6. தேவரீர் திக்கற்ற பிள்ளைகளுக்கும் ஒடுக்கப்பட்டவர்களுக்கும் நீதி
உமது செவியை சாய்க்கிறபடியால் உமக்கு தோத்திரம். சங் 10:18
7. உயரத்திலிருந்து நீர் என்னைக் கை நீட்டிப் பிடித்துத் தூக்கி விடுகிறீர்
தோத்திரம். சங் 18:16
8. உமது சமூகத்தில் பரிபூரண ஆனந்தமும் உமது வலது பாரிசத்தில்
பேரின்பமும் இருக்கிறபடியால் உமக்கு தோத்திரம். சங் 16:11

<u>ஜெபம்:</u> உன்னதமான கர்த்தாவே, என் பாவங்களை மன்னித்து என்
எல்லா வியாதிகளையெல்லாம் தயவாய் என்னை விட்டு நீக்கியருளும். நீ
பிள்ளையாகிய எனக்கு தேவரீர் இரக்கம் செய்தருளும் நெருக்கத்தில்
என்னைத் தூக்கி எடுத்து உமது சமூகத்தின் பரிபூரண ஆனந்தத்தை நிறை
பெற்று வாழ கிருபை புரியும். இயேசுவின் நாமத்தில் பிதாவே ஆமென்.

கர்த்தர் தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும் உண்மையாய்த் தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும் சமீபமாயிருக்கிறீர் ஆகவே தோத்திரம். சங் 145:18

கர்த்தர் ஒடுக்கப்பட்டவர்களுக்கு நியாயஞ் செய்து கட்டுண்டவர்களை விடுதலையாக்குகிறீர். ஆகவே தோத்திரம். சங் 146:7

பரதேசிகளைக் கர்த்தர் காப்பாற்றி திக்கற்ற பிள்ளையையும் விதவையையும் ஆதரிக்கிறீர். ஆகவே தோத்திரம். சங் 146:9

இருதயம் நொறுங்குண்டவர்களைக் குணமாக்கி அவர்களுடைய காயங்களைக் கட்டுகிறார். சங் 147:3

ஒருவனுடைய வழிகள் கர்த்தருக்குப் பிரியமாயிருந்தால் அவனுடைய சத்துருக்களும் அவனோடே சமாதானமாகும்படி செய்கிறவரே உமக்கு தோத்திரம். நீதி 16:7

அல்லேலூயா என் ஆத்துமாவே கர்த்தரைத்துதி நான் உயிரோடிருக்குமட்டும் கர்த்தரைத் துதிப்பேன். நான் உள்ளளவும்என் தேவனைக் கீர்த்தனம் பண்ணுவேன். சங் 146:1

சுவாசமுள்ள யாவும் கர்த்தரைத் துதிப்பதாக அல்லேலூயா. சங் 150:6

யும் துதிக்குப்பாத்திரரே இந்த நாளில் நான் உம்மை நோக்கி உண்மையாய்க் கூப்பிடும் போது எனக்கு சமீபமாயிருந்து என் ஜெபத்தைத் கேளும் என்னுடைய வழிகளை உமக்குப் பிரியமானதாக காத்துக் கொள்ள எனக்கு உதவிசெய்யும் பிதாவே கட்டுகளினின்று விடுதலையாகி நான் என்றும் உம்மைத்துதிக்க கிருபை அருளும். இயேசுவின் நாமத்தில் பிதாவே ஆமென்.

செப்டம்பர் - 16

1. ஒருவராய் பெரிய அதிசயங்களைச் செய்கிறவரே உமக்கு தோ
சங் 136:4
2. சிவந்த சமுத்திரத்தை இரண்டாகப் பிரித்த வல்லமையுள்ளவரே தோ
சங் 136:13
3. சத்துருக்களின் கையிலிருந்து எங்களை விடுதலை பண்ணினவரே உ
தோத்திரம். சங் 136:24
4. பொல்லாத மனுஷனுக்கு என்னைத் தப்புவிக்கிற கர்த்தாவே உ
தோத்திரம். சங் 140:1
5. கர்த்தாவே உமக்கு முன்பாக என் சஞ்சலத்தை ஊற்றவும் என் நெருக்
அறிக்கையிடவும் கிருபையளிப்பவரே உமக்கு தோத்திரம். சங் 142:2
6. கர்த்தாவே உமது உண்மையின் படியும் உமது நீதியின்படியும்
விண்ணப்பங்களுக்கு உத்தரவு அருளிச் செய்கிறவரே உமக்கு தோ
சங் 143:1
7. விழுகிற யாவரையும் தாங்கி மடங்கடிக்கப்பட்ட யாவரையும் தூக்கி வி
கர்த்தாவே உமக்கு தோத்திரம். சங் 145:14
8. உமக்கு பயந்தவர்களுடைய விருப்பத்தின்படி செய்து அவர்கள் கூப்பிடுத
கேட்டு அவர்களை இரட்சிக்கிறவரே உமக்கு தோத்திரம். சங் 145:19

ஜெபம்: அன்பின் தெய்வமே, இந்த நாளில் என் சஞ்சலத்தை உமக்கு மு
ஊற்றுகிறேன். என்னை சத்துருக்களின் கைகளினின்று அதிசயமாய் எ
விடுவித்தருளும் பிதாவே. விழுகிற வேளையில் உமது திருக்கரத்தால் எ
தூக்கி விடும் தகப்பனே.

இராஜ்ஜியமும் வல்லமையும் மகிமையும் என்றென்றை
மமுடையவைகளே ஆமென்.

...கர்த்தா என்னை விசாலமான இடத்திலே கொண்டு வந்து என் மேல் ...பிரியமாயிருந்து என்னைத் தப்புவிக்கிறபடியால் உமக்கு தோத்திரம். ...சங் 18:19

...நம்புகிற அனைவருக்கும் தேவன் கேடகமாயிருக்கிறபடியால் உமக்கு தோத்திரம். சங் 18:30

...என்னை பெலத்தால் இடைகட்டி என் வழியைச் செவ்வைப்படுத்துகிற என் தேவனே உமக்கு தோத்திரம். சங் 18:32

...என் கால்களை மான் கால்களைப் போலாக்கி உயர்தலங்களில் என்னை ...நிறுத்தும் தேவனே உமக்கு தோத்திரம். சங் 18:33

...உம்முடைய இரட்சிப்பின் கேடகத்தை எனக்குத் தந்தபடியால் உமக்குத் தோத்திரம். சங் 18:35

...என் கால்கள் வழுவாதபடிக்கு நான் நடக்கிற வழியை அகலமாக்கும் தேவனே உமக்கு தோத்திரம். சங் 18:36

...என் சத்துருக்களுக்கு என்னை விலக்கி விடுவித்து எனக்கு விரோதமாய் ...எழும்புகிறவர்கள் மேல் என்னை உயர்த்தும் தேவனே உமக்கு தோத்திரம். ...சங் 18:48

...கொடுமையான மனுஷனுக்கு என்னைத்தப்புவிக்கிறீர் ஆகவே உமக்கு தோத்திரம். சங் 18:48

...எங்கள் கேடகமாகிய கர்த்தாவே, இந்த நாள் முழுவதும் எங்களை எல்லா ...ஆபத்துக்கும் சகலவித பொல்லாத வழிகளுக்கும் தப்புவித்துக் காத்துக் ...கொண்டு என் வழியை செவ்வைப்படுத்தி உமது இரட்சிப்பின் அனுபவத்தைப் ...பெற்றுக்கொள்ள கிருபை புரியும். இயேசுவின் நாமத்தில் பிதாவே ஆமென்.

செப்டம்பர் - 18

1. வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது. ஆகாய அவருடைய கரங்களின் கிரியை அறிவிக்கிறது ஆகவே தோ சங் 19:1
2. கர்த்தர் என் நீதிக்குத் தக்கதாக எனக்குப் பதிலளித்து என் கை சுத்தத்திற்குத்தக்கதாக எனக்கு சரிக்கட்டுகிறபடியால் தோத்திரம். சங்
3. உபத்திரவப்பட்டவனுடைய உபத்திரவத்தை அற்பமாய் எண்ண அருவருக்காமலும், உமது முகத்தை அவனுக்கு மறைக்காமலும் உம்மை நோக்கி அவன் கூப்பிடுகையில் அவனைக் கேட்டருளுகிறீர். அ தோத்திரம். சங் 22:24
4. கர்த்தாவே அநாதிகால முதல் இருக்கும் உம்முடைய இரக்கங்களுக் உம்முடைய காருணியங்களுக்காகவும் தோத்திரம். சங் 25:6
5. உம்முடைய நாமத்தை என் சகோதரருக்கு அறிவித்து சபை நடுவில் உ துதிப்பேன். அல்லேலூயா. சங் 22:22
6. மகா சபையிலே நான் உம்மைத் துதிப்பேன். உமக்குப் பயப்படுகிறவர் முன்பாக என் பொருத்தனைகளைச் செலுத்துவேன். சங் 22:25
7. நாங்கள் ஒருமித்து எங்கள் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தைக் கு மேன்மை பாராட்டுவோம். அல்லேலூயா. சங் 20:7

ஜெபம்: நீதியின் தேவனே, இந்த நாளில் என் உபத்திரவத்தைப்பார்த்து முகத்தை எனக்கு மறைக்காமல் என் கூப்பிடுதலின் சத்தத்தைக் கேட் அவரவர் கைகளின் சுத்தத்திற்குத் தக்கதாக பதிலளிக்கும் தேவனே, உம் இரக்கமும் காருண்யமும் எனக்குக் கிடைக்கும்படி கிருபை புரியும். இயே நாமத்தில் பிதாவே ஆமென்.

...இந்த தேசத்திலே வாசம் பண்ணு. நான் உன்னோடே இருந்து உன்னை ஆசீர்வதிப்பேன் என்று சொன்ன தேவனே தோத்திரம். ஆதி 26:3

கர்த்தா என் அப்பத்தையும் தண்ணீரையும் ஆசீர்வதிப்பார் வியாதியை ...னிலிருந்து விலக்குவார் ஆகவே தோத்திரம். யாத் 23:25

...ங்கள் இப்பொழுது இருக்கிறதைப் பார்க்கிலும் ஆயிரம் மடங்கு அதிகமாகும்படி உங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தர் உங்களுக்கு சொல்லியபடியே உங்களை ஆசீர்வதிப்பாராக என்ற படியால் தோத்திரம். ...ா 1:11

...ன் ஆயுசுநாட்களை பூரணப்படுத்துவேன் என்றீரே தோத்திரம். யாத் 23:26

